

ஸ்ரீ மத்வாசாரியர்.

ஸ்ரீ:

# ஸ்ரீ மாத்வ விஜயம்

## ஸ்ரீ மத்வாசாரியர் விரிவான சரித்திரம்


ஸ்ரீ சுப்ரமண்ய சிவம்

இயற்றியது



மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1924

விலை ரூபா 1


[All Rights Reserved]

ஸ்ரீ மாத்வ விஜயத்தின்

# விஷய அட்டவணை



| விஷயம் | பக்கம் |
|---|---|
| பீடிகை ... ... ... | 1 |
| ஸ்ரீ மத்வாசாரியருடைய ஜனனம் ... | 9 |
| ஸ்ரீ மாத்வரின் பாலப்பருவம் ... | 23 |
| ஸ்ரீ மாத்வரின் உபநயனம் ... ... | 36 |
| ஸ்ரீ மாத்வரின் வித்தியாபிவிருத்தி ... | 47 |
| ஸ்ரீ மாத்வரின் சந்யாசாச்ரமம் ... | 56 |
| ஸ்ரீ மாத்வரின் தர்க்க ஜயங்கள் ... | 77 |
| ஸ்ரீ மாத்வரின் தேச யாத்திரை ... | 86 |
| ஸ்ரீ மாத்வரின் வடதேச யாத்திரை ... | 98 |
| ஸ்ரீ மாத்வர் ஸ்வதேசம் வந்து சேர்தல் ... | 113 |
| உடுப்பி நகர விசேஷங்கள் ... ... | 129 |
| ஸ்ரீ மாத்வரின் இரண்டாவது பதரிகாச்ரம யாத்திரை ... ... ... | 151 |
| ஸ்ரீ மாத்வர் திரும்புங்கால் யாத்திரை ... | 173 |
| திரிவிக்ரம பண்டிதர் திரும்பி வருதல் ... | 186 |
| ஸ்ரீ மாத்வரின் இதர சிஷ்யர்கள் ... | 222 |
| ஸ்ரீ மாத்வரின் பரமபத ப்ராப்தி ... | 239 |

ஓம்

ஸ்ரீ மாத்வாய நமஃ

# ஸ்ரீ மாத்வ விஜயம்

## பீடிகை

இந்தியா தேசத்து ஜனங்களுடைய மதம் ஹிந்து மதம். இந்த ஹிந்து மதமானது சைவம், வைஷ்ணவம், காணாபத்தியம், சாக்தேயம் முதலிய தனித்தனி மூர்த்தங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள அநேக மதங்களடங்கியது. இன்னும், தத்துவ விஷயமாகப் பார்த்தால், இது அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என மூம் மதங்களாகவும் பிரியும். இந்தியாதேசத்து ஜனங்கள்—(ஏன்? உலகு முழுதிலும் உள்ள ஜனங்கள்)—அனைவருமே இம்மூன்று மதங்களுள் ஏதேனும் ஒன்றையே அநுசரித்துத் தீரவேண்டியிருக்கின்றது. அநாதி காலம் தொட்டு இம்மூன்று மதங்களுமே வியாபித்திருந்த போதிலும், இவை ஒழுங்குபடுத்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்டது நம் இந்தியாவிலேயேயாம். இன்னும், இம்மூன்று மதங்கட்கும் ஆசார்ய புருஷர்கள் தென்னிந்தியாவிலேயே ஜனித்தது இன்னும் ஆச்சரியமாம்.

உத்தர தேசத்திலே மகம்மதியர்களுடைய படை யெடுப்புக்களும், பயங்கரமான கலவரங்களும் அதிகமாக அதிகமாக, "இவ் வுலகம் அநித்தியம்", "ஈஸ்வரனே நித்திய வஸ்து", "ஆகவே, எப்படியாயினும் எப் பாடு பட்டாயினும் ஈஸ்வரனை யடைந்தே தீரவேண்டும்" என்னும் கருத்துள்ள இரு பிறப்பாளருள் முதல்வராகிய அந்தணர் தங்களுடைய சாந்தமான தியான நிஷ்டைகட்கு உத்தர தேசம் சரிப்படாதது கண்டு, தக்ஷிணம் நோக்கிப் புறப்பட்டு ஆங்காங்குக் குடி புகுந்தார்கள். தக்ஷிணத்தில் அப்பொழுது மகம்மதியர்களுடைய தொந்தரவு அவ்வளவு அதிகமாக இல்லாமல் இருந்தது. ஆகையால், இங்குக் குடி புகுந்த பிராஹ்மணர்கள் ஈஸ்வர சிந்தனை செய்துகொண்டு, நித்தியாநித்திய வஸ்து விசாரம் செய்துவர, இவர்கள் நாளுக்குநாள் ஆலோசனையிலும் அநுபவத்திலும் முதிர்ந்து, மதத்திரயங்கட்கும் காரணபூதர்களானார்கள். ஆகையால், ஆசார்ய புருஷர்கள் மூவரும் இங்கு அவதரிக்கும்படி நேர்ந்தது.

இம் மூவர்களுக்குள்ளே ஒருவர் அத்வைதியாயும், ஒருவர் துவைதியாயும், இன்னுமொருவர் இவ் விருவரையும் சேர்த்துக் கட்டும் விசிஷ்டாத்வைதியாயும் ஏற்பட்டார். "இவர்களுள்ளே-எவர் பெரியர்? எவர் சிறியர்?" என்னும் விசாரணை நமக்கு வேண்டியதில்லை. இம்மூவருக்கும் தங்கள் தங்கள் கொள்கைகளை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்துவதற்கு ஆதாரமாயுள்ள நூல்கள் உபநிஷத்துக்களும், ஸ்ரீ பகவத்

கீதையும், வியாஸ சூத்திரங்களுமேயாம். இம் மூன்றும் ஹிந்து மதத்துக்கு ஆணிவேர் போன்ற கிரந்தங்களாம்; "இம் மூன்றையும் ஹிந்து மதத்திலிருந்து பிரித்துவிட்டால், பின்னர் ஹிந்து மதம் இல்லாமலே போய்விடும்" என்றே சொல்லலாம்; இம்மூன்றும் பிரஸ்தானத்திரயம் எனப் பெயர் பெறும். இவற்றுக்குச் சமீப காலத்திலே பாஷ்யம் இயற்றியவர்கள் மேமேலே கூறப்பட்ட மூன்று ஆசார்யர்களைத் தவிர வேறு எவரும் இல்லை.

இம் மூன்று ஆசார்யர்களுக்குள்ளும் ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ மாத்வர் ஆகிய இருவரும் மலையாள தேசத்திலே, ஸ்ரீ பரசுராம க்ஷேத்திரத்திலே அவதரித்தவர்கள். வடக்கேயிருந்து ஆசார்யர்கள் தக்ஷிணம் நோக்கி வந்தபொழுது, இவர்கள் தென்னிந்தியாவிலே மேல் சமுத்திரக் கரையில் அதிகமாகக் குடியேறும்படி நேரிட்டதோவென்று சந்தேகிக்கும்படியிருக்கின்றது. தென்னிந்தியாவில் சாதாரணமாக வழங்கி வரும் பாஷைகள் நான்கனுள் — (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்) — மலையாள பாஷைக்கும், ஸம்ஸ்கிருத பாஷைக்கும் நெருங்கிய ஒற்றுமையிருப்பதாகத் தெரிய வருகின்றது. ஆகையால், அங்கே அறிவு வளர்ந்தோங்கி வந்திருக்கவேண்டும். ஆகவே, இந்தியாவில் பிரதானமாயுள்ள மூன்று மதங்களின் ஸ்தாபகர்களான ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மாத்வர் ஆகிய மூவருள், இருவர் மலையாளத்திலே ஜனிப்பதற்கு நேரிட்டது. இவர்களுள் நாம் இப்பொழுது ஸ்ரீ மத்வாசாரியருடைய சரித்திரத்தை

எழுதுகின்றோமாதலின், அவர் அவதரித்த காலத்தைப் பற்றிச் சிறிது கூறி, பின்னர் அவரது சரித்திரத்தினுள் புகுவோம்.

ஸ்ரீ மாத்வருடைய காலத்தைப்பற்றி அபிப்பிராய வித்தியாசங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், நாம் இப்பொழுது அதைப்பற்றித் தர்க்கிக்க ஆரம்பித்து வீண் காலம் கழிக்க வேண்டியதில்லை. ஸ்ரீ மத்வாசார்யர் பிறந்த வருஷம் கி. பி. 1199 என்பதில் பலர் இணங்கி, பல ஆதாரங்களும் மேற்கோள்களும் காட்டுகின்றதனாலே, நாம் அதை ஒப்புக்கொள்வோம். அக்காலத்திலே ஸ்ரீசங்கருடைய அத்வைதமும், ஸ்ரீ ராமானுஜருடைய விசிஷ்டாத்வைதமுமே எங்கும் பெரும்பான்மையோராலும் கையாளப்பட்டு வந்தன; துவைதமானது சிற்சிலருடைய மனதிலே மாத்திரம் விளங்கி வந்தது என்றுதான் சொல்லும்படி இருந்தது. ஆனால், ஸ்ரீ ராமானுஜருடைய விசிஷ்டாத்வைதமானது சிற்சில இடங்களிலேயே பெருமை வகித்து வந்தது; அத்வைதமோ எங்கும் தன்னரசு செலுத்தி வந்தது. அத்வைதமானது ஒருவித மனப்பான்மையும், மனவன்மையுமுடைய ஜனங்களுக்கே பொருத்தமாயிருக்குமல்லாது, பெரும்பான்மையோருக்கும் செவியினுள் நுழையாது. தர்க்கித்துப் பேசச் சக்தியில்லாமையினால், அல்லது பெரியோர்களிடத்து வைத்த மதிப்பினால் அத்வைதத்தை அறிந்து அநுபவத்தில் கொண்டுவருவதற்குச் சக்தியில்லாதவர்கள் கூட, அவ் அத்வைதத்தைப் பின்பற்றி வந்தார்கள்.

தற்காலத்தில் ஆங்கிலமேயறியாத ஜனங்கள் கூடக் கேள்வியினால் ஆங்கில வார்த்தைகளுள் இரண்டொன்றைத் தெரிந்துகொண்டு அவற்றைத் தமது பேச்சிலே கலந்து பேசுவதைப் பெருமையாகப் பாராட்டுவதுபோல, அத்வைத மதமானது, அத்வைதமென்றால் இன்னதென்று அறியாதவர்களால்கூடப் பின் பற்றப்பட்டு வந்தது. பெயரும் கீர்த்தியும் பெற விரும்பிய பண்டிதர்கள் பலரும் அத்வைதத்தையே படித்து ஆராய்வதில் தங்கள் மனதையும், காலத்தையும் செலுத்தினார்கள்.

ஆனால், உண்மையான ஆராய்ச்சியில் பிரியமுள்ளவர்களும், மனச் சாக்ஷியைப் பின்பற்றி நடக்கத் துணிந்தவர்களுமாகிய சிலர் மாத்திரம், முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். "பிரபஞ்சமானது பிரத்தியக்ஷத்திலே 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' எல்லோருக்கும் விளங்கிக்கொண்டிருக்க, இதை மித்தை யென்று சொல்வது எப்படி? பிரபஞ்சத்தை மித்தை என்று சொல்லுகின்றவர்களுக்கும், பிரபஞ்சம் உண்மையா யிருக்கின்றதனால்தானே, ஊண் உறக்கம் முதலியன வேண்டி யிருக்கின்றன. "பிரபஞ்சம் மித்தை! மித்தை!" என்று வாசாஞானம் பேசி, வம்பிலே காலம் கழிப்பதைவிட, உண்மையை ஒப்புக்கொண்டு ஈசுவரனிடத்திலே, எல்லாம் வல்ல இறைவனிடத்திலே பக்தி செலுத்துவதே மேலாகும்" என இவ்வாறெல்லாம் சிலர் சிந்திக்கத் தொடங்கினார்கள். உபநிஷத்துக்களும், ஸ்ரீ பகவத் கீதையும், பிரஹ்ம சூத்திரங்களும் அத்வைதத்தையே

பறை படிக்கின்றன என்று தோன்றும்படி இம் மூன்றும் ஸ்ரீ சங்கரரால் வியாக்கியானம் செய்யப்பட்டிருந்தனவாயினும், சிலர் இந்த வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளப் பிரியப்படவில்லை.

அன்றியும், சில பெயர் பெற்ற வித்துவான்கள் தங்கட்கு அத்வைதத்தினிடத்து ஏற்பட்ட இந்த வெறுப்பைத் தாராளமாக வெளியிடத் தொடங்கினார்கள். "ஸ்ரீ சங்கரர் போதித்த ஸ்வாநுபவம் என்பது ஒரு பிரமையே" என்றும், "இது ஒருநாளும் எவராலும் அடைய முடியாதது" என்றும் இவர்கள் கூற ஆரம்பித்தார்கள். "ஜீவனும்பிரஹ்மமும் ஒன்று என்று மனம் துணிந்து மூளை கலங்கிக் கூறுவது ப்ரஹ்ம நிந்தையாம்" என்றார்கள். மனிதனுடைய ஹிருதயத்திலே அன்பு இயற்கை லக்ஷணமாயிருக்கின்றது; வரண்ட ஞானம் எவர்க்கு வேண்டும்? சர்வ ஜீவ தயாபரநிதியாகிய எம்பெருமானை நோக்கி, "ஏ! ஈச்வரா! என்னைக் காப்பாய்! நீயே பெரியன், நானே சிறியன்; நீயே ஆண்டான், நானே அடிமை; நீயே கர்த்தா, நானே உன் கைக்கருவி" என்று அடி பணிந்து சொல்லும் அன்பு நிறைந்த ஹிருதயத்திலே பொங்கி எழுகின்ற ஆநந்தத்துக்கு நிகராக எதைக் கூற முடியும்? "எல்லாம் ஒன்று" என்று பிதற்றும் அத்வைதம் இவர்களுக்குச் செவியில் நாராசம் காய்ச்சி ஊற்றியதுபோ லிருந்தது. அத்வைதத்தினிடத்து இருந்த வெறுப்பானது மேற்படி காலத்திலே வட மலையாளத்திலும், கன்னட தேசத்திலும் அதிகமாக இருந்தது. ஸ்ரீ புருஷோத்தம தீர்த்தர், அல்லது அச்சுத ப்ரேக்ஷா

சார்யர் என்பவருடைய குரு தமது மரணத்தறுவாயில் தமது சிஷ்யர்களை நோக்கி, "புத்திரர்காள்! நீங்கள் ஒரு பொழுதும் 'ஸோஹம்' என்று சொல்லாதீர்கள்! இது அநுபவ சித்தமானதன்று; இது பொய்யே! இதை அநுபவத்தில் அநுஷ்டித்தவர்கள் எவரும் கிடையாது; சில பித்தலாட்டக்காரர்கள் இதைப் பெருமைப்படுத்தி, எளிய ஜனங்களுடைய மூளையைக் குழப்பி, எம்பெருமானுடைய சரணாரவிந்தங்களை யடையும் மார்க்கத்தைத் தடைசெய்து விட்டார்கள்; ஆகையால், நீங்கள் அத்வைதிகளுடைய ஆஷாடபூதி வார்த்தைகளை நம்பவேண்டாம்; நீங்கள் பகவானுடைய பாதாரவிந்தங்களை அடைய முயலுங்கள்!" என்று உபதேசம் செய்துவிட்டு உயிர் நீங்கினர்.

இதனாலேயே ஸ்ரீ சங்கரருடைய மதமானது நிராகரிக்கப்பட ஆரம்பித்ததென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம். ஆனால், இவ் வெறுப்பு இன்ன விதமான வடிவத்தை யடையும், இவ்விதமாக முடியும் என்று எவருக்கும் புலப்படவில்லை. 'எங்கோ, ஏதோ தப்பிதமாக உள்ளது; எங்கோ ஒரு ஆணி கழன்றுள்ளது' என்று மாத்திரம் ஜனங்கள் மனம் குழம்பியிருந்தார்கள். சந்தேகங்களும், சஞ்சலங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வந்தன. 'இதுவரை அநுஷ்டித்து வரப்பட்டுவந்த கொள்கைகள் பயனற்றன; புதிய கொள்கைகள் வேண்டும்" என்னும் ஒரு எண்ணமானது எப்படியோ, எங்கும் பரவிற்று. இக்காலத்திலே, பொது ஜனங்கள் அனைவரும் "இதுவா? அதுவா?" என்று

சம்சயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் சங்கராந்தி தினத்தன்று, தன்னட தேசத்திலே, உடுப்பி என்னும் க்ஷேத்திரத்திலே ஜனங்கள் பெருந் திரளாகக் கூடி உத்ஸவம் கொண்டாடிக்கொண்டிருந்த சமயத்தில், அங்கு வந்திருந்தவர்களுக்குள்ளே ஒரு பக்தன் துவஜ ஸ்தம்பத்தின் மேலே ஏறி, ஆங்குக் குழுமிய ஜனங்களை நோக்கி, "ஏ! ஜனங்களே! நீங்கள் எவரும் சற்றும் கவலை கொள்ளவேண்டாம்; நமது ஸ்ரீ அநந்தேச்வரருடைய கிருபையினாலே ஸ்ரீவாயுபகவான் சநாதன தர்மத்தைப் பரிசுத்தமான ஸ்திதியில் கொண்டுவருதற்காகச் சீக்கிரம் உங்கள் மத்தியில் அவதரிக்கப்போகின்றார்," என்று பறையோசையிட்டுக் கூவினான். "இவனுக்கு என்ன பைத்தியம் பிடித்ததோ?" என்று பலரும் ஆச்சர்யமடைந்தார்கள்; ஆனால், "இவன் உண்மையான மஹா பக்தன்" என்றும், "ஒரு பொழுதும் பொய் சொல்லாதவன்" என்றும் முன்னமேயே இவனுடைய குணங்களை அறிந்திருந்த சிலர் மாத்திரம் "இவன் ஸ்ரீ அநந்தேச்வரருடைய அருள் கொண்டு பேசினான்" என்று கருதினார்கள். இந்தப் பக்தன் இவ்வாறு மொழிந்த சிலகாலத்துக்கெல்லாம், ஸ்ரீ மத்வாசார்யர் உலகிலே அவதரித்துவிட்டார்.

---

1-வது அதிகாரம்.

# ஸ்ரீ மத்வாசார்யருடைய ஜனனம்

பம்பாய் ராஜதானிக்குத் தெற்கே, மலையாள தேசத்துக்கு வடக்கே, மேல் சமுத்திரக்கரையில் கன்னடதேசம் உள்ளது. இந்தத் தேசமானது இப்பொழுது வட கன்னடம், தென் கன்னடம் என்று இரண்டு ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. ஸ்ரீ மத்வாசார்யர் ஜனித்தது தென் கன்னடதேசமாகும்; அதிலும், உடுப்பி மாத்வர்களுக்கு பரிசுத்த யாத்திரா ஸ்தலமாம். உடுப்பி இப்பொழுது பிரதானமும் விசேஷமும் வாய்ந்த ஊராயிருப்பதுபோல, அக்காலத்திலும் இருந்ததோ என்பது நமக்குத் தெரியவில்லை. கன்னடதேசமானது ஸ்ரீ ராமாநுஜாசார்யராலே வைஷ்ணவமதத்தை யநுசரிக்கும்படி செய்யப்பட்ட விஷ்ணுவர்த்தனன் என்னும் அரசனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இந்தக் கன்னட தேசத்துக்குத் துளுவ தேசமென்றும் ஒரு பெயர் உண்டு. துளுவதேசத்திற்கும் மலையாளதேசத்திற்கும் எல்லைக்குறியாக இருப்பது சந்திரகிரி நதியாம்.

இந்தத் தேசத்திலே கும்பளா என்ற பெயருடனே ஒரு புராதன ஊர் உள்ளது. இந்த ஊரில் இப்பொழுது ஒரு ரெயில்வே ஸ்டேஷன் உள்ளது; ஆனால், மிகவும் சிறிய

ஊராயிருக்கிறது. அக்காலத்திலே இது ஒரு அரசனுடைய ராஜதானியாயிருந்தது. இந்த ராஜ பாரம்பரையில் வந்தவர்கள் இப்பொழுதும் சிலர் இருக்கின்றார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தாரால் சொற்பம் பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீ மத்வாசார்யர் ஜனித்த காலத்திலே ஜய ஸிம்ஹன் என்ற பெயருடன் கூடிய ஒரு அரசன் கும்பளாவிலே அரசு புரிந்துவந்தான்; பிற்காலத்திலே இவன் ஸ்ரீ மாத்வரிடத்திலே அதிக பக்தி செலுத்திவந்தான். உடுப்பி யென்னும் ஊரானது இவனுடைய ஆதிபத்தியத்தின் கீழே யிருந்துவந்தது. அக் காலத்திலே சமண மதம் பிரபலமா யிருந்தது.

—

அந்தப் பிரதேசத்திலே யிருந்த ப்ராஹ்மணர்கள், கொங்கணர்கள், சாச்வதர்கள், சிவ வெள்ளிகள் என்று சில வகுப்புக்களாகப் பிரிந்திருந்தார்கள். சிவவெள்ளி ஜாதியார் துளு பாஷை பேசுவார்கள். சிவவெள்ளி என்பது உடுப்பி க்ஷேத்திரத்திற்கு இன்னொரு பெயராகும். உடுப்பி, சிவவெள்ளி இவ் விரண்டு பெயர்களும் இவ்வூரிலேயுள்ள இரண்டு புராதன க்ஷேத்திரங்களின் மூர்த்தங்களைக் குறித்து இடப்பட்ட பெயராகும். இவ்வூரில் ஸ்ரீ அநந்தேஶ்வர க்ஷேத்திரம், ஸ்ரீ சந்திரமௌளீஶ்வர க்ஷேத்திரம் என்று இரண்டு க்ஷேத்திரங்கள் உண்டு. அநந்தேஶ்வர க்ஷேத்திரத்திலே அநந்தேஶ்வரர் ஒரு வெள்ளி பீடத்தின் மீது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். இதனால், இவ்வூர் சிவவெள்ளி அல்லது ரஜதபீடபுரம் என்று அழைக்கப்

பட்டு வந்தது சந்திரன் என்பதை ஸம்ஸ்கிருத பாஷையிலே உடுபம் என்ற பதம் குறிப்பிடும். இவ்வூரிலே ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர் இருக்கிறதினாலே இதற்கு உடுப்பியென்றும் இன்னொரு பெயர் உண்டு. இப்பொழுது சாதாரணமாக இவ்வூர் உடுப்பி யென்ற பெயராலேயே விளங்குகின்றது.

அக் காலத்தில் இவ் வூரிலே வந்த ப்ராஹ்மணர்கள் பெரும்பான்மையோரும் பாகவத சம்ப்ரதாயம் என்ற மதத்தைப் பின்பற்றியவர்கள் என்று தெரியவருகின்றது. இக் காலத்தும் இம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் கன்னட தேசத்திலே ஏராளமாகக் காணப்படுகின்றார்கள். பாகவத சம்ப்ரதாயம் என்பது சிவன், விஷ்ணு இவ் விரு மூர்த்திகளும் ஒருவர்க்கொருவர் சமமான மஹிமையும் வல்லமையும் உடையவர்களேயா மென்னும் பிரதானக் கொள்கையை யுடையது. இவர்கள் மாத்வர்கள் போன்று, கோபி முத்திரை தரிக்காமல், கோபியினால் நாமம் இட்டுக்கொள்ளுகின்றார்கள்.

ஸ்ரீ மாத்வராலே பிரதிஷ்டை செய்யப்பட்ட கிருஷ்ண க்ஷேத்திரத்திலே தவிர, உடுப்பியிலும் சுற்றுப்பிரதேசங்களிலுமுள்ள வேறு எந்த க்ஷேத்திரத்திலும் லிங்கமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது ஒரு ஆச்சர்யமாம். சோழ தேசத்திலும் மற்றும் காணப்படுகிறமாதிரி அங்கு விஷ்ணு விக்கிரகங்கள் கிடையா. "இந்த லிங்கங்களில் சில விஷ்ணுவைக் குறிக்கின்றன" என்றும், "வேறு சில சிவனைக் குறிக்கின்றன" என்றும் ஐதிகம் வழங்கிவருகின்றது. அநந்தேசுப

வர க்ஷேத்திரத்திலே லிங்கமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தபொழுதிலும், அது விஷ்ணு க்ஷேத்திரமாகவே கருதப்படுகின்றது. "வெள்ளியினால் அமைத்த பீடத்தின் மீது ஸ்ரீ பரசுராமரே யுட்கார்ந்துகொண்டார்" என்று ஒரு ஐதிகம் உண்டு.

இந்தப் பிரதேசத்து க்ஷேத்திரங்களிலே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்தம் சிவனா யிருந்தாலும் சரி, விஷ்ணுவா யிருந்தாலும் சரி, பூஜை புநஸ்காரம் முதலியன எல்லாம் ஸ்ரீபாஞ்சராத்ர முறையைப்பற்றியவை யல்லவென்பதும், ஆகம முறையையே அநுசரித்தவை யென்பதும் நமக்கு நன்கு விளங்கும். விஷ்ணு க்ஷேத்திரங்களென்று கூறப்படுபவற்றிலே விஷ்ணு ஸஹஸ்ர நாமம் பாராயணம் செய்யப்படுவதும் தவிர, சிவ ஸஹஸ்ர நாமமும் பாராயணம் செய்யப்படுவதுண்டு. இந்தப் பிரதேசத்திலே யுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரத்தைச் சுற்றியும் பூதங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட பல உப க்ஷேத்திரங்கள் உண்டு.

இந்தப் பாகவத சம்பிரதாய மதமே இங்குப் பிரதானமா யிருந்துவந்தது என்பதற்குப் பல அத்தாக்ஷிகள் இருக்கின்றன. இன்றும் இச் சம்பிரதாயத்தை யநுசரிப்பவர்களே ஈங்குள்ள புராதன க்ஷேத்திரங்கள் பலவற்றிலும் நிர்வாகம் வகித்து வருகின்றார்கள்; சில இடங்களிலே ஸ்ரீசங்கரநாராயணர் என்ற நாமத்துடனும், சில இடங்களில் ஹரிஹரன் என்ற நாமத்துடனும் ஈஶ்வரன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதே இதற்கு இன்னும் ஒரு சான்றாகும்.

இந்தப் பாகவத சம்ப்ரதாயக் கொள்கையார் சைவ மதத்துக்கும் வைஷ்ணவ மதத்துக்கும் ஒரு இடைக்கோர்வைபோ லிருந்து, இரண்டு மதங்களிலிருந்தும் சில சில கொள்கைகளை யெடுத்து அநுசரித்துவந்தார்கள்; வைஷ்ணவ மதத்திலிருந்து ஏகாதசி விரதாநுஷ்டானத்தை இந்தச் சம்ப்ரதாயக் கொள்கையார் விசேஷமாகக் கைப்பற்றினார்கள்.

ஸ்ரீ மாத்வருடைய பிதாவும் இந்தச் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர் என்றுதான் தோன்றுகின்றது. ஸ்ரீமாத்வருடைய பிதாவாகிய ஸ்ரீ மத்யகேகபட்டர் என்பவர் உள்ளத் தூய்மையும் ஒடுங்கிய மனமு முடைய பக்த சிரேஷ்டர்; அக் காலத்திலே அறியவேண்டிய ஆசார அநுஷ்டானங்களை யெல்லாம் சாஸ்திர பூர்வமாக அறிந்து அப்பியசித்து வந்தவர்; வைதீகப் பற்று மிகுந்தவர்; வேதவேதாங்கங்களை யெல்லாம் நன்ருகக் கற்றுத் தெளிந்தவர்; அக் காலத்தில் எங்கும் வியாபகமா யிருந்த அத்வைத மதத்தினிடத்திலே ஐயம் மிக உற்றவர். இவருக்கு இதிகாசாதி புராணாதிகளை படிக்கடி படிப்பதிலே பிரியம் அதிகம்; பாகவதம், பாரதம் இவ்விரண்டு நூல்களையும் தெளிவுறப் படித்தவர்; இதிகாச புராணாதிகளிலுள்ள சரித்திரங்களைக் குறித்து இவர் ஜனங்களைக் கூட்டம்போட்டு, அவர்களுக்குச் சதா காலக்ஷேபங்கள் செய்வதுண்டு. இவர் மகா பாரதத்திலிருந்து கதைகளும் பொருள்களும் எடுத்துக் கூற ஆரம்பித்துவிட்டால், ஜனங்கள் ஆகாரம் நித்திரை முதலியவற்றை அடியோடு மறந்து அப்படியே கேட்டுக்கொண் டிருப்பார்கள்; அவ்

வளவு ஆநந்தமா யிருக்கும். இதனாலேயே இவருக்கு பட்டர் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

மத்யகேகம் என்றால் நடுவீடு என்று பொருள். இவர் இருந்த கிராமத்தின் பெயர் பாஜக க்ஷேத்திரமாம். இந்தக் கிராமத்தின் நடுமத்தியிலே இவருடைய கிருகம் இருந்ததனாலே, இவருக்கு மத்தியகேகர் என்று பெயர் வழங்கலாயிற்று. இவருடைய உண்மைப் பெயர் இதுவரையில் தெரியவில்லை. இவரிடத்தில் அந்தக் கிராம வாசிகள் வைத்திருந்த மரியாதைக்கு ஒரு அளவே யில்லை. மத்யகேகர் ஒரு பெரிய மஹா வித்துவானென்று சொல்ல முடியாது. இவர் ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளவற்றை நன்றாக ஆய்ந்து பார்த்து, வர்ணாச்ரம தர்மம் தவறாது ஒழுகி வந்தார். கிருஹஸ்தாச்சிரம விதிகளிலே அணுவளவும் வழுவியவ ரல்லர். இவர், 'ஈச்வரன் ஒருவன் உண்டு' என்று உண்மையில் கருதி, அவனிடத்துப் பரிபூர்ணமான பக்தி செலுத்திவந்தார்.

இவர் பிராஹ்மணரா யிருந்தும், யாசகம் அல்லது உபாதானம் எடுத்துத் தினந்தோறும் காலக்ஷேபம் செய்யும்படியான அவ்வளவு வறுமை யநுபவிக்கவில்லை. இவருக்கு நிலபுலங்கள் இருந்தன; இவருக்குப் பண்ணையாட்கள் இருந்தார்கள்; இவரிடம் அநேகம் மாடு கன்றுகள் இருந்தன. அவ்வூரில் இவர் ஒரு மத்தியதரமான சம்சாரி யென்று சொல்லலாம். இவ்வளவெல்லாம் இருந்தும், இவர் இரக்க குணமும் தர்மசிந்தனையும் தாராளமாக உடையவராயிருந்

ததினாலே, இவர் அடிக்கடி கடன் வாங்கும்படி நேர்ந்து, இதனால் பல தொல்லைகட்கு உட்படும்படியும் நேர்ந்தது.

இவர் வேதவதி யென்னும் பெயருடைய தமது மனைவி யுடனே கிருகஸ்த தர்மம் நடத்திவருங்காலையில் இவ ருக்குக் குடும்ப கஷ்டங்களும் பல நேர்ந்தன. இவருக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்திருந்தார்கள்; இருவரும் பச் சைக்குழந்தைகளா யிருந்தபொழுதே மரித்துவிட்டார்கள். மத்யகேகருக்கு ஒரு பெண்மாத்திரம் இருந்தது. மத்ய கேகருக்கும் அவருடைய மனைவிக்கும் ஒரு விசாரம் உண்டாயிற்று; "புத்திர னில்லாதவர்கள் புத்என்னும் நரகம் அநுபவிக்கவேண்டும்" என்னும் சாஸ்திர வாக்கியத்தை யோர்ந்து ஓர்ந்து இருவரும் விசனப்பட்டு, எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணினார்கள்; ஆனால், இரண்டும் மூன் றும் எவ்வளவென்றால் எடுத்துச்சொல்லத் தெரியாது எரு மைக் கடாபோல் வளர்ந்து ஊர் திரியும் மூடப் புத்திரனைப் பெற்றால், மோக்ஷம் எப்படி யடைதல் முடியும்? ஆகையால், சகல சற்குணங்களும் வாய்ந்த ஒரு புத்திரனை வேண்டி மத்யகேகரும் வேதவல்லியும் ஸ்ரீ அநந்தேச்வரனைத் திரிகரணங்களும் ஒரு காணமாக்கிப் பன்னிரண்டு வருஷ காலம் பஜனை செய்துவந்தார்கள். இருவரும் முன்னமேயே அதிகம் சிற்றின்பத்திலே பிரிய மில்லாதவர்கள்; இப்பொ ழுது இன்னும் அதிகமாகச் சிற்றின்பத்தினிடத்திலே வெறுப்புற்று ஈச்வரனைத் தியானித்து வந்தார்கள். இரு வரும் முன்னமேயே விஷய போகங்களை அதிகமாகக் குறுக்

க் கொண்டவர்கள்; இப்பொழுது இன்னும் அதிகமாகக் குறுக்கிக்கொண்டு இருவரும் சரீரங்களை மிகவும் சுத்த மாக வைத்துக்கொண்டார்கள். இன்னும் இவர்கள் ஆகா ராதி விஷயங்களிலும் ஷட்ரசங்களையும் தள்ளிச் சுத்த சாத்துவிக ஆகாரமாகவே பயோதாரம்— பால்மாத்திரம் சாப்பிடுதல்—முதலிய விசேஷ விரதங்களையும் அநுஷ்டி த்து வந்தார்கள். இவ் விருவரும் தினந்தோறும் தங்கள் சொந்தக் கிராமமாகிய பாஜகக்ஷேத்திரத்திலிருந்து சிறிது தூரத்திலேயேயுள்ள உடுப்பி க்ஷேத்திரத்துக்கு, அநந்தே ஸ்வரருடைய சந்நிதிக்குத் தினந்தோறும் சென்று சற்புத்தி ரனைவேண்டிப் பிரார்த்தித்து வந்தார்கள். ஸ்ரீபரசுராமரைப் போல ஒரு புத்திரன் தமக்குப் பிறக்கவேண்டு மென்று மத்யகேகர் அவா மிகக் கொண்டிருந்தார்.

இப்படி யிவர்கள் தினந்தோறும் வந்து பிரார்த்தித் துக்கொண்டிருந்தபொழுதுதான் ஒருநாள், க்ஷேத்திரத் தில் ஒரு பக்தன் துவஜஸ்தம்பத்தில் ஏறி, எல்லோருக் கும் கேட்க, ''வாயுபகவான் அவதரிக்கப்போகின்றார்'' என்று கூவினன். இது மத்யகேகருடைய செவியினுள்ளே நுழை ந்ததும், அவருக்கு உடல் புளசித்தது; ஆநந்தக் கண்ணீர் தானே வடிந்தது; அவருடைய உள்ளம் குளிர்ந்தது. வாயு பகவான் தமக்குத்தான் புத்திரராகப் பிறக்கப்போகின்றா ரென்ற உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. இவர் அதிக சந்தோஷ மனமுடையவராய் வீட்டுக்குத் திரும்பிவந்தார்; தம்பதிகள் இருவரும் அநுஷ்டித்துவந்த பன்னிரண்டு

வருஷ விரதம் முடிந்தது. ஒரு சுபதினத்தில் இவ் விருவரும் தங்களுடைய மனோபீஷ்டம் நிறைவேறும்படியாகவும், உலகம் உய்யும்படியாகவும் ஒருவரோடொருவர் கலந்தனர். வேதவல்லியம்மையார் கர்ப்பம் தரித்தனர்.

"தேவர்களெல்லாரும் கூடிக்கொண்டு 'பூலோகத்திலே அதர்மம் அதிகமாய் விட்டது' என்றும், 'மானிடர் மாயா பிசாசத்தினால் பீடிக்கப்பட்டு மயங்குகின்றார்கள்' என்றும், ஸ்ரீ மஹா விஷ்ணுவினிடத்தில் போய் முறையிட்டார்களென்றும், அதன்மேல ஸ்ரீ மஹா விஷ்ணுவானவர் வாயுபகவானைப் பூமியிலே போய் அவதரிக்கும்படி ஆக்ஞை செய்தாரென்றும், வாயுபகவான் மத்யகேகருக்குப் புத்திரனாகப் பிறந்தார்" என்றும் ஸ்ரீ மாத்வ விஜயம் கூறுகின்றது.

தமது மனைவி கர்ப்பம் தரித்துவிட்டாள் என்று தெரிந்துகொண்ட ஸ்ரீ மத்யகேகர் அடைந்த ஆநந்தம் இவ்வளவென்று எவராலும் கூறல் முடியாது. தமக்கு இனிமேல் நற்காலமேயென்று மத்யகேகர் கருதிச் சந்தோஷித்தார். ஸ்ரீ பாஜக க்ஷேத்திரமானது இப்பொழுது பெயரில் மாத்திரம், ஸ்ரீ மாத்வருடைய பூர்வ கிராமம் என்று காட்டப்படுவதற்கு மாத்திரம் விளங்குகின்றது. ஆனால், அப்பொழுது அது இப்பொழுது இருப்பதுபோ லிருந்திராது, மத்யகேகர் நடுவீட்டுக்காரர் என்பதினாலேயே, சுற்றிலும் பல வீடுகள் இருந்திருக்கவேண்டும்.

இவருக்கு அண்டைவீட்டுக்காரராக ஸ்ரீ பூர்வாலய பட்டர்என்று ஒருவர் இருந்தார். இவருக்கு மத்யகேகரிடத்

திலே மதிப்பு மிகுதி. "மத்யகேகருக்குப் புத்திரசந்தானம் உண்டாகப்போகிறது" என்பதைக் கேள்விப்பட்ட இந்தப் பூர்வாலயபட்டர் ஆநந்தத்தினால் சிறிது நேரம் மெய் மறந்திருந்தார். இந்தக் கிராமத்துக் கருகாமையிலே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தது. இந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் மிகவும் நல்லவர்; சுற்றுப்புறத்துக் கிராமங்களிலிருந்து பிள்ளைகள் இப் பள்ளிக்கூடத்துக்கே அனுப்பப்படுவார்கள். மத்யகேகருடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே இந்த உபாத்தியாயருடைய வீடும் இருந்தது. இப் பள்ளிக்கூடம் இருந்த இடத்திலே இன்றும் தண்டதீர்த்தம் என்று ஒரு குட்டை யுள்ளது. இது ஸ்ரீ மாத்வராலே தமது உபாத்தியாயருக்குத் தானமாக அளிக்கப்பட்டதென்று கருதப்படுகின்றது.

இன்னும் ஸ்ரீ பாஜக க்ஷேத்திரமானது மகா பரிசுத்த ஸ்தலமாயிருந்தது. இந்தக் கிராமத்துக் கருகே விமானகிரியென்று ஒரு அழகிய பர்வதம் விளங்கி நிற்கின்றது. இப் பர்வதத்தின் மேலே ஸ்ரீ துர்க்காதேவி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஒரு பழையக்ஷேத்திரம் உள்ளது. "இந்த க்ஷேத்திரமானது ஸ்ரீ பரசுராமராலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது" என்று சொல்லப்படுகின்றது. இந்த க்ஷேத்திரத்திலே பூஜை முதலியன வெகு விமர்சையாக நடக்கின்றன; உற்சவங்களும் ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டு அதிக ஆடம்பரமாக நடைபெறுகின்றன. இந்த விமானகிரியின் அடிவாரத்திலே ஸ்ரீ பாஜக க்ஷேத்திரம்

இருந்ததினாலே, ஸ்ரீ துர்க்கா க்ஷேத்திரத்திலே நடைபெறும் ரதோற்சவம் முதலியவற்றைக் கண்டு களிப்பதற்குச் சுற்றுப்புறங்களிலிருந்து எண்ணற்ற ஜனங்கள் வந்துகொண்டே யிருப்பார்கள். பாஜக க்ஷேத்திரத்துக்குப் சமீபத்தில் பரசு தீர்த்தம், தநுர் தீர்த்தம், கதா தீர்த்தம், பாண தீர்த்தம் என்று நான்கு தீர்த்தங்களும் உண்டு. 'இவை ஸ்ரீபரசுராமராலேயே ஏற்படுத்தப்பட்டவை' என்று நம்பப்படுகின்றது. இவை யெல்லாம் ஒன்று அல்லது இரண்டு மைல் சதுரத்துக்குள்ளேயே இருக்கின்றன. யாத்ரீகர் இந்தத் தீர்த்தங்களிலே ஸ்நாநம் செய்யாமற் போகிறதில்லை.

இந்த ஸ்ரீபாஜக க்ஷேத்திரத்திலே, தீர்த்தங்களும் குன்றும் சேர்ந்து விளங்கும் இந்தத் திவ்ய ஸ்தலத்திலே லக்ஷக் கணக்கான முமுக்ஷுக்களுடைய ஆவல் தணியும்படி, ஸ்ரீ மத்வாசார்யர் சாலிவாகன சகம் 1033-ல் விக்ருதிநாம சம்வத்சரத்தில் விஜயதசமி தினத்தன்று பூமியிலே அவதரித்தார். குழந்தை பிறக்கும்பொழுது ஸ்ரீ மத்யகேகர் வீட்டி லில்லை; எங்கோ வெளியே போயிருந்தார். குழந்தை பிறந்தது; அதுவும் ஆண் குழந்தை; இன்னும் ஆண்டுகள் பன்னிரண்டு அருந்தவம் செய்து அதன் பயனாகப் பிறந்த குழந்தை; குழந்தை சொர்ணவிக்கிரகம்போ லிருக்கின்றது. குழந்தை பிறந்தால், உடனே மேள தாள வாத்தியங்கள் கோஷிப்பது வழக்கம்; அப்படியே ஸ்ரீ மத்தியகேகருடைய வீட்டுவாசலில் மேள தாளங்கள் ஒலித்தன. இந்தச் சத்தத்

தைக் கேட்டு அந்தக் கிராம வாசிகள் அனைவரும் ஸ்ரீ மத்ய கேகருடைய வீட்டுக்கு வந்து குழுமினார்கள். அந்தக் கிராமத்துக்கே அன்று ஒரு சுபதினம் போன்று ஆயிற்று. வெளியே போயிருந்த ஸ்ரீ மத்யகேகர் தமது வீட்டுப் புறமிருந்து மேள தாள ஒலி வருகின்றது தெரிந்து, வீட்டுக்கு ஓடோடி வந்தார்; ஊரார் அனைவரும் அவரைக் கண்டு முகமன் கூறினார்கள். வந்தவர்களெல்லோரும் குழந்தையைப் பார்த்துவிட்டு, "என்ன அழகு! என்ன அழகு!" என்று மெச்சினார்கள். அக் குழந்தையின் அழகிய முகத்திலிருந்து ஆதித்த கிரணம் போன்று அருளொளியொன்று வீசிற்று. சில காலத்துக்கு முன்னே ஸ்ரீ அநந்தேசுவர க்ஷேத்திரத்திலே பக்தனொருவன் கூறிய தீர்க்கதர்சனத்தைச் சிலர் ஞாபகப்படுத்திக்கொண்டார்கள்; 'அவ் வவதார புருஷன் இக் குழந்தையேயாயிருக்கலாமோ' என்று கருதினார்கள். ஸ்ரீ மத்யகேகபட்டருக்குப் புத்திரன் ஜனித்தது அவ் வூரார் அனைவருக்குமே ஒரு பெருங்கொண்டாட்டமாயிருந்தது. ஸ்ரீ மத்யகேகருடைய நண்பர்களுள் சிலர் வெற்றிலைப்பாக்கு வழங்கினார்கள்; சிலர் சர்க்கரை வழங்கினார்கள்; சிலர் கோவிலிலே பஜனை முதலியன செய்தார்கள். அண்டை வீட்டுக்காரராகிய ஸ்ரீ பூர்வாலயபட்டர் உடனே அக் குழந்தைக்குப் பாலுக்காக ஒரு பசு கொடுத்தார். "இவர் இக் குழந்தைக்குப் பாலுக்காகப் பசு கொடுத்த புண்யத்தினாலே, மரித்தவுடனே தமது புத்திரனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து, ஸ்ரீ மாத்வரிடத்திலே சிஷ்யராகி, மோக்ஷ

மார்க்கம் தெளிந்து முக்தி யடைந்தார்'' என்று ஸ்ரீ மத்வ விஜயம் கூறுகின்றது.

''வாயுபகவானே ஸ்ரீமாத்வராய் வந்து அவதரித்தார்'' என்று ஸ்ரீ மாத்வ விஜயம் கூறுகின்றது; மதாபிமானிகளும் இதை நம்புகின்றார்கள். ஸ்ரீ ராமாவதாரத்திலே வாயுபகவான் ஹநுமானாக அவதாரம் செய்தார்; ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலே பீமசேனனாக அவதரித்தார்; ஸ்ரீமத் பாதராயணருடைய உபதேசங்களைப் பரப்புவதற்காக ஸ்ரீ பாஜக க்ஷேத்திரத்திலே ஸ்ரீமாத்வராக அவதரித்தார். இவ்விஷயத்திற்குப் புராணங்களிலும் மேற்கோள்கள் இருக்கின்றன.

''ஸ்ரீ மாத்வர் பிறந்த இடம் இதுதான்'' என்று அவ்வூர் வாசிகள் யாத்திரீகர்கட்கு இன்றும் ஒரு வீட்டைக் காட்டுகின்றார்கள். இப்பொழுது பக்த சிரேஷ்டர்கள் அந்த வீட்டை மேலே தளமிட்டு நன்றாகக் கட்டியிருக்கின்றார்கள். இந்த இடம் என்றென்றும் பந்தோபஸ்தாக இருக்குமாறு, உடுப்பியிலுள்ள எட்டு சந்யாசிகளுள் ஒருவர், கணூர் மடத்து ஸ்வாமிகள், இந்த வீட்டைச் சுற்றிப் பெரிய கட்டடம் கட்டி, பெரிய மதில்களிட்டிருக்கின்றார். இக் கட்டடங்கட்கு அருகே ஒரு சிறிய கோவில் உள்ளது. இதில் ஒரு பாறையில் இரண்டு அடிச் சுவடுகள் காணப்படுகின்றன. இவை ஆசார்யருடைய ஸ்ரீ பாதங்கள் என்று கருதப்பட்டுப் பூஜிக்கப்படுகின்றன.

இந்தக் கிராமத்திலே வாசுதேவ தீர்த்தம் என்று ஒரு தீர்த்தமும் உள்ளது. இது விஷயமாக ஒரு சரித்திரம்

கூறப்படுகின்றது. "ஸ்ரீ மாத்வர் சிறு பையனுயிருந்தபொழுது இந்தத் தீர்த்தத்தைத் தமது உபாத்தியாயரின் பொருட்டுப் பரிசுத்தமானதாகச் செய்தார்" என்று சொல்லப்படுகின்றது. ஒரு சமயத்திலே ஸ்ரீ மாத்வருக்கு அன்று துவாதசியான தினத்திலே ஸ்ரீ பரசுராம தீர்த்தங்கள் எல்லாவற்றுக்கும் செல்ல முடியாமற் போயிற்று; தினந்தோறும் இவர் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து வருவது வழக்கம். ஸ்ரீ மாத்வர் இந்தத் தீர்த்தத்தை மற்றெல்லாத் தீர்த்தங்களினளவு அவ்வளவு பரிசுத்தமாக ஆக்கிவிட்டார். "இது மஹா பரிசுத்தமான தீர்த்தம்; அந்த நான்கு தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து கிடைக்கும் புண்ணியம் இவ்வொரு தீர்த்தத்திலே ஸ்நானம் செய்தால் கிடைக்கும்" என்று ஸ்ரீ மாத்வர் கூற, "குழந்தை குளறுகிறுன்" என்று எவரும் நம்பவில்லை; உடனே ஸ்ரீ மாத்வர் தாம் சொல்லியது உண்மையென்று நிரூபிக்கக் கருதி அருகிலிருந்த ஒரு சிறிய அஶ்வத்த விருக்ஷத்தை வேரோடு பிடுங்கி, அதைத் தலை கீழாக நட்டு, "இந்தப் புதிய தீர்த்தத்துத் தண்ணீரை அதற்கு வார்த்து வந்தால், அவ் விருக்ஷம் வளரும்" என்று கூறினர்; "அப்படியே அந்த விருக்ஷம் தழைத்து ஓங்கி வளர்ந்தது" என்று ஐதிகம் கூறுகின்றது. இந்த விருக்ஷம் இன்றும் அந்தத் தடாகத்தின் அருகே யுள்ளது.

---

2-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் பாலப் பருவம்

தேவர்கள் உலகிலே வந்து அவதரித்தாலும் அவர்கள் மனிதர்களைப் போலவே நடந்து, மனிதர்களுடைய குணம் குற்றங்களை யெல்லாம் அடைந்தவர்கள் போலக் காட்டிக் கொள்வது வழக்கம். இது அவர்களுக்கு ஒரு லீலையே போலும்! ஸ்ரீமாத்வர் ஸ்ரீ வாயுபகவானுடைய அவதாரமா யிருந்தும், ஒரு சாதாரண மானிடக் குழந்தைபோன்றே ஒழுகினார்; அடிக்கடி உரத்த சத்தமிட்டு அழுதார்; பாலுக்குப் பசித்தார்; புதிதாகப் பிறந்த குழந்தைகள் என்னவெல்லாம் செய்யுமோ அவ்வாறெல்லாம் அவர் செய்தார்.

பிரசவமாகிப் பத்து நாட்கள்வரை தாயாரும் குழந்தையும் அறையை விட்டு வெளியே வராதிருப்பது வழக்கமல்லவா? இப் பத்து நாட்களும் கழிந்து, பதினோராம் நாள், தாயாரும் குழந்தையும் ஸ்நாநம் செய்தார்கள்; வீடு புண்ணியா வசனம் செய்யப்பட்டது; குழந்தையின் நாமகரண வைபவம் மிகவும் விமர்சையாக நடத்தப்பட்டது; வாசுதேவன் என்ற பெயர் குழந்தைக்கு இடப்பட்டது. வாசகர்களே! இப்பொழுது ஒரு நிமிஷம் மற்றெல்லாவற்றையும் மறந்துவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாலப் பருவத்தை ஞாபகப்படுத்திப் பாருங்கள்! அவருடைய அழகையும்

பால சேஷ்டைகளையும் ஆலோசித்துப் பாருங்கள்! ஸ்ரீ கிருஷ்ணபகவானைப்போலத் தனக்கொரு பிள்ளை பிறக்கவேண்டுமென்று விரும்பாத தாயும் இவ் விந்தியாவில் உண்டோ? அதுவும், நெடு நாட்களாகப் புத்திரப்பேற்றின் பொருட்டுத் தவம் செய்த ஸ்ரீ மத்யகேகரும் ஸ்ரீ வேதவல்லியும் தங்கள் அருமைக் குமாரனை ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருநாமங்கள் பலவற்றுள் ஏதேனும் ஒரு நாமத்தினலல்லாமல் வேறு எந்நாமத்தினல் கூப்பிடுவார்கள்? ஆகையால், வாசுதேவன் என்ற பெயர் அருமையும் ஆசையும் மிகக் குறிப்பிட வைக்கப்பட்டது. இன்னும், மத்யகேகர் ஒரு வித்துவானயிருந்ததனலே, வாசுதேவன் என்று ஸ்ரீ வாயுபகவானுக்கு ஸம்ஸ்கிருதத்தில் பொருள் உண்டு என்று தெரிந்தும், தமது குழந்தைக்கு இப் பெயர் வைத்திருக்கலாம்.

சாக்ஷாத் ஸ்ரீ அநந்தேச்வரருடைய கிருபையினலே இக் குழந்தை ஜனித்ததாகையால், மத்யகேகரும் வேதவதி அம்மையாரும் குழந்தையைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஸ்ரீ அநந்தேச்வரரைத் தோத்திரம் செய்துவந்தார்கள்; இக் குழந்தையை அந்த க்ஷேத்திரத்துக்கு எடுத்துச் சென்று, அநந்தேச்வரருக்கு வந்தனை வழிபாடுகள் செய்வது தங்கள் முதற்கடமையாகக் கருதினர்கள். வேதவதிக்குக் கொஞ்சம் உடம்பு தெளிந்து, யாத்திரை செய்வதற்குத் தகுந்த சக்தி ஏற்பட்டவுடன், வாசுதேவக் குழந்தையை எடுத்துக்கொண்டு ஸ்ரீ அநந்தேச்வரர் சந்நிதானத்துக்கு ஸ்ரீ மத்யகேகரும் வேதவதியும் புறப்பட்டார்கள்; உற்ருர், உறவினர்

சுற்றத்தினர் முதலிய அநேகரும் கூடவே புறப்பட்டார்கள். உடுப்பி க்ஷேத்திரம் போய்ச் சேர்ந்து, இவர்கள் குழந்தை யைச் சுவாமி சந்நிதானத்தில் கிடத்தி, செய்யவேண்டிய பூஜை முதலியவற்றைச் செய்து முடித்ததும், குழந்தையை யெடுத்துக்கொண்டு ஊர் நோக்கித் திரும்பினார்கள். இப்பொழுது மாலை வெகு நேரமாய்விட்டது.

ஸ்ரீ பாஜக க்ஷேத்திரமானது உடுப்பியிலிருந்து வெகு தூரமில்லாவிடினும், பாதை ஒரு இருண்ட காட்டினூடே யுள்ளது. இன்றும் உடுப்பியிலிருந்து ஸ்ரீபாஜக க்ஷேத்திரத் துக்கு வண்டிப் பாதை யில்லை. இருட்டிலே ஒரு பெருத்த ஆரண்யத்தின் நடுவே ஒற்றையடிப் பாதையைப் பின் பற்றி வருவதென்றால் சிறிது கஷ்டந்தானே! உடுப்பிக் குச் சென்றிருந்த ஆண், பெண், குழந்தைகள் அடங்க லும் அடர்ந்து இருண்ட ஒரு இடத்தின் வழியே போகும் பொழுது, அர்த்த ராத்திரியா யிருந்தது. "ஒரு பைசாசம் அப்பொழுது அவர்களுடைய வழியைத் தடுத்தது" என்று சொல்லப்படுகின்றது. அது ஒரு மனிதன் மூலமாகத் தோன்றி, அந்த ஜனங்களை நோக்கி, "தேவ அவதாரமான இந்தக் குழந்தைமாத்திரம் இப்பொழுது உங்களுடன் இல்லாவிட்டால், உங்கள் ஒவ்வொருவருடையவும் உயி ரைக் குடித்திருப்பேன்" என்று கூறிற்றும். அங்கிருந்த எல்லோருக்கும் நடுக்கம் உண்டாய்விட்டது. இந்த அர்த்த ராத்திரியிலே இருண்டு கரிந்த அக் காட்டின் வழியாகப் பிரயாணம் செய்யத் துணிந்ததற்காக அவர்கள் தங்களைத்

தாங்களே நொந்துகொண்டார்கள். ஆனால், இடையிலே கொஞ்சம் சந்தோஷம். "வாசுதேவக் குழந்தை சாதாரண மனுஷப் பிறப்பன்று" என்று அந்த பைசாசம் கூறிற்றே; ஆகையால், குழந்தைக்கு எவ்விதக் கேடுமில்லை. அவர்கள் வெகு வேகமாக ஊரை நோக்கி நடந்து ஈப்வரனைத் தியானித்துக்கொண்டே ஸ்ரீபாஜகக்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள்.

சின்னாட்கள் சென்றன. வாசுதேவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பார்ப்பவர் கண்களையெல்லாம் பறித்துக்கொண்டு, அழகே ஓர் உருவெடுத்து வந்தாற்போல, வளர்ந்து வந்தார். குழந்தைகளுக்குச் சாதாரணமாக உண்டாகின்ற சொறி, சிரங்கு, கரப்பான், பாலாரிஷ்டம் முதலிய எவ்வித வியாதியும் இவருக்கு உண்டாகவில்லை. இவருடைய கண்களின் அழகும் பார்வையின் ஒளியும் எல்லோரையும் இரமிக்கும்படி செய்துவந்தன. இக்குழந்தைசரீர சாஸ்திர விதிப்படி முப்பத்திரண்டு லக்ஷணங்களும் குறைவற அமையப் பெற்றதாயிருக்கக் கண்டு பெரியோர்கள் ஆச்சர்யப்பட்டார்கள். தெருவிலே போவார் வருவார் கூட இக் குழந்தையைக் காணும்படி நேரிட்டால், ஐந்து நிமிஷம் நின்று அதனுடைய அழகைக் கண்டு, ஆநந்தித்துவிட்டுப் போவார்கள். ஜனங்கள் கரகோஷம் செய்து "நாங்கள் எத்தனையோ குழந்தைகளைப் பார்த்திருக்கின்றோம்; இம்மாதிரி குழந்தையைப் பார்த்ததில்லை" என்று மொழிவார்கள்.

வாசுதேவருக்கு இன்னும் சரியாக ஒரு வயது ஆக வில்லை. ஒருநாள் வேதவதியம்மையார் எங்கோ வெளியே போகவேண்டி வந்தது; குழந்தையைப் பார்த்துக்கொள்ளும் படி தமது மூத்த புத்திரியினிடம் கூறிவிட்டு, அவர் வேலையாகப் போய்விட்டார். தாயார் வெளியே போனதுதான் தாமதம், வாசுதேவன் கூச்சலிட்டு அழத்தொடங்கினான். அந்தப் பெண், குழந்தையின் அழுகையை ஆற்றுவதற்கு என்ன வெல்லாமோ செய்து பார்த்தாள்; கையி லெடுத்துக் கொண்டு தெருவில் வந்து பல வேடிக்கைகளையும் காட்டினாள்; அழுகை நிற்கவில்லை; தொட்டிலிலே கிடத்தித் தாலாட்டினாள்; பயனில்லை. கடைசியாகக் குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு வேறு வழியில்லாமல், அடுப்பிலிருந்து அப்பொழுதுதான் கீழே யிறக்கி வைக்கப்பட்டிருந்த கொள்ளிலே கொஞ்சம் எடுத்து, குழந்தைக்குக் கொடுத்தாள். குழந்தை கீழே தவழ்ந்துகொண்டே அதைத் தின்றுவிட்டு, கொள் வைத்திருந்த பானையினிடம் சென்று உட்கார்ந்துகொண்டு, ஒரு பானைகொள்ளையும் தின்றுவிட்டது; இன்னும் அந்தக் கொள் சுடச்சுட இருந்தது; அவ்வளவு கொள்ளையும் தின்று முடித்துவிட்டுத்தான் அக் குழந்தை தன் அழுகையை நிறுத்தியது.

குழந்தை விநாயகர்போல, பெருவயிற்றைப் போட்டுக் கொண்டு, சிரித்துக் களித்து விளையாடிக்கொண்டிருந்தது; வேதவல்லியம்மையார் திரும்பிவந்தார்; நடந்த சங்கதியை அறிந்துகொண்டார். "இரண்டு மாடுகளுக்காக வேகவைக்

கப்பட்ட கொள்ளை வாசுதேவன் ஒருவன் தின்றுவிட்டானே; அவனுடைய உடம்புக்கு என்ன கெடுதல் வருமோ?'' என்று அவ்வம்மையார் மிக வருந்தினர். ஆனால், குழந்தை அதை லக்ஷியமே செய்யவில்லை. ஒருநாளாய்விட்டது, மறுநாளுமாய்விட்டது, இன்னொரு நாளுமாய்விட்டது; குழந்தைக்கு ஒரு சுகக்கேடுமில்லை.

இதே சமயத்தில் இன்னொரு விசேஷமும் நடந்ததாகக் கூறப்படுகின்றது. இச் சம்பவத்தினால் குழந்தைக்குத் துணிச்சலும் தைர்யமும் அதிக மிருந்தன, அளவுக்கு மிஞ்சியிருந்தன வென்பதைக் காட்டுகின்றது. ஒருநாள் வாசுதேவனை வீட்டிலே காணவில்லை. எவரும் அவனைப் பார்க்கவில்லை. பெற்றோர் மனம் கலங்கி, ஊரெல்லாம் தேடினார்கள். அந்தக் கிராமத்து மற்ற ஜனங்களும் தேட ஆரம்பித்தார்கள். வெகுநேரம் தேடினார்கள்; பயனில்லை. கடைசியாக மாலைநேர மாயிற்று; மேயப்போயிருந்த மாடுகளெல்லாம் திரும்பித் தங்கள் தங்கள் வீடுகட்கு வந்துகொண்டிருந்தன. குழந்தை வாசுதேவன் ஒரு பெரிய பயங்கரமான காளை மாட்டின் வாலைப்பற்றித் தொங்கிக்கொண்டு திரும்பி வந்தான். அவனுடைய முகத்திலே பயமும் விளங்கவில்லை, களைப்பும் தெரியவில்லை. காலையிலே மாடுகள் மேய்ச்சலுக்குப் போகும்போது, அக் காளை மாட்டின் வாலைப்பற்றித் தொங்க ஆரம்பித்த வாசுதேவர் இது வரையில் அதன் வாலை விடவேயில்லை; அது சுற்றிச் சுற்றியோடி இப் பையனைக் கீழே தள்ளிவிடுவதற்கு வேண்டிய

முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தது. ஆயினும், பையன் மஹா பலம் வகித்து, வாலை விடவேயில்லை. வாசுதேவனைத் தேடிக்கொண்டிருந்தவர்கள், பையன் அவ் வூரிலே மகா 'துஷ்டமாடு' என்று எல்லோராலும் கருதப்பட்டிருந்த அந்த மாட்டின் வாலைப்பற்றித் தொங்கிக்கொண்டு வந்ததைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள்; நடுநடுங்கினார்கள்; "குழந்தைக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்குமோ?" என்று பயந்தார்கள். ஆனால், குழந்தையின் முகத்திலே புந்நகை தவழ்கின்றது; சந்தோஷம் குதிக்கின்றது. அவர்கள் குழந்தையை யெடுத்து மார்போடணைத்துச் சேர்த்துக் கட்டிக்கொண்டு உச்சி முகந்து முத்தமிட்டு, வீட்டுக்குக் கொண்டுவந்து திருஷ்டி கழித்தார்கள்.

வாசுதேவன் தவழ்ந்து நடந்து, பின்னர்த் தத்தித் தத்தி நடக்க ஆரம்பித்தான்; நடக்க ஆரம்பித்ததும், அவன் ஓரிடத்திலே யிருக்கமாட்டான்; ஊரெல்லாம் சுற்றிவருவான்; மலைமேலுள்ள க்ஷேத்திரத்துக்குப் போய் வருவான்; பக்கத்திலிருந்த காடுகளிலே சுற்றிவருவான். அவனுக்கு ஓரிடத்திலே இருப்புக் கொள்ளாது. ஆனால், அவனால் எவருக்கும் கஷ்டம் நேரிடாது, கவலை யுண்டாகாது. வேடிக்கை விளையாட்டுக்களிலே கூட, பிறருக்குத் தீங்கு நேரிடும்படியான வேடிக்கை விளையாட்டுகள் செய்ய மாட்டான்; எப்பொழுதும் சுற்றிக்கொண்டே யிருப்பான்; ஓடியாடிக்கொண்டே யிருப்பான்; உற்சாகமும் ஊக்கமும் அவனில் ஒருங்கே நிறைந்து விளங்கின.

வாசுதேவன் இப்படிச் சுற்றி திரிந்த காலம் வீண் போயிற்றென்று நாம் நினைக்கவேண்டியதில்லை. மலையிலும் ஆரண்யங்களிலும் கோவிலிலும் சுற்றித் திரிந்து, பிரகிருதியை ஆராய்ந்துகொண்டிருந்தான்; இயற்கையிலே நடக்கும் ஒவ்வொரு காக்ஷியையும் வெகு கூர்மையாகக் கவனிப்பான்; ஒவ்வொரு விஷயத்தினுள்ளும் நுழைந்து ஆங்காங்குப் புதைந்து கிடக்கும் ஆந்தரார்த்தங்களையறிந்து வந்தான்; நிர்மலமான ஆகாயத்திலே எண்ணற்ற நக்ஷத்திர கணங்கள் மினுக்கு மினுக்கு என்று பிரகாசித்ததைக் கண்டு களித்தான்; செடி கொடிகள் விருக்ஷங்கள் துளிர்ப்பதும், பசுந்தளிர்கள் விடுவதும், பின்னர்ப் பழுப்பதும் கண்டு வியந்தான்; புஷ்ப ஜாதிகளின் அழகையும் வாசனையையும் பார்த்துப் பார்த்துப் பிரமித்தான். நாலாபக்கங்களிலும் வானம் வந்து மூடி, இப் பூமியொரு சிறைக்கூடம் போலத் தோன்றுவதைக் கண்டு, இதினின்றும் வெளியேறி, ஓடியாடுவதற்கு எல்லையற்ற பிரதேசமொன்றை யடைய வேண்டுமென்று அவனுக்கு ஒரு எண்ண முண்டாயிற்று. இப்படி வாசுதேவன் எப்பொழுது பார்த்தாலும் ஊர்சுற்றிக் கொண்டிருந்தாலும், புத்தி சாதுர்யத்திலும் இவனுக் கிணையாக எவரையும் சொல்ல முடியாதிருந்தது.

இப்பொழுது ஒரு விசேஷம் நடந்தது. ஸ்ரீ மத்யகேக பட்டர் காலக்ஷேபத்துக்குக் குறைவில்லாத பூஸ்திதியையும் மாடு கன்றுகளையும் உடையவராயினும் பெருஞ் செலவாளி யாகையினாலே, இவர் நாலா பக்கங்களிலும்

கடன் வாங்கி மிகவும் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தார்' என்று முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். ஒரு சமயத்தில் ஒருவன் இவருக்குக் கொஞ்சம் பணம் கடன் கொடுத்தவன், கடன் கேட்க வந்தான். இவரிடத்தில் அப்பொழுது ஒரு பைசாகூட இல்லை. அவனுக்கு ஸ்ரீ மத்யகேகர் எவ்வளவோ ஜவாப் சொல்லிப் பார்த்தார். அவன் பணம் வாங்காமல் போவதா யில்லை. முற்காலத்திலே கடன்காரர்கள் வந்து வீட்டு வாசலில் உட்கார்ந்துகொள்வது வழக்கம்; இக் காலத்திலும் கிராமாந்திரங்களிலே இவ் வழக்கம் நடைபெற்று வருகின்றது. ஆனால், இவ் வழக்கமானது நாளாவர்த்தியிலே சட்டத்தினால் கண்டிக்கப்பட்டு மறைந்து வருகின்றது. கடன்காரன் வந்து "பணம் கொடுத்தால் தான் போவேன்" என்று வாசற்படியில் உட்கார்ந்துகொள்வான்; கடன் கொடுக்கவேண்டியவனையும் அங்கு இங்குப் போக விடமாட்டான்; கடன்காரனை வாசற்படியில் உட்கார வைத்துவிட்டு, உள்ளே எவரும் சாப்பிடவும் முடியாது. கடன்காரனுக்குச் சாப்பாடு போட்டாலும் அவன் சாப்பிட மாட்டான்; பணம் வாங்கும்பொருட்டுப் பழியாகப் பட்டினி கிடப்பான். இவ்விதமாகக் கடன்காரனுடைய நிர்ப்பந்தத்துக்குட்பட்டு, பணம் வாங்கியவர்கள் எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிடுவார்கள்.

ஸ்ரீமத்தியகேகருக்கு இம்மாதிரி யொரு கஷ்டம் நேர்ந்தது. ஒரு பணக்கார சௌகார் இவருக்குக் கொஞ்சம் பணம் கடன் கொடுத்திருந்தான்; நெடுநாட்களாகக் கேட்டு

வந்தான். ஸ்ரீமத்தியகேகரினுல் திருப்பிக் கொடுக்க முடிய வில்லை. அவன் கொஞ்சம் பிடிவாதக்காரன்; 'எப்படி யாவது இன்று பணம் பெற்றுத்தான் போவது' என்று சங்கற்பம் செய்துகொண்டு வந்தான் சௌகார். ஸ்ரீ மத்ய கேகர் போஜனம் செய்யும்முன் மாத்யாஹ்நிகம் செய்யப் போகும் சமயம்; கடன்காரன் வாசற்படியில் வந்து உட்கார்ந்துவிட்டான்; அவனிடமிருந்து தப்புவித்துக்கொள்வதற்கு வழி யொன்றும் தோன்றவில்லை. ஸ்ரீ மத்யகேகர் இன்னது செய்வதென்று தெரியாமல் தீர்க்காலோசனையி லாழ்ந்து பேய் விழி விழித்துத் தத்தளித்துக்கொண்டிருக்கையில், வாசுதேவன் கள்ளங்கபடற்ற மனமுடையவனாய்த் துள்ளிக் குதித்து ஓடிவந்து "அப்பா! அப்பா! சாப்பிடப்போகலாம் வா!" என்று தனது அழகிய மழலைச் சொற்களால் அழைத்தான். ஸ்ரீ மத்யகேகர் வாசுதேவனுக்குப் பல சாக்குப் போக்குகள் சொல்லிப் பார்த்தார்; அவன் கேட்பதாயில்லை. மறுபடியும் மறுபடியும் பிதாவைப் போஜனத்துக்கு அழைத்து வற்புறுத்தவே, ஸ்ரீமத்யகேகர், "கண்ணே! நான் இவனிடத்திலே ஒரு மாடு வாங்கினேன்; அதற்குப் பணம் கொடுக்கவில்லை; அந்தக் கடன் பாக்கி யிருக்கின்றது; 'இப்பொழுது பணம் கொடுத்தால்தான் போவேன்' என்று அவன் ஒரே பிடிவாதமாக உட்கார்ந்திருக்கின்றான். நான் அவனுக்கு ஒரு வழி பண்ணிவிட்டு வந்து சாப்பிடுகின்றேன். நீ போ! சாப்பிடப்போ!" என்றார்.

வாசுதேவன்பிதாவினிடமிருந்து நீங்கினன்; யோசனை செய்தான், 'எப்படியாவது இன்று அந்தச் சௌகாருக்குப்

பணத்தைக் கொடுத்துப் பிதாவைத் தப்புவிக்கவேண்டும்' என்று தீர்மானித்தான். ஈஸ்வராம்சமாயுள்ள அந்த வாசுதேவனுக்கு இது ஒரு பெரிதோ? வீட்டைச் சுற்றி வேருெரு புறமாக வந்து, வாசுதேவன் தனது பிதாவுக்குத் தெரியாமல் அந்தக் கடன்காரனைச் சைகை காட்டியழைத்தான்; கடன்காரனும் அப்படியே அப் பையனிடம் செல்ல, அவனுக்கு வாசுதேவனிடத்து ஒருவித அன்பு, காரணமற்ற அன்பு உண்டாயிற்று. வாசுதேவனுடைய முகத்தைத் தர்சிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் எவருக்குத்தான் அவனிடத்திலே அன்பு உண்டாகாதிருக்கும்? வாசுதேவன் அந்தச் சௌகாரை யிட்டுக்கொண்டு, இப்பொழுது வாசுதேவ தீர்த்தம் என்று கூறப்படுகின்ற குளத்தைத் தாண்டிச் சிறிது தூரம் சென்று, ஒரு பெரிய விருக்ஷத்தி னடியிலே கொண்டுபோய் நிறுத்தி, அந்தச் சௌகாரை நோக்கி, "என்னுடைய பிதா உனக்குக் கொடுக்கவேண்டிய கடன் எவ்வளவு? வட்டியும் முதலுமாக இன்றைய வரையில் எவ்வளவாகின்றது? சீக்கிரம் சொல்!" என்று கேட்டார். அந்தச் சௌகார் அப்படியே கணக்கிட்டுச் சொல்ல, வாசுதேவன் "இவ்வளவுதானு?" என்று குனிந்து, தனது இருகைகளையும் சேர்த்துக்கொஞ்சம் புளியங்கொட்டைகளை யெடுத்து, "எனது தகப்பனுர் கொடுக்கவேண்டிய பணத்தை இதோ பெற்றுக்கொள்!" என்று அந்தச் சௌகாரினுடைய கையில் கொடுத்தார். அந்தச் சௌகார் அவற்றை வாங்கினதுதான் தாமதம்; அவனும் வாசுதேவனுடைய விளையாட்டிலே லயித்து,

இதை யொரு விளையாட்டாகக் கருதி வாங்கினன். ஆனல், என்ன ஆச்சர்யம்! சௌகாருடைய கையிலே சேர்ந்த புளி யங்கொட்டைகள் பொன் நாணயங்களாக மாறி விளங்கின. ஸ்ரீமத்யகேகர் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று சௌகார் கூறினரோ, அவ்வளவும் சௌகாருடைய கையில் சரியா யிருந்தது. சௌகாருக்கு உண்டான சந்தோஷத் துக்கு ஓர் அளவே யில்லை. அவன் பணத்தைப் பெற்றுப் பன்முறையும் பையனுக்குச் சலாம் செய்துவிட்டுத் தனது வீடு போய்ச் சேர்ந்தான். வாசுதேவன் பிதாவுக்குத் தெரி யாமல் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான். சின்னட்கள் கழி த்து ஸ்ரீ மத்யகேகர் சௌகாருக்குப் பணம் எடுத்துக்கொ ண்டுபோய்க் கடன் தீர்க்கப் போகையில், சௌகார் அன்று நடந்த சம்பவத்தைச் சவிஸ்தாரமாக எடுத்துரைத்து, வாசு தேவன் தன்னுடைய கடனைத் தீர்த்துவிட்டதாகக் கூறி னன். அப்பொழுது ஸ்ரீ மத்தியகேகர் அடைந்த சந்தோஷ த்துக்கும் ஆச்சர்யத்துக்கும் அளவிட்டுக் கூற ஆதிசேஷனு லும் முடியாது. இந்தச் சமாசாரம் எங்கும் தெரியவரவே, எல்லோரும் வியப்புற்றார்கள். இப்பொழுதும் "வாசுதே வன் கடன் தீர்த்த இடம் இது" என்று அவ்வூர் ஜனங்கள் யாத்திரீகர்களுக்கு ஒரு பெரிய விருக்ஷத்தைக் காட்டுகின் றார்கள்.

இக் காலத்திலே இந்தச் சம்பவம் மேனாட்டு நாகரீகப் பித்தர்களாலே நம்பப்படுகிறதில்லை. "உலகிலே முடியாத கார்யம் ஒன்றுமே யில்லை" என்று ஐரோப்பிய அறிவாளர்

கள் உளறி வழிந்துகொண்டிருந்தும், "இச் சம்பவம் போன்ற விஷயங்கள் அசாத்தியமாம்" என்ற மூட நம்பிக்கை இன்றும் அந்த மேனுட்டு நாகரிகப் பித்தர்களிடமிருந்து நீங்கி ஒழிந்தபாடில்லை. அவதார புருஷர்களால் ஆகாத காரியமும் ஒன்று உண்டோ? இச் சம்பவங்கள் ஸ்தூல திருஷ்டியிலே உற்பத்தியாகின்றவை யல்ல; இவை சூக்ஷ்ம திருஷ்டியிலே உற்பத்தி யாகின்றவையாம். தற்காலத்து ஐரோப்பிய சாஸ்திரக்ஞர்கள் எல்லாவற்றையும் பிரத்தியக்ஷப் பிரமாணம் ஒன்றினுலேயே ஒப்புக்கொள்கின்ருர்கள். ஆனுல், தற்கால சாத்திரக்ஞர்கள் இன்னும் ஸ்தூல பிரபஞ்சத்தையே பூரா்வாக ஆராய்ந்து பார்த்தவர்கள் என்று சொல்ல முடியாதிருக்கின்றது. ஸ்தூல பலத்தைப் பார்க்கிலும் சூக்ஷ்ம சக்தியே சிறந்தது. சூக்ஷ்ம சக்திகளையுடைய மத ஆசார்யர்களுடைய வாழ் நாட்களிலே இங்ஙனம் சித்திகள் அநேகம் நிகழ்ந்திருக்கின்றன வென்பது தெளிவாக விளங்குகின்றது.

---

3-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் உபநயனம்

உடுப்பி நகரமானது அரபிக் கடலிலே ஒரு துறைமுகமாம். ஸ்ரீ மாத்வருடைய சரித்திரம் நிகழ்ந்த பெரும்பான்மை யிடங்களும் இவ் வரபிக் கடலிலே ஒரு துறைமுகப் பட்டணங்களாகவே யிருக்கின்றன. கடற்கரையிலிருந்து உடுப்பிக்குச் சுமார் மூன்று மைல் தூரம் இருக்கும். உடுப்பியிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள்ளே தலைக்கூடம் என்று ஒரு கிராமம் உள்ளது; இன்னும் சுமார் ஒரு மைல் தூரம் நாம் மேற்கு நோக்கிச் சென்றால், கொடிவூர் என்று ஒரு கிராமம் உள்ளது; இங்கே ஸ்ரீ சங்கர நாராயணர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஒரு புராதன க்ஷேத்திரம் உண்டு. இந்த ஸ்ரீ சங்கர நாராயண மூர்த்தியைச் சாதாரண ஜனங்கள் ஸ்ரீ கானனதேவர் என்று அழைப்பது வழக்கம். இந்த க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் முற்காலத்திலே அடர்ந்த காடுகள் இருந்திருக்கலாம்; இந்த க்ஷேத்திரத்து மூர்த்திக்கு அதனால் இப் பெயர் வந்திருக்கலாம். இப்பொழுது இவ்விடத்தில் ஒரு பிராஹ்மண அக்கிரகாரம் உள்ளது. இந்தக் கானன தேவாலயத்துக்குக் கொஞ்சம் கிழக்கே ஒரு சிறிய பாதை போகின்றது. இப் பாதை வழியே சென்றால் உடுப்பிக்கு வடக்கே ஐந்து அல்லது ஆறு மைல் தூரத்திலே யுள்ள நெடியூர் தென்படும். உடுப்பியிலிரு

ந்து சுமார் மூன்றுமைல், தூரத்திலே கந்தபுரம் ரஸ்தாவிலே நெய்யம்பள்ளி யென்று இன்னொரு கிராமம் உள்ளது.

ஸ்ரீ மத்யகேகருக்கு மாமனார் வீடு நெய்யம்பள்ளி அல்லது நெடியூர்போலத் தோன்றுகின்றது; அல்லது, மாமனாரகத்து ஜனங்கள் இவ்விரு ஊர்களிலும் இருந்திருக்கலாம். ஆதலால், ஸ்ரீ மத்யகேகரும் ஸ்ரீ வேதவதியும் அடிக்கடி நல்ல நாள் பொல்லாத நாள்களுக்கெல்லாம் இந்தக் கிராமங்கட்கு வந்து போவது வழக்கம். நெடியூரிலே ஒரு சமயத்தில் ஒரு பெரிய உற்சவம் நடந்தது; அதற்கு ஸ்ரீ மத்யகேகரும் அவருடைய மனைவியும் சென்றிருந்தார்கள்; வாசுதேவனையும் கூட்டிக்கொண்டு போகாமலிருக்க முடியுமா? வாசுதேவனுக்கு அப்பொழுது மூன்று வயது இருக்கலாம்; நன்றாக நடந்து விளையாடிவந்தான்.

உற்சவம் நடந்துகொண்டிருக்கிறது. எங்குப் பார்த்தாலும் ஏகக் கூட்டமும் கூச்சலுமா யிருக்கிறது. சுற்றுப் பிரதேசங்களிலிருந்து எண்ணற்ற ஜனங்கள் வந்திருக்கிறார்கள்; நெடியூர் சிறிய கிராமமாதலாலே, ஆயிரக் கணக்காக ஜனங்கள் கூடவே, ஊர் அமளி குமளியா யிருக்கின்றது. வருவார் போவாரிடத்திலே க்ஷேமம் விசாரிப்பதும் நட்பு செய்துகொள்வதுமாகிய வேலை ஸ்ரீ மத்யகேகருக்கும் அவருடைய மனைவியாருக்கும் வேண்டியமட்டும் இருந்த தாகையால், வாசுதேவன் ‘இது சமயம்’ என்று அங்கிருந்து புறப்பட்டு எவருக்கும் தெரியாமல் கொடுவூரிலுள்ள கானன

தேவாலயத்தை நோக்கி நடந்தான். இரண்டொரு மைல் தூரம் நடக்கவேண்டி வந்தது; அவன் அதை லக்ஷியம் செய்யவில்லை. அவன் கானனதேவாலயம் வந்து சேர்ந்து; க்ஷேத்திரத்தி னுள்ளே புகுந்து, மூலஸ்தானத்தினுள்ளே சென்று ஸ்ரீ விஷ்ணுவைப் பூஜித்தான். கொஞ்ச நேரம் வாசு, தேவன் இங்கே யிருந்துவிட்டு, உடுப்பி நோக்கி நடந் தான். உடுப்பிக்குச் செல்லும் மார்க்கத்திலே யுள்ள தலைக் கூட க்ஷேத்திரத்திலே அவன் தங்கி ஸ்ரீ ஹரியைப் பூஜித்துக் கொண்டு அங்கிருந்து உடுப்பியி லுள்ள ஸ்ரீ சந்திரமௌளீஶ்வர க்ஷேத்திரத்துக்கும், பின்னர் ஸ்ரீ அநந்தேஶ்வர க்ஷேத் திரத்துக்கும் சென்றான்.

நெடியூரிலே உற்சவம் பிரமாதமாக நடந்ததினாலே, ஸ்ரீ மத்யகேகராவது அவருடைய மனைவியாவது வாசுதே வனைப்பற்றி வெகு நேரம் நினைக்காம லிருக்கும்படி நேரிட் டது. இவ்விருவரும் திடீரென்று நினைத்துக்கொண்டார் கள்; வாசுதேவனைத் தேட ஆரம்பித்தார்கள். "அருந்தவப் பயனா யுதித்த அழகிய புத்திரனைக் கவனியாது அலக்ஷியமா யிருந்தோமே; அந்தோ! நாங்கள் என்ன செய்வோம்? எங்குப் போய்த் தேடுவோம்?" என்று அலறி யலறி யழு தார்கள். என்ன செய்துதான் யாது பயன்? ஸ்ரீ மத்யகேக ருடைய நண்பர்க ளெல்லோருக்கும் இச்சங்கதி தெரியவந் தது. எல்லோரும் விசனித்து, மூலைக்கு மூலை குழந்தை யைத் தேட ஆரம்பித்தார்கள். வாசுதேவனிடத்திலே எல் லோருக்கும் பிரியம் தானே! 'பாஜக க்ஷேத்திரத்துப்

ஸ்பையன்' என்றால் போதும், 'அது வாசுதேவன்தான்' என்று ஜனங்கள் தெரிந்து கொள்வார்கள். "பாஜக க்ஷேத்திரத்துப் பையனைக் காணவில்லை" என்று பிரஸ்தாபமுண்டானதுதான் தாமதம்; உடனே உற்சவம் கலைந்துவிட்டது; மூலைக்கு மூலை ஜனங்களெல்லோரும் வாசுதேவனைத் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமுடையவர்களானார்கள்.

நெடுநேரம் கழித்து, வாசுதேவனைத் தேடப் புறப்பட்டவர்களுள் ஒருவர் உடுப்பிக்கு வந்து தேட, வாசுதேவன் ஸ்ரீ அநந்தேச்வர க்ஷேத்திரத்திலிருந்து வெளிவருவதைக் கண்டார். மூன்று வயதுப் பையன் தனிமையாக இவ்வளவு தூரம் நடந்து வந்தானென்றால் ஆச்சர்யமல்லவா? அவர்கள் வாசுதேவனைப் பிடித்துக்கொண்டு, "எப்படி வந்தாய்?" என்று கேட்டார்கள். வாசுதேவர் மறுமொழி கூறாது சிரித்துக்கொண்டு உற்சாக பூரிதராய், புன்னகை பொலியும் முகத்துடனே விளங்கினார். அவர்கள் "கண்மணியே! நீ குழந்தையாயிற்றே; இக் காட்டு வழியெல்லாம் நீ எப்படி தனியே நடந்தாய்?" என்று மறுபடியும் கேட்டார்கள். அளிக்கப்பட்ட மறுமொழி ஆச்சர்யமாயிருந்தது. "என்?நான் தனியே வரவில்லை. ஸ்ரீ சங்கர நாராயணர் என்னைத் தலைக்கூடத்துக்கு இட்டுச் சென்றார்; அந்த க்ஷேத்திரத்து ஸ்ரீ ஹரி என்னுடன் கூட இவ்வளவு தூரம் வந்தார்?" என்று வாசுதேவன் கூறினான். 'பையன் கள்ளங் கபடற்ற ஹிருதயத்துடனே கூறிய இம்மொழி உண்மையாயுமிருக்கலாம்' என்று சில பெரியோர்கள் நினைத்தார்

கள். வாசுதேவன் தனது பெற்றோருடனே கைகோர்த்துக்கொண்டு வந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாயும் நிர்ப்பயமாயு மிருப்பானோ, அவ்வளவு சந்தோஷமாயும் நிர்ப்பயமாயும் இருந்தான். உண்மையில் எம்பெருமானே வாசுதேவனுக்குத் துணையாகக் கூட வந்தாரோ வென்று அறிய வகை தெரியாது ஜனங்கள் திகைத்தார்கள்.

வாசுதேவன் சீக்கிரம் கொண்டு வரப்பட்டார்; பெற்றோராகிய ஸ்ரீ மத்யகேகரும் ஸ்ரீ வேதவதியும் அடைந்த ஆநந்தம் அன்றுதான் பிள்ளைப்பேறு அடைந்தது போன்றதா யிருந்தது; வாசுதேவன் திரும்பி வந்ததுபற்றிப் பெற்றோர் எம்பெருமானைத் தோத்திரித்துப் பிரார்த்தித்தார்கள். பின்னர் உற்சவம் முடிகிறவரையில் நெடியூரிலே யிருந்துவிட்டு, இவர்கள் பாஜக க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். வாசுதேவனுக்கு ஏகாந்தத்தினிடத்திலும் க்ஷேத்திரங்களிடத்திலும் ஒருவித பிரத்தியேகமான ஆசை யுண்டாய்க்கொண்டிருந்தது என்பது இப்பொழுது புலப்படும். வாசுதேவனுக்கு தனதுவயதுக்கேற்றவிளையாட்டுக்களிலே அதிக பிரியம் இருந்தபொழுதிலும், இவனுடைய விளையாட்டுக்க ளெல்லாம் விமானகிரிப் பாறைகளின்மீதும் க்ஷேத்திரத்தி னுள்ளே தனித்திருப்பதில் வாசுதேவனுக்குப் பிரியம் அதிகம். இவ்விளம்வயதிலேயே இவனுடைய மனமானது பக்தி விஷயத்திலே சென்றது. இவன் வீட்டிலே தங்குவதில்லை; மற்றக் குழந்தைகளுடனும் அதிகமாகச் சேர்வதில்லை. இவன் விளையாடவேண்டி

மென்றால் மலையடிவாரங்கட்குப் போய்விடுவான். ஸ்ரீவாசு தேவனுடைய மனோவாசனை யிப்படி யிருக்கிறதென்பதை அவனுடைய பெற்றோர்களால் அறிய முடியவில்லை. அவர்க ளும் அவனை அவனுடைய இஷ்டம்போல நடக்கும்படி விட்டுவிட்டார்கள்.

இவ்விதமாகப் பையனும் ஆநந்தம் அநுபவித்துக் கொண்டிருந்தான்; பெற்றோர்களும் பையனைப் பார்த்துப் பார்த்து ஆநந்தித்துக்கொண் டிருந்தார்கள். கொஞ்சக் காலத்துக்கு விசேஷ சம்பவ மொன்றுமில்லை. நாளுக்கு நாள் ஸ்ரீவாசுதேவனுக்குப் புத்தி பிரகாசித்தது; ஏகசந்தக் கிராஹியானான்; "படிப்பதற்கு வயது வந்துவிட்டது" என்று எல்லோரும் சொல்லும்படி யானான். ஸ்ரீ மத்ய கேகர் தமது புத்திரனுக்கு அக்ஷராப்யாசம் செய்விப்பதற்கு ஒரு நல்ல நாள் பார்த்துவைத்தார்.

அக்ஷராப்பியாச தினத்தன்று ஸ்ரீ மத்யகேகருடைய வீட்டிலே அவருடைய பந்துக்களும் நண்பர்களும் வந்து நிறைந்துவிட்டார்கள். சபை நடுவே ஸ்ரீ வாசுதேவனை யுட்கார வைத்து மந்திரங்கள் ஜபிக்கப்பட்டன; ஓமம் வளர்க்கப்பட்டது. வாசுதேவன் ஸ்நாநம் செய்து, புதிய உடை யுடுத்து, தமது மழலைச் சொற்களினால் ஸம்ஸ்கிருத பாஷை யக்ஷரங்களை மொழிந்தது அனைவரையும் ஆநந்த வாரியில் ஆழ்த்திவிட்டது.

ஸ்ரீ வாசுதேவன் படிப்பிலே வெகு சீக்கிரம் விருத்தி யடைந்தான். எதையும் கற்றுக்கொள்வதற்கு ஸ்ரீ வாசு

தேவன் பெரும் பிரயாசை யொன்றும் எடுக்கவேண்டி யிருக்கவில்லை. ஒருதரம் படித்தால் போதும்; வாசுதேவன் எதையும் இரண்டாந்தரம் படிக்கவேண்டிய அவசிய மில்லை. பிதாவாவது உபாத்தியாயராவது ஒரு பாடத்தை இரண்டாந்தரம் சொல்லிக்கொடுத்தால், ஸ்ரீ வாசுதேவன் அதைக் கவனிக்கமாட்டான். பிதா எதையும் இரண்டாம் முறை சொல்லிக்கொடுக்கப் புகுந்தால், ஸ்ரீ வாசுதேவன் 'அது தனக்கு முன்னமேயே தெரியும்' என்பதை ரூபிக் கும்பொருட்டு அதை யொப்புவித்துப் பிதாவைத் திருப் திப்படுத்திவிடுவான். புத்திரன் மகா மேதாவியா யிருக் கிறதினாலே 'எங்கே திருஷ்டி விழுந்துவிடுமோ?' என்று ஸ்ரீ மத்யகேகர் பயந்து, அவனை யொரு தனித்த இடத் துக்கு இட்டுக்கொண்டு போய், அவனுக்கு ரகஸ்யமாகப் பாடம் சொல்லிக்கொடுப்பது வழக்கம்.

இப்படி யிருக்கையில், நெய்யம்பள்ளி யென்னும் கிரா மத்தில் ஸ்ரீ மத்யகேகருடைய மனைவியின் பந்துக்கள் வீட் டில் ஒரு விவாகம் நடந்தது. இதற்கு ஸ்ரீமத்யகேகர் போக வில்லை; ஆனால், ஸ்ரீ வேதவதியையும் ஸ்ரீ வாசுதேவனையும் அனுப்பிவைத்தார். நெய்யம்பள்ளியிலே சிவன் என்ற பெயரையுடைய ஒரு வித்துவான் ஜனங்களைக் கூட்டம் போட்டுப் புராணப் பிரசங்கங்கள் செய்வது வழக்கம். ஸ்ரீ வாசுதேவனும் அவனுடைய தாயாரும் அவ் வூருக்குப் போயிருந்தபொழுது, ஒருநாள் மேற்படி சிவனுடைய புராணப் பிரசங்கம் ஒன்று நடந்தது. இருவரும் அதைக்

கேட்கப் போனார்கள். சிவன் ஒரு கடினமான வாக்கியத்தை வியாக்கியானம் செய்கையில் ஒரு தப்பிதம் செய்துவிட்டான. ஸ்ரீ வாசுதேவன் சட்டென்று ஒரு வார்த்தை கூறி அத் தப்பிதத்தைத் திருத்தினான்; வேறெவரும் கவனிப்பதற்குள்ளே ஸ்ரீ வாசுதேவன் இந்தத் தப்பிதத்தைக் கவனித்துத் திருத்திவிட்டான்; "இது யார்? புதிய குரலாயிருக்கின்றதே" என்று சபையினர் ஏறிட்டுப் பார்க்க, இளங்குழந்தை யொன்று இங்ஙனம் மொழிந்தது' எனக் கண்டார்கள்; ஆச்சர்ய மடைந்தார்கள். "ஆ! ஆ! என்ன பச்சைக் குழந்தை! பால்குடி முகம் மாறவில்லை! என்ன புத்திசாலித்தனம்" என்று எல்லோரும் ஸ்ரீ வாசுதேவனைக் கொண்டாடினார்கள்.

ஸ்ரீ வாசுதேவன் பிதாவினிடம் திரும்பி வந்தவுடனே நெய்யம்பள்ளியிலே நடந்த சங்கதியை அவரிடம் கூறி, "சிவன் கூறியது தப்புத்தானே?" என்று கேட்டார். ஸ்ரீ மத்யகேகர் அதிக சந்தோஷத்துடனும் கவனத்துடனும் தமது புத்திரன் கூறியதைக் கேட்டு, "ஆம்! சிவன் கூறியது தப்புத்தான்" என்றார்.

பாஜக க்ஷேத்திரத்திலேயே இதேமாதிரி யின்னொரு சம்பவம் நடந்தது. ஸ்ரீமத்யகேகர் அவ்வூரிலுள்ள ஜனங்கள் அனைவரும் கூடிய ஒரு கூட்டத்திலே ஒரு புராணப் பிரசங்கம் செய்தார். ஸ்ரீ வாசுதேவர் தமது பிதாவினுடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டே கவனமாகப் பிதாவைப் பார்த்து வந்தார். ஸ்ரீ மத்யகேகர் வியாக்கியானம் செய்து

கொண்டே போகையில், லிகுசம் என்ற ஒரு பதத்தை விட்டு வியாக்கியானம் செய்துகொண்டுபோனார். அருகில் உட்கார்ந்து அதிக கவனத்துடனே கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ வாசுதேவர் சட்டென்று அப் பதத்தைப் பிதாவுக்கு ஞாபகப்படுத்திக் கொடுத்து, அதற்குப்பொருளும் கூறினார். இப்படி ஸ்ரீ வாசுதேவர் செய்தபொழுது அதிக அமரிக்கையும் வணக்கமும் விநயமு முள்ளவராகவே யிருந்தார். இவரிடத்தில் அணுவளவும் கர்வம் இருக்கவில்லை. அங்குக் கூடியிருந்த ஜனங்கள் அனைவரும் ஸ்ரீ வாசுதேவனுக்கு ஸம்ஸ்கிருத பாஷையிலே இவ்வளவு விற்பத்தி யுண்டாய் விட்டதுபற்றி ஆச்சர்ய மடைந்தார்கள்.

ஸ்ரீ வாசுதேவருக்கு உபநயனம் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. பிராஹ்மணச் சிறுவர்களுக்கு எட்டாவது வயதிலே உபநயனம் நடந்துவிடுவது வழக்கமல்லவா? உபநயனந்தான் பிராஹ்மணச் சிறுவனை உண்மைப் பிராஹ்மணனாக்குவது; சிறுவனுக்கு பிரஹ்மோபதேசம் செய்வதே உபநயனம் எனப்படும். பிரஹ்மோபதேசம் செய்யப் பெற்றவனே பிராஹ்மணனாவான். உபநயனத்தினிடமுள்ள விசேஷ மதிப்பு தற்காலம் குறைந்து வருகின்றது. உபநயனமே பிரஹ்மச்சர்யாச்ரமத்துக்கு ஆரம்பமாகின்றது. பிரஹ்மச்சாரி தான் இதற்கு முன் அநுசரித்து வந்த நடையுடைகளையெல்லாம் நீக்கிவிட்டு, புதிய, கடுமையான சில விதிகளின்படி ஒழுகல்வேண்டும். உபநயனம் ஆனால்தான், மந்திரங்கள் ஜபிப்பதற்கு அவன் யோக்கி

யதை யுடையவனுகின்றுன். முப்புரியாகிய பூணூல் மனம் வாக்குக் காயமாகிய திரிகரணங்களையும் குறிப்பிடுகின்றது; இது மூன்றும் முடிக்கப்பட்டு அடக்கப்படுகிறது என்பது பூணூலில் அடங்கியிருக்கும் பொருள்.

இக் காலத்திலே உண்மைப் பிராஹ்மணனும் உண்மைப் பிரஹ்மச்சாரியும் கிடைப்பது அரிதாய்விட்டது. தற்கால வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் அநாவசியமான ஆவசியகங்கள், மேல் நாட்டுக் கொள்கைகளினுடையவும் லக்ஷியங்களினுடையவும் பளபளப்பு, ஜீவிதப் போராட்டம் முதலியவை சமாதானமாய்ச் சாந்தமாயிருந்த நமது பாரத வருஷத்துக்குள்ளும் நுழைந்து, தேச ஆசாரங்களை யெல்லாம் நிலைகுலையச் செய்துவிட்டன. பூர்வீக வழக்கங்களும் அநுஷ்டானங்களும் பெயருக்கு மாத்திரம் இன்றும் இருக்கின்றன. உபநயனம் செய்யப்படாத பிராஹ்மணனே யில்லை. ஆனல், எத்தனை பேர் உண்மையான பிரஹ்மோபதேசம் பெற்றிருக்கின்றார்கள். இப்பொழுது உபநயனமென்பது பந்துஜனங்க ளெல்லாரும் கூடிச் சம்பிரமமான விருந்துண்ணும் சந்தர்ப்ப மாகிவிட்டது.

எட்டு வயதில் பிராஹ்மணச் சிறுவர்களுக்கு உபநயனம் நடந்து தீரவேண்டும். ஆனல், ஸ்ரீ வாசுதேவன் சில அபூர்வ லக்ஷணங்களை யுடைத்தாயிருந்ததினலே, ஸ்ரீ மத்யகேகர் சீக்கிரத்திலே அவனுக்கு உபநயனம் செய்வித்துவிட விரும்பினர். ஸ்ரீ வாசுதேவனுக்கு ஐந்து வயது ஆனவுடனேயே, நல்ல நாள் ஒன்று குறிக்கப்பட்டது; உபநயன

முகூர்த்தம் வெகு விமரிசையாக நடந்தேறியது. பையன் பிரணவோபதேசம் செய்யப்பெற்றான்; வேதங்களின் சாரமாகிய காயத்ரி யுபதேசமும் செய்யப் பெற்றான். ஒவ்வொரு பிராஹ்மணனும் தினந்தோறும் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டியது விதியாம். பிரணவமும் காயத்ரீயு மில்லாமல் பிராஹ்மணன் செய்யவேண்டியது ஒன்றுமே யில்லை.

ஸ்ரீ வாசுதேவன் உபநயனம் செய்யப் பெற்று, பிரஹ்மச்சர்யாச்ரமம் அடைந்தான்; அவன் இக் காலத்துக் குழந்தைகளைப்போலப் புரோகிதரை மாத்திரம் சொல்ல விட்டுவிட்டு விளையாடப் போய்விடவில்லை; ஸ்ரீ மத்யகேகரும் இக் காலத்துப் பிதாக்களைப்போலப் புத்திரனைக் கவனியா திருந்துவிடவில்லை. அவர் நிரம்பப் படித்தவர்; ஸ்ரீ வாசுதேவனோ மகா மேதாவி. ஆகையினால், அக்னிஹோத்ரம் ஔபாசனம், சந்தியாவந்தனம் முதலியவற்றின் சூக்ஷ்மார்த்தங்களைக் கிரகித்து, அவற்றை அவன் அணுவளவும் பிசகாது அநுஷ்டித்துவந்தான்.

---

4-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் வித்யாபிவிருத்தி

ஸ்ரீ வாசுதேவர் — உபநயனம் ஆய்விட்டதினலே இன்னமும் நாம் இவருடைய பெயரை ஒருமையில் உச்சரித்துக்கொண் டிருப்பது பெரியோர் நிந்தையாகும் என்று பயந்து பன்மையில் உச்சரிக்கிறோம்— அழகில் அநங்கனை யொத்தவர். அவரைப் பார்க்கும்படி நேரிட்டவருடைய கண்கள் அவரைவிட்டு விலகாது, அவரிடத்திலேயே பதிந்து நின்றன. இச் சிறிய குழந்தை காலையி லெழுந்திருந்து கை கால் முகம் சுத்தி செய்து பிரஹ்மச்சர்யக் கடன்களைச் செய்யப் புகுவதும், அப்பொழுது அவருடைய முகத்திலே ஜொலிக்கும் உற்சாகமும் பார்த்தவருடைய கண்களை யெல்லாம் பறிந்து நின்றன.

இப்பொழுது விசேஷ சம்பவம் ஒன்று நடந்தது. உபநயனமாகிய சின்னட்களுக்குள்ளே ஒருநாள் பக்கத்துக் காட்டிலே உலாவப் போயிருந்தார். அப்பொழுது அங்கிருந்த ஒரு மலைப் பாம்பானது இவர்மீது பாய்ந்து மேன் மேலும் விஷப்பற்களால் அவரைக் கடித்துத் தாக்கியது. ஆனல், ஸ்ரீ வாசுதேவர் சும்மாயிருக்கவில்லை. அவர் சற்றும் மனங் கலங்காமல் வெகு தைர்யமாக நின்று அப் பாம்பின் கடிகளை அமைதியுடனே ஏற்றுக்கொண்டு, தமது பாதக்

தைத் தூக்கி அதன் தலைமேலே வைத்து, தமது கால் பெருவிரலினாலே அதனுடைய படத்தை நசுக்கி அதைக் கொன்றுவிட்டார். 'மகா பாரதத்திலே மணிமானைத் தோன்றிய அசுரன் இப்பொழுது மலைப்பாம்பாக வந்து ஸ்ரீ வாசுதேவரை எதிர்த்தான்' என்று நம்பப்படுகிறது. இப்பொழுதும் அவ்வூர் வாசிகள் ஸ்ரீ மத்யகேகர் வீட்டிலிருந்து விமானகிரியிலுள்ள ஸ்ரீ துர்க்கா க்ஷேத்திரம் செல்லும் வழியிலே ஓரிடத்தை, 'இதுதான் ஸ்ரீ வாசுதேவர் மலைப்பாம்பைக் கொன்ற இடம்' என்று காண்பிக்கின்றார்கள்.

ஸ்ரீ வாசுதேவர் மிகவும் இளைஞராயிருந்து அதி பராக்கிரமசாலிகளாலும் செய்தற்கரிய இச்செய்கையைச் செய்தது ஆச்சர்யமாகவே யிருந்தது. "ஸ்ரீ வாசுதேவர் பெரியதொரு மலைப்பாம்பைக் கொன்றார்" என்று கேட்ட அவ்வூர் ஜனங்கள் அனைவரும், உடனே அவ்விடத்துக்கு ஓடி வந்தார்கள். முதலிலே அவர்களால் நம்ப முடியவில்லை; நேரில் பார்த்தபொழுதுதான் நம்பினார்கள்.

ஸ்ரீ வாசுதேவர் மலைப்பாம்பைக் கொன்றுவிட்டுச் சீக்கிரம் வீட்டுக்குத் திரும்பி வர முடியவில்லை; ஜனங்கள் ஏகமாகக் கூடிவிட்டதினாலே, ஒவ்வொருவருக்கும் இவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கவேண்டி நேரிட்டது. ஸ்ரீ வாசுதேவர் வெளியே போய் வெகு நேரமாய்விட்டது; இன்னும் வரவில்லை; ஸ்ரீ வேதவதிக்கு மனம் நிலைகுலையத் தொடங்கிவிட்டது. அவளுக்குச் சங்கதி இன்னும் எட்டவில்லை; வீட்டு வாசலிலே வந்து நின்றுகொண்டு இவள்

எட்டி யெட்டிப் பார்த்தாள்; ஸ்ரீ வாசுதேவர் வரவில்லை. அவள் பொறுக்க முடியாத மனவருத்த முடையவளாய், "அருகி லெங்காவது இருந்தால் சத்தம் கேட்டு வரமாட்டானா?" என்று நினைத்து, "வாசுதேவா!" என்று உரக்கக் கூப்பிட்டாள்; நிச்சயமாய், கண்மூடித் திறப்பதற்குள்ளே, ஸ்ரீ வாசுதேவர், எதிரிலே வந்து நின்றார். தாயார் தம்மைக் கூப்பிட்டதறிந்து ஸ்ரீ வாசுதேவர் தாம் இருந்த இடத்தி லிருந்து தமது வீட்டு வாசலுக்கு ஒரே குதி குதித்தா ரென்று ஐதிகம் வழங்குகின்றது. ஸ்ரீ வாசுதேவர் இன்று செய்ததெல்லாம் அற்புதமேயாம்; முதலில் ஒரு பெரிய ராக்ஷஸனை சம்ஹரித்தார்; பின்னர் ஒரே குதிகுதித்து மாதாவின் முன்னே வந்து நின்றார். இவர் குதித்தபொழுது இவருடைய அடிச்சுவடுகள் பதிந்துள்ளனவாக ஒரு பாறை காண்பிக்கப்படுகிறது. இவ்விடத்திலே இதன் ஞாபகார்த்தமாக ஒரு சிறு க்ஷேத்திரம் கட்டப்பட்டிருக்கிறது.

உபநயனம் ஆனவுடனே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது வழக்கம். ஆகையால், ஸ்ரீ வாசுதேவரும் மற்றப் பிள்ளைகளைப்போலவே அருகிலிருந்த பள்ளிக்கூடத்திக்கு அனுப்பப்பட்டார். அந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்தான் ஸ்ரீ வாசுதேவர் சந்யாசம் வகிக்கும்வரையில் அவருடைய படிப்பை மேல்பார்த்து வந்தவர். ஸ்ரீ வாசுதேவர் எத்தனை வருஷங்கள் பள்ளிக்கூடத்திலே படித்தாரென்று நமக்குத் தெரியவில்லை. நியாய சாஸ்திரம், காவியங்கள், லேகாரங்கள் முதலியவை யெல்லாம் படிக்க

வேண்டியிருந்ததனால், சில வருஷங்களாக ஸ்ரீவாசுதேவர் உபாத்தியாயரின் கீழ்ப் படித்திருக்கவேண்டும். பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் பூகாவனம் பரம்பரையைச் சேர்ந்தவர்; நன்றாகக் கற்றுத் தெளிந்த பிராஹ்மணர்; உபநிஷத்துக்களிலும் நல்ல ஞானம் உண்டு. சுற்றுப் பிரதேசத்து ஜனங்களுக்கு இவரிடத்திலே மதிப்பும் பிரியமும் அதிகம். இப் பள்ளிக்கூடத்திலே ஸ்ரீ வாசுதேவருடனே சேர்ந்து படித்த பிள்ளைகளுள் அப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருடைய புத்திரனும் ஒருவர். இவரும் ஸ்ரீ வாசுதேவரும் தங்கள் ஆயுட்காலம் முழுதும் அன்பார்ந்த நண்பர்களாயிருந்தார்கள்.

ஸ்ரீ வாசுதேவருடைய உபாத்தியாயர் சர்வ சாஸ்திரங்களும் கற்றுத் தேர்ந்த வித்வானாகவேயிருந்திருக்கவேண்டும்; இல்லையேல், ஸ்ரீ மத்யகேகர் தமது புத்திரனையங்கே யனுப்பியிருக்கமாட்டார். ஸ்ரீ மத்யகேகருக்கே இதிகாச புராணாதிகளெல்லாம் தலைகீழாக வரும்; தத்துவ சாஸ்திர ஞானமும் உண்டு. ஆதலால், அப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் தம்மைப் பார்க்கிலும் கெட்டிக்காரர் என்று தெரிந்துகொண்டுதான் ஸ்ரீ மத்யகேகர் ஸ்ரீ வாசுதேவரை அப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியிருத்தல்வேண்டும். இன்னும் நியாய சாஸ்திர ரகஸ்யங்களை யறிய வேண்டுவது அத்தியாவஸ்யம். இதன்பொருட்டும் ஸ்ரீ மத்யகேகர் தமது புத்திரனை அப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியிருக்கலாம். தவிர, வேதமானது அததற்கேற்ற ஸ்வரத்

துடனே உச்சரித்துப் பாராயணம் செய்யப்படவேண்டும்; ஸ்ரீ மத்தியகேகர் இதிலே அவ்வளவு சமர்த்தரா யிருந் திருக்கமாட்டார்.

பிற்காலத்திலே ஸ்ரீ மாத்வர் சந்யாசாஸ்ரமம் வாங்கிக் கொண்ட பிறகு நியாய சாஸ்திரிகள் பலருடனே தர்க்கம் செய்து, அநுமான தீர்த்தர் என்ற பட்டம் பெற்று விளங் கியதற்கு மூலகாரணம் இப் பள்ளிக்கூடத்து உபாத்தியாய ரிடமிருந்து அவர் அடைந்த கல்வியேயாமென்று கூறலாம். ஸ்ரீ வாசுதேவருடைய வித்யாப்பியாச காலத்திலே குறிப் பிடும்படியாக ஒன்றும் நடக்கவில்லை.

ஸ்ரீ வாசுதேவருக்குச் சரீராப்பியாசங்களிலும் விளை யாட்டுக்களிலும் பிரியம் அதிகம். ஒருநாள் உபாத்தியாயர் பாடம் சொல்லிக்கொடுக்காதிருந்த சமயத்திலே ஸ்ரீ வாசு தேவர் தமது பள்ளித்தோழர்களுடனும் தெருத் தோழர்க ளுடனும் கூடி, உபாத்தியாயர் இருந்த இடத்துக்குக் கொஞ்சம் தூரத்திலே விளையாடினார்கள். அப்பொழுது தூரத்திலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, "அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து அவ்விடத்துக்கு ஓரே யோட்டம் போய்ச் சேர வல்லவர்கள் யார்?" என்று ஒரு கேள்வி பிறந்தது. எல்லோரும் "நான், நான்" என்று சொல்லிக்கொண்டு ஓடத் தொடங்கினார்கள். மற்ற வர்கள் பாதி தூரம் ஓடி வருவதற்குள்ளே ஸ்ரீ வாசுதேவர் அங்கே போய் நின்றார். எல்லோரும் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள்.

ஒருநாள் ஸ்ரீ வாசுதேவரும் அவருடைய தோழர்களுமாக ஸ்நாநம் செய்யப் போயிருந்தபொழுது தண்ணீரில் வெகு உயரத்திலிருந்து குதிப்பது, நீந்துவது, மூழ்குவது முதலிய நீர் விளையாட்டுக்களிலே பந்தயம் போட்டு விளையாடினார்கள். இவை யெல்லாவற்றிலும் ஸ்ரீ வாசுதேவரே ஜயித்தார். இதனால் மற்றவர்கள் பொறாமை கொண்டவர்களாய் ஸ்ரீ வாசுதேவருடைய முகத்திலே தண்ணீரை வாரி வாரி யடித்தார்கள். ஸ்ரீ வாசுதேவருடைய கண்கள் சிறிது கலங்கின வாயினும், அவர் புந்நகை புரிந்துகொண்டிருந்ததே அவருடைய மனம் சற்றும் கலங்கவில்லை யென்பதை நிரூபித்து ஸ்ரீவாசுதேவர் அவர்களுடைய இப் பொறாமைச் செயலையும் ஒரு விளையாட்டுப் போன்றே கருதினார்.

ஸ்ரீ வாசுதேவர் தமது தோழன்மார்களைத் தம்மைச் சூழ்ந்து நிற்கும்படி சொல்லி எல்லோரும் ஏக காலத்தில் தம்முடன் சண்டை செய்யும்படி கூறுவார். ஸ்ரீ வாசுதேவர் தாம் ஒருவராக அத்தனை பேருக்கும் பதில் கொடுத்து, கொஞ்சம்கூடச் சிரமப்படாமல் சிரித்துக்கொண்டே அவர்களை ஒவ்வொருவராகக் கீழே வீழ்த்திவிடுவார். இவர் ஒருவரை ஒரு பிடி பிடித்துக்கொண்டால், அந்தப் பிடியினின்றும் விடுவித்துக்கொள்வதற்கு எவராலும் முடியாது. எவ்வளவு அதிக பாரமான மூட்டையையும் இவர் வெகு அலக்ஷியமாக எடுத்துச் செல்வார். இவரை இதனலெல்லாம் இவருடைய தோழர்கள் பீமசேனன் என்று பட்டப் பெயரிட்டுக்கூட அழைத்துவந்தார்கள். பாறைகளில் தாவிக்

குதித்து விளையாடுவதென்றால் ஸ்ரீ வாசுதேவருக்குப் பரம சந்தோஷம்.

'ஸ்ரீ வாசுதேவர் விளையாட்டிலேயே பொழுது போக்கிக்கொண் டிருக்கிறார்' என்றும், 'பாடங்களைச் சரிவரப் படிப்பதில்லை' என்றும் உபாத்தியாயர் நினைக்க ஆரம்பித்தார். இதனால் அந்த உபாத்தியாயர் ஸ்ரீ வாசுதேவர் மீது அடிக்கடி கடிந்துகொண்டுவந்தார். ஒருநாள் உபாத்தியாயர் பாடம் சொல்லிக்கொண் டிருந்தபொழுது ஸ்ரீ வாசுதேவர் தமது கண்களை மூடிக்கொண் டிருந்தார். அவர் உறங்கிக்கொண் டிருக்கின்றார் என்று உபாத்தியாயர் சந்தேகித்து, அவரை நோக்கி, "ஏ! வாசுதேவா! அடா! தூங்கு மூஞ்சி! நேற்றுமாலை அதிக விளையாட்டுப்போ லிருக்கின்றது; அதனா லிப்பொழுது உறங்குகின்றாய்" என்றார். ஸ்ரீ வாசுதேவர் "ஐயோ! ஒரே பாடத்தைப் பலதரம் படிப்பதைவிட உறங்குதல் நல்லதுதானே!" என்றார். உபாத்தியாயர் "நீ பேச்சில் கெட்டிக்காரனா யிருக்கின்றாய். எங்கே பாடத்தைச் சொல்! பார்ப்போம்" என்று கேட்க, ஸ்ரீ வாசுதேவர் அப்பொழுது உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்த வேத பாடத்தை ஜடை, பதம், க்ரமம் முதலிய சகல விதத்திலும் ஒழுங்கு தவறாது ஒப்புவித்தார். ஆ! ஆ! என்ன ஞாபக சக்தி! உபாத்தியாயருக்கு ஸ்ரீ வாசுதேவருடைய சமர்த்து அப்பொழுதுதான் தெரியவந்தது.

உபாத்தியாயருடைய புத்திரன் ஸ்ரீ வாசுதேவருக்கு அந்தரங்க தோழன் என்று முன்னமேயே கூறியிருக்

இன்றோம். ஒருநாள் ஸ்ரீ வாசுதேவர் தமது நண்பனாகிய அவனைக் கூட்டிக்கொண்டு அருகிலிருந்த காட்டுக்கு உலாவப் போனார். அந்த நண்பனுக்குப் பிறவிமுதல் தீராத தலைநோய் ஒன்று சகித்தற்கரியதாய் அவனை அல்லும் பகலும் துயர்படுத்தி வந்தது. இவர்கள் இருவருமாக இப்பொழுது காட்டுக்குப் போனவுடனே, ஸ்ரீ வாசுதேவர் தமது நண்பன்மீது வைத்திருந்த அன்பின் மிகுதியால் தமது வாயால் அவனுடைய காதுக்குள்ளே காற்றை யூதினார். இவருடைய பரிசுத்த மூச்சுக் காற்றானது அந்த நண்பனுடைய சரீரத்தினுள் செல்லவே, அவன் பிறவி முதல் அநுபவித்து வந்த தலைநோய் மாயமாய்ப் பறந்துவிட்டது. "இதனால் அவனுடைய சரீர வியாதி நிவிருத்தியானதோடு அந்த நண்பனுக்குப் பூர்வஜன்ம ஞானங்களெல்லாம் உண்டாயின" என்று சிலர் சொல்லுகின்றார்கள்.

ஸ்ரீ வாசுதேவர் இந்த உபாத்தியாயரிடத்திலே கற்க வேண்டியதை யெல்லாம் கற்றுவிட்டார்; உபாத்தியாரிடமிருந்து விடைபெற்றுப் போகவிருக்கிற சமயத்திலே, ஐதரேய உபநிஷத் பாடம் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ வாசுதேவருக்கு இந்த உபநிஷத்தினிடத்திலே பிரத்தியேக பிரியம். ஸ்ரீ வாசுதேவர் தமது ஆயுட்கால அந்தியம்வரையில் இந்த உபநிஷத்தினிடத்தில் பிரத்தியேக பிரியம் காண்பித்து வந்தார். இப்பொழுது உபாத்தியாயர் இந்த உபநிஷத்தை யெடுத்துப் பாடம் சொல்ல ஆரம்பித்தபொழுது, இதற்கு முன் எல்லோரும் சொல்லிக்கொண்டு வந்த

பொருளையே கூறினார். ஸ்ரீ வாசுதேவருக்கு அது பிடிக்க வில்லை. அவர் உபாத்தியாயரைத் தனியே ஓரிடத்துக்கு இட்டுச் சென்று, அவருக்கு ஐதரேய உபநிஷத்தின் உண்மைப் பொருளைத் தகுந்த மேற்கோள்களுடனே எடுத்து விளங்குமாறு உரைத்தார். "ஸ்ரீ வாசுதேவர் கூறியதுதான் உண்மைப்பொருள்" என்று உபாத்தியாயர் தெளிவாக இப்பொழுது அறிந்து சாக்ஷாத் ஸ்ரீ ஹரியினிடத்திலே அதிக பக்தி செலுத்த ஆரம்பித்தார். உபாத்தியாயர் தமக்கு இத்தனை நாட்களாகக் கற்றுக் கொடுத்ததற்குப் பதிலாக இப்பொழுது ஸ்ரீ வாசுதேவர் அந்த உபாத்தியாயருக்கு உண்மையைப்போதித்து, இந்த போதனை ரூபமாகத் தாம் குருவுக்குச் செலுத்தவேண்டிய தக்ஷிணையைச்செலுத்திவிட்டார். பின்னர், ஸ்ரீ வாசுதேவர் உபாத்தியாயரிடத்திலே விடை கேட்டு நிற்க, உபாத்தியாயர் மனத்திலே மிகுந்த நன்றியறிதலையும், கண்களிலே ததும்புகின்ற கண்ணீரையும் உடையவராய், ஸ்ரீவாசுதேவருக்குப் பல ஆசிகள் புகன்று, "வாசுதேவா! நீ உலகிலே பக்திமார்க்கம் பெருகி, பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களும் எம்பெருமானுடைய பாதார விந்தங்களை எளிதில் அடையுமாறு அவர்களெல்லோருக்கும் அறிவைப் புகட்டி, ஆசார்ய புருஷனாக விளங்குவாய்" என்று வாழ்த்தி யனுப்பினார்.

---

5-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் சந்யாசாச்ரமம்

ஸ்ரீ வாசுதேவர் சாதாரணமாகப் பள்ளிக்கூடத்திலே கற்கவேண்டியதை யெல்லாம் கற்றுவிட்டார். அவருடைய பிதாவாகிய ஸ்ரீ மத்யகேகர் அவருக்கு நல்ல பெண்ணாக ஒரு பெண் பார்த்து விவாகம் செய்விக்க விரும்பினார். ஸ்ரீ மத்யகேகர் கிருகஸ்தரல்லவா? இவரும் இவருடைய மனைவியும் மிகுந்த தவம் புரிந்து பன்னிராண்டு பக்தி செய்து அதன் பயனாக அல்லவா ஸ்ரீ வாசுதேவரைப் பெற்றார்கள்? ஆகையால், "அவருக்கு விவாகம் செய்விக்கவேண்டும்; அவர் பெரிய கிருகஸ்தனாகவேண்டும்; அவருக்குக் குழந்தைகள் பிறக்கவேண்டும்; அக்குழந்தைகளைத் தங்கள் மடியிலே வைத்துத் தாலாட்டிக் கொஞ்சவேண்டும்" என்று ஸ்ரீ வாசுதேவருடைய பெற்றோர் பகற்கனவு காண்பது நியாயந்தானே. ஆனால், இது பகற்கனவே யென்று ஒருபொழுதும் நினைக்கவில்லை. பெற்றோர் ஸ்ரீ வாசுதேவருடைய மனப் பான்மையையும் போக்கையும் சரிவர ஆராய்ந்து அறிந்தார்களில்லை. ஆனால், இப்படிப் பெற்றோர் அறியாமற்போனதற்குக் காரணம் ஸ்ரீ வாசுதேவ ராகமாட்டார். ஸ்ரீ வாசுதேவர் ஒன்றையும் ஒளிவுமறைவில் வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஸ்ரீ மத்யகேகருக்குத்தமது புத்திரனுடைய மனத்தை ஆராயும்

சக்தி யில்லாமற் போய்விட்டது. இதனால், பிதாவும் புத்திரனும் வெவ்வேறு வழிகளிலே மனம் செலுத்தும்படி நேரிட்டது. 'வாசுதேவர் கிருகஸ்தனாகவேண்டும்' என்று ஸ்ரீ மத்யகேகர் விரும்பி, அதற்கு வேண்டிய ஆலோசனைகளை யெல்லாம் செய்துவந்தார்; ஸ்ரீ வாசுதேவரோ தாம் சந்நியாசியாகவேண்டு மென்று விரும்பி, அதற்கு வேண்டிய ஆலோசனைகளை யெல்லாம் செய்துவந்தார். ஸ்ரீ வாசுதேவர் எப்பொழுதும் தீர்க்க சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார்; "உலக விஷயங்களினிடத்தே பற்றில்லாமலிருந்தால்தான் சாக்ஷாத் பகவானுடைய அநந்த கல்யாண குணங்களினிடத்தே பற்றுதல் உண்டாகும்" என்று தெரிந்துகொண்டார்; இதற்கு சாதுக்களுடைய ஒழுக்கமே சிறந்தது என்று அறிந்து சந்நியாசாச்ரமத்தின்மீது விருப்பங் கொள்ளலானார். தவிர, ஸ்ரீ வாசுதேவர் பக்தி மார்க்கத்தினின்றும் ஜனங்களைப் புரட்டி, ஞானமார்க்கம் போதிப்பதாகப் பொய்யுரை உரைத்து, ஏமாற்றித் திரிகின்ற மாயாவாதிகளுடைய கொட்டத்தை யடக்கி, உலகிலே பரந்திருக்கும் அஞ்ஞானத்தை யகற்றி, உண்மையான பக்தியை நிலைநாட்டவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டார். பின்னர் ஸ்ரீ வாசுதேவர் தமக்குச் சந்யாசாச்ரமம் கிடைக்குமாறு அநுக்கிரகிக்க வேண்டு மென்று பகவானைப் பிரார்த்தித்து நமஸ்கரிக்க, அங்கே அருகி லிருந்தவர்கள் இவரை நோக்கி, "நீ நமஸ்கரிப்பதின் கருத்து ஏதேனும் உண்டோ?" என்று கேட்க, ஸ்ரீ வாசுதேவர் "நான் என்னுடைய பொருளைப்பற்றியே நமஸ்கரிக்கின்றேன்." என்றார்,

ஸ்ரீ வாசுதேவர் தமது மனத்திலுள்ள இக் கருத்துக்களையெல்லாம் தமது தோழர்களிடத்திலும் பிறரிடத்திலும் தாராளமாக வெளியிட்டுக்கொண்டிருந்தாலும், தமது தகப்பனரிடத்தில்மாத்திரம் தெரிவிக்கவில்லை. தகப்பனர் தமது கருத்துக்கிணங்கி வரமாட்டாரென்று ஸ்ரீ வாசுதேவருக்கு நன்றாகத் தெரியும்.

ஸ்ரீ வாசுதேவர் தம்மைத் தடுத்தாட்கொண்டு பகவானுடைய பாதாரவிந்தங்களைத் தாம் அடையுமாறு செய்யத் தகுந்த ஒரு குரு வேண்டுமென்று அவரைத் தேடிச் சென்றார். அப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் என்னும் நாமமுள்ள ஒரு மஹான் மஹா வைராக்கியசாலியாய், உலக போகங்களை வெறுத்து உத்தம புருஷராய், பகவத் பக்தியிலே லயித்து, ஆநந்தகாராக விளங்கிவந்தார்; இவருக்கு ஸ்ரீ புருஷோத்தம தீர்த்தர் என்றும் ஒரு பெயருண்டு. இவர் உடுப்பிக்கு வடக்கே ஒரு சில மைல் தூரத்திலுள்ள பந்தார்க்கரை மடத்தில் வசித்துவந்தார். பந்தார்க்கரை மடம் இன்னும் இருக்கின்றது; சிஷ்ய பரம்பரைகளும் உண்டு. பீமனக்கட்டே ஸ்வாமிகளுடைய மடமும் இம் மடத்தின் பிரிவேயாம். ஸ்ரீ வாசுதேவர் உடுப்பி வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய வித்வத்தையும் மஹிமைகளையும்பற்றிக் கேள்விப்பட்டு, ஸ்ரீ வாசுதேவர் அவரைத் தமது குருவாக நாடினர். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் ஸ்ரீ சங்கர பாஷ்யம் முதலிய அத்வைத கிரந்தங்களை நன்றாகப் படித்து, முதலில் அத்வைதியாகவே யிருந்திருந்தாலும் பின்

னர், அவருடைய மனமானது உண்மையை அறிந்து, பாகவத சம்பிரதாயக் கொள்கைகளைப் பின்பற்ற ஆரம்பித்தது. ஆகையால் ஸ்ரீ வாசுதேவருக்கு ஸ்ரீ அச்யுதப்ரேக்ஷரிடத்திலே அன்பு விழுதற்கு இது ஒரு காரணமாயிற்று.

இந்த ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய குரு தான் மரணத் தறுவாயில் அச்சுதப்ரேக்ஷரையும் மற்றச் சிஷ்யர்களையும் நோக்கி, "அத்வைதத்தை நம்பவேண்டாம்" என்றும், "அது முழுப் புரட்டே" என்றும் கூறிவிட்டு மரித்தார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் தமது குழந்தைப் பருவமுதல் கொண்டிருந்த கொள்கை திடீரென்று தகளாய்விட்டது; பின்னர் இன்னது செய்வதென்று ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்குத் தெரியவில்லை. அவர் இத்தனை வருஷங்களாகப் படித்து ஆராய்ந்த அறிவெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போ லாய்விட்டது. அவர் யாத்திரை செய்ய ஆரம்பித்துக் கடைசியாக உடுப்பிக்கு வந்து சேர்ந்தார்; இங்குத் தமக்கு உண்மை யறிவு உண்டாகுமாறு அநுக்கிரகிக்க வேண்டுமென்று ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் ஸ்ரீ அநந்தேஶ்வர ஸ்வாமியை அல்லும் பகலும் பிரார்த்தித்து வந்தார். இந்த ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் களங்கமற்ற, உண்மையான ஹிருதய முடையவர்; ஆதலினால்தான் ஸ்ரீ வாசுதேவருக்குக் குரு ஆகும்படியான பாக்கியம் கிடைத்தது.

இப்பொழுது ஸ்ரீ வாசுதேவர் குருவைத் தேடிச் சென்றபொழுது, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் உடுப்பி க்ஷேத்திரத்திலே வந்து தங்கியிருந்தார். ஸ்ரீ வாசுதேவர் வந்து

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரைக் கண்டவுடனேயே சிஷ்யராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். கொஞ்சக் காலத்துக்கு முன்னே ஒருநாள் ஸ்ரீ அநந்தேச்வர ஸ்வாமி அங்கு இருந்த ஒரு மனிதன் மேல் ஆவேசித்து, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரை நோக்கி, "இன்னும் கொஞ்சக் காலத்துக்குள்ளே உனக்கு ஒரு சிஷ்யன் கிடைப்பான்; அவன் மூலமாக நீ என்னை யறிவாய்" என்று கூறியிருந்தார். இப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் ஸ்ரீ வாசுதேவரைப் பார்த்தவுடனே, அப்பொழுது ஸ்வாமி சொன்னது அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. 'ஸ்வாமி கூறிய சிஷ்யர் இவர் தானோ?' என்று கூட ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் சந்தேகித்தார். ஏனெனில், ஸ்ரீ வாசுதேவரைப் பார்க்கும்பொழுதே, அவரிடத்தில் ஒரு நூதன சக்தியும் பிரகாசமும் பிரத்தியேகமாக விளங்கிற்று.

ஸ்ரீ வாசுதேவர் வெளியே போனவர் திரும்பி வீட்டுக்குப் போகவில்லையே; தாய்தந்தையர்கள் தேட ஆரம்பித்தார்கள். இப்புதல்வனைப் பெறுதற்கு அவர்கள் நோற்ற நோன்பும் செய்த தவமும் இவ்வளவென்று அவர்களுக்குத்தானே தெரியும். ஸ்ரீ மத்யகேகர் மனம் தாளாதவராய், நாலாபக்கங்களிலும் தேடித் திரிந்து, கடைசியாக உடுப்பிக்கு வந்து சேர்ந்து, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய மடத்திலே தமது புத்திரனைக் கண்டுபிடித்தார். "ஏ! புத்திரா! எனக்கோ வயது தளர்ந்துவிட்டது; சக்தி குன்றிவிட்டது; உனது தாயோ உன் மேலேயே உயிர் வைத்துக்

கொண்டிருக்கின்றாள்; நீ இப்பொழுது சந்யாசாச்ரமம் வகிப்பது தகாது" என்று கூறி, மெய் மறந்து ஸ்ரீ வாசுதேவரை நமஸ்கரித்தார். ஸ்ரீ வாசுதேவர் பிதாவை நோக்கி, "பிதா முதலிய பெரியோர்கள் புத்திரன் முதலிய சிறியோர்களுக்கு நமஸ்கரிக்கும் நியாயம் கிடையாது. ஆனால், சந்யாசி வயசிலே பால்யனாகினும், கிருகஸ்தர்கள் வயதில் மூத்தவர்களாயிருந்தாலும் இவர்கள் அந்த சந்யாசியை நமஸ்கரிக்க வேண்டும்" என்று நியாயமிருக்கின்றது. ஆதலால், தாங்கள் என்னை நமஸ்கரித்ததே நான் சந்யாசாச்ரமம் பெறுதற்கு ஈஸ்வரானுக்கிரகம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது," என்றார்.

பின்னர் ஸ்ரீ மத்யகேகர் ஸ்ரீ வாசுதேவரைக் கெஞ்சிப் பார்த்தார், வேண்டிக்கொண்டார், அழுதார், உருண்டார், புரண்டார், ஸ்ரீ வாசுதேவருடைய மனம் கரைவதாயில்லை; பின்னர் ஸ்ரீ மத்யகேகர் நியாயமும் பேசிப் பார்த்தார்; இவருடைய நியாயத்தைக் கேட்பதெவர்? ஸ்ரீ வாசுதேவர் இவ்விஷயத்திலே இரும்பு மனமுடையவராய்விட்டார்; கடைசியாகத்தான் ஸ்ரீ மத்யகேகர் தமது புத்திரனுடைய காலிலே விழுந்து கெஞ்சி நமஸ்கரித்ததும் அதற்கு ஸ்ரீ வாசுதேவர் மேலே கூறியவாறு மறுமொழி புகன்றதும் நடந்தன.

ஸ்ரீ மத்யகேகருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை; தமது புத்திரனை வேண்டியமட்டும் சந்யாசாச்ரமம் வகித்துக்கொள்ளாதபடி வேண்டிக்கொண்டு, ஸ்ரீ அச்சு

தப்ரேக்ஷ ஸ்வாமிகளிடம் சென்று, அவரை சாஷ்டாங்க மாக நமஸ்கரித்து, "ஸ்வாமி! இந்த வாசுதேவன் எங்க ளுடைய புத்திரன்; எவர் செய்த போதனையோ, இவன் எங்களை வெறுத்து இங்கே வந்திருக்கின்றான்; அவனுக்கு சந்யாசாச்ரமம் தாங்கள் கொடுக்கலாகாது" என்று பிரார் த்தித்து, மறுபடியும் நமஸ்கரித்துவிட்டு, பின்னர்த் தமது இல்லிடம் சென்று மனைவியினிடம் சங்கதியைக் கூற, ஸ்ரீ வேதவதியம்மையார், நெருப்பிலிட்ட புழுப்போல வதங்கி மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு விசனித்தார். பின்னர் இவ் விருவரும் ஒருவரை யொருவர் தேற்றிக்கொ ண்டு, ஸ்ரீ வாசுதேவருடைய அழகிய முகத்தையே எப் பொழுதும் நினைத்தவர்களாய்க் காலம் கழித்துவந்தார்கள். வேதவதியம்மையாரும் ஸ்ரீ மத்யகேகருடனேகூட ஸ்ரீ வாசுதேவரைத் தேடி உடுப்பிக்குச் சென்றிருந்தார் என் றும் ஸ்ரீமாத்வ விஜயம் கூறுகின்றது.

சின்னாட்கள் கழிந்தன; ஸ்ரீ வாசுதேவருடைய பெற்றோரால் புத்திரனைப் பிரிந்திருக்க முடியவில்லை. "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்." ஸ்ரீ மத்யகேகர் 'இன்னுமொருமுறை ஸ்ரீ வாசுதேவரிடத்திலே மன்றாடிப் பார்க்கலாம்' என்று திரும்பவும் புத்திரனைத் தேடிக்கொ ண்டு புறப்பட்டார். இப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் உடுப்பியிலில்லை; யாத்திரை புறப்பட்டுவிட்டார். ஸ்ரீ மத்ய கேகர் இது தெரிந்துகொண்டு, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் சென்ற வழியை விசாரித்துக்கொண்டே, அதிவேகமாக

அவரைப் பின் தொடர்ந்து சென்றார். உடுப்பிக்குத் தெற்கே முப்பத்தெட்டு மைல் தூரத்தில் மங்களூருக் கருகே நேத்ரவதியென்று ஒரு நதி யோடுகின்றது. ஸ்ரீமத் யகேகர் இந்த நதியைக் கடந்து கொஞ்சதூரம் சென்றதும், அங்குக் கையூர் என்ற ஊர் இருந்தது. அந்த ஊரில், குத்திடிமடத்தில் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷ ஸ்வாமிகள் தங்கியிருக்கிறார்'' என்று ஸ்ரீ மத்யகேகர் விசாரித்தறிந்துகொண்டு, அங்குச் சென்று தமது புத்திரனைக் கண்டார். இருவருக்கும் சம்பாஷணை யாரம்பித்தது; வரவரச் சம்பாஷணை கடோமாயிற்று; அதனால் பிதாவும் புத்திரனும்வேற்றுமைப் பட்டார்கள். ஸ்ரீ மத்தியகேகர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், அழுதும் ஸ்ரீவாசுதேவர் ஒரே பிடிவாதமா யிருந்ததினால், ஸ்ரீ மத்யகேகர் தமது புத்திரனை நோக்கி, "நீ பெற்றோராகிய எங்கட்குத் துக்கத்தை யுண்டுபண்ணிவிட்டு, உனது இஷ்டப்படியே நடப்பதனால், நான் உயிர் வைத்திருப்பதில்லை; இதோ இப்பொழுதே உயிர் துறந்துவிடுவேன்'' என்று கோபத்துடனே கூறினார். ஸ்ரீ வாசுதேவர் இதற்குப் பயந்தவரா? ஸ்ரீ வாசுதேவர் தாம் உடுத்தியிருந்த வஸ்திரத்தைக் கிழித்து எறிந்து, ஒரு கந்தையைக் கௌபீனமாக மாத்திரம் தரித்துக்கொண்டு, "எங்கே? பார்க்கலாம். தங்களுடைய வைராக்கியத்தையும் ஹடத்தையும் நிறைவேற்றுங்கள்!'' என்றார்.

ஸ்ரீ மத்யகேகர் தமது புத்திரரைச் சாமான்யமாக நினைத்துவிட்டார். அவர் எதற்கும் அசையாதது கண்டு,

ஸ்ரீ மத்யகேகர் தேம்பித் தேம்பி யழ, ஸ்ரீ வாசுதேவர் "ஒரு குலத்தில் ஒரு சந்யாசி யுண்டாவானுனல், அவனல் மூவேழு இருபத்தொரு தலைமுறைகளும் ஈடேறிவிடுகின்றன" என்று சாஸ்திரங்கள் கூறுவது தங்கட்குத் தெரியாததன்றே; நல்ல கார்யத்துக்கு இடையூறு செய்வது நியாயமன்று" என்று கூறினர். ஸ்ரீ மத்யகேகர், "புத்திரா! உனக்கு முன்னே பிறந்த புத்திரர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள்; உன்னைத் தவிர எங்களுக்கு ஒரு பெண்தானே யிருக்கின்றது; எங்களை இந்த விருத்தாப்பிய வயதிலே காப்பாற்றக் கடமைப்பட்டவன் நீ தானே; எங்களை ரக்ஷிப்பதிலும் நற்கார்யம் வேறு உளதோ?" என்று கூறினர். ஸ்ரீ வாசுதேவருக்கு மனம் இளகி விட்டது. தமக்குத் தம்பி யொருவன் பிறக்கும்வரையில் சந்யாசம் வகித்துக்கொள்வதில்லையென்று ஸ்ரீ வாசுதேவர் தமது பிதாவுக்கு வாக்குறுதி கொடுத்தார். இந்த வாக்குத் தத்தம்கூடக் கிழவரைத் திருப்திப் படுத்தவில்லை. "உனது தாயார் சம்மதித்தால், நீ அப்படிச் செய்துகொள்வதில் எனக்கு ஒரு ஆக்ஷேபனையு மில்லை" என்றார் ஸ்ரீ மத்தியகேகர். ஸ்ரீ வாசுதேவர் அதற்கு ஒத்துக்கொண்டார். ஸ்ரீ மத்தியகேகர் தமது வீட்டுக்குத் திரும்பிவந்து நடந்த சங்கதிகளை மனைவியினிடம் கூறினர். "புத்திரன் திரும்பிவரவில்லையே" என்ற விசனம் அவர்களுக்கு உண்டானபொழுதிலும், தாயாருடைய அனுமதியின்றி ஸ்ரீ வாசுதேவர் சந்யாசம் வாங்கிக் கொள்வதில்லை யென்று கொடுத்திருந்த வாக்குத்தத்தம் அவர்களுக்குச் சிறிது ஆறுதலை யளித்தது.

இப்படிச் சின்னாட்கள், ஸ்ரீ மத்யகேகரும் ஸ்ரீ வேதவதி யம்மையும் ஸ்ரீ வாசுதேவருடைய பிரிவாற்றாமையினால் வருந்திக் காலம் கழித்துவர, அவர்களுக்குப் பூர்ண சந்திரன் போன்ற வடிவழகு வாய்ந்தவனாய் ஒரு புத்திரன் பிறந்தான். இப் புத்திரன் பிற்காலத்திலே ஸ்ரீ சுப்பிரமணியம் விஷ்ணுதீர்த்தர் எனப் பெயர் பெற்று, சோதேய மடம் என்று ஒரு மடத்தை ஸ்தாபித்தார்.

ஸ்ரீ வாசுதேவருக்கு இந்தச் சமாசாரம் தெரியவந்தவுடனே, தமது கிராமமாகிய பாஜக க்ஷேத்திரத்துக்கு ஓடினார் தாயாரிடம் சந்யாசத்துக்கு அநுமதி கேட்பதற்கு. தாய்தந்தைய ரிருவரும் நெடுநாட்களாகப் பிரிந்திருந்த தங்கள் புத்திரனைக் கண்டவுடனே அதிக ஆநந்தம் கொண்டார்கள்; புத்திரனை க்ஷேமம் விசாரித்தார்கள்; பஞ்சபக்ஷ பரமாந்நத்துடனே போஜனம் இட்டார்கள்; பண்டு பலகாராதிகளும் பரிமாறினார்கள். போஜனமாய் முடிந்தது. இதுவரையில் சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்த அப் பெற்றோர்களுக்கு இடி விழுந்தாற் போல், ஸ்ரீ வாசுதேவர் சில வார்த்தைகள் சொல்லலுற்றார்: "உங்களைக் காப்பாற்றுவதற்கு என்னைத் தவிர இப்பொழுது ஒரு புத்திரன் பிறந்துவிட்டான். இனிமேல் எனக்குச் சந்யாசம் கிடைக்குமாறு அநுமதி கொடுக்கவேண்டும்; எவ்விதத் தடையும் கூறலாகாது" என்றார் ஸ்ரீ வாசுதேவர்.

ஸ்ரீ மத்யகேகர் மனங் கலங்கிப் புத்திரனைக் கட்டிக் கொண்டு அழுதார். ஸ்ரீ வாசுதேவர் தமது பிதாவை

நோக்கி, "நீங்கள் இப்பொழுது இப்படி யழுவது நியாய மன்று; நீங்கள் அன்றே எனக்கு அநுமதி யளித்துவிட்டீர்கள். மாதாவினுடைய அநுமதியொன்றுதான் இப்பொழுது வேண்டியது" என்று சொல்லி, மாதாவைப் பார்த்தார். ஸ்ரீ வேதவதியம்மையார் புத்திரனை யுச்சி முகந்து கட்டி யணைத்துக்கொண்டு, "அப்பா! என்னை யிப்படி மனங் கலங்கவிட்டு நீ சந்யாசம் வகித்துக்கொள்ளலாமா?" என்று அழ, ஸ்ரீ வாசுதேவர் "அம்மா! என்னைப் பார்த்துக்கொண்டாவது இருக்கவேண்டுமென்று உங்களுக்கு ஆசை யிருந்தால், சந்யாசத்துக்கு அநுமதி கொடுங்கள்! இல்லையேல், நீங்கள் என்னைப் பார்க்க முடியாது; நான் எங்காவது ஓடிவிடுவேன்!" என்று ஒரே பிடிவாதமாகக் கூறினர். 'புத்திரனைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் போதுமே; புத்திரன் எங்காவது ஓடிப் போய்விட்டால் என் செய்வது?' என்று ஸ்ரீ வேதவதியம்மையார் நினைத்து, அரை மனத்துடனே ஸ்ரீ வாசுதேவர் சந்யாசம் வகித்துக்கொள்வதற்கு இசைந்தாள். இவ்விதமாக ஸ்ரீ வாசுதேவர் பெற்றோர் இருவருடையவும் அநுமதி பெற்று, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷ ஸ்வாமிகளிடம் சென்று தமது பெற்றோர் தாம் சந்யாசம் வகித்துக்கொள்வதற்குச் சம்மதித்துவிட்டதைப்பற்றிக் கூறி, அவருடைய கையில் சந்நியாசம் வாங்கிக்கொண்டார்.

ஸ்ரீ வாசுதேவர் ஜீவசிராத்தம் முதலிய கர்மங்களை யெல்லாம் முடித்து, சாக்ஷாத் பகவானிடத்திலே அகங்

கார மமகாரங்களை யெல்லாம் ஒப்புவித்து, பிரணவ உபதேசம் பெற்று, உபநிஷத்துக்களையே ஓதுகின்ற யதீச்வரரானார். இவருக்குப் ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் என்று சாதாரணமாகப் பெயர் வழங்கலாயிற்று. ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரும் இவருக்குச் சந்யாசம் கொடுத்தபொழுது, இவருக்குப் பூர்ண போதர் என்று பெயர் கொடுத்தார்.

ஸ்ரீ வாசுதேவர் சந்யாசாச்ரமம் வகித்துக்கொண்டபொழுது அவருக்கு என்ன வயது என்பதைப்பற்றி அபிப்பிராயங்கள் வித்தியாசப்படுகின்றன. சிலர் "அவருக்கு அப்பொழுது ஒன்பது வயது" என்று கூறுகின்றார்கள். வேறு சிலர் "அவருக்கு அப்பொழுது 11 அல்லது 12 இருக்கும்" என்று கூறுகின்றார்கள்; "குறைந்தது பதினாறு வயதாவது இருந்திருக்கும்" என்று இன்னும் சிலர் கூறுகின்றார்கள். சமீபத்திலே அவருடைய சரித்திரத்தை ஆங்கிலத்தில் சுருக்கி எழுதின ஆசிரியர் ஒருவர் "அவருக்கு வயது 25 இருந்திருக்கலாம்" என்று கூறுகின்றார். ஆனால், மத்வர்களுக்குள்ளே சிரேஷ்டர்கள் "அவருக்கு அப்பொழுது 11 அல்லது 12தான் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றார்கள்.

ஸ்ரீ வாசுதேவர் யதியாச்ரமமடைந்து, கையிலே தண்டம் முதலியன தாங்கி ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் என்று பெயரடைந்தபொழுது அவரைக் கண்ட ஜனங்கள் 'ஸ்ரீ வைகுந்த வாசியாகிய பரந்தாமனே உலகை யுய்விப்பதற்கு இவ் வடிவெடுத்து வந்தாரோ?' என்று ஆச்சர்யப்

பட்டு அக மகிழ்ந்தார்கள். ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் சந்யாசம் தரித்துக்கொண்டபின், தமது குருவை அடிபணிந்து நமஸ்கரித்தபொழுது, அந்த அச்சுதப்ரேக்ஷர் தமக்கு இத்தகைய வொரு சிஷ்யன் கிடைத்தானே யென்று அளவிலா ஆநந்தங் கொண்டவராய், "அந்தச் சிஷ்யருக்குய திநியமன ஆசாரங்களை யெல்லாம் பயிற்றுவிக்க வேண்டும்" என்று நினைத்தார்; ஆனால், ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் அவ்வாசாரங்களை வெகு நாட்களாகத் தாம் அநுஷ்டித்து வருபவர்போல, எவரும் சொல்லிக்கொடுக்காமலே அநுஷ்டித்து வரக் கண்டு ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் ஆச்சர்ய மடைந்தார்.

ஒருநாள் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் ஸ்ரீ அநந்தேசுவர ஸ்வாமி சந்நிதானத்திலே சென்று, சாக்ஷாத் பகவானை மனமாரத் துதித்து நமஸ்கரித்து நிற்கும்பொழுது, பகவான் அங்கு இருந்த ஒருவன்மீது ஆவேசம் ஆகி, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞருடைய கையைக் கையாற் பிடித்து ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடத்திற்கு இட்டுச் சென்று, "உண்மை தெரியாமல் நீ நெடுங் காலமாகத் தத்தளித்து, என்னைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தா யல்லவா? அதற்காகத் தான் இப்பொழுது நான் இந்தப் பூர்ணப்பிரக்ஞரை யுனக்கு அளித்தேன்" என்று சொல்லி, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞரை ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடம் ஒப்புவித்தார். அப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவு எப்படிக் கூறுவது? இனிமேல் தமக்கு உண்மை விளங்கிவிடும் என்ற நிச்சயம் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு

உண்டாயிற்று; அவர் எதிலும் பற்றில்லாதவரா யிருந்தும் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர்மீது பரிபூர்ணப் பற்றுடையவரானுர்.

சின்னுட்கள் கழித்து ஒரு நாள் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் பூப்பிரதக்ஷிணம் செய்யக் கருதித் தமது ஆசார்யரிடம் சென்று "ஸ்வாமி! கங்கா யாத்திரை செய்யவேண்டுமென்ற ஆசை எனக்கு அதிகமாக இருக்கின்றது; எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்; நான் சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுகின்றேன்" என்று மிகுந்த விநயத்துடனே கேட்டார். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் சந்யாசாச்ரமம் பெற்றுச் சின்னுட்கள் தாம் ஆயின. அவரை விட்டுப் பிரிந்திருக்க, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு மனம் வரவில்லை; ஆகையால், சரியான மறுமொழி யளிக்கா திருந்தார். ஆனுல், ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் திரும்பத் திரும்பப் பன்முறையும் அந்த வேண்டுகோளைத் தெரியப்படுத்த, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் 'இன்னது செய்வது' என்று அறியாதவராய், சாக்ஷாத் ஸ்ரீ அநந்தேச்வர ஸ்வாமியைத் திரிகரணமும் ஒரு கரணமாக்கித் தியானித்தார். அப்பொழுது பகவான் ஒரு பக்தன்மீது ஆவேசமாகி, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞரை நோக்கி: "பூரணப் பிரக்ஞா! நீ கங்கா ஸ்நாநம் செய்யும்பொருட்டு, அத்தனை தூரம் சென்று கஷ்டப்படவேண்டியதில்லை; கங்கா நதியானது இன்றைக்கு மூன்ருும் நாள் இவ் வூரிலுள்ள புஷ்கரணியில் வந்து சேருகின்றது; நீ அதிலே ஸ்நாநம் செய்து ஆநந்தமடைவாய்" என்று கூறியருளினுர். அவ்வாறே அன்றைக்கு மூன்ருும் நாள் அவ்வூர்ப் புஷ்கரணியிலே

கங்கை பெருகி, ஊற்றுக் கொப்பளித்துக் கிளம்ப, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞரும் மற்ற ஜனங்களும் அதிலே ஸ்நாநம் செய்து பரிசுத்தரானார்கள். ஸ்ரீ மத்வாசார்யரின் பொருட்டு கங்காநதி அங்கு வந்ததற்கு அடையாளமாக இன்றும் கங்காநதி அந்தப் புஷ்கரணியில் பன்னிரண்டு வருஷங்கட்கொருதரம் வந்து கூடுவதாக ஐதிகம் கூறுகின்றது. அன்று முதல் அந்தப் புஷ்கரணிக்கு மத்வஸரோவரம் என்று பெயர் வழங்கி வருகின்றது.

ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் சந்யாசாச்ரமம் எடுத்து ஒரு மாதமும் பத்து நாட்களும் ஆவதற்குள்ளே, மாயாவாதிகள் பலருடனே வாதாடி வெற்றி பெற்றார். இச் சமயத்திலே தான் தர்க்க சாஸ்திரத்திலே மகா நிபுணனும், தனக்கு நிகர் எவருமில்லை யென்று அகங்காரம் மிகுந்தவனும், வித்வான்கள் பலரை வெருட்டி ஏமாற்றி ஜயம் பெற்றவனும் ஆன வாசுதேவன் என்னும் பெயருடையோன் ஒருவன் தேசமெங்கணும் சஞ்சரித்து அநேக வித்துவான்களுடைய விருதுகளை யெல்லாம் பறித்துக்கொண்டு கடைசியாகத் தனக்குச் சிஷ்யர்களாகவும் பரிவாரங்களாகவும் அநேக வித்துவான்கள் புடைசூழ உடுப்பிக்கு வந்து சேர்ந்தான். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் மகா வித்துவான் என்று எங்கும் பிரசித்தியா யிருந்ததினாலே, அவருடைய மடத்துக்குச் சென்று அவரைக் கண்டு சம்பாஷித்து, அங்கு வித்வான்களுடைய சபை ஒன்றைக் கூட்டினால் தான் எந்த வித்வானுடனும் தர்க்கிப்பதற்குத் தயாரா யிருப்பதாகக் கூறினான்.

"வாசுதேவன் என்று பிரசித்திபெற்ற மகா வித்துவான் ஒருவன் வந்திருக்கின்றான்; ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் மடத்திலே வித்துவான்களுடைய சபை கூடுகின்றது" என்று ஊரெங்கும் தண்டோரா முழங்கவே, உடுப்பியிலுள்ளவர்களும், சுற்றுப்புறத்துக் கிராமங்களிலுள்ளவர்களும் ஒரு நொடியிலே வந்து கூடிவிட்டார்கள். சபையிலே ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரும் அவருடைய பிரதம சிஷ்யர் ஸ்ரீ மாத்வரும் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்தார்கள்; மகா வித்துவான் வாசுதேவனும் உயர்ந்த ஆசனம் ஒன்றில் உட்கார்ந்திருந்தான். வாசுதேவன் தானே ஒரு விஷயம் எடுத்துக்கொண்டு அந்த விஷயத்தைப்பற்றித் தொடர்ச்சியாக மூன்று நாட்கள்வரையில் அசைக்க முடியாதன வென்று அநேகரும் பிரமிப்பதற்கு ஏதுவாயிருந்த அநேக நியாயங்கள் காட்டிப் பிரசங்கம் செய்து தன்னுடைய அபிப்பிராயத்தை நிலை நிறுத்தினான். "இந்த நியாயங்களை யுடைத்து இவனுடன் வாதிக்க வல்லவரும் உளரோ?" என்று எல்லோரும் ஏங்கியிருந்தார்கள்.

அப்பொழுது அங்குக் கம்பீரமாக உட்கார்ந்திருந்த ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் எழுந்திருந்தார்; வாசுதேவனுடைய நியாயங்களைத் தகர்த்தெறிய ஆரம்பித்தார்; முதலிலே வாசுதேவன் கூறிய நியாயங்களை யெல்லாம் சுருக்கமாக ஒருமுறை கூறிக்கொண்டார்; பின்னர் ஒவ்வொன்றாகப் பிரித்துத் தகுந்த ஆதாரங்களும் யுக்திகளும் காண்பித்து, வாசுதேவன் கூறியதெல்லாம் தப்பென்று நிரூபித்தார்;

சபை ஜனங்கள் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடைய அழகிய, அமிர்த வசனங்களைக் கேட்டுக் கேட்டு ஆநந்தித்தார்கள்; அடிக்கடி இடைவிடாது கரகோஷம் செய்தார்கள். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் ஒரு விநாடி நேரமாவது வார்த்தைகள் கிடையாமல் தடுமாறவில்லை; சற்றும் யோசனை செய்யவில்லை. வாசுதேவனுடன் கூட வந்திருந்த வித்வான்களும் எழுந்திருந்து ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடனே தர்க்கிக்க ஆரம்பித்தார்கள். எவர் தர்க்கம் செய்வது? என்செய்வது? ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரே கடைசியில் வெற்றிமாலை புனைந்துகொண்டார். இது தான் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் பெருத்த சபை நடுவே பெற்ற முதலாவது ஜயம்.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் இத்தகைய சிஷ்யர் தமக்குக் கிடைத்ததுபற்றி அகமகிழ்ந்து ஆடாமலிருந்திருப்பாரா? அவர் தமது சிஷ்யராகிய ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருக்கு அத்வைத நூல்கள் பலவற்றைக் கற்றுக்கொடுத்து, அவற்றிலுள்ள தோஷங்களையும் விளக்கிக் காட்டி, 'பூர்ணப்பிரக்ஞரை நிகரற்றவராக்க வேண்டும்' என்று விரும்பி, பூர்ணப்பிரக்ஞரை யழைத்து, "குழந்தாய்! நீ எனக்குச் சிஷ்யனாகக் கிடைத்தது நான் செய்த பாக்கியமேயாகும். ஆயினும், நீ இன்னும் சில அத்வைத கிரந்தங்களை ஆராய்ந்து வைத்திருந்தால் நலம். ஆகையால், நீ நாளையமுதல் அத்வைத கிரந்தம் படிக்கின்றாயா?" என்று கேட்க, ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் ஒப்புக்கொண்டார். "முதலாவது இஷ்டசித்தியென்னும் நூலை ஆராய்ச்சி செய்வது" என்று தீர்மானிக்கப்பட்டது.

மறுநாள், இஷ்டசித்தி பாடம் ஆரம்பிக்கப்பட்டது. முகவுரை யெல்லாம் படித்து முடிந்தன; ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் கூறி வந்த பீடிகையும் முடிந்தது. முதலாவது சுலோகம் வாசிக்கப்பட்டது. ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் இந்த ஸ்லோகத்தை வியாக்கியானம் செய்ய ஆரம்பித்து, அந்த ஸ்லோகத்தின் ஆந்தரார்த்தத்தையும், வெளிப்படையாகச் சாதாரணமாகக் கூறும் அர்த்தத்தையும் எடுத்துரைத்தார். ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் மறுமொழி யொன்றும் பேசாது, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் அந்த ஸ்லோகத்துக்கு உரை கூறி முடிக்கிற வரையில் மௌனமாக இருந்தார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் உட்கார்ந்தவுடனே, ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் எழுந்து "ஸ்வாமி! இந்த ஸ்லோகத்திலே அநேக குற்றங்கள் உள்ளன; முக்கியமாக முப்பத்திரண்டு தோஷங்கள் உள்ளன. முதலாவது ஸ்லோகத்திலேயே இத்தனைத் தோஷங்களிருந்தால், இன்னும் உள்ள சுலோகங்களில் எத்தனைத் தோஷங்கள் இருக்கவேண்டும்? தோஷங்கள் நிறைந்த இந்தக் கிரந்தத்தைப் படித்துக் காலத்தை ஏன் வீணே போக்கவேண்டும்?" என்றார்.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்குத் திகில் உண்டாய்விட்டது; 'ஏதடா இவன்? குருவுக்கு மிஞ்சின சிஷ்யனுயிருக்கின்றான்' என்று நினைத்துக்கொண்டு, "இந்தத் தோஷங்களுக்கெல்லாம் பரிகாரம் மேலே கூறப்பட்டிருக்கின்றது" என்றார். ஆயினும், ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர் அத்துடன் விடுவதாயில்லை. "நல்லது, அப்படியாயின், அப் பரிகாரங்களை இங்கேயே

இப்பொழுதே சொல்லலாமே" என்றார் ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞர். அப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்குக் கோபம் வந்துவிட்டது; ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரை நோக்கி, "உனக்குப் பொருள் கூறும் சமர்த்து எனக்கில்லை; நீர் மகா வித்துவான்" என்றார் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர். இதனுடனே இஷ்டசித்தி வியவகாரமும் பாடமும் முடிவடைந்துவிட்டதாகத் தோன்றுகின்றது. அடிக்கடி இதற்குப் பிறகு ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருக்கும் அபிப்பிராய பேதங்கள் பல விஷயங்களில் உண்டாய்விட்டனவென்று தோன்றுகின்றது.

மாயாவாதத்திலே சில ஜனங்கள் இப்பொழுது ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடைய வார்த்தையைக் கேட்டுச் சம்சயமடையப் பெற்றவர்களாய், ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரண்டை வந்து, "ஸ்வாமி! தாங்கள் சந்யாசியாகையினால் வேதப் பொருளை எங்கள் போன்றவர்களுக்கு விளக்கி வைப்பதற்குத் தங்களுக்கு அதிகாரமிருக்கின்றது. ஆதலால், மாயாவாதக் கொள்கையின் மயக்கத்தினின்றும் எங்களைத் தெளிவித்து ரக்ஷிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, அப்படியே ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் அவர்களுடைய வேண்டுகோட் கிணங்கி, அவர்களுக்குச் சாஸ்திரங்களின் உண்மைப் பொருள் இன்னதென எவரும் மறுத்துக் கூற முடியாத பல நியாயங்களால் விளக்கிவைத்தார்.

ஸ்ரீ பூர்ணபிரக்ஞர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரைச் சில பலமான கேள்விகள் கேட்டு விழிக்கச்செய்து விடுவாராயினும், இதனால் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரை விட்டு விலகவில்லை.

ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் தமக்குச் சாவகாச சமயங்கள் கிடைத்த பொழுதெல்லாம் ஸ்ரீமத் பாகவதத்தை யெடுத்துப் படிப்பார். ஸ்ரீ பாகவதத்திலே ஐந்து ஆறு பாட பேதங்கள் உள்ளன. ஆனல், ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் இவற்றுள் ஒன்றையே அங்கீகரித்து "இதுவே ஸ்ரீ வியாச பகவானுக்குச் சம்மதமானது" என்று கூறினர். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடத்திலே இதற்கு முன் பாகவத பாடம் கேட்ட சிலர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடம் சென்று, இச் சங்கதியைக் கூற, அவரும் அங்குள்ள பெரியோர்களும் "பூர்ணப்பிரக்ஞருக்குக் கர்வம் அதிகமாய்விட்டது; பிஞ்சிலே பழுத்துவிட்டார்" என்று நினைத்தார்கள். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் பூர்ணப்பிரக்ஞரை வரவழைத்துக் கேட்க, ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் முன் சொன்னவாறே கூறினர்.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் "இதுதான் வியாசருக்குச் சம்மதமான கிரந்தமென்று நீர் சொல்வது உண்மையானல், ஸ்ரீ பாகவதத்திலே ஐந்தாவது ஸ்கந்தத்து வாக்கியங்களைச் சொல்லும்; பார்ப்போம்" என்று கேட்டார். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் ஒரு விநாடி நேரமும் யோசிக்கவில்லை; ஸ்ரீ வியாசபகவான் எப்படிக் கூறியிருக்கிறரோ அப்படியே எக்குற்றமு மில்லாமல் கூறி, அதற்குப் பொருளும் கூறினர். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருள்பட அனைவருக்கும் அதிக திருப்தியுண்டாய்விட்டது. இனிமேல் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடைய வார்த்தைகளை நம்பாமலிருக்க முடியுமா?

ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரோ அதி பால்யம்; சிறு பிள்ளை இத்தனைக் கிரந்தங்களையும் சாஸ்திரங்களையும் எப்பொழுது

படித்தார்.? படிப்பதற்கு நாட்கள் தான் எங்கே? இவரோ தர்க்க சாஸ்திரத்தில் வல்லுநராயிருக்கின்றார்; இலக்கிய இலக்கண காவியங்களிலே நிபுணராயிருக்கின்றார்; வேதங்களோ மனப்பாடமாயிருக்கின்றன; ஸ்ரீ பாகவதமோ இப்பொழுது பரீக்ஷித்துப் பார்த்தாய்விட்டது. அவர்களுக்கு ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடைய இவ் வகண்ட அறிவுக்குக் காரணம் ஊகிக்க முடியவில்லை. அவர்கள் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரை யே நோக்கி "உமக்கு வயது சொற்பந்தானே ஆகின்றது; இத்தனைக் கிரந்தங்களையும் எப்பொழுது படித்தீர்?" என்று கேட்டார்கள். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் உடனே ஒரு நிமிஷமும் தாமதிக்காமல் "நான் இவற்றை முன் ஜன்மங்களில் கற்றுக்கொண்டேன்" என்று மறுமொழி யுரைத்தார்.

6-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் தர்க்க ஜெயங்கள்

ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் சந்நியாசம் பெற்றுச் சில வருஷங்கள் கழிந்தன. வாசுதேவன் என்னும் மகா வித்துவானுடனே தர்க்கம் செய்து அவர் அடைந்த வெற்றியானது அவரைப் பொது ஜனங்களுடைய மதிப்பிலே உயர்த்திவிட்டது. இன்னும் இவர் இஷ்டசித்தி யென்னும் கிரந்தத்திலுள்ள தோஷங்களை யுடனே யெடுத்துரைத்தது இவர் அகண்ட ஞானம் உள்ளவர் என்பதை நிரூபித்துவிட்டது. ஸ்ரீ பாகவதத்தைப்பற்றிய இவர் கூற்று இவருடைய பெருமையை இன்னும் அதிகமாகப் பிரகாசப்படுத்தியது. இவருடைய பரிசுத்தமான பிரஹ்மச்சரிய வாழ்க்கையானது அனைவருக்கும் ஆச்சர்யத்தையும் அச்சத்தையும் உண்டாக்கிற்று. அவருடைய முகத்திலிருந்து வீசிய கம்பீரமான தேஜஸ் அனைவரையும் வசீகரப்படுத்தியது.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரை யடிக்கடி ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் எதிர்த்து வாதம் செய்து அவமானப்படுத்தியபோதிலும், இதனால் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு அடிக்கடி மனவருத்தம் உண்டானபோதிலும் அவருக்கு ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரிடத்திருந்த அன்பு எள்ளளவும் குறைவுபட வில்லை; ஆனல், நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் தினந்தோறும் தம்மிடம் வந்து கூடுகின்ற நூற்றுக் கணக்கான ஜனங்களுக்கு உண்மைப் பொருளை யெடுத்துப் பிரசங்கம் செய்துகொண்டே வந்தார்; தினந்தோறும் புதிய புதிய வாக்கியங்கள் பலவற்றுக்குப் பொருள் உரைக்கப்படும்; புதிய புதிய விஷயங்கள் பல வியவகரிக்கப்படும்; பழைய கோட்பாடுகள் தகர்த்தெறியப் படும்; நூதனமான வியாக்கியானங்கள் வெளிவரும். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞருடைய அமிர்த வசனங்களை வெறுமே கேட்டுக்கொண்டிருந்தாலே போதும், அவ்வளவு ஆநந்த கரமா யிருக்கும்.

ஜனங்களுக்கு உலக வியவகாரங்களிலிருந்து கொஞ்ச நேரம் ஓய்வு ஒழிவு ஏற்பட்டால், அவர்கள் அந்த நேரத்தை வீண்போக்க மனம் சகியாது ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரிடம் வந்துவிடுவார்கள். ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞர் தம்முடைய போதனைகட்கெல்லாம் ஆதாரமாக ஸ்ரீமத் பாகவதத்தையே எடுத்துக்கொண்டார்; இவருடைய பிரசங்கங்களிற் பெரும்பான்மையும் பக்தி மார்க்கத்தையே வற்புறுத்துவனவா யிருந்தன. ஸ்ரீ பாகவதத்தை எடுத்து வியாக்யானம் செய்யச் செய்ய, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞருடைய சக்தியும் செல்வாக்கும் அதிகரித்தன. இவற்றையெல்லாம் பார்க்கப் பார்க்க ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு அடக்க வொண்ணாத ஆநந்தம் உண்டாயிற்று. 'இனிமேல் ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரைத் தமக்குக் கீழே தமது சிஷ்யர்போல நடத்துவது நியாயமன்று' என்று ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் உணர்ந்து, தமக்குப்

பின் இவரே மடாதிபதி யாதற்குத் தகுந்தவர் என்று நிச்சயித்து, அவருக்கு இளவரசு பட்டம் கட்டத் தீர்மானித்தார்.

இந்த உற்சவம் வெகு விமர்சையாக நடைபெறுமாறு சகல ஏற்பாடுகளும் சரிவரச் செய்யப்பட்டன. ஏற்கனவே ஸ்ரீ பூர்ணப்பிரக்ஞரிடத்திலே ல்யித்திருக்கும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் அனைவரும் திரள் திரளாக வந்து கூடினர்.

நல்ல நாள்; ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் செய்யவேண்டிய சடங்குக் கிரியைகளை யெல்லாம் விதி வழுவாது செய்து, சங்க தீர்த்தங்களால் ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞரை அபிஷேகம் செய்துவைத்தார். பின்னர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் திரிகரணங்களும் ஒரு கரணமாக்கி, சாக்ஷாத் பகவானைச் சிறிது நேரம் தியானித் திருந்துவிட்டு, ஸ்ரீ பூர்ணப் பிரக்ஞருக்கு ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் என்னும் திவ்ய திருநாமம் அளித்தார்.

இதுமுதல், ஸ்ரீ ஆநந்த தீர்த்தருக்குத் தனியே ஒரு மடம் கொடுக்கப்பட்டது; சில சிப்பந்திகளும் கொடுக்கப்பட்டனர். ஆயினும். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும் ஸ்ரீ ஆநந்த தீர்த்தருக்கும் அந்யோந்யம் இருந்த அன்பிலேஎள்ளளவும் குறையவில்லை. இரண்டுமடங்களும் பெயருக்கு வெவ்வேறாயிருந்தாலும், உண்மையில் ஒன்றாகவேதான் இருந்தன.

சாதாரண ஜனங்கள் 'ஸ்ரீ ஆநந்த தீர்த்தருடைய அமிர்த வசனங்களைக் கேட்டு ஆநந்திக்க வேண்டும்' என்று

கூடியதுபோலவே, பெயர் பெற்ற வித்வான்கள் பலரும் ஸ்ரீ ஆநந்த தீர்த்தருடைய கீர்த்தியைப்பற்றிக் கேள்விப் பட்டுப் பொறாமை யுடைத்தானவர்களாய், 'அவருடனே வாது செய்து ஜயிக்கவேண்டும்'என்ற கருத்துடனே அடிக் கடி அவருடைய மடத்துக்கு வந்துகொண்டிருந்தார்கள். இன்னும் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய பெயர் எங்கும் பிர சித்த மானதினலே, அவரைப் பார்க்க வருபவர்கள்போல வும் பல வித்வான்கள் வருவதுண்டு.

ஒரு சமயத்திலே ஸ்ரீ அச்சுதப்பிரேக்ஷாச்சார்யரு க்கு நண்பரான சந்யாசி யொருவர் வித்வான்களான பல சிஷ்யர்களுடனே ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடம் வந்தார். அந்தச் சந்யாசியினுடைய சிஷ்யர்கள் ஸ்ரீ ஆநந்த தீர்த்தருடைய சமர்த்தைக் கேட்டுப் பொறாமை கொண்டவர்களாய், ஸ்ரீ ஆநந்த தீர்த்தரை வாதுக்கழைத்து அநுமானப் பிரமாண த்தை யுபயோகித்து வெற்றி பெற விரும்ப, ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் "பிரத்தியட்சப் பிரமாணத்தையாவது சப்தப் பிரமாணத்தையாவது ஆதாரமாகக் கொள்ளாத அநு மானம் பயனற்றதாம்" என்று அசைக்க முடியாத நியாயங் கள் கூறி, அநுமானப் பிரமாணத்தைத் துண்டித்தெறிந் தார். வைசேஷிக சாஸ்திரத்திலே வல்லுநர்களான அநே கர் வந்து வாதித்தார்கள்; ஆனல், ஆநந்த தீர்த்தருடைய யுக்திகளினல் எல்லோரும் தோல்வியடைந்தார்கள். கடைசி யாக அந்தச் சபையினர் அவருக்கு ஸ்ரீ அநுமான தீர்த்தர் என்ற பட்டப்பெயரும் அளித்து மெச்சினர்கள்.

சின்னாட்கள் கழிந்தன. அக்காலத்திலே புத்தமத மானது இந்தியாவிலே சிறிது பிரபலமாகவே யிருந்தது. இந்த மதாசார்யனுகிற புத்திசாகரன் என்னும் ஒருவன் மிகுந்த செருக்குடன் பரதக்கண்டம் முழுதும் சுற்றி, ஆங்காங்குள்ள மடாதிபதிகளையும் வித்வான்களையும் சந்நியாசிகளையும் வாதத்திலே ஜயித்தவனுய், தனக்கு நிகர் எவருமே யில்லை யென்று அகங்கரித்தவனுய், ஸ்ரீ ஆநந்த தீர்த்தருடைய பெயரைக் கேள்விப்பட்டு, 'அவரையும் ஜயித்து விடவேண்டும்' என்ற ஆசையுடையவனுய், தர்க்க சாஸ்திரத்திலே நிபுணன் எனப் பிரசித்தி பெற்ற வாதிசிம்ஹன் என்னும் பெயருடைய ஒருவனையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷாசார்யரிடம் வந்து சேர்ந்தான். அப்பொழுது ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் உடுப்பிக்குக் கொஞ்சம் தூரத்திலுள்ள வேறொரு மடத்திலே வசித்துக்கொண்டிருந்தார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் வந்தவர்களுடைய கருத்துக்களை நன்றுயறிந்துகொண்டு, உடனே ஸ்ரீ ஆநந்த தீர்த்தருக்குச் சொல்லி யனுப்பி வரவழைத்தார்.

ஊரெல்லாம் பெரும் சபையாகக் கூடிவிட்டது. தர்க்கம் ஆரம்பமாயிற்று. வாதிசிம்ஹன் சில பௌத்த நியாயங்களை யெடுத்து உரைத்துக் கோஷம் செய்தான். ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் வெகு சீக்கிரத்திலே அந்த நியாயங்களை யெல்லாம் பொடிப் பொடியாக ஊதிவிட்டார். "ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் கூறியதிலே பதினெட்டு விகற்பங்கள் ஏற்பட்டுள்ளன" என்று வாதிசிம்ஹன் உரத்த சத்தமிட்டு மிரட்டினுன்.

"ஆநந்த தீர்த்தர் இவனை ஜயிக்க முடியுமோ?" என்று ஜனங்கள் சந்தேகித்தார்கள். ஆனால், ஸ்ரீ ஆநந்த தீர்த்தரா தோற்பவர்? அவர் சட்டென்று எழுந்து, வாதிசிம்ஹன் கூறிய விகற்பங்களை யெல்லாம் உடைத்தெறிந்து, உண்மைப் பொருளை விளக்கி வைத்தார். ஸ்ரீ ஆநந்ததீர்த்தருடைய கம்பீரமான பார்வையும், நிர்ப்பயமான தொனியும், தெளிந்து திடமான யுக்திகளும் எதிரிகளையும் சபையினரையும் நடுநடுங்கச் செய்தன. வாதிசிம்ஹன் பேச வாயில்லாது கீழே யுட்கார்ந்தான். பின்னர், புத்திசாகரன் எழுந்தான். அவனுடைய நியாயங்களும் அவ்வாறே ஸ்ரீ ஆநந்த தீர்த்தரால் அடிபட்டன. கடைசியாக புத்திசாகரனும் வாதிஸிம்ஹனும் "இனிமேல் நாளைக்குத் தர்க்கம் செய்யலாம்" என்றார்கள். ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் "இதற்குமேல் இன்று யுக்தி தோன்றவில்லையோ? அப்படியானால் உண்மையை உரைக்கலாமே" என்றார். மிகுதித் தர்க்கமும் மறுநாள் தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுச் சபை கலைந்தது.

'மறுநாள் எப்பொழுது விடியுமோ?' என்று காத்திருந்த அவ்வூர் ஜனங்கள், பொழுது விடிந்தவுடனே தங்கள் தங்கள் காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு சபாமண்டபம் வந்து கூடினார்கள். ஸ்ரீ அச்சுத ப்ரேக்ஷரும் வந்து உட்கார்ந்தார்; ஸ்ரீ ஆநந்ததீர்த்தரும் புன்னகை பொலியும் முகத்துடனே சபையில் வந்து உட்கார்ந்தார். புத்தி சாகரனும் வாதி சிம்ஹனும் வரவே

யில்லை; நெடுநேரமாயிற்று; காத்திருந்தார்கள். அப்பொழுதும் அவர்கள் வாராததனாலே ஊரிலே அவர்களைப்பற்றி விசாரிக்கச் சொல்ல, 'அவர்கள் அன்றிரவே எவருக்கும் தெரியாமல் அவ் வூரைவிட்டு ஓடிவிட்டார்கள்' என்று தெரியவந்தது. இதனால் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருடைய மஹிமை இன்று நூறு மடங்கு அதிகமாகப் பிரகாசிக்கஆரம்பித்தது.

ஒருநாள் ஸ்ரீ சங்கருடைய ஸூத்திர பாஷ்யத்தை ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் எடுத்துப் பிரசங்கித்து வருகையில், அந்தப் பாஷ்யத்திலே யிருந்த குற்றங்களை யெல்லாம் எடுத்துக் கூறி, ஸ்ரீ வியாச பகவானுடைய ஸூத்திரங்கட்கும் இந்தப் பாஷ்யத்துக்கும் சற்றும் பொருத்தமே யில்லை'' என்று சொல்லி முடித்தார். தர்க்கசாஸ்திர மேதாவிகளாயும், ஸ்ரீ சங்கர பாஷ்யத்தைப் படிப்பதிலேயே தங்கள் ஆயுட்காலம் முழுவதையும் செலவிட்டவர்களாயு முள்ள பல பண்டிதர்கள் இப் பிரசங்கத்தைக் கேட்டும், ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் எடுத்துக் காட்டிய குற்றங்களை மறுக்க முடியாதவ ரானார்கள். ஆயினும், அவர்கள் ஸ்ரீ ஆநந்த தீர்த்தரை நோக்கி, ''ஸ்வாமி! தாங்கள் ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் மீது குற்றங் கூறுகின்றீர்களே. பிரஹ்ம ஸூத்திரங்களின் உண்மைப் பொருளை எங்கட்கு எவ்விதக் குற்றத்துக்கும் இலக்காகாதபடி எடுத்து உரைத்தருள வேண்டும்'' என்று பிரார்த்திக்க, ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் அப்படியே பகவானை மனத்தில் ஸ்மரித்துக்கொண்டு எல்லோரும் இன்பமெய்துமாறு உண்மைப் பொருளை யெடுத்து விளக்கிக் காட்டினார்.

இவ்விதமாக ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் ஜகத் பிரக்யாதி பெற்றுவருங் காலத்திலே, இவருடைய பிதாவாகிய ஸ்ரீ மத்தியகேகபட்டர் ஒரு சமயம் வந்து சேர்ந்தார். அப்பொழுது ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் மிகுந்த வர்சாலகத்துடனே ஸ்ரீ சங்கர பாஷ்யத்திலுள்ள சில குற்றங்களை யெடுத்துச் சில தர்க்க சாஸ்திர நிபுணர்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார். சகல கலா வல்லவர்களான சாஸ்திரக்ஞர் பலருக்கும் நடுவே ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் ஆண் சிங்கம்போல நின்று பிரசங்கமாரி பொழிவதையும், அந்தப் பண்டிதர்கள் எல்லோரும் பதில் பேச வாய் அற்றவர்களாய்த் தலை குனிந்து இவர் கூறுவதை யொப்புக்கொள்வதையும் கண்ட ஸ்ரீ மத்யகேக பட்டருக்கு அச் சமயத்திலே மனம் எத் தன்மை அடைந்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். தாம் பெற்று வளர்த்துப் பெயரிட்ட குழந்தை, தோளிலும் மடியிலும் தாளிலும் போட்டுக் கொஞ்சிக் கொஞ்சித் தாலாட்டிய குழந்தை, இப்பொழுது சாஸ்திரக்ஞர்களெல்லோரும் மருளும்படி செய்கின்றானென்றால், அந்தப் பிதாவினுடைய மனம் அடக்க வொண்ணாத ஆநந்தத்தை யடைந்திருக்கு மென்று எவரும் சொல்ல வேண்டியதில்லை.

பின்னர் ஒருநாள் ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் தமது குருவாகிய ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடனே ஸ்ரீசங்கர பாஷ்யத்தைப் பற்றிப் பேசும்படி நேரிட, ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் அந்தப் பாஷ்யத்திலே யுள்ள குற்றங்களை யெடுத் துரைத்தார்.

அப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் சிறிது கோபக் குறியுடனே "இந்தப் பாஷ்யம் சரியா யில்லாவிட்டால், நீரே ஒரு பாஷ்யம் எழுதலாமே" என்றார். ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் தமது குருவுக்குக் கோப முண்டாயிற்று என்பதை மறந்துவிட்டு, பாஷ்யம் எழுதுமாறு தமக்குத் தமது குரு ஆக்ஞையளித்ததாக மாத்திரம் கருதினார்.

பின் ஒருநாள், விகுச குலத்திலே பிறந்தவரும், ஸ்ரீ ஜேஷ்டர் என்னும் பெயருள்ளவருமான ஒரு விருத்தாப்பிய சந்யாசி, மகா பத்தர், ஸ்ரீ ஆநந்ததீர்த்த ரிடத்திலே அதிக அன்புள்ளவர், ஸ்ரீ ஆநந்ததீர்த்தரை நோக்கி, "தாங்கள் ஸ்ரீ சங்கர பாஷ்யத்திலுள்ள குற்றங்களை யெடுத்துக் காட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கின்றீர்கள். குற்றமெடுத்துக் காட்டுவது பெரிதன்று. அது எப்படி யிருந்தாலென்ன? தாங்கள் குற்ற மில்லாததாக ஒரு பாஷ்யம் இயற்றினால் என் போன்றவர்கட்கு மிகுந்த உபகாரமா யிருக்கும்" என்றார்.

7-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் தேச யாத்திரை

ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் சந்யாசம் வாங்கிக்கொண்டவுடனே கங்காயாத்திரை செய்ய விரும்பினாரென்றும், ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு மனமில்லாததனால் அது தடைப்பட்டுவிட்டதென்றும் முன்னமேயே கூறியிருக்கிறோம். பின்னர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரும் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருமாகப் பல வித்வான்களுடன் வாதாடி ஜயமடைந்ததையும் குறிப்பிட்டோம். இப்படியெல்லாம் இருந்தாலும் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருடைய மனமானது சஞ்சாரத்தையே நாடியதாயிருந்தது. சந்நியாசி மூன்று நாட்களுக்குமேல் ஒரு கிராமத்தில் தங்கலாகாதென்று ஒரு விதியுண்டு. சந்நியாசி ஓரிடத்திலே சேர்ந்தாப்போல சில நாட்கள் வாசம் செய்துவிட்டால், அவ்விடத்திலே அவனுக்குப் பற்றுதல் ஏற்பட்டுவிடும்; ஆகையால், சந்யாசி எப்பொழுதும் சஞ்சாரத்திலேயே யிருக்கவேண்டும். யதேச்சையாகக் கிடைத்ததையுண்டும், அஸ்தமித்த இடத்திலே படுத்தும் சந்நியாசி காலம் கழிக்கவேண்டும்.

ஆதலால், ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் தாம் தீர்த்தயாத்திரை போக விரும்புவதாக, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடத்திலே தெரிவித்தார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் இவரை எத்தனை நாட்க

ளுக்குத்தான் தடுத்து வைத்துக்கொண்டிருக்க முடியும்? இப்பொழுது ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் ஸ்ரீ ஆநந்ததீர்த்தரை விட்டுப் பிரிய மன மில்லாதவராய், தென் தேசத்திலே யுள்ள க்ஷேத்திரங்களுக்கெல்லாம் தாமும் கூட யாத்திரை வருவதாகக் கூறினார்.

இச் சமயத்திலே நமது தென்னிந்தியாவானது அநேக சிறு தேசங்களாகப் பிரிவுபட்டுத் தனித்தனி யரசர்களை யுடைத்தா யிருந்தது. மேல் சமுத்திரக் கரையி லே கொங்கண தேசம், துளுவ தேசம், கேரள தேசம் என்று மூன்று தேசங்கள் இருந்தன. கீழ்ச்சமுத்திரக் கரையிலே தெலுங்க தேசம், சோழ தேசம், பாண்டிய தேசம் என்று மூன்று தேசங்கள் இருந்தன. வடதேசத் தைப் படையெடுத்த மகம்மதியர்கள் இன்னும் தென்புற மாக இறங்கவில்லை. அப்பொழுது தென்னிந்தியாவிலே கலகங்கள் கிடையா; யுத்தங்கள் கிடையா. ஜனங்கள் செழித்துக் கொழுத்துத் திகழ்ந்திருந்தனர்; தேசத்திலே எவ்வித குறைவும் கிடையா; தேசத்திலே எங்கும் சாந்த மும் சமாதானமும் நிறைந்து ஜனங்களை ஆநந்தகரர்களாகச் செய்திருந்தன.

இச் சமயத்திலே ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் தமது குருவை யும் கூட்டிக்கொண்டு உடுப்பியிலிருந்து தென்புறம் நோக்கிப் புறப்பட்டு, மங்களூர் வந்து சேர்ந்து அங்கிருந்து நேத்ராவதி நதியைக் கடந்து விஷ்ணு மங்கலம் என்னும் ஊரிலே வந்து சேர்ந்தார். இந்த ஊர் மங்களூரிலிருந்து தெற்கே

இருபத்தேழு மைல் இருந்ததாகத் தெரியவருகின்றது. இந்த விஷ்ணு மங்கலம் என்னும் ஊரானது ஸ்ரீ ஆநந்த தீர்த்தருக்கு அதிகப் பிரியமான ஒரு ஊராயிருந்த தெனவும் தெரியவருகிறது. ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் அடிக்கடி இங்கு வந்து சில வாரங்கள் வரை க்ஷேத்திரத்திலே தங்கிவிட்டுப் போயிருந்திருக்கின்றார். இவ்வூரிலே ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்குச் சிஷ்யர்களாக அநேக சிஷ்யர்கள் இருந்தார்கள்; ஆகையால், தினம் ஒருவராக ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருக்கும் பிக்ஷை நடத்தி வந்தார்கள். இங்கும் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருடைய பெயர் பிரகாசிக்கலாயிற்று; அதிக சம்பிரமமான பிக்ஷைகள் அவருக்குச் செய்யப்பட்டன.

ஒருநாள் ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் அப்பொழுதுதான் பிக்ஷை யுண்டு வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவியுட்கார்ந்தார்; அன்று பிக்ஷை யளித்தவர் 200 வாழைப் பழங்க ளடங்கிய ஒரு பெரிய குலையை யெடுத்துக்கொண்டு வைத்து, அவர் அதை யெடுத்துக்கொள்ளுமாறு அவருக்கு உபசாரம் செய்தான். ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் மறுமொழியொன்றும் பகராது, அக் குலையி லிருந்த பழங்கள் அனைத்தையும் சிறிதும் சிரம மில்லாமல் ஒவ்வொன்றாகத் தோலை உரித்து எறிந்துவிட்டுத் தின்றுவிட்டார்; பார்த்தவர்கள் அனைவரும் பிரமித்துப் பயந்தனர். இஃதென்ன? பகாசூரனோ? இப்பொழுதுதானே வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டார்; இன்னும் கை கழுவி ஒரு நிமிஷ நேரம்

கூட ஆகவில்லையே; இதற்குள்ளே இவர் எப்படி இருநூறு பழங்களையும் தின்றார்? இவர் தின்றது உண்மைதானா? அல்லது பக்கத்திலிருந்தவர்கள் அம்மாதிரி பகற் கனவு கண்டார்களா? இல்லை, இல்லை; உண்மைதான். அருகிலிருந்தவர்கள் ஆச்சர்ய மடைந்தவர்களாய் "ஸ்வாமி! இத்தனைப் பழங்களையும் இப்பொழுதே தின்றுவிடுதற்குத் தங்களால் எப்படி முடிந்தது?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "எனது வயிற்றில் ஜீரணாக்கினி பெருவிரலளவாய் எப்பொழுதும் எரிந்துகொண்டே யிருக்கின்றது; ஆகையால், எது போட்டாலும், எவ்வளவு போட்டாலும் அது எரித்துவிடுகின்றது" என்று பதில் கூறினார்.

"பின்னர் ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் தமது குருவுடனேகூடப் புறப்பட்டுத் தெற்கு நோக்கி நடந்து இப்பொழுது திருவநந்தபுரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற ஸ்ரீ அநந்த சயனம் வந்து சேர்ந்தார்கள்" என்றும், "வழியிலே கேரள தேசத்துப் பூஷணம் போன்ற பயஸ்வினீ என்ற நதியை இவர்கள் கண்டார்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த நதி எதுவென்று விளங்கவில்லை. "அந்த நதியைக் கண்டவுடனே ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் ஸ்ரீ துர்க்கா தேவியை நினைத்தார்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலினாலே, கேரள தேசத்திலே அம்மன் கோவில்கள் அதிகமாகையினாலும், பயஸ்வினீ என்ற இந்த நதியின் தீரத்திலே ஒருகோவில் இருந்திருக்கலா மாகையினாலும், ஸ்ரீ அநந்த தீர்த்தரும் அவருடைய குருவும் ஸ்ரீ

அநந்தசயனம் சென்றபொழுது, கேரள தேசத்தின் வழியாகத்தான் சென்றார்களென்று கூறலாம். ஆயினும், நாம் "இவ்வழிதான் சென்றிருக்கலாம்" என்று திடமாகச் சொல்லல் முடியாது.

இவர்கள் மைசூர், கோயம்புத்தூர் மார்க்கமாகச் சென்று வழியிலே யிருந்து மலையை எங்கேனும் ஒரு சுலபமான இடத்தில் கடந்து திருவாங்கூருக்குள்ளே சென்றிருக்கலாம். ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் குமாரதாரை என்னும் நதிக்கும் நேத்ராவதி நதிக்கும் இடையிலேயுள்ள பிரதேசத்தில்தான் பின்னர் அதிகம் சஞ்சரித்துக்கொண்டிருந்தாரென்று போகப்போகத் தெரியவரும். கண்வதீர்த்தம் என்ற பிரசித்த தீர்த்தமானது இப் பிரதேசத்திலே தான் இருக்கின்றது. ஒரே தினத்தில் ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் உடுப்பியிலுள்ள எட்டுச் சந்நியாசிகளுக்குள் எந்த விருக்ஷத்தின் கீழே நின்று ஆச்ரமம் கொடுத்தாரோ அந்த அச்வத்த விருக்ஷம் அப்படியே இன்றும் இருக்கின்றது. கண்வதீர்த்தத்திலிருந்து கிழக்கே ஒரு சில மைல் தூரத்திலே கடத்தலம் என்ற இடம் இருக்கின்றது; இங்குத்தான் ஸ்ரீ மாத்வர் எழுதிய 37 கிரந்தங்களும் புதையுண்டு கிடக்கின்றனவாம். மத்தியதலம் என்னும் இடமானது ஸ்ரீ சுப்ரமண்ய பர்வதத்துக்கும் சமுத்திரத்துக்கும் இடையில் இருக்கின்றது. ஸ்ரீ மாத்வர் கொண்டுவந்த ஸ்ரீ வேதவியாச சாளக்கிராமங்கள் எட்டுள் ஒன்று இங்கு உள்ளது.

இச் சந்தர்ப்பத்திலே ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் சம்பந்தமாக ஐதிகமாகக் கூறப்படும் ஒரு சம்பவத்தை இங்குக் குறிப்பிடு வோம். கோயம்புத்தூர் ஜில்லாவிலே உடுமலைப்பேட்டை தாலுகாவில் ஆனைமலையென்று பெரியமலை யொன்று இருக் கின்றது. உடுமலைப்பேட்டையிலிருந்து சுமார் 12 மைல் தூரம் போனால் இந்த மலையடிவாரத்திலே ஒரு அழகிய நதி யோடுகின்றது. இந்த நதியினிடத்தே இவ்விடத்தில் மண்ணாவது மணலாவது கிடையாது; கீழும் பாறை; இரு புறமும் பாறைகள். இந்த நதி தீரத்திலே திரிமூர்த்திக ளும் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ள ஒரு க்ஷேத்திரம் இருக் கின்றது. இப்பொழுதும் இந்த க்ஷேத்திரத்துக்கு நூற்றுக் கணக்காக யாத்திரிகர்கள் போய்க்கொண்டே யிருக்கின்றார் கள் இந் நதியின் மத்தியிலே மூன்று பாறைகள் தனித் தனியே வெவ்வேறாக நிற்கின்றன. இம் மூன்று பாறைக ளின்மீதும் பாலம் போட்ட பலகைபோல நீண்ட பாறை யொன்று இருக்கின்றது. இப் பலகைப் பாறையின் கீழே மூன்று பாறைகளுக்கும் இடையிடையே நதி ஓடுகின்றது. இப் பலகைப் பாறையிலே சுமார் நூறு ஜனங்கள் உட் காரலாம். இந்தப் பாறைக்கு மத்வராயன் பாறை யென்று பெயர் வழங்குகின்றது. இந்த நதியைக் கடந்துதான் ஸ்ரீ மாத்வர் திருவநந்தபுரம் சென்றாரென்றும் சொல்லப்படுகின் றது. இந்த மலையானது திருவாங்கூரின் எல்லைப்புறத்திலே யிருப்பதினாலே ஸ்ரீ மாத்வர் இவ் வழியாகச் சென்றிருக்க லாம்; அவர் திரிமூர்த்தி க்ஷேத்திரத்து மண்டபத்திலே

கொஞ்சக்காலம் தங்கி யிருக்கலாம்; அந்த நதியிலே ஸ்நானம் செய்து, மேலே கூறிய பலகைப் பாறையிலே சென்று உட்கார்ந்து நிஷ்டையி லிருந்திருக்கலாம்.

இன்னும் ஸ்ரீ மாத்வர் கோயம்புத்தூர் வழியாகச் சென்றிருக்கலா மென்பதற்கு அந்த ஜில்லாவிலுள்ள ஊத்துக்குழிக் கருகேயுள்ளே பலதொழுவு என்ற கிராமத்தில் ஒரு கோவிலில் ஸ்ரீ மாத்வவிக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது என்பதாம். இந்தக் கோவில் கவனிப்பாரற்றுப் பாழடைந்துவிடவே, சமீபத்திலே முளபாகல் மடத்து ஆசார்யர் அந்த விக்கிரகத்தை யெடுத்துக் காவிரி தீரத்திலே பிருந்தாவனத் தோப்பிலே கொண்டுபோய்ப் பிரதிஷ்டை செய்துவைத்தார். ஆனல், நாம் இவ்வளவெல்லாம் சொல்லியும், ஸ்ரீ அநந்ததீர்த்தர் எவ்வழியாக அநந்தசயனம் சென்றார் என்பதை நிச்சயித்துக்கூற முடியவில்லை.

திருவநந்தபுரத்தில் ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் ஸ்ரீ அநந்த பத்மநாபஸ்வாமியைத் தர்சித்து ஆநந்தித்துக்கொண் டிருக்கையில், அப்பொழுது சிருங்கேரி மடத்தில் ஸ்ரீ சங்கர பரம்பரையில் வந்தவரான ஸ்ரீ வித்யாசங்கர ஸ்வாமிகளும் ஸ்ரீ ராமேஶ்வர யாத்திரைக்காக வந்துகொண்டிருந்தார்.

இருவரும் ஒருவரை யொருவர் சந்திக்கும்படி நேரிட்டது; பின்னர் மதசித்தாந்தங்களைப்பற்றி வாக்கு வாதங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் அத்வைதத்தைத் தகர்த்து, அதனுடைய குற்றங்களை யெல்லாம் எடுத்

துக்காட்டி ஸ்ரீ வித்யாசங்கரருடைய வாயடங்கச் செய்தார். ஸ்ரீவித்யாசங்கரர் பேசுவதற்கு நியாயமில்லாமல் எக்க விழி விழித்து ஸ்ரீ ஆநந்த தீர்த்தரை நோக்கி "இவ்வளவு வாய்ப் பேச்சுப் பேசுகிற நீர் ஒரு பாஷ்யம் எழுதும், பார்க்கலாம்" என்றார். ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் சீக்கிரத்தில் தாம் பாஷ்யம் ஒன்று எழுத உத்தேசித்திருப்பதாகவும், சீக்கிரம் முடிந்து விடும் என்றும் கூறினார். கடைசியாக இருவரும் அந்யோந் யம் மிகுந்த விரோதபாவத்தோடே பிரிந்தனர். இருவரும் திருவநந்தபுரம் விட்டுப் புறப்பட்டுக் கன்யாகுமரி மார்க்க மாக ஸ்ரீ ராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தார்கள்; அவ்விடத்தி லே இருவரும் ஒருவரை யொருவர் சந்திக்கும்படி நேரிட் டது.

ஒருநாள் ஸ்ரீ ராமேஸ்வரத்திலே ஸ்ரீ மாத்வர் சமுத்திர ஸ்நாநம் செய்வதற்காகத் புறப்பட்டுப் போய்க்கொண் டிருந்தபொழுது, வழியிலே ஸ்ரீ வித்யாசங்கரரைச் சந்திக் கும்படி நேரிட்டது. அவ்வளவுதான்; மறுபடியும் வாக்கு வாதம் ஆரம்பித்துவிட்டது. "எவர் ஜெயிக்கிறரோ அவர் மற்றவருடைய தண்டத்தை வாங்கி யொடித் தெறிந்து விடுவது" என்று பந்தயமும் வைக்கப்பட்டது. வாதம் நடந் தது என்றும், ஸ்ரீ மாத்வர் ஜயமடைந்தார் என்றும் மாத்தி ரம் ஸ்ரீ மாத்வ விஜயம் கூறுகின்றதே யொழிய, தண்டம் ஒடிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி யொன்றுமே கூறவில்லை. இப்படி ஆஷாட மாசம் வந்துவிட்டதினால், சந்யாசி எங்கேனும் ஓரிடத்தில் தங்கிச் சாதுர்மாச விரதம் அநுஷ்

டிக்கவேண்டும். ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் ஸ்ரீ ராமேஶ்வரத்திலே தங்கினார்; ஸ்ரீ வித்யாசங்கரரும் அங்கேயே தங்கினார்.

ஸ்ரீ வித்யாசங்கரார் பல விதத்திலும் ஸ்ரீ ஆநந்ததீர்த்தருக்குத் தொந்தரவுகள் உண்டுபண்ண முயற்சித்தார்; "ஸ்ரீ ராமேஸ்வரத்தை விட்டு ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் போய்விடும்படிச் செய்யவேண்டும்" என்று வித்தியா சங்கரர் எத்தனையோ சூழ்ச்சிகள் செய்தார்; தமது ஆட்களை ஏவி, ஸ்ரீ ஆநந்த தீர்த்தருடைய ஆட்களைச் சண்டைக் கிழுக்கும்படி செய்தார். ஆனால், ஸ்ரீ ஆநந்த தீர்த்தரோ இதனாலெல்லாம் மனங் கலங்காமல், கம்பீரமான ஹிருதய முடையவரா யிருந்தார்.

ஸ்ரீ ராமேஶ்வரத்திலே நான்கு மாதகாலம் தங்கிவிட்டு ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் பாண்டிய சோழ தேசங்களின் வழியாகத் திரும்பிப் புறப்பட்டார். வழியிலே இவர் இரு காவிரிக்கும் இடையிலே யுள்ள ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திலே கொஞ்ச நாட்கள் தங்கி ஸ்ரீரங்க நாதனைத் தரிசித்தார். பின்னர், ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் அங்கிருந்து புறப்பட்டுத் தஞ்சாவூர் சமஸ்தானத்தினுள்ளே நுழைந்து, அங்கே அநேக இடங்களில் தமது சித்தாந்தத்தைப் பரவச் செய்தார். சீர்காழிக்கும் சிதம்பரத்துக்கும் அருகே ஸ்ரீ பூவராகஸ்வாமி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ முஷ்ணம் என்னும் க்ஷேத்திரம் ஒன்று உள்ளது. இவ்விடத்திலே தண்ட தீர்த்தம் என்ற பெயருடனே ஒரு சிறிய தடாகம் இருக்கின்றது. இது ஸ்ரீ மாத்வருடைய தண்டத்தினாலே ஆக்கப்

பட்டது என்று கூறப்படுகின்றது. இவ்வூரிலே ஸ்ரீ மாத்வர் வந்திருந்தபொழுது, தாகத்துக்குத் தண்ணீர் கிடையாமல் ஒரு கர்ப்பிணி தவித்தா ளென்றும், அதைக் கண்டு ஆசார்யர் பச்சாத்தாபப்பட்டு விசாரிக்க, "அவ் வூரிலே ஜலகஷ்ட மதிகம் என்றும் தெரியவந்து தமது தண்டத்தினால் அங்கு ஒரு குளத்தை யுண்டுபண்ணினார்" என்றும் கூறப்படுகின்றது.

ஒரு சமயத்தில ஆசார்யர் சந்திரநதிக் கரையிலே ஒரு க்ஷேத்திரத்தில் இறங்கி யிருந்தபொழுது, ஐதரேய உபநிஷத்தை யெடுத்து வியாக்கியானம் செய்தார். அப்பொழுது அவர் "வேத வார்த்தை ஒவ்வொன்றுக்கும் மூன்று பொருள்கள் உண்டு" என்றும், "மகா பாரத வாக்கியங்கள் ஒவ்வொன்றுக்கும் பத்துப் பொருள்கள் உண்டு" என்றும், "ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலேயுள்ள ஒவ்வொரு திருநாமத்துக்கும் நூறு பொருள்கள் உண்டு" என்றும் கூறினார். சபையிலுள்ளவர்கள் நகைத்து "ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களுக்கு நூறு பொருள்களைச் சொல்லும், பார்ப்போம்" என்று கேட்டார்கள். ஆசார்யர் விச்வம் என்ற முதலாவது திருநாமத்தை யெடுத்து, சிரம மில்லாமல், ஆலோசிப்பதற்கு ஒரு நிமிட நேரமும் நில்லாமல் அப்பதத்துக்குப் பகுதிவிகுதி வியாகரணவிதிப்படிப் பிரித்துப் பிரித்துப் பொருள் கூறிக்கொண்டே போனார்; இவர் பல பொருள்கள் சொல்லிக்கொண்டே போகின்றார்; அவர்களால் பின் தொடர முடியவில்லை; அவர்களுடைய மூளை

குழம்பிவிட்டது. அவர்கள் "ஸ்வாமி! போதும், போதும்; எங்கள் மூளை மிகச் சிறியது; இத்தனைப் பொருள்களையும் எங்களால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை; நாங்கள் தெரியாமல் அபசாரம் செய்தோம்; மன்னிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

அதே சந்திரகிரி நதியில் இன்னொரு க்ஷேத்திரம் இருந்தது; அங்கே போய் ஸ்ரீ ஆநந்ததீர்த்தர் தங்கினார். அவ்விடத்தில் பல பிராஹ்மண வித்வான்கள் வந்து குழுமி யிருந்தனர். அவர்கள் 'ஆசார்யருடனே தர்க்கம் செய்தால் எங்கே அவமானம் நேரிட்டுவிடுமோ' என்று பயந்து, அந்யதேச வித்வான் ஒருவனைத் தூண்டிவிட்டு, நல் வழியிலே தானம் செய்பவர்களைப் புகழ்ந்தும், தானம் செய்யாதவர்களை யிகழ்ந்தும் கூறும் சுருதியின் பொருளை யெடுத்துரைக்கும்படி ஆசார்யரைக் கேட்குமாறு செய்தார்கள். ஆசார்யர் அந்தச் சுருதிக்குத் தெளிவாகப் பொருள் உரைத்துக்கொண்டு வரும்பொழுது "ப்ரிணீயாத் என்னும் வினைமுற்று ப்ரிண் என்னும் பகுதியினின்றுண்டானது" என்று சொல்ல, அந்நியதேச வித்வானாகிய அந்தப் பிராஹ்மணன் "அன்று, அது 'ப்ரீங்' என்னும் பகுதியிலிருந்து உண்டானது" என்றான். ஆசார்யர் அவனை நோக்கி "மூடா! உனக்கு இன்னும் ப்ரி, ப்ரீ என்னும் எழுத்துக்களிலுள்ள பேதந் தெரியவில்லை. போய் மணலில் எழுதி, முதலில் எழுத்துக்களை நன்றாகக் கற்றுக்கொண்டு

வா!'' என்று கூறிப் பரிகாசம் புரிந்து நகைத்தார். அப்போது அங்குக்கூடியிருந்த மற்றப் பிராஹ்மணர்கள் அனைவரும் ஆசார்யருடைய சமர்த்தைக் கண்டு வியந்து புகழ்ந்து அவருடைய அடிகளில் நமஸ்கரித்தார்கள்.

பின்பு இன்னொரு சமயத்திலே, வித்வான்கள் பலர் வந்து கூடியிருந்தார்கள். இந்திரன் ஒரு கன்னிகைக்கு அவள் வேண்டினபடி வடிவழகளித்ததைக் கூறுகின்ற வேதவாக்கியத்துக்கு அர்த்தம் சொல்ல நேரிட்டபொழுது, அந்த வாக்கியத்திலேயுள்ள அபாலா என்ற பதத்துக்கு ஆசார்யர் “அப்போதே பூப்படையும் பெண்'' என்று பொருள் உரைத்தார்; ஆனால், அங்கொரு பிராஹ்மணன் “அபாலா என்ற பதத்துக்குக் குஷ்டரோகிணியென்று பொருள்'' என்று சொன்னான். ஆசார்யர் “நல்லது; சீக்கிரத்தில் இன்னின்ன லக்ஷணமுள்ள ஒரு வித்துவான் இங்கு வருவார்; அவரிடத்தில் கேளுங்கள்!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அப்படியே சில நாட்களுக்குள்ளே ஆசார்யர் கூறிய லக்ஷணங்களையுடைய ஒரு வித்துவான் அங்கு வரக் கண்டு, அவர்கள் அவரிடத்திலே சென்று, முன் சொன்ன வாக்கியத்துக்குப் பொருள் கேட்க, அவரும் ஆசார்யர் கூறியதுபோலவே கூறினார்; அவர்கள் ஆச்சரிய மடைந்து ஆசார்யரை சர்வஞ்ஞ யதியென்று கொண்டாடினார்கள்.

8-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் வடதேச யாத்திரை

ஸ்ரீ மாத்வர் சந்யாசாச்ரமம் எடுத்து இப்பொழுது ஏழு வருஷங்களாய்விட்டன; இவ்வேழு வருஷங்களிலே பெரும்பான்மைக் காலத்தையும் இவர் தேச யாத்திரையிலே கழித்தாரென்று தெரியவருகின்றது. ஸ்ரீ சங்கர பாஷ்யத்திலே குற்றங் கண்டு பிடித்து, அதைத் தூஷிக்கும்படி நேர்ந்த பொழுதெல்லாம், ஆசார்யருக்கு வேண்டியவர்களும் மற்றவர்களும் இவரை ஒரு பாஷ்யம் எழுதும்படி கேட்டிருக்கின்றார்கள். இவர் தென்னிந்தியாவிலே யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுதெல்லாம், இவருடைய மனமானது 'பாஷ்யம் எழுதவேண்டும்' என்ற ஒரு கருத்தையே கொண்டிருந்தது; துவைதமத சித்தாந்தத்தைஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஆதாரங்களையெல்லாம் சேகரித்துக்கொண்டிருந்தார்; கண்ணுக்கு எதிர்ப்பட்ட சுலோகங்களையெல்லாம் துவைத மதத்துக்கு அநுகூலமாக வியாக்கியானம் செய்துகொண்டு 'ஜீவனும் ஈச்வரனும் ஒரு நாளும் ஒன்றேயாதல் முடியவே முடியாது' என்ற தீர்மானத்தை யடைந்தார். ஆசார்யர் முதலாவது பாஷ்யம் இயற்ற ஆரம்பித்தது ஸ்ரீ பகவத்கீதையேயாம். இது பிரஸ்தானத் திரயங்களுள் ஒன்றாயிருக்கின்றது; ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமாநுஜரும்

இதற்கு பாஷ்யம் எழுதியிருக்கின்றார்கள். ஆனால், 'இவ் விருவர் கொண்ட பொருளும் தப்பு' என்று ஆசார்யர் அபிப்பிராயப்பட்டார்; ஆகையால், முதலாவது ஸ்ரீ பகவத் கீதைக்கு ஒரு பாஷ்யம் எழுதினார்; இப்பொழுது ஆசார்யர் உடுப்பி வந்து சேர்ந்துவிட்டார்; ஆசார்யருக்கு 'ஹிமோத் கிரியிலே ஸ்ரீ வேதவியாசர் வாசம் செய்கின்ற ஸ்ரீ பதரி காச்ரமம் செல்லவேண்டும்' என்ற ஆசை யுண்டாய்விட் டது. ஆகையால், அதற்கு முன்னமேயே ஸ்ரீ பகவத் கீதைக்கு அவர் ஒரு பாஷ்யம் எழுதி, அந்தப் பாஷ்யத்தின் ஒரு பிரதியைத் தமது குரு ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடத்தி லும் இன்னொரு பிரதியை ஜேஷ்டர் என்ற சந்யாசி யிடத்தி லும் கொடுத்தார்.

இப்பொழுது ஆசார்யர் ஸ்ரீ பதரிகாச்ரமம் செல்ல, வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யலானார்; சிலர் அவ ருடன்கூடச் செல்லத் துணிந்தார்கள்; இவர்களுக்குள்ளே ஸ்ரீ சத்திய தீர்த்தர் என்பவர் முக்கியமானவர். இவர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரிடத்தில் உபதேசம் பெற்றுச் சந்நியா சம் வாங்கிக்கொண்டவர்; பின்னர், பந்தர்க்கரை மடத்துக் கும் பீமனக்கட்டே மடத்துக்கும் இவர்தான் அதிபதி யானார். இவர் ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய சிஷ்யரே யாயி னும், ஆசார்யரிடத்திலே அதிக பக்தி வாய்ந்தவர்; அவர் ஆசார்யருடைய மடத்தைச் சார்ந்து, ஆசார்யரை விட்டுப் பிரியாமல், ஆசார்யரிடத்திலே அனைத்தையும் கற்றுக் கொண்டார். ஆசார்யரை விட்டுப் பிரிந்திருக்க மனம்

வராது; இப்பொழுது ஆசார்யர் ஹிமோத்கிரிக்குப் புறப்பட்டபொழுது தாமும் கூடவே புறப்பட்டுவிட்டார்.

ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ அச்சுதப்பிரேக்ஷரிடம் சென்று தாம் ஸ்ரீபதரிகாச்ரமம் செல்ல விரும்புவதாகத் தெரிவித்து அநுமதி கேட்டார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் இந்த யாத்திரையில் கூட வர முடியாதென்பது நிச்சயம். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கு விருத்தாப்பியதசை வந்துவிட்டது; பலவீனமும் அதிகரித்துவிட்டது. காசி யாத்திரையே மிகக் கஷ்டமானது; இன்னும் ஹிமோத்கிரியிலே பதரிகாச்ரமம் சென்று வருவதென்றால் இலகுவான காரியமா? ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருடைய மனம் தத்தளிக்க ஆரம்பித்தது; அவ்வளவு பிரியம் ஸ்ரீ மாத்வர்மீது. ஆனால், 'ஸ்ரீ மாத்வர் ஒரு அமாநுஷ்ய புருஷர்' என்று ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் அறிந்திருந்ததனாலே ஒருவாறு அநுமதியளித்தார்.

பின்னர், ஸ்ரீ மத்வாசார்யரும் அவருடன்கூடச் சிலரும் ஹிமோத்கிரிக்குப் புறப்பட்டார்கள். "வழியிலே எந்தெந்த ஊர்களில் தங்கினார்கள்? என்னென்ன விசேஷங்கள் நடந்தன?" என்ற விஷயங்களொன்றும் தெரியவில்லை. இந்த ஆசார்யருடைய சரித்திரத்துக்கு ஆதாரமாயுள்ளது பண்டைக் காலத்துக் கிரந்தமாகிய ஸ்ரீ மாத்வ விஜயம் என்னும் நூல் ஒன்றேயாம். இதிலே, உடுப்பியிலிருந்து புறப்பட்டவர்கள் நேரே ஹிமோத்கிரி சென்றார்கள் என்றுதான் கூறப்பட்டிருக்கின்றது. ஆசார்யருக்கு ஸ்ரீ பதரிகாச்ரமத்தின் மேலேயே கண்ணும்கருத்தும் இருந்தமையினால், வழி

யில் எங்கும் அதிகம் தங்காமல் நேரே சென்றிருக்கலாம். அவர் கங்கையிலே ஸ்நானம் பண்ணிக் காசி வழியாகச் சென்றார் என்று தெரியவருகின்றது. காசியிலே யிருந்த வித்வான்களுடனே அவர் வாது புரியவில்லை.

ஹிமோத்கிரியின் சாரலிலே ஸ்ரீ நரநாராயண க்ஷேத்திரம் ஒன்று இருக்கின்றது. 'ஆசார்யர் அங்குச் சென்று ஆநந்தமடம் என்ற ஒரு இடத்திலே தங்கி, சில நாட்கள் வசித்தார்' என்று தெரியவருகின்றது, இங்கே ஆசார்யர் தாம் இயற்றிய ஸ்ரீ பகவத்கீதா பாஷ்யத்தை ஸ்ரீ பகவானுக்குச் சமர்ப்பணமாகச் செய்து, தமது சிஷ்யர்களை யெல்லாம் வெகு தூரத்திலே போகச் சொல்லிவிட்டு, ஸ்ரீ பகவானுடைய சந்நிதானத்திலே நின்றுகொண்டு "ஸ்ரீ பகவத்கீதையின் தாத்பர்யத்தை என் சிற்றறிவுக் கெட்டிய வரையில் உரைக்கின்றேன்" என்று சொல்லி, தாம் இயற்றியதை வாசித்தார்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தி இதைக் கேட்டு மகிழ்ந்து ஸ்ரீ மத்வரை நோக்கி, "ஆசார்யரே! ஸ்ரீ பகவத்கீதையின் கருத்து முழுவதையும் எடுத்துரைக்கும்படியான வல்லமை தங்களுக்கு இருந்தும் தாங்கள் அப்படிச் செய்யவில்லை. ஆதலால், இந்தப் பாஷ்யத்தின் முதல் சுலோகத்திலே 'என்னால் இயன்ற அளவு சொல்வேன்' என்று பொருள்படுகின்ற வாக்கியத்தை எடுத்துவிட்டு, சுருக்கமாகச் சொல்வேன்" என்று பொருள்படும் வாக்கியத்தைச் சேர்ப்பீராக!' என்று உத்தரவு செய்தார்.

ஆசார்யர் தமது பாஷ்யத்தை ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் முன்னர் அரங்கேற்றிக்கொண் டிருக்கையில், இராக்கால மானபடியினலே அவருடைய சிஷ்யர்கள் அனைவரும் உறங்கிக்கொண்டிருப்பார்கள். ஆனால், ஸ்ரீமந் நாராயணன் வந்து பூமியைத் தட்டிக்கொண்டு ஆசார்யரை எழுப்பி "இன்னும் சொல்லும்! சொல்லும்!" என்று கட்டளையிடுகின்ற சப்தமானது அவர்களுக்கு நன்றாகக் கேட்கும்; அவர்கள் ஆச்சர்ய மடைந்தார்கள். ஆசார்யருக்கே இது ஆச்சர்யமா யிருந்தது. ஆதலால், அவர் பொழுது விடிந்ததும் தாம் இயற்றிய பாஷ்யப் பொருளைத் தமது சிஷ்யர்களுக்குப் போதித்தார்.

ஆசார்யர் பின்னர்க் கடுந் தவம் புரிய ஆரம்பித்தார்; அருணோதயத்திலே எழுந்திருந்து கங்கையிலே ஸ்நாநம் செய்து, ஆநந்தமடம் என்ற க்ஷேத்திரத்தினுள்ளே சென்று, ஸ்ரீ பகவந் நாமத்தை ஜபித்துக்கொண் டிருப்பார்; அல்லது, ஏதேனும் தனித்த பாறைகளிலே போய் உட்கார்ந்து ஸ்ரீ பகவத் தியானம் செய்துகொண் டிருப்பார்; ஸ்ரீ பகவந் நாமோச்சாரண சத்தத்தைத் தவிர, வேறு பேச்சுப் பேசுவதில்லை; மௌன விரதம் அநுஷ்டித்தார்; ஆசமன தீர்த்தம் ஒன்றே அவருக்கு ஆகாரமா யிருந்தது. இவ்விதமாக ஆசார்யர் அதிக கடோமான தவம் செய்து வர, ஸ்ரீ வேதவியாசர் ஆசார்யரிடத்துக் கருணை கூர்ந்தவராய் ஒரு நாள் இரவு ஆசார்யர் முன்னே தோன்றி, இன்னும் வெகுதூரம் வடக்கே, மனுஷ்ய சஞ்சாரமே யில்லாத

தம்முடைய ஆச்ரமத்துக்கு வருமாறு ஆசார்யரை ஆக்ஞாபித்துவிட்டுச் சென்றார்.''

பொழுது விடிந்தது; ஆசார்யர் ஸ்ரீவியாசாச்ரமம் செல்லப் புறப்பட்டு, இது சிஷ்யர்களுக்குத் தெரியுமாறு, இப்பொழுது மௌனவிரத மநுஷ்டித்து வந்ததினாலே, எழுதிக் காட்டினார்:—

அந்த எழுத்து என்னவென்றால்:—''இந்த க்ஷேத்திரத்தைப் போன்று பாபத்தைப் போக்கடிக்கும் திவ்ய க்ஷேத்திரமும், இந்தக் கங்கையைப் போன்ற புண்ய நதியும், ஸ்ரீமந் நாராயணனைப் போன்ற தெய்வமும், நம்முடைய சொல்லைப் போன்ற ஹிதோபதேசமும் வேறொன்று கிடையாது. நான் ஸ்ரீ வேதவியாசரைத் தர்சிப்பதற்காக அவருடைய ஆச்ரமத்துக்குச் செல்கின்றேன். நான் திரும்பி வருவேனோ வரமாட்டேனோ அது அந்தப் பகவானுக்குத்தான் தெரியும். உங்களுக்கு நன்மை பலித்திடுக.''

இவ்வாறு எழுதிக் கொடுத்துவிட்டு ஆசார்யர் வியாசாச்ரமம் நோக்கி நடந்தார். ''ஆசார்யரை விட்டுப் பிரிய வேண்டியதா யிருக்கின்றதே'' என்று சிஷ்யர்கள் கலங்கி நின்றார்க ளாயினும், அவருடைய இஷ்டத்துக்கு விருத்தம் செய்யப் பயந்து அவர்கள் ஒன்றும் பேசவில்லை.

ஆனால், ஸ்ரீ சத்திய தீர்த்தர் மாத்திரம் ஆசார்யரை விட்டுப் பிரிந்திருக்க மனம் வராதவராய் ஆசார்யரைப் பின்தொடர்ந்து சென்றார். இவர் ஆசார்யரிடத்திலே ஐத

ரேய உபநிஷத்தை மூன்றுதரம் பாடம் கேட்டிருந்தார்; ஆதலால், இவருக்கு ஆசார்யரிடத்திலே ஒரு அசாதாரண மான பக்தி ஏற்பட்டிருந்தது. ஆசார்யரோ ஒன்றுக் கொன்று வெகு தூரத்தி லிருக்கிற பாறைகளை அலக்ஷிய மாகக் குதித்துத் தாண்டி வெகு வேகமாகப் போனார்; சத்திய தீர்த்தரால் அவ்வளவு வேகமாகப் போக முடிய வில்லை; ஆயினும், ஆசார்யரிடத்துள்ள அன்பின் மிகுதி யால் கொஞ்ச தூரம் ஓடினார். சத்திய தீர்த்தர் இனிமேல் ஓடினால் களைத்து விழுந்துவிடுவார்போ லிருந்தது; சூர்ய னும் அஸ்தமன மாய்விட்டது; ஆசார்யரைப் பின்னுக்கு ஏதோ ஒரு பற்றுதல் இழுப்பதுபோல ஆசார்யருக்குத் தோன்றிற்று. ஆசார்யர் திரும்பிப் பார்த்தார்; சத்திய தீர்த்தரைக் கண்டார்; திரும்பிப் போகும்படி சைகை காட்டினார்.

ஸ்ரீ சத்யதீர்த்தர் ஸ்ரீ ஆநந்த தீர்த்தாசார்யரைப் பின் தொடர்ந்து செல்ல முடியாமல் தவித்துத் தத்தளிக்க, ஸ்ரீ ஆநந்த தீர்த்தருக்குத் தம்மை ஏதோ ஒரு பந்த சக்தி பின் னுக்கு இழுப்பதுபோலத் தோன்றிற்று. ஆகையால், ஸ்ரீ ஆநந்த தீர்த்தர் திரும்பிப் பார்த்தார். தவிர, சூர்யன் அஸ்த மனமாய்விட்டான்; பட்டப் பகலிலேயே ஸ்ரீ ஆநந்த தீர்த்த ரைப் பின் தொடர்ந்து செல்ல முடியாத ஸ்ரீ சத்யதீர்த்தர் இரவு சூழ்ந்துவிட்டால் எங்ஙனம் செல்ல முடியும்? ஸ்ரீ மாத்வர் திரும்பிப் பார்த்தார்; சற்றுத் தூரத்திலே ஸ்ரீசத்ய தீர்த்தர் களைத்துச் சோர்ந்து தள்ளாடித் தள்ளாடிப் பின்

பற்றி வரக் கண்டார்; திரும்பிப் போகும்படி ஸ்ரீ ஆநந்த தீர்த்தராகிய ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ சத்யதீர்த்தருக்குச் சைகை செய்து கையைக் காட்டினர். அப்பொழுது ஒரு பெருங் காற்று அடித்து ஸ்ரீ சத்யதீர்த்தரை வந்த வழியே திரும்பிச் செல்லும்படி தள்ளியதுபோலத் தோன்றிற்று. ஏதோ ஒரு சக்தி ஸ்ரீ சத்தியதீர்த்தரைப் பின்வாங்கும் படிச்செய்தது; ஸ்ரீசத்யதீர்த்தர் பேசாமல் திரும்பிப் புறப் பட, சீக்கிரத்திலே ஆநந்தமடம் வந்து சேர்ந்தார். மற்ற சிஷ்யர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு ஆசார்யருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரிக்க, அவர் "நமது ஆசார்யர் அவதார புருஷர் என்பதில் சந்தேகமே யில்லை; அவ ருடைய வேகத்தைப் பின்பற்றிச் செல்ல எவரால் முடி யும்? 'வேகத்திலே உயர்ந்தன வாயுவேகம், மனோவேகம்' என்று சொல்வார்கள்; ஆனல், இவருடைய வேகமோ இவை யிரண்டினும் முற்பட்டதா யிருக்கின்றது; என்ன தைர்யம்! என்ன ஓட்டம்! என்ன நடை! பாறைக்குப் பாறை எப்படித் தாண்டுகிறார்! சற்றும் பய மில்லை.

ஆசார்யருடைய கிருபை யில்லாவிட்டால் நான் இப் பொழுது திரும்பியே வந்திருக்க முடியாது; நான் திரும் பிப் போகுமாறு எனக்குத் தமது கையினுல் சைகை காட்டி ஆக்ஞை செய்தார்; அக் கையிலிருந்து ஒரு பெருங் காற்று, ஒரு அமாநுஷ்ய சக்தி புறப்பட்டு என்னை இவ்வளவு பந் தோபஸ்தாக இவ்வளவு சீக்கிரத்திலே இங்கே கொண்டு வந்துவிட்டது. ஆசார்யருடைய அந்தக் கிருபை யில்லாவிட்

டால், நான் இன்னும் எங்குத் திண்டாடிக்கொண்டிருப்பேனோ? இந்த இருண்ட இரவிலே எனக்கு வழி எப்படித் தெரியப்போகின்றது?'' என்று கூறினார். இதைக் கேட்ட சிஷ்யர்களனைவரும் ஆச்சர்யமடைந்து, ஸ்ரீபகவானுடைய குணாதிசயங்களைக் கொண்டாடினார்கள்.

அங்கே ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ சத்யதீர்த்தர் போன பிறகு, எவ்வித பந்தமுமற்ற இளஞ் சிங்கம்போல, பாறைக்குப் பாறை அதிவேகமாக, ஆநந்த ஹிருதயத்துடனே தாவி, அம்மலைக் காடுகளுக்குள்ளே அதிவேகமாகச் சென்றார். அவர் சீக்கிரத்திலே, சிறிதும் சிரமமின்றி ஹிமவத்கிரியிலே யுள்ள பதரிசிகர மடைந்து, அங்குக் கொஞ்ச நேரம் இளைப்பாறிக்கொண்டு, ஸ்ரீ வியாச பகவானை ஸ்மரித்துத் தியானித்தார்; தமது இறந்தகால சம்பவங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகத்துக்குக் கொண்டுவந்து, கடைசியாகத் தமது அபீஷ்டம் நிறைவேறும்படி கிருபை செய்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை வந்தித்தார். தாம் பகவானுடைய சந்நிதானத்திலே நிற்பது போலவும், ஸ்ரீ வியாசபகவானுக்கெதிர் நின்று அவருடைய அநுக்கிரகம் பெறுவது போலவும் பாவித்துக்கொண்டு, உல்லாசமான ஹிருதயத்தை யுடையவராகி, அதிரம்ய காக்ஷிகள் நிறைந்த ஒரு ஆரண்யத்தினூடே சென்றார். அது ஸ்ரீ வைகுந்தமோ என்னும்படி அவ்வளவு அழகாய், அனைவருடைய பார்வையையும் கவர்வதாய், சிருஷ்டியில் வேறெங்கும் காணப்படாத ஆநந்தகரமான காக்ஷிகளை

யுடையதா யிருந்தது. ஆங்காங்குச் செழித்துக் கொழுத்து அடர்ந்து படர்ந்து வளர்ந்தோங்கி யிருக்கும் பிரமாண்டமான விருக்ஷங்கள், அவற்றை யாதாரமாகக் கொண்டு தத்தித் தத்திப் பிடித்துப் பின்னி யெங்கும் பரந்து தொங்கிக் கொண்டிருக்கும் செடி கொடிகள், இவற்றில் பார்ப்பவர் கண்களைப் பறிக்கத் தக்கனவாய், ஈஸ்வர சிருஷ்டியின் மகிமைகளை எடுத்தெடுத்துப் பறையடிக்கின்றன போன்று எங்கெங்கும் சுகந்தங்களை இன்பமாக வீசி எல்லோருடைய கண்களுக்கும் காதுகளுக்கும் அத்தியற்புதமாய் அநேக வர்ணங்களுடன் விளங்கும் புஷ்ப ஜாதிகள், இவற்றை யெல்லாம் இருப்பிடமாகக் கொண்டு யதேச்சையாகத் திரிகின்றனவும் பன்னிறமும் பலவித குரல்களும் வாய்ந்தவையாகிய பக்ஷி ஜாதிகள், ஆங்காங்கே துள்ளித் துள்ளிக் குதிக்கும் மானினங்கள், கொப்புக்குக் கொப்புத் தாவிக் கொண்டாடனடிக்கின்ற குரங்கு வகைகள், இன்னும் அநேக விதங்களான மிருகங்கள் இவை யெல்லாம் ஸ்ரீ மாத்வருடைய மனத்தைக் கவர்ந்தன; அவருடைய மனமானது இவற்றிலே கரைந்தது; அவர் மெய் மறந்து ஆநந்தத்தினால் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஸ்ரீ வியாசாச்ரமம் நோக்கி நடந்தார்.

சற்றுத் தூரத்திலே ஸ்ரீ வியாச பகவான் ரிஷிகுழாங்கள் தம்மைச் சூழ்ந்திருக்க, அவர்களுக்கு சாக்ஷாத் ஸ்ரீ பகவானுடைய அகண்ட கல்யாண குணங்கள் அநந்தத்திலே ஒன்றை யெடுத்து உபதேசித்துக்கொண்டிருப்பதை

ஸ்ரீ மாத்வர் கண்டார். ஸ்ரீ வியாசருடைய தேஜஸிலிருந்து பேரொளி யொன்று எங்கும் வீசிக்கொண்டிருந்ததினாலே, அவ் வொளியின் உதவியால் ஸ்ரீ மாத்வர் அந்தகாரத்தைத் தவிர்த்துவிட்டு, சாக்ஷாத் ஸ்ரீவியாசருடைய சந்நிதிக்குச் சென்றார்; வந்துவிட்டார்; வேத வியாசருடைய சந்நிதானத்திலே நின்றார். சுருதி, ஸ்மிருதி, புராண இதிகாச புராணங்கட்கெல்லாம் பிதாவாகிய ஸ்ரீ வியாச பகவானுக்கு முன் நேருக்கு நேர் நின்றார். ஆ! ஆ! என்ன ஆநந்தம்! என்ன சந்தோஷம்! கடைசியாகத் தமது அபீஷ்ட தேவதையை நேரே கண்டுவிட்டார்; குல தேவதையை நேரே தர்சித்தார்; கோரிக்கை ஈடேறிவிட்டது. தமது கோரிக்கை நிறைவேறும்படித் தமக்குச் சகாயமாயிருந்த பகவத்கிருபையை நினைந்து நினைந்து அகமகிழ்ந்து, ஸ்ரீ வியாச பகவானுடைய பாதார விந்தங்களிலே அடியற்ற பனைமரம் போல சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். தம்மையப்படியே ஸ்ரீ வியாசபகவானிடத்தில் சமர்ப்பித்துக் கொண்டார்.

சாக்ஷாத் பவகத் சொரூபியாகிய ஸ்ரீ வியாசபகவானுக்கு ஸ்ரீ மாத்வருடைய அளவற்ற பக்தியின் உண்மை பிரகாசித்தது. அவர், கீழே கட்டைபோல விழுந்து கிடக்கும் ஸ்ரீ மாத்வரைத் தூக்கி நிறுத்தி அபயாஸ்தம் அளித்து, சேர்த்து அணைத்துக் கட்டிக்கொண்டார்; ஸ்ரீ வியாச பகவானுடைய சரீரமானது ஸ்ரீ மாத்வருடைய சரீரத்தை ஸ்பர்சித்தவுடனே, ஸ்ரீ மாத்வருடைய சரீரமானது புள

காங்கித மடைந்தது; ரோமம் சிலிர்த்தது. இப்பொழுது தான் ஸ்ரீவியாசபகவானுடைய பாதாரவிந்தங்களிலே மனத்தைச் செலுத்தி அகமுகப்படுத்தியிருந்த ஸ்ரீ மாத்வர் அவருடைய திவ்ய சொரூபத்தைக் கண்டு களிப்பதற்காகக் கண்களைத் திறந்தார்; உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஸ்ரீ வியாசபகவானுடைய அங்கங்களை யெல்லாம் ஸ்ரீ மாத்வர் கூர்ந்து கூர்ந்து பார்த்து, ஒவ்வொன்றை நினைக்கும்பொழுதும் அதனதன் சம்பந்தமான லக்ஷணங்களைத் தியானித்தார்.

ஸ்ரீ மாத்வர் வெகு நேரம் இம்மாதிரி மெய்மறந்து இருந்த பின்னர், அவருடைய மனமானது யதாஸ்தான மடையவே, ஸ்ரீ வியாசபகவானும் மற்ற மஹரிஷிகளும் அவருக்கு நல்வரவு கூறி யுபசரித்தார்கள்; ஸ்ரீ மாத்வர் அந்யோந்யம் அன்பால் கட்டுண்டவராகி, வெகு சீக்கிரத்திலே அவர்களுள் தாமும் ஒருவர் போன்றே ஆய்விட்டார்; சின்னாட்களாக, ஸ்ரீ மாத்வரே வேதவியாசருடைய சிஷ்யர்களுள் முதல்வ ராகிவிட்டார்.

பகவான் ஸ்ரீவேதவியாசர் அவருக்கு ஞானோபதேசஞ் செய்து ஞானசாதனங்களை யநுஷ்டிக்கும்படி செய்தார். ஞானாப்பியாசங்களிலே, பக்தி யநுஷ்டானங்களிலே ஸ்ரீ மாத்வர் ஆச்சர்யகரமாக அபிவிருத்தி யடைவதைக் கண்ட ஸ்ரீவேதவியாசருடைய மற்றசிஷ்யர்கள் பிரமித்து வியந்தார்கள். ஸ்ரீ வேதவியாசருக்கு ஸ்ரீ மாத்வரிடத்தில் ஏற்பட்ட சிஷ்ய வாத்சல்யமும், ஸ்ரீமாத்வருக்கு ஸ்ரீவேதவியாசரிடத்

தில் ஏற்பட்ட குருபக்தியும் இவ்வளவென்று அளவிட்டுக் கூற எவரால் முடியும்? இந்தக் குரு சிஷ்யர்களுக்குள்ளே அந்யோந்யம் ஏற்பட்ட அன்பையும் ஐக்கியத்தையும் கண்டு, ஸ்ரீ வியாசருடைய மற்றச் சிஷ்யர்கள் வியந்தார்கள்; வெகு சீக்கிரத்திலே ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ வியாசபகவானிடத்திலே தாம் கற்றுக்கொள்ளவேண்டி பாக்கியாகவிருந்த எல்லா வற்றையும் கற்றுக்கொண்டுவிட்டார்.

இவ்வளவு சிரேஷ்டமான மகாத்மாக்களின் சங்கத்தை யும், இவ்வளவு உத்கிருஷ்டமான ஆநந்தத்தையும் அடை யும்படியான பாக்கியம் பெற்ற வேறெவருக்குப் பிரபஞ்ச பிரக்ஞை யுண்டாகும்? அப்படியே பிரபஞ்ச ஞாபகம் உண்டானாலும், அவர் மீண்டும் பிரபஞ்ச வாழ்க்கையை விரும்பித் திரும்பி வருவரோ? ஆனால், நமது ஆசார்யர் விஷயத்திலே, அவர் உலகத்தை உய்விக்கும்பொருட்டு உற்பவித்த உத்தம புருஷரல்லரா? உலகோத்தாரணம் ஒன்றையே கருதி நமது ஆசார்யர் அவதரித்தாராதலின், அவருக்கு உலக ஞாபக முண்டாயிற்று; அவர் தமது ஸ்வயநல விருப்பங்களையும், ஆநந்தத்தையும் ஒருபுறமாக வைத்துவிட்டு ஹிமோத்கிரியிலிருந்து கீழே யிறங்கித் தமது சிஷ்யர்களிடம் வருவதற்கு ஆயத்தமானார்; ஸ்ரீவேத வியாசரிடத்திலே சென்று "ஸ்வாமி! பகவன்! நான் உல குக்கு வந்த கார்யம் இன்னும் முடிவு பெறவில்லை; இப் பொழுது தேவரீருடைய கிருபையும் ஆசீர் வசனங்களும் கிடைத்துவிட்டதினால், இனிமேல் சீக்கிரம் ஜயகரமாக

முடிந்துவிடும். ஆகையால், நான் கீழே செல்வதற்கு அநுமதி யளித்தல் வேண்டும்'' என்று கூறி நின்றார். அப்பொழுது ப்ராஹ்ம சூத்திரங்களைப்பற்றிப் பேச்சு வந்தது. ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமாநுஜரும் அவரவர்களுடைய புத்திகட்குத் தோன்றியவாறு உரை கூறியிருக்கின்றனர்; இந்தச் சூத்திரங்களின் ஆசிரியராகிய ஸ்ரீ வேதவியாசருடைய உண்மைக் கருத்துக்களை உள்ளபடி யுரைக்காமல், இவர்கள் சூத்திரங்களை யிழுத்தும் திருத்தியும் பலவிதமாகச் சித்ரவதைகள் செய்து, தங்கள் தங்கள் சொந்தக் கொள்கைகளை ஸ்தாபித் திருக்கின்றார்கள். ஸ்ரீ சங்கரர் சில சூத்திரங்கள் தமது கொள்கைக்கு ஒத்து வராதபொழுது ''அவை தப்பு'' என்று கூறி, அவற்றைத் திருத்த முயற்சித்திருக்கின்றார். ''ஸ்ரீ சங்கரர் இவ் விஷயமாக ஸ்ரீ வேதவியாசருடனேயே பெருந் தர்க்க மொன்று செய்து வெற்றி பெற்றார்'' என்று ஸ்ரீ சங்கருடைய சிஷ்யர்கள் சொல்லிக்கொள்கின்றார்கள். ப்ராஹ்ம சூத்திரங்களை ஸ்ரீ சங்கரர் சரியானபடி ஒப்புக்கொள்ளவில்லை யென்பதற்கும், ஆகையால், அவருடைய பாஷ்யமானது சூத்திரங்கட்குச் சரியான பாஷ்யமாகா தென்பதற்கும் இதுவே நிதர்சனமாம். ஆகையால், ஸ்ரீ வேதவியாசர் ஸ்ரீ மாத்வரை அவர் தம்மிடமிருந்து கேட்டுள்ளபடி பிரஹ்ம சூத்திரங்கட்குப் பாஷ்யம் எழுதுமாறு கேட்டுக்கொண்டார்; ஸ்ரீ மாத்வரும் ''அது உலகோபகாரமா யிருக்கும்'' என்றும், ''அதனால் பாஷண்டர்கள் எழுதியுள்ள பாஷ்யங்கள் பயனற்றனவாய்விடும்'' என்றும் கருதி, ''அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக்

கொண்டார்; அங்கே, ஸ்ரீ பதரிகாச்ரமத்திலே எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந் நாராயணரும் பிரஹ்ம ஸூத்திரங்கட்குப் பாஷ்யம் எழுதுமாறு ஸ்ரீ மாத்வரைக் கேட்டுக்கொண்டார். ஸ்ரீ மாத்வருக்கு ஏற்கனவே யுள்ள பரோபகார எண்ணம் ஒன்று; தமது குருவாகிய ஸ்ரீ வேதவியாசருடைய ஆக்ஞை யொன்று; ஸாக்ஷாத் பகவான் ஸ்ரீமந் நாராயணருடைய ஆக்ஞையு மொன்று. ஆகவே, ஸ்ரீ மாத்வர் ஒரு பாஷ்யம் எழுதுவதாக நிச்சயித்துக்கொண்டு, பகவான் ஸ்ரீ வேத வியாசரிடத்திலே விடைபெற்றுத் திரும்பினர்.

---

9-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வர் ஸ்வதேசம் வந்து சேர்தல்

ஸ்ரீ மாத்வர் தமது சிஷ்யர்கள் தங்கி யிருந்த ஆநந்த மடம் வந்து சேர்வதற்குள்ளாகத் தமது சூத்ர பாஷ்யத்தை யெழுதி முடித்துவிட்டார். இந்தச் சூத்திர பாஷ்யமானது எவராலும் எத்தகைய நியாயம் கூறியும் அசைக்க முடியாதது. ஆசார்யருடைய கொள்கைகளை ஆதரிப்பதற்கு அநேக சுருதிகளி லிருந்து தகுந்த மேற்கோற்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீசங்கருடையதைப் போன்று, ஸ்ரீ ராமாநுஜருடையதைப்போன்று பெரிய கிரந்தமன்று; ஆனல், சுருதி, ஸ்மிருதி, புராண, இதிகாசாதிகளிலிருந்தெல்லாம் கசக்கிப் பிழிந்து வடிகட்டிய வேதாந்த சாரமாகும். ஸ்ரீ மாத்வர் பிரகிருதியினுள்ளே நுழைந்து பிரகிருதியினுடனே கலந்திருந்து, பிரகிருதியிலே அருள் பெற்று, பிரகிருதியிலிருந்து வெளி வந்தபொழுது இயற்கையா யென்றுமுள்ள உண்மைகளைச் செயற்கையழுக்குச் சிறிதுமின்றிப் பாஷ்ய ரூபமாக வெளியிட்டார். ஹிமவத்கிரியிலிருந்து அவர் கீழே யிறங்கியபொழுது, அவருடைய முகத்திலே ஒரு திவ்ய தேஜஸ் உண்டாயிருந்தது; அவருடைய வித்துவத்துக்கு நிகரான வித்வத்தையுடையவர்க ளென்று எவரையும் சொல்ல முடியாது என்னும்படி

அவருடைய கண்கள் அறிவைக் கக்கின; அவர் அறியாத கலைகளோ சாஸ்திரங்களோ ஒன்று மில்லை.

இதற்கு முன்னதாகவே, பிரஹ்மசூத்திரங்கட்கு இருபத்தொரு பாஷ்யங்கள் உண்டு; இவை யெல்லாம் அவ்வவற்றின் ஆசிரியர்களின் சொந்தக் கொள்கைகளை ஸ்தாபிப்பனவா யிருந்தனவே யொழிய, அவற்றின் ஆசிரியராகிய ஸ்ரீ வியாசபகவானுடைய கொள்கைகளை ஸ்தாபிப்பனவா யில்லை. முன்னிருந்த பாஷ்யங்கள் பின் வருவனவாம்:—

1. ஸ்ரீ பாரதி விஜயம்
2. ,, சச்சிதாநந்தம்
3. ,, பிரஹ்ம கோஷம்
4. ,, சதாநந்த பாஷ்யம்
5. ,, உத்வர்த்த பாஷ்யம்
6. ,, விஜய பாஷ்யம்
7. ,, ருத்ரபட்ட பாஷ்யம்
8. ,, வாமன பாஷ்யம்
9. ,, யாதவப்பிரகாச பாஷ்யம்
10. ,, ராமாநுஜ பாஷ்யம்
11. ,, பாதிருபிரபஞ்ச பாஷ்யம்
12. ஸ்ரீ திரவிட பாஷ்யம்
13. ,, பிரஹ்மதத்தா பாஷ்யம்
14. ,, பாஸ்கர பாஷ்யம்
15. ,, பிசாச பாஷ்யம்
16. ,, விருத்திகாரக பாஷ்யம்
17. ,, விஜயபட்ட பாஷ்யம்
18. ,, விஷ்ணு க்ராந்தம்
19. ,, வாதீந்திர பாஷ்யம்
20. ,, மாதவதாசக பாஷ்யம்

21. ஸ்ரீ சங்கர பாஷ்யம்

ஸ்ரீ மாத்வர் இத்தனைப் பாஷ்யங்களிலும் கூறப்பட்டுள்ள கொள்கைகளை யெல்லாம் நிராகரித்து, நிஷ்பட்சபாதமாகச் சற்றும் தயைதாக்ஷிண்யமின்றி அவற்றைத் துண்டு

துண்டாகக் கண்டித்தெறிந்து துவைதமதத்தை ஸ்தாபனம் செய்தார்.

'அந்த பாஷ்யத்திலே ஓர் எழுத்து எழுதினாலும் கங்காதீரத்திலே க்ஷேத்திரம் கட்டுவித்தால் எவ்வளவு பலனுண்டோ அதனிலும் அதிக பலன் உண்டு' என்று திடமாய் நம்பி, மகா பக்தராகிய ஸ்ரீசத்திய தீர்த்தர் ஸ்ரீ மாத்வ பாஷ்யம் முழுதையும் முதலில் எழுதினார்.

ஸ்ரீ மாத்வரும் மற்றவர்களுமாக ஸ்வதேசம் நோக்கி யாத்திரை செய்கையில் வழியிலேயே இந்தப் பாஷ்யத்துக்கு அநேக பிரதிகள் எழுதப்பட்டன; ஒரு பிரதி ஸ்ரீ மாத்வருடைய குருவாகிய ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும், இன்னொரு பிரதி ஜேஷ்ட யதிக்கும் முன்னதாகவே அனுப்பப்பட்டன. ஸ்ரீ மாத்வர் தமது திரும்புகால் யாத்திரையில் கீழ்ப்பாதை பிடித்து, கஞ்சம், கோதாவிரி மார்க்கமாக வந்தாரென்று தோன்றுகின்றது. அவர் சென்ற இடமெல்லாம், ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவரைச் சூழ்ந்து அவருக்கு ஈச்வரோபசாரம் செய்தார்கள்; அவரைக் கண்டவுடனேயே 'அவர் அவதார புருஷர்' என்று அனைவரும் நம்பும்படியாக அவரிடத்திலிருந்து ஒரு சக்தி புறப்பட்டு, அனைவரையும் வசீகரித்துக்கொண் டிருந்தது. அவர் ஜீவகாருண்ய சொரூபியாய், எவரையும் வெறுக்காமல் எல்லோருக்கும் இதோபதேசம் செய்துகொண் டிருந்தார்; எவர் மரியாதை செய்யினும், அம் மரியாதை எத்தகையதாயினும், அவர் அன்புடனே அதை அங்கீகரித்துக்கொண்டார். வருகிற வழி

யிலே ஆசார்யரைப் பிக்ஷைக்கு அழைத்து வற்புறுத்தி வேண்டிக்கொள்ளாதவர்கள் கிடையா. இவர் எல்லோ ருடைய பிக்ஷைகளையும் ஏற்றுக்கொள்வது என்றிருந் தால், இவர் சீக்கிரம் சுதேசம் திரும்பி வர முடியாது. ஆனால், எவருடைய வேண்டுகோளையும் மறுப்பதற்கும் ஆசார்யருக்கு மனம் இல்லை. ஆகையால், ஒரே சமயத்தில் அவர் நான்கு ஐந்து பேர்களுடைய வேண்டுகோட்கு இணங்கிவிடுவார்; ஒருவருடைய பிக்ஷைக்குப் பின் இன் னொருவருடைய பிக்ஷையாக இத்தனைப் பெயர்களுடைய பிக்ஷைகளையும் ஒரே சமயத்தில் ஏற்று உண்டு விடுவார். ஒரு சமயத்தில் அக்கினிசர்மர் என்பவரும் மற்றவர்க ளும் அவரைப் பிக்ஷைக்கு வேண்டிக்கொண்டபொழுது, அவர் அவ் வூரிலே அநாவசியமாக ஐந்து ஆறு நாட்கள் இருக்க மன மில்லாது, எல்லோருடைய பிக்ஷைகளையும் ஒரே நாளில் ஏற்று உண்டார் என்று சொல்லப்படுகிறது.

இப்பொழுது ஸ்ரீ மாத்வர் கீழ்த் திசையின் வழியாகத் தெற்கு நோக்கிப் புறப்பட்டுக் கஞ்சம் வந்ததினால், 'வங் காள தேசத்தைக் கடந்துதான் வந்திருக்கவேண்டும்' என்று ஊகிக்கவேண்டியதா யிருக்கிறது. அக் காலத்திலே வங்கா ளத்தில் நவத்வீப நகரமானது வித்வத்திலே சிறந்த ஒரு நகரமா யிருந்தது; பரத கண்டத்தின் நாலா பாகங்களி லிருந்தும் வித்தியார்த்திகள் பலர் இங்கு வந்து சூழ்ந்து, இதற்குப் பெயரும் பெருமையும் அளித்தார்கள்; நியாயம், வியாகரணம் முதலிய சகல சாஸ்திரங்களும் இங்கே சின்ன

பின்னப் படுத்தப்பட்டன. இதுதான் ஸ்ரீ கிருஷ்ண சைதந்யருடைய ஜனன ஸ்தலம். ''ஸ்ரீ மாத்வருடைய கொள்கைகளை யநுசரித்தே ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர் வங்காளத்திலே பக்தியைப் பெருக்கி ஊட்டினார்'' என்றும் ஸ்வாமி விவேகாநந்தர் முதலிய பெரியோர் பலர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார்கள். ஸ்ரீ கிருஷ்ண சைதந்யருடைய காலமானது மத்வ பரம்பரையிலே வந்த ஸ்ரீ வியாசராய ஸ்வாமிகளுடைய காலமாம்; இந்த ஸ்ரீ வியாசராய ஸ்வாமிகள் நியாயாமிருதம், தர்க்க தாண்டவம் முதலிய நூல்களை யியற்றி, ஸ்ரீ மாத்வ மதத்தை வேரூன்றச் செய்தார். ஆகையால், ஸ்ரீ மாத்வர் நவத்வீபத்துக்கும் சென்றுதான் பின்னர்க் கோதாவிரிக்குப் போயிருக்கலாமென்று நாம் நன்றாக ஊகிக்கலாம்.

ஸ்ரீ மாத்வர் வழியிலே யிருந்த அநேக தேசங்களைக் கடந்து, கோதாவிரி தீரத்திலே வந்து சேர்ந்தபொழுது, அங்கே மகா வித்துவான்களான பிராஹ்மணர்கள் அநேகர் ஸ்ரீ மாத்வரிடம் வாது செய்ய ஆரம்பித்தார்கள்; ஸ்ரீ மாத்வர் பதினெட்டு வேத சாகைகளையும் அவர்கட்கு முன்பாக உரைத்து, தமது சித்தாந்தப்படி அவற்றுக்கெல்லாம் பொருள் கூறி; பாட்டம், பிரபாகம், வைசேஷிகம், நையாயிகம், பௌத்தம், சார்வாகம் ஆகிய ஷண் மதங்களையும் கண்டித்து, தம்முடன் வாது செய்ய வந்த பிராஹ்மணர்களுடைய வாயடங்கும்படி செய்தார். அவர்கள் அனைவரும் ஸ்ரீ மாத்வருடைய வித்வத்தையும் நுண்ணுணர்வையும்

கண்டு, அடங்கா மகிழ்ச்சி கொண்டவர்களாய், "ஸ்வாமி! தேவரீர் அறியாத தொன்றில்லை; தேவரீர் சர்வஞ்ஞர்" என்று வாழ்த்தி ஸ்தோத்திரம் செய்தார்கள்.

இவ்விடத்திலேதான் ஸ்ரீ மாத்வர்: ஸ்ரீ சோபன பட்ட பண்டிதர், ஸ்ரீ சாமி சாஸ்திரி என்னும் இருவரையும் சந்தித்து, அவர்களைச் சிஷ்யர்களாக்கிக்கொண்டு, அவர்களுக்கு பத்மநாப தீர்த்தர், நரஹரி தீர்த்தர் என்று பெயர்களும் அளித்தார். ஸ்ரீநரஹரி தீர்த்தராகிய சாமி சாஸ்திரி கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்தவர்; கஜபதி அரசர்களுடைய மந்திரிகளின் பரம்பரையில் வந்தவர். ஆகையால், ஸ்ரீ மாத்வர் வங்காள தேசத்து வழியாக ஸ்ரீ ஜகந்நாத க்ஷேத்திரம் வந்து, அங்கு ஸ்ரீ கூர்மம், சிம்ஹாசலம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு வந்திருக்கலாமென்று நம்புவதற்கு இடமிருக்கின்றது.

சோபனபட்ட பண்டிதர் இச் சமயத்திலே ஸ்ரீ மாத்வருடைய வித்வத்தையும் சமர்த்துக்களையும் பற்றிக் கேள்விப்பட்டு, 'இவரை ஜெயித்துவிட்டால், என்றென்றும் அழியாப் புகழ் பெறலாம்' என்று கருதி, ஸ்ரீ மாத்வருடனே வாது செய்வதற்கு வந்து சேர்ந்தார். இதுவரையில் ஏக்கமுற்று வாடியிருந்த அத்வைதிகள் அனைவருக்கும் இப்பொழுது கொஞ்சம் உற்சாகம் உண்டாயிற்று. 'அத்வைதரத்தினமாகிய சோபன பட்ட பண்டிதரை வெல்லுதற்கு ஸ்ரீ மாத்வரால் முடியாது' என்று அவர்கள் நினைத்தார்கள். சோபன பட்டர் அநேக அத்வைதிகளும் வித்வான்களும்

தம்மைச் சூழ்ந்து வர, "அத்வைத சிங்கம், சிங்கம் வருகின்றது. ஜாக்கிரதை, ஜாக்கிரதை" என்று கட்டியக்காரன் எச்சரிக்கை கூறிவர, வித்வான்களுக்குரிய சகல விருதுகளுடனும் ஸ்ரீ மாத்வரிடம் வந்து சேர்ந்தார். வாது நடப்பதற்கு வேண்டிய முஸ்தீப்புகளெல்லாம் தயாராயின; நியாய, அந்யாயம் பார்த்துக் கூறுவதற்கு மத்தியஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள்; அந்தப் பிரதேசத்திலுள்ள பண்டித பாமர சாதாரண ஜனங்கள் அனைவரும் சபையிலே வந்து நிறைந்தார்கள். வாது ஆரம்பிக்கப்பட்டது. துவைதத்துக்கும் அத்வைதத்துக்கும் இதற்கு முன்வாது எப்பொழுதும் நடந்ததில்லை. திருவநந்தபுரத்திலே ஸ்ரீ வித்யாசங்கருக்கும் ஸ்ரீ மாத்வருக்கும் நடந்த வாதுகூட இவ்வளவு பலமாக நடந்ததில்லை.

சோபன பட்டர் வெகு நன்றாக வாதாடினார். ஆனால், ஸ்ரீ மாத்வரோ அதற்கு மேல் நன்றாக வாதாடினார்; கடைசியில் ஸ்ரீ மாத்வரே வெற்றி பெற்றார். அத்வைதம் துகள் துகளாக உடைபட்டு ஊதியெறியப்பட்டது. மத்தியஸ்தர்கள் "ஸ்ரீமாத்வரே ஜயித்தார்" என்று சொன்னார்கள். சோபன பட்டருக்கும் ஸ்ரீ மாத்வருடைய மத சித்தாந்தமானது நியாயம் எனவே புலப்பட்டது. தாம் அடைந்த தோல்வியை ஒரு அகௌரதையாகக் கொண்டு ஸ்ரீ மாத்வர்மீது பொறாமை வகிக்காமல், அத்வைத மதத்தை விட்டுவிட்டு, அவர் ஸ்ரீ மாத்வருக்குச் சிஷ்யராகித் துவைதத்தைப் பின்பற்றத் தீர்மானித்தார். ஆரம்பத்தில் அட்டகாசம் செய்ய

வந்த அத்வைதிகள் தங்கள் தங்கள் கைகளை நெறித்தார்கள்; சோபனபட்டரை, அவர் புதிய மதத்திலே புகாமலிருக்கும்படி தடுத்துப் பார்த்தார்கள்; புருஷன் இறந்த மனைவி அழுவதுபோல, அழுது சபித்தார்கள். ஆனால், சோபன பட்டர் உண்மையான மனத்தினராகையால், உடனே துவைத மதத்தைப் பகிரங்கமாக அநுஷ்டிக்க ஆரம்பித்தார். அவ்வருடைய பந்துக்கள் அவரை வெறுத்தார்கள்; பலர் பரிகசித்தார்கள்; பழைய நண்பர்கள் திட்டினார்கள்; உற்றார் உறவினர் அனைவரும் அவரை ஜாதியிலிருந்து நீக்கினார்கள். ஆனால், அவர் இவற்றையெல்லாம் லக்ஷியமே செய்யவில்லை.

சோபனபட்டர் தாம் பூர்வம் செய்திருந்த புண்ணிய வசத்தினாலே, உண்மை தெரிந்து, ஸ்ரீ மாத்வரிடம் சென்று அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாகவிழுந்து, "ஸ்வாமி! நான் இதுகாறும் அத்வைதம் என்ற அஞ்ஞானக் கடலில் விழுந்து திகைத்துக்கொண்டிருந்தேன்; இப்பொழுது தங்களுடைய தர்சனம் உண்டாகவே, எனக்கு உண்மை தெளிந்தது. என்னைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்திக்க, ஸ்ரீமாத்வர் அதிக சந்தோஷமுடையவராய், 'அவர் உண்மையாகவே வணங்கி நிற்கின்றார்' என்று தெரிந்து, அவரைச் சிஷ்யராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு சகல சாஸ்திரங்களையும் துவைத சித்தாந்தப்படி கற்றுக் கொடுத்தார்.

ஆசார்யர் கோதாவிரியி லிருந்தபொழுது, இன்னொருவர், சாமி சாஸ்திரிகள் என்னும் பெயருடையவர், கலிங்க

தேசத்து அரசனுடைய மந்திரியின் குலத்துதித்தவர், மஹா வித்வான், ஆசார்யரிடம் வந்து சேர்ந்தார். இவருக்கு உலக விஷயங்களிலே மனம் அதிகமாகச் செல்லாது, சந்யாசாச்ரமத்திலேயே விருப்புடையவரா யிருந்தார். ஸ்ரீ மாத்வருடைய பெருமையையும் கீர்த்தியையும் பற்றி இவர் நெடுநாட்களாகக் கேள்விப்பட்டுக்கொண்டிருந்தார்; இப்பொழுது "சோபனபட்டர் அத்வைதத்தை விட்டுவிட்டு ஸ்ரீ மாத்வருக்குச் சிஷ்யராய்விட்டார்" என்று கேள்விப்பட்டவுடனே அவருக்கு ஸ்ரீ மாத்வரிடத்திலே மதிப்பும் பக்தியும் மேலிட்டது. இவர் ஸ்ரீ மாத்வரிடம் சென்று தம்மைச் சிஷ்யராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டார். ஆசார்யரும் அவ் வேண்டுகோளுக்கு இணங்கி அவரைச் சிஷ்யராக ஒப்புக்கொண்டு, அவருக்கு நரஹரிதீர்த்தர் என்ற திருநாமமும் அளித்தார்.

இதற்குள்ளே, ஸ்ரீ மாத்வர் தமது சிஷ்யர்களுக்குச் சூத்ர பாஷ்யத்தை யெடுத்து விளக்கி, அவர்களுடைய மனங்களி லிருந்த சந்தேகங்களை யெல்லாம் போக்கிவிட்டார். இந்தச் சூத்ர பாஷ்யத்தை ஸ்ரீ நரஹரிதீர்த்தரும் கேட்டு, தமக்கு அதுவரையிலிருந்த சந்தேகங்க ளெல்லாம் நிவிருத்தி செய்யப் பெற்றவராய், உலக வாழ்க்கையிலே வெறுப்பு மிகுந்து, ஸ்ரீ மாத்வர் கோதாவிரியை நீங்கிப் புறப்பட்டபொழுது, தாமும் சரீரத்தை விடாத சாயை போல் அவரைப் பின்பற்றியிருக்கக் கருதி, கூடவே புறப்பட்டார். ஆனல், ஆசார்யருக்கு அவரை யிட்டுக்கொண்டு

போவதற்கு மனமில்லை. ஆசார்யர் ஸ்ரீ நரஹரிதீர்த்தரை நோக்கி, "அப்பா! நீ இங்கேயே யிருந்து செய்யவேண்டிய கார்யம் சில உண்டு. இவ்விடத்து அரசன் சீக்கிரத்திலே மரிக்கப்போகிறான்; இளவரசனாகிய குழந்தை வயது வந்து பட்டத்துக்கு வருகிறவரையில் இந்தத் தேசத்தை ராஜ்யபாரம் செய்யவேண்டிய பாக்கியம் உனக்குக் கிடைக்கப்போகின்றது. இத் தேசத்து அரசனுடைய அரண்மனையிலே ஸ்ரீ மூலராமருடையவும் ஸ்ரீ சீதையினுடையவும் விக்கிரகங்கள் இருக்கின்றன. அவற்றை நீ சம்பாதித்துக் கொண்டுவந்து கொடுத்தால், எனது பூஜைப் பெட்டியிலே வைத்துப் பூஜிப்பதற்கு எனக்கு அதிக சந்தோஷம் உண்டாகும். ஆகையால், நீ இன்னும் கொஞ்சகாலம் இங்கேயே யிரு" என்றார்.

ஸ்ரீநரஹரிதீர்த்தருக்குத் தமக்கு அபூர்வமாகக் கிடைத்த ஆசார்யரைப் பிரிந்திருக்க மனமில்லை; இன்னும் உலக வாழ்க்கையிலும் இனிமேலும் இருக்க மனமில்லை. ஆனால், ஆசார்யருடைய ஆக்ஞை வேறுவிதமாயிருக்கும்பொழுது, இவர் என்ன செய்வது? ஸ்ரீ மாத்வருடைய உத்தாரப்படியே, ஸ்ரீ நரஹரிதீர்த்தர் கலிங்க நகரத்துக்குத் திரும்பி வந்து சிலநாள் வசித்துவர, அந்தத் தேசத்து அரசன் மரித்துவிட்டான். 'இளவரசாகிய குழந்தையினால் ராஜ்யபாரம் வகிக்க முடியாதே' என்று மந்திரிகளும் ஜனங்களும் மனம் கலங்கிக் கடைசியாக ஸ்ரீ நரஹரிதீர்த்தருடைய வித்துவத்தையும் சமர்த்தையும்பற்றி முன்னமேயே அறிந்திருந்

தார்க ளாதலால், அவரையே அரசாளும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஸ்ரீ நரஹரிதீர்த்தர் நெடுங்காலம் மன்னுயிரைத் தன்னுயிர்போலக் கருதி, தர்மசிந்தையும் தாராள குணமும் உடையவராய், நிஷ்பக்ஷபாதமாய் நியாய பரிபாலனம் செய்து அரசு செலுத்திவந்தார். இவர் "கி. பி. 1281-க்குச் சரியான சாலிவாகன சஹம் 1203-ல் கஞ்சம் ஜில்லாவிலேயுள்ள ஸ்ரீ கூர்மத்திலே ஸ்ரீ கூர்மேஶ்வர க்ஷேத்திரம் ஒன்று கட்டி, அதிலே ஸ்ரீ யோகாநந்த நரஸிம்ஹரைப் பிரதிஷ்டை செய்வித்தார்" என்று சொல்லப்படுகிறது. இந்த க்ஷேத்திரத்திலே கிழக்குப் பக்கத்திலே ஒரு பாறை ஸ்தம்பம் இருக்கின்றது. இதிலே ஸம்ஸ்கிருத சுலோகங்கள் ஒன்பது வரையப்பட்டிருக்கின்றன. இந்தச் சுலோகங்களிலிருந்து ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ புருஷோத்தமதீர்த்தருடைய சிஷ்யரென்றும், ஸ்ரீ நரஹரிதீர்த்தர் ஸ்ரீ மாத்வருடைய சிஷ்யரென்றும், ஸ்ரீ நரஹரிதீர்த்தர் நிஷ்பக்ஷபாதமாக ராஜ்ய பாரம் செய்தாரென்றும், யுத்தத்திலே சபரர்களைத் துரத்தியடித்தாரென்றும், யோகாநந்த நரஸிம்ஹ க்ஷேத்திரம் கட்டிவைத்தாரென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இளவரசாயிருந்த ராஜகுமாரனுக்கு ராஜ்யபாரம் வகிக்கும்படியான வயது வந்துவிட்டது; ஸ்ரீ நரஹரிதீர்த்தர் அவனுக்குப் பட்டங் கட்டி வைத்துவிட்டு, அவனிடமிருந்து அவ் வரண்மனையிலே நெடுநாட்களாகப் பூஜையின்றிக் கிடந்த ஸ்ரீ ராமர் விக்கிரகத்தையும் ஸ்ரீ சீதை விக்

கிரகத்தையும் கேட்டு வாங்கிக்கொண்டார். இவை தாம் இப்பொழுது மத்வ மடங்களிலே மிகவும் பரிசுத்தமாகப் பூஜிக்கப்பட்டுவரும் விக்கிரகங்கள். ஸ்ரீ மாத்வர் பரமபத மடைவதற்கு மூன்று மாதங்களும் 16 நாட்களும் இருந்த பொழுது இவை அவர் கைவசம் வந்தன; அவர் அவற்றைத் தமது சிஷ்யர்கள் வசம் ஒப்புவித்துவிட்டுப் போனார்.

"இந்த விக்கிரகங்கள் ஸ்ரீ ராமர் உலகில் அவதரித்ததற்கு நெடுநாட்களுக்கு முன்னேயே இருந்தன" என்று சொல்லப்படுகின்றது. "இக்ஷ்வாகு ராஜனுடைய அரண்மனையில் இவை பூஜிக்கப்பட்டு வந்தன" என்று சொல்லப்படுகின்றது. ஸ்ரீ ராமச்சந்திரர் அவதரிப்பதற்கு முன்னமேயே தசரதச் சக்கரவர்த்தி இவ் விக்கிரகங்களைப் பூஜித்து வந்திருக்கிறார்; பின்னர், ஸ்ரீ ராமர் எங்கேனும் வெளியே போகும்படி நேர்ந்தபொழுது, ஸீதை இந்த விக்கிரகங்களைத் தமது அந்தப் புரத்திலே கொண்டுபோய்ப் பூஜித்து வந்தாள். பின்னர் அவ் விக்கிரகங்கள் லக்ஷ்மணருடைய அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டன; நெடு நாட்களுக்கு இவை அங்கேயே யிருந்தன.

இப்பொழுது ஒரு விசேஷம் நடந்தது. ஸ்ரீ ராமச்சந்திரர் எம்பெருமானுடைய அவதாரமாகையால், எவரும் எவ்வித குற்றமும் கூற முடியாதபடி ராஜ்யபாரம் செய்து வந்தார். அவருடைய குடிஜனங்கள் அவரைத் தமது சொந்த பிதாவைப்போலவே பாவித்து வந்தார்கள். பிராஹ்மணர் முதல் பறையர் ஈருயுள்ள சகல ஜனங்களும் ஸ்ரீ ராமனை

உயிருக்குயிராக மதித்து வந்தார்கள். ஒரு பிராஹ்மணர், வயது சென்ற கிழவர் 'தினம் ஒருமுறை ஸ்ரீ ராமருடைய முகத்தைத் தர்சனம்செய்துவிட்டுத்தான் ஆகாரம் உண்பது' என்று ஒரு பிரக்ஞை பண்ணிக்கொண் டிருந்தார். இதற் காக அந்தப் பிராஹ்மணர் தினந்தோறும் ஸ்ரீ ராமருடைய கொலுக்கூடத்துக்குச் செல்வார்; அங்கே ஸ்ரீ ராமர் அகப் படாவிட்டால், அவர் எங்கேயிருக்கிறார் என்று விசாரித்துத் தேடித் தர்சனம் செய்வார். ஒருநாள் தர்சனம் கிடைக்கா விட்டால், அன்று அவர் உபவாசம் இருந்துவிடுவார். ஒரு சமயத்திலே ஸ்ரீ ராமர் ஒருவாரம் முழுதும் வெளியே வரவில்லை; கொலுக்கூடத்துக்கும் வரவில்லை. பிராஹ் மணர் தினந்தோறும் கொலுமண்டபம் போய் வந்தார்; ஸ்ரீ ராமரைப் பார்க்க முடியவில்லை. இந்தப் பிராஹ்மணருக்கு ஏக்கமுண்டாய்விட்டது; விசனம் பொங்கிவிட்டது; என்ன செய்வார்? ஒருநாள் பட்டினி கிடந்தார்; இரண்டு நாட்கள் பட்டினி கிடந்தார்; ஒருவார முழுதும் பட்டினி கிடந்தார். இவ்விதமாக எட்டு நாட்கள் கழிந்தன. இந்த எட்டு நாட் களிலும் அவர் ஒரு துளி ஜலம் கூட உட்கொண்டதில்லை; தாம் செய்துகொண்ட சபதத்தினின்றும் தவறுவதினும் உயிர் துறப்பதே மேலெனத் துணிந்தார்.

ஒன்பதாவது நாள் ஸ்ரீராமர் கொலுக்கூடத்துக்குவந்து சிம்ஹாசனத்திலே யுட்கார்ந்து ராஜ்ய கார்யங்களை விசா ரித்தார். இந்தப் பிராஹ்மணர் தள்ளாடித் தள்ளாடி மெல்ல நடந்து சென்று, ஸ்ரீ ராமருடைய சந்நிதானத்திலே போய்

நின்றார்; ஸ்ரீ ராமரைத் தர்சித்ததுதான் தாமதம்; அவரு க்கு உண்டான ஆநந்தத்துக்கு அளவே யில்லை. விருத்தாப் பியதசை, எட்டுநாட்களாகப் பட்டினி கிடந்ததினால் களை ப்பு, ஆநந்தமேலீடு இவையெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த பிராஹ்மணரை வீழ்த்திவிட்டது; பிராஹ்மணர் மூர்ச்சை போய் ஸ்ரீ ராமருக்கெதிரேயே திடுக்கிட்டு விழுந்துவிட் டார். பார்த்தார் ஸ்ரீ ராமர். "இந்த விருத்தாப்பிய பிராஹ் மணன் நமக்கெதிரே வந்து ஏன் விழவேண்டும்? இவனு க்கு ஏதோ குறைகள் உள்ளனபோலும்!' என்று ஸ்ரீ ராமர் யோசனை செய்து, சட்டென்று சிம்ஹாதனத்திலிருந்து கீழே குதித்து, அந்தப் பிராஹ்மணன் விழுந்த இடம் நோக்கி ஓடிச் சென்று, அந்தப் பிராஹ்மணனுக்கு வேண் டிய சைத்தியோபசாரங்கள் புரிந்து மூர்ச்சை தெளியும்படி செய்து, அந்தப் பிராஹ்மணனுக்குள்ள குறைகள் என்ன வென்று கேட்டார். சங்கதி தெரிந்துகொண்டார்.

உடனே ஸ்ரீ ராமர் லக்ஷ்மணரைக் கூப்பிட்டு, அவர் வைத்திருந்த அந்த மூலராம விக்கிரகத்தையும் சீதை விக்கிரகத்தையும் அந்தப் பிராஹ்மணனிடம் கொடுக்கு மாறு ஆக்ஞாபித்து, அந்த பிராஹ்மணனை நோக்கி, "இவற் றைக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு தினந்தோறும் பூஜித்து வாருங்கள்! தங்களுக்கு அதிக வயதாய்விட்டது; இனிமேல் தினந்தோறும் இங்கு வந்து என்னைப் பார்ப்ப பற்குத் தங்களால் முடியாது" என்று சொன்னார். இவ் விதமாக இவ் விக்கிரங்கள் அந்த பிராஹ்மணன் வசம்

சென்றன. அந்தப் பிராஹ்மணன் அவனது ஆயுட்கால முழுதும் அந்த விக்கிரகங்களைப் பூஜித்து வந்தான்; தனது அந்திய காலத்திலே அவன் ஹநுமாரை வரவழைத்து, அவரிடத்திலே இவ் விக்கிரகங்களைக் கொடுத்துவிட்டு உயிர் துறந்தான். ஹநுமான் அவற்றைத் தமது கண்களில் ஆநந்த பாஷ்யம் பெருக வாங்கிக்கொண்டு ஆநந்தகரமாய்ப் பூஜித்து வருகையில் பஞ்சபாண்டவர்களுள் ஒருவனாகிய பீமசேனன் பாரிசாத புஷ்பம் கொண்டுவரும்படி சென்ற இடத்திலே, கந்தமாதன பர்வதத்திலே ஹநுமாரைக் கண்டு, அவருக்கும் அவனுக்கும் நடந்த வாக்குவாதமானது போராட்டமாக முற்றிவிட்டது. சீக்கிரத்திலே ஒருவரை யொருவர் இன்னாரென்று அறிந்துகொண்டார்கள்; அத்தியந்த நண்பர்களானார்கள்; அப்பொழுது ஹநுமான் அந்த விக்கிரங்களைப் பீமசேனனிடத்திலே கொடுத்தார். அந்த விக்கிரகங்கள் பாண்டவர்களுடைய அரண்மனையிலே அவர்களால் பூஜிக்கப்பட்டும், அவர்களின் சந்ததியாரால் பூஜிக்கப்பட்டும், அப் பரம்பரையிலே வந்த கடைசி அரசனாகிய க்ஷேமகாந்தன் என்பவன் காலம் வரையிலே யிருந்தன. பின்னர் இவை எவ்விதமாகவோ கஜபதியரசர்களிடம் சென்று, சில காலம் அவர்களால் பூஜிக்கப்பட்டு வந்தன; பின்னர் வந்த அரசர்கள் இவ் விக்கிரகங்களைக் கவனியாது, பூஜையும் செய்விக்காமல், அரண்மனையிலே சும்மா வைத்திருந்தனர். ஸ்ரீ மாத்வருக்கு இந்த விக்கிரகங்களைப்பற்றிய சரித்திரம் முழுதும் பரிபூர்ணமாகத் தெரியுமாதலால் 'எப்படியாவது, இவ் விக்கிரகங்களை யடைந்து பூஜிக்க

வேண்டும்’ என்று நெடுநாட்களாக பெரியதொரு ஆசை வைத்துக்கொண்டிருந்தார்.

அத்யாத்ம ராமாயணத்திலே அத்தியாயம் 2 முதல் அத்தியாயம் 15 வரையில் இந்த விக்கிரகங்களைப் பற்றியுள்ள விஷயங்கள், இவை ஸ்ரீநரஹரிதீர்த்தரால் ஸ்ரீமாத்வரிடம் கொடுக்கப்பட்டது வரையில் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ நரஹரிதீர்த்தரிடத்திலே இன்னும் கொஞ்சகாலம் உலகோபகாரமான உலக வாழ்க்கை வாழும்படி ஆக்ஞை செய்துவிட்டு, சுதேசம் நோக்கிச் சென்றார். சோபனபட்டரும் ஆசார்யரைப் பின்பற்றிச் சென்றதாகத் தெரியவில்லை. ஆனால், அவர் சும்மாயிருக்கவில்லை. அவர் அந்தப் பிரதேசத்திலே துவைதமத ஸித்தாந்தத்தைப் பரவச் செய்தார். சோபனபட்டர், நரஹரிதீர்த்தர் இவ்விருவருடைய பெருமுயற்சியினாலே அப் பிரதேசத்து ஜனங்கள் அனைவரும் துவைதமத சித்தாந்தங்களை யறிந்து பின்பற்றுவோர்களானார்கள்.

## 10-வது அதிகாரம்:

# உடுப்பி நகர விசேஷங்கள்

ஸ்ரீ மாத்வர் கோதாவரி தீரத்திலிருந்து புறப்பட்டு வழியிலே அநேக தேசங்களைக் கடந்து, அநேக பண்டிதர்களுடனே வாதாடி வென்று, அத்வைதத்தை இருந்த இடம் தெரியாதபடி அடித்துத் துரத்திக் கடைசியாக ஸ்ரீ அநந்தேஸ்வர ஸ்வாமி சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். "ஸ்ரீ மாத்வர் உடுப்பிக்கு வந்துவிட்டார்" என்பதைக் கேட்ட அவ்வூர் ஜனங்கள் யாவரும் அடங்கா மகிழ்ச்சி கொண்டவர்களாய், அங்கு வந்து அவரைச் சூழ்ந்துகொண்டு, க்ஷேமம் விசாரிப்பவர்களும்-உபசாரம் செய்பவர்களும் - வணங்கி நிற்பவர்களுமாக நிறைந்து கூடினார்கள். இவருடைய குருவாகிய ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் அடைந்த ஆநந்தம் இவ்வளவென்று எவராலும் கூற முடியாது. எல்லோருக்கும் முன்னே யதீச்வரரான ஸ்ரீ ஜேஷ்டரும் வந்து, ஸ்ரீ மாத்வரைக் கண்டுகளித்தார்.

ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும் ஸ்ரீஜேஷ்டயதிக்கும் ஸ்ரீ ஆசார்யர் ஹிமவத்கிரியிலிருந்தபொழுதே தமது பாஷ்யத்தை யனுப்பிவைத்தாரென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஸ்ரீஜேஷ்டயதி, பாஷ்யத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார்; ஆனால், ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷரோ எத்தனை

யோர் வருஷங்களாகத் தாம் அடைந்திருந்த அத்வைத வாசனையின் பலத்தினால் ஸ்ரீ மாத்வர் பாஷ்யத்தை அவ்வளவு சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை; எடுத்ததிலெல்லாம் ஸ்ரீமாத்வ பாஷ்யத்தில் குற்றம் கண்டு பிடித்தார். ஆகையால், ஸ்ரீமாத்வர் திரும்பி வந்தவுடனே, ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்குள்ள இந்தச் சந்தேகங்களை யெல்லாம் நிவிருத்தி செய்து வைக்குமாறு பாஷ்யத்தை யெடுத்துத் தினந்தோறும் வியாக்கியானம் செய்து, வாது செய்ய ஆரம்பித்தார். ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கோ ஸ்ரீ மாத்வரிடத்திலே புத்திரவாற்சல்யத்தினும் மேம்பட்ட அன்பு; ஆனால், அவருக்குத் தாம் இத்தனை நாட்களாக அரும்பாடு பட்டு அடைந்த அத்வைத ஞானத்தினிடத்திலே அதனினும் அதிக ஆசை. ஆகையால், ஸ்ரீமாத்வருடைய யுக்திகளுக்கும் நியாயங்களுக்கும் அவர் எளிதில் இடம் கொடுக்கவில்லை. அவர் இன்னும் அத்வைதத்தையே பிடிவாதமாகப் பிடித்து, "அதுவே சிரேஷ்டமானது" என வாதித்தார். ஆயினும், ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷர் மகா புத்திசாலி யென்பதில் சந்தேகம் இல்லையே? ஆதலால், ஸ்ரீ மாத்வருடைய நியாயங்களை முதலில் திடீரென்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும், தீர்க்காலோசனை செய்து பார்த்து, மெல்ல மெல்ல ஒவ்வொன்றாக ஒப்புக்கொண்டு, கடைசியாக ஸ்ரீமாத்வமதசித்தாந்தத்தின் உண்மையையும்பெருமையையும் உணர்ந்தார்.

ஸ்ரீ மாத்வர் உடுப்பியிலே தமது சிஷ்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாஷ்யத்தை யெடுத்து விளங்க வைத்த

இடமென்று ஒரு இடம் இன்னும் உடுப்பியிலே காண்பிக் கப்படுகிறது. இது ஸ்ரீ அநந்தேச்வர க்ஷேத்திரத்திலே யுள்ளது. இவ் விடத்திலே விக்கிரக மொன்றும் பிரதிஷ் டிக்கப்படவில்லை. ஆனால், பிற்காலத்திலே வந்த வாதி ராஜயதீந்திரர் என்பவர் "ஸ்ரீ மாத்வருடைய விக்கிரக மொன்று இவ்விடத்திலே பிரதிஷ்டை செய்ய வேண்டும்" என்று முயற்சித்தார்; ஆனால், இது ஸ்ரீ மாத்வருக்குப் பிரியமில்லைபோலும்! ஆசார்யர் அந்த யதீந்திரருடைய கனவிலே தோன்றி, தமக்கென்று ஒரு விக்கிரகம் பிரதிஷ் டை செய்யக்கூடாதென்று ஆக்ஞாபித்தார். அதனால், வாதி ராஜயதீந்தரர் அம்முயற்சியை விட்டுவிட்டார். ஆகையினால் அந்த இடமானது காலியாக விடப்பட் டிருக்கின்றது; எவ ரும் அங்கே அசுத்தப்படுத்தப்படாதபடி மாத்திரம் கவனிக் கப்படுகிறது.

ஸ்ரீ மாத்வர் பாடம் சொன்ன அந்த நாட்களிலே அது க்ஷேத்திரத்தின் வெளிப் பிராகாரத்திலே யிருந்திருக்க வேண்டும்; ஏனெனில், இப்பொழுது புதிய புதிய கட்டிடங் கள் க்ஷேத்திரத்தின் நாலா பக்கங்களிலும் உள்ளும் கிள ம்பி, இந்த இடத்துக்குக் காற்றும் வெளிச்சமும் இல்லாமல் செய்திருக்கின்றன. இத்தகைய காற்றும் வெளிச்சமும் இல்லாத இடத்திலா ஸ்ரீ மாத்வர் தினந்தோறும் உட்கார் ந்து பாடம் சொல்லிக்கொடுத்திருப்பர்.

இந்த இடமானது மிகப் பரிசுத்தமானதாக ஆயிரக் கணக்கான மத்வர்களால் இன்று கருதப்பட்டு வந்தபொழுதி

னும், இந்த இடம் ஆடம்பரத்தினுல் அலங்கரிக்கப்படா மல் ஸ்ரீ மாத்வர் பாடம் சொல்லிக்கொடுத்த பொழுது எப்படியிருந்ததோ அப்படியே இன்றும் இருக்கின்றது; அவ்விடத்திலே சித்திர சிற்ப வேலைப்பாடுகள் ஒன்றும் ஏற்படவில்லை; இந்த இடத்திலே அனைவருக்கும் ஆசார்ய ராகிய ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ அச்சுதப்ரேக்ஷருக்கும் ஆசார்ய ஸ்தானம் வகித்தஸ்ரீமாத்வர், "அழகேயொரு வடிவெடுத்து வந்ததோ" என்று அனைவரும் ஆச்சர்யப்படும்படி அழ கிய, அமிர்த வசனங்களினுல் அமிர்தத் தன்மையை அளி க்க வல்ல அழகிய சித்தாந்தத்தைத் தினந்தோறும் எடுத் தெடுத்துப் போதித்து வந்தார். "இவருடனே வாது செய்து இவரைத் தோற்கடித்து ஜயம்பெறவேண்டும்" என்று இவ ரிடம் வந்த பண்டிதர்கள் பலரும் இவருக்குச் சிஷ்யர்க ளானுர்கள்; இவரைப் பரிகசித்து கேலி பண்ண வந்த பல ரும் இவருக்குச் சிஷ்யர்களானுர்கள்; எதிரிகளினுடைய ஏவலினுல் இவருக்குத் தீங்கிழைக்க வெண்ணி வந்த பல ரும் இவருக்குத் தொண்டு புரிந்தார்கள். அவர் அத்வைதத் தை அநுபவ விரோதமான மதமென்று கண்டித்துத் துண்டித் தெரிந்தார். "இவ்வுலகங்களுக் கெல்லாம் இறை வன் மனிதனே யென்று வாதிக்கும் மதம் எத்தகைய மதமா யிருக்கும்?" என்றுர். "மனிதனும் பிரஹ்மமும் ஒன்று என்று சொல்வது போன்ற மகா பாபம் வேறு இல்லவேயில்லை" என்றுர். "கிஞ்சிக்ஞனுகிய ஜீவன் சர்வஞ்ஞ னுவது ஒருபொழுதும் முடியாததே" என்றுர்; அகில லோக நாயகனுக்கு அகண்டத்துவ லக்ஷணம் இருக்க,

அற்பனாகிய மனிதன் அந்த லக்ஷணம் தனக்கு உண்டென்று சொல்வது பொய்யே யல்லாமல் மெய்யாமோ?'' என்றார். "ஒளியும் அந்தகாரமும் ஒன்றா யிருத்தல் முடியுமோ? உண்மையும் பொய்ம்மையும் ஒன்றா யிருத்தல் முடியுமோ? அறிவும் அஞ்ஞானமும் ஒன்றா யிருத்தல் முடியுமோ? ஆநந்தமும் துக்கமும் ஒன்றா யிருத்தல் முடியுமோ? நிறைவும் குறைவும் ஒன்றா யிருத்தல் முடியுமோ?'' இப்படியெல்லாம் கேட்டார்.

ஸ்ரீ மாத்வருடைய வசனங்களைக் கேட்ட ஜனங்கள் அவரிடத்திலே மகா பக்தியுள்ளவர்களாய், ஆயிரக்கணக்காக ஸ்ரீ மாத்வருக்குச் சிஷ்யர்க ளானார்கள். ஆசாரியரும் அவர்களுக்குப் புஜங்களிலும் மார்பிலும் வயிற்றிலும் சங்கசக்கர முத்திரை யளித்து அவர்களை ஸ்ரீ மாத்வர்களாக்கினார். அவர்கள் தாங்கள் உண்மையான மதத்தை யநுசரித்துவிட்ட ஆநந்தத்தினால் ஆடிப்பாடி யாரப்பரித்தார்கள். இவ்விதமாக, தாங்கள் முன்னர் அநுசரித்துக்கொண்டிருந்த அத்வைதத்தையும் விசிஷ்டாத்வைதத்தையும் பிற மதங்களையும் விட்டுவிட்டு, த்வைதமதம் புகுந்து ஸ்ரீ மாத்வருக்குச் சிஷ்யர்களானவர்கள் எண்ணற்றவர்கள். ஆசார்யருடைய பக்திப் பிரசங்கங்கள் அனைவருடையவும் ஹிருதயங்களை யுருக்கத்தக்கனவா யிருந்தன. அவர் பக்தியைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால், அவருடைய ஹிருதயம் உருகும்; அவருடைய கண்களிலே கண்ணீர் ததும்பும்; அவருடைய முகத்திலே அன்பு பொங்கும்; அவருடைய

சரீரம் குழையும்; அவருடைய சரீரத்திலே ரோமம் சிலிர்க்கும். அவர் பேசும்பொழுது, அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் மாத்திரமன்று, அவருடைய சரீரத்தின் ஒவ்வொரு ரோமத்துவாரத்தினின்றும் புறப்படும் பக்தி சக்தியானது அனைவரையும் பரவசப்படுத்தி விடும். "ஆசார்யர் மகா புருஷர்" என்றும், "உலகை உத்தரிக்க வந்தவர்" என்றும் அவரைப் பாராத ஜனங்களும்கூடப் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள். எங்குப் பார்த்தாலும், எப்பொழுது பார்த்தாலும் ஆசார்யரைப்பற்றிய பேச்சுத் தான் நடைபெற ஆரம்பித்தது; எப்பொழுதும் அவரைத் தரிசித்துக்கொண்டேயிருப்பதற்கும், அவருடைய அமிருத வசனங்களைக் கேட்டுக்கொண்டே யிருப்பதற்கும், அவர் போகும் இடங்களுக் கெல்லாம் கூடவே சென்று தொண்டு புரிவதற்குமே ஜனங்கள் ஆசை யுற்றவர்களானார்கள். அவருடைய வசனங்களை ஒரு சிறிதும் அறிந்துகொள்ள முடியாத சிறு குழந்தைகளும்கூட ஆசார்யரைச் சூழத் தொடங்கினார்கள். ஸ்ரீ மாத்வர் ஸ்நாந ஜபதபாதி கார்யங்கள் செய்வதற்குச் சமுத்திரத்துக்குச் சென்றார். நூற்றுக் கணக்கான ஜனங்கள் அங்குச் சென்று கூடி, ஆசார்யரிடமிருந்து துளசிதீர்த்தம் பெற்றுக்கொள்வதற்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் ஆசார்யர் சமுத்திர ஸ்நாநம் செய்யப்போனார்; அப்பொழுது அதிகாலை நேரம்; சென்றவுடனே வழக்கம்போலச் சந்தியா வந்தனாதிகளை முடித்துக்கொண்டு,

சாக்ஷாத் பகவானைத் தியானம் செய்தார்; பின்னர், பல சுலோகங்களினால் பகவானை ஸ்தோத்திரித்து அக மகிழ்ந்தார். இன்று ஆசார்யர் புதியனவாகச் சில சுலோகங்கள் இயற்றக் கருதினார். உடுப்பியிலிருந்து சமுத்திரதீரம் 3 மைல் தூரத்திலே யுள்ளது. ஆசார்யர் புறப்பட்டு இந்த மூன்று மைல் தூரமும் வருவதற்குள்ளாகச் சிறிதும் சிரமமின்றி அநேக சுலோகங்களை யியற்றிவிட்டார். கவி பாடுகிறவர்கள் கஷ்டப்பட்டுப் பாடுகிறதில்லை; கஷ்டப்பட்டுப் பாடும் கவி கவி யாகாது. கவியானது உள்ளம் உருகிக் கொதித்துக் கொந்தளித்துப்பொங்கித்தானகவே வாய்வழியாக வழிந்து ஓடவேண்டும். அவ்வாறே இப்பொழுது ஸ்ரீமாத்வருக்குக் கடல்மடை திறந்தாப்போல, உள்ளம் உடைந்து, தாமாகவே கவிகள் வெளிப்புறப்பட்டன. ஒரு சுலோகமாயிற்று, இரண்டாவது சுலோகமாயிற்று; இம்மாதிரியே பல சுலோகங்க ளாயின. இரண்டொருமணி நேரத்துக்குள்ளே 46 சுலோகங்க ளடங்கிய ஐந்து அத்தியாயங்கள் இயற்றப்பட்டு விட்டன. ஆ! ஆ! அவற்றின் அருமையே அருமை! அவற்றின் இனிமையே இனிமை!

ஸ்ரீ மாத்வர் அன்று சமுத்திர ஸ்நானத்துக்குப் புறப்படும் முன், அவருடைய மனத்திலே ஒரு தோற்றம் உண்டாயிற்று. 'துவாதச ஸ்தோத்திரம் இயற்றவேண்டும்' என்று அவர் நினைத்ததற்கு முன்னே, அவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் தியானித்துக்கொண்டிருந்தார். "ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபக்தர்களுக்கு ஹிதம் புரியும்பொருட்டு உடுப்பி

க்கு இப்பொழுது வந்துகொண்டிருக்கிறார்'' என்றும், ''அன்று அஸ்தமனத்துக்குள்ளே பகவான் அங்கு வந்து விடுவார்''என்றும் அவருக்கு ஒரு தோற்ற முண்டாயிற்று. இந்த ஆநந்தகரமான தோற்றத்தினாலே அவருடைய மனமானது உற்சாகமடைந்து, மேன்மேலும் கவிதைகளை வெளியே வாரிவாரி எறிந்தது.

பின்னர் அவர் ஸ்நாநம் செய்துவிட்டு மறுபடியும் தியானம் செய்வதற்காக மணலில் வந்து உட்கார்ந்தார்; சிறிது நேரம் கண்களை மூடி, மனத்தை அகமுகமாக இழுத்து ஹிருதய நிவாசனாகிய ஸ்ரீநிவாசனைத் தியானம்செய்தார். திடீரென்று கண்களைத் திறந்தார்; நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தார்; தூரத்திலே ஒரு கப்பல் ஏதோ ஆபத்துக் குட்பட்டு, நிலைபெயராது நின்று தத்தளிப்பதைக் கண்டார். அந்தக் கப்பலானது மாலுமிகளுடைய சுக்கான் சக்தியை மீறி அலைகளிலே அங்கு மிங்கும் ஆடி, அசைந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தது. கடைசியாக அது கரைக்குவெகு தூரத்திலேயே எங்கோ மணல் திட்டிலே தட்டி, அசைவற்று நின்றுவிட்டது.

ஸ்ரீ மாத்வர் வெகு கவனமாக அக்கப்பலை யுற்றுப்பார்த்தார்; அக்கப்பல் படும் பாட்டைக் கண்டு இரங்கினார். 'அதை எப்படியாவது தப்புவிக்க வேண்டும்' என்று நிச்சயம் பண்ணிக்கொண்டார். இந்தச் சங்கற்பம் இவர் செய்துகொண்டது தான் தாமதம்; இவர் தமது உத்தரீயத்தை யெடுத்துக் கப்பலை நோக்கிக் கப்பல் கரைவந்து சேருமாறு ஆக்ஞாபிப்பனு

போல வீசினர். இதுவரை கரைதட்டிக் கிடந்த கப்பலானது தானே சமுத்திரத்தினுள் விழுந்து, நேரே ஸ்ரீ மாத்வர் இருந்த கரையை நோக்கி வந்து சேர்ந்தது. கப்பல் மாலுமியானவன் 'கப்பலை எப்படிக் காப்பாற்றுவது?' என்ற எண்ணத்துடனே கரையையே பார்த்துக்கொண்டிருந்தானதலின், ஆசார்யர் எழுந்திருந்து உத்தரீயத்தை யெடுத்து வீசியதையும் கவனித்திருந்தான்; தவிர, இன்னும் கப்பல் கரை வந்து சேர்ந்தவுடனே அக் கப்பல் மாலுமி ஸ்ரீ ஆசார்யரிடம் வர, நூற்றுக் கணக்கான ஜனங்கள் அங்குச் சூழ்ந்திருப்பதைக் கண்டு ஸ்ரீ ஆசார்யருடைய மஹிமைகளையும் விசாரித்துத் தெரிந்துகொண்டான். அவன் ஆசார்யரை நோக்கி "ஸ்வாமி! தேவரீரது அநுக்கிரகத்தினல் நாங்கள் யாவரும் பிழைத்தோம்; எங்களுடைய சொத்துக்களும் காப்பாற்றப்பட்டன; தாங்கள் எனது கப்பலிலுள்ள எதைக் கேட்டாலும், அது எதுவா யிருந்தாலும், எவ்வளவு விலையுள்ளதா யிருந்தாலும் நான் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன்; ஆக்ஞைக்கு எதிர் பார்த்து நிற்கின்றேன்" என்று வெகு விநயமாகக் கூறினன். அக் கப்பலிலே துவாரகையிலிருந்து விலை யுயர்ந்த ஆடையாபரணாதி திரவியங்கள் பல வந்திருந்தன. ஸ்ரீ ஆசார்யர் அவற்றையெல்லாம் லக்ஷியம் செய்து கேளாமல் "உன்னுடைய கப்பலிலே கோபிச் சந்தன பாறைகள் சிலவற்றை நீ சுமைக்காக ஏற்றிக்கொண்டு வந்திருக்கிருய்; அவற்றை எனக்குக் கொடு!" என்று கேட்டார். மாலுமி ஆச்சர்யப்பட்டான்; வெறும் மண் கட்டிகளை, ஒன்றுக்கும் உதவாத மண் மட்டிகளை இவர்

கேட்டாரே! உடனே மாலுமி அப்படியே கப்பலிலிருந்த கோபீச் சந்தனக்கட்டிக ளனைத்தையும் கரை யிறக்கி ஸ்ரீ ஆசார்யரிடம் கொண்டுவந்து ஒப்புவித்தான்.

ஸ்ரீ மார்த்வர் இந்தச் சந்தனக்கட்டிகளை யெல்லாம் ஜாக்கிரதையாகத் தமது மடத்துக்குக் கொண்டு போகும் படி ஆக்ஞாபித்தார். இப்பொழுது இக் கப்பலைப்பற்றிய ஆச்சர்ய சம்பவமும் ஸ்ரீ ஆசார்யருடைய மஹிமையும் உடுப்பியில் பரவவே; ஆயிரக்கணக்காக ஜனங்கள் வந்து கூடினார்கள்.

கோபிச் சந்தனப் பாறைகள் மடத்துக்குக் கொண்டு போகப்பட் டிருக்கும் வழியிலே ஒரு பெரிய பாறை யானது இரண்டாக உடைந்தது. இதன் நடுவே, அனைவ ருடைய கண்களையும் கவரத்தக்க, அத்தியற்புதமான, அழகிய ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகமொன்று இருந்தது; அது ஸ்ரீ பாலகிருஷ்ண விக்கிரகம்.

ஸ்ரீ ஆசார்யர் இந்த விக்கிரகத்தைப் பார்த்தார்; சற்று நேரம் அப்படியே மெய்மறந்து ஆநந்தத்தில் லயித் திருந்தார்; பின்பு கண்களை விழித்தார்; ஆடினார், பாடினார்; "ஆநந்தம், ஆநந்தம்," என்று ஆர்ப்பரித்துக் கரகோஷம் செய்தார். ஸ்ரீ ஆசார்யருக்கு அன்று அவர் சமுத்திர ஸ்நாநத்துக்குப் புறப்படும் முன்னே தோன்றிய தோற்றம் உண்மையாகப் பலித்துவிட்டது. துவாரகையிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் கோபிச் சந்தனப் பாறையில் புகுந்து எவருக்

கும் தெரியாமல் கப்பலில் வந்து இறங்கினார். எத்தனை நாட்களாக இந்த விக்கிரகம் மண்ணிலே புதைப்பட்டுக் கிடந்ததோ? இவ்வளவு அழகிய விக்கிரகம் இவ்வாறு புதைபடுவதற்குக் காரணம் யாது ஏற்பட்டதோ? இப்பொழுது கடைசியாக ஆசார்யருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் ஆநந்த மளிக்கும்பொருட்டு, அது இங்கு வந்து சேர்ந்துவிட்டது.

ஸ்ரீ ஆசார்யர் இந்த ஸ்ரீ பாலகிருஷ்ண மூர்த்தியை அடைந்ததுமுதல், தாம் முன்பு இயற்றிக்கொண்டுவந்த துவாதச ஸ்தோத்திரத்தில் 6-வது அத்தியாயம் முதல் தானே உள்ளம் பொங்கி வெளியே வந்தது; இப்பொழுது ஸ்ரீ ஆசார்யர் புதிய ஊக்கமும் புதிய உயிரும் பெற்றவர் போல ஸ்ரீ மாதவனை நோக்கி நேருக்கு நேர பேசுபவர் போல, ஸ்தோத்திரங்கள் இயற்றினார். அன்றைய தினத்துக்குள்ளே 6-முதல் 12 அத்தியாயங்களும் முடிவு பெற்று விட்டன.

அந்தக் கோபி சந்தனப் பாறை இரண்டாக உடைந்த இடம் வாதபந்தேச்வரம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த மடத்திலே பலராம க்ஷேத்திரம் ஒன்று உள்ளது.

இவ்விதமாக அடையப்பட்ட அவ் விக்கிரகம் உடுப்பிக்குக் கொண்டுபோகப்பட்டன. அங்கே அவ் விக்கிரகம் ஸ்ரீ மாத்வ சரோவரம் என்னும் தீர்த்தத்திலே மூழ்குவிக்

கப்பட்டன. அதில் ஒட்டியிருந்த மண்ணெல்லாம் சுத்த மாகக் கழுவப்பட்டுப் பரிசுத்த மாக்குப்பட்டபொழுது, அந்த விக்கிரகத்தைத் தரிசிப்பதற்கு ஜனங்கள் திரள் திர ளாக வந்தனர். ஸ்ரீ மாத்வருடைய ஸ்பர்சமாத்திரத்தினலே அந்த விக்கிரகத்தி லிருந்து ஜோதி கிரணங்கள் நாலா பக் கங்களிலும் வீசின.

பின்னர் அந்தத் தடாக தீரத்திலிருந்து அந்த விக்கிர கத்தைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு போகும்படி ஸ்ரீ மாத்வர் தமது சிஷ்யர்களுக்கு ஆக்ஞாபித்தார்.

அவருடைய சிஷ்யர்களில் அநேகர் சென்று அதைத் தூக்க முயன்றனர்; அதைப் பூமியிலிருந்து கிளப்ப முடிய வில்லை. இன்னும் சிலர் சேர்ந்தனர்; அப்பொழுதும் முடிய வில்லை. மகா பலிஷ்டர்களாயுள்ள முப்பது பெயர்கள் சேர் ந்து தூக்கினர்கள்; முடியவில்லை. ஸ்ரீ கிருஷ்ணனை அசைக் கக்கூட முடியவில்லை. அவர்கள் அனைவரும் ஸ்ரீ மாத்வரிடம் சென்று, தங்களால் முடியவில்லையென்று கூற, ஸ்ரீ மாத்வர் "நீங்கள் ஒருவரும் அதனிடம் போகவேண்டாம்; உங்க ளால் அதைத் தூக்க முடியாது" என்று சொல்லி அவர் களை யப்புறம் போகச் சொன்னர். ஸ்ரீ மாத்வரே அதைத் தூக்கிச் செல்லவேண்டுமென்பது ஸ்ரீ கிருஷ்ணனுடைய விருப்பம் போலும்! ஸ்ரீ மாத்வர் அதைச் சிறிதும் சிரம மின்றி இரண்டு கைகளினுலும் தூக்கி, மிகுந்த பயபக்தி யுடனே தமது மடத்துக்குக் கொண்டு சென்ருர். அன்று உடுப்பி முழுதும் அல்லோல கல்லோலப்பட்டுவிட்டது.

அவ்வூர் உற்சவம் கொண்டாடிற்று. ஸ்ரீ மாதவனும் ஸ்ரீ மாத்வரும் தங்களுக்கு இருக்க, தங்களுக்கு யாது குறை நேரிடும்? என்று அவ்வூரார் ஆநந்தம் கொண்டாடினார்கள்.

உடனே அதற்கென்று ஒரு சிறு கோவில் கட்டப் பட்டது. அதிலே ஸ்ரீ மாத்வர் இந்த ஸ்ரீ பாலகிருஷ்ண விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்விப்பித்து, பூஜாக்கிரமங்களை யும் ஏற்படுத்தினார்; மிகமிகச் சிறிய விஷயங்களும் மிகமிக நன்றாக நடைபெறும்படி செய்தார்; தாமே ஒவ்வொன்றை யும் மேல் பார்த்தார். ஸ்ரீ மாத்வர் ஒவ்வொரு மணிநேரத் துக்கும் ஒரு பூஜை ஏற்படுத்தினார்; எப்பொழுதும் பகவா னுக்கு ஏதேனும் ஒரு விதத்தில் தொண்டு செய்துகொண் டிருப்பதையே தமது வாழ்க்கையின் பயனாகக் கொண்டார்.

ஸ்ரீ கிருஷ்ணனை யடைவதே மனுஷ்ய ஜன்மப் பிர யோசனம்; ஸ்ரீ கிருஷ்ணனே மனுஷ்ய ஜன்ம லக்ஷியம். மனிதனுக்குப் புத்தி யென்று ஒன்று இருக்கின்றது; அதனால் மனிதன் லக்ஷியத்தைக் கண்டுகொள்ளவேண்டும்; லக்ஷியத்தை யொருபொழுதும் கைவிடக் கூடாது; லக்ஷிய த்தை யொருபொழுதும் மறந்துவிடக்கூடாது; இந்த வாழ்க்கையிலே யுள்ள சிற்றின்பங்களைக் கண்டு மயங்கிவிட லாகாது. எப்பொழுதும் மனிதன் தன்னுடைய கிஞ்சிக்ஞத் துவத்தை யுணர்ந்து, சர்வஞ்ஞனாகிய பரமாத்மாவை வழி பட்டுக்கொண்டிருக்கவேண்டும்; பரமாத்மாவே ஜீவாத்மா வுக்கு ஆதாரம். "அவனன்றி யணுவும் அசையாது." அவனுடைய கிருபைக்குப் பாத்திர மாகவேண்டும்; அவ

னுடைய தர்மாதர்ம நியாயங்கட்குப் பயப்படவேண்டும்; அவனுடைய அகண்ட மங்கள குணங்களை யறிந்து ஸேவித்து, அவனிடத்திலே அவனுடைய பாதார விந்தங்களிலே அமிர்தத் தன்மையை யடையவேண்டும். ஸ்ரீ மாத்வர் இக் கொள்கைகளை யெல்லாம் பிறருக்குப் போதித்து வந்தது மன்றியில், இவற்றைத் தமது வாழ்க்கையிலே அநுஷ்டித்தும் காட்டினார்.

ஸ்ரீ கிருஷ்ணனை க்ஷேத்திரத்திலே பிரதிஷ்டை செய்து வைத்துவிட்டு, அதைப் பூஜிப்பதற்குத் தாமே பூஜாரியானார்; எல்லா நிமிஷங்களையும் இறைவனுடைய பாதங்களிலே சமர்ப்பித்துவிட்டார். வேறு எவரையும் அந்த விக்கிரகத்தண்டையில்கூட விடுவதில்லை; ஒரு நாளைக்கு ஒன்பது கால பூஜை. ஒவ்வொன்றும் வெகு நேரம் வேண்டும்; இவ்விதமாக ஆசார்யர் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிப்பதையே தமது தர்மமெனக் கொண்டார். ஸ்ரீ ஜகந்நாதனுக்கு எவ்விதமாக வெல்லாம் மனிதன் தனது கிஞ்சிக்ஞத்துவத்தைக் காண்பித்து பக்தி செய்ய முடியுமோ, அவ்விதமாக வெல்லாம் ஸ்ரீ பால கிருஷ்ணனுக்குப் பூஜை நடந்தது.

"அசுத்தமானவர்கள், தீட்டுப் பட்டவர்கள் எவரும் கோவிலி னுள்ளே, கோவிலி னருகேகூட வரக்கூடாது" என்று கண்டிப்பான விதியொன்று ஏற்படுத்தினார். ஸ்நானம் செய்யாமல், கை கால்கள் சுத்தி செய்துகொள்ளாமல் எவரும் உள்ளே நுழைதல் கூடாது. க்ஷேத்திர வாசலானது பெருங் கூட்டம் ஒரே காலத்தில் உள்ளே நுழை

யாதபடி அவ்வளவு சிறியதாக ஏற்படுத்தப்பட்டது. மூல ஸ்தானத்திலே பூஜை செய்பவரையும் வேறு ஒருவர் இரு வரையும் தவிர அதிக ஜனங்கள் இருக்க முடியாதபடி அவ்வளவு சிறியதாயிருந்தது. "எவர் பிரதான பூஜாரியோ அவரைத் தவிர வேறெவரும் உள்ளே போய்ப் பூஜிக்கக் கூடாது" என்று கடினமான விதியொன்று ஏற்படுத்தப் பட்டது. இதனால் நினைத்தவர்களைக் கொண்டு பூஜிப்ப தற்கு இங்கு இடமில்லாமற் போய்விட்டது. அந்த க்ஷேத் திரத்துக்குச் சமீபத்தில் செல்லும் பொழுதே, அந்த க்ஷேத்திரத்தின் பரிசுத்தத் தன்மை நன்கு விளங்கு கின்றது. க்ஷேத்திரங்களையும் விக்கிரகங்களையும் நிந்திப்ப தும் கண்டிப்பதும் தற்கால நாகரிகர்களுக்குச் வெகு சுல பம்; ஆனால், இவர்கள், க்ஷேத்திரங்களுக்குச் சென்று பார் த்திருக்கிறார்களா? விக்கிரகங்களைத் தர்சித்துப் பார்த்திருக் கிறார்களா? பூஜாவிதிகளிலே கூறியுள்ளபடி பூஜை செய்து பார்த்திருக்கிறார்களா? ஜகத்தை நிலையென நம்பிச் சித்தப் பிரமைகொண்டு சீறுகின்ற ஜனங்களே! க்ஷேத்திரங்களிலே யுள்ள விக்கிரகங்களினிடத்தே ஒரு தெய்வ சக்தி விள ங்குகிறது. பிரபஞ்சப் பித்துப் பிடித்துப் பேயர்களாய்த் திரியும் பேடிகளே! மஹரிஷிகளாலே மஹா மந்திரபூர்வக மாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களை யிகழாதீர் கள்; மகத்தான பாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளாதீர்கள். மனம் ஒரு நிலைப்படுதற்கு விக்கிரகங்கள் போன்று சக்தி வாய்ந்த சாதனங்கள் உங்களுக்கு வேறு கிடைக்குமோ? ஸ்தூலமாக எதையேனும் ஏகாக்கிரத்துக்குக் கொள்ளா

விட்டால் மனம் ஒருமுகப்படுமோ? சர்வ வியாபகமாய், சூட்சுமமாயுள்ள ஜகந்நாதனை நீங்கள் எப்படித்தியானிப்பீர்களோ? நாம் எது நினைத்தாலும் சொரூபத்திலேயே நினைக்கிறோமன்றி அரூபத்திலே நினைப்பதுண்டோ? சொரூபம் பலமுள்ளதாயில்லாவிட்டால், நமது சிந்தனையும்-தியானமும்—ஏகாக்கிரதையும் பலமற்றதாய்விடுகிறது. அரூபத்தைக் கற்பித்துக்கொண்டு மனத்திலே நிலைநிறுத்துதல் அசாத்தியமேயாம். மஹாத்மாக்கள் சொரூபங்களைப் பிரதிஷ்டை செய்து அச் சொரூபங்களிலே எம்பெருமான் அடங்கிப் பிரசன்னமாகுமாறு பிரார்த்திக்கும்பொழுது, எம்பெருமானும் அப்படியே பிரசந்நமாய், அந்த விக்கிரகத்தினிடத்திலே தமது குணங்களையும் சக்திகளையும் புகுத்துகிறார்.

ஸ்ரீ மாத்வர் உடுப்பியிலே எட்டு மடங்கள் ஸ்தாபித்து, எட்டு மடங்களிலும் எட்டுச் சந்யாசிகளை அதிபதிகளாக்கி. "ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரத்திலே நடக்கவேண்டிய பூஜைக்கு இவர்கள் அனைவரும் உத்தரவாதிகள்" என்று விதித்தார். க்ஷேத்திரத்திலே கிரமம் தவராது பூஜை முதலியன நடைபெறுதற்கு இதைத் தவிர, வேறு நல்லுபாயம் ஒன்று உண்டாமோ? இந்தச் சந்யாசிகள் இப்பொழுது ஒவ்வொருவருக்கு இரண்டு வருஷங்கள் வீதம் பகிர்ந்து கொண்டு பூஜை செய்து வருகிறார்கள்.

ஆசார்யர் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக ஆசாரத்தை விதித்தார். மனிதன் ஸ்நாநம் செய்யாமல் எதுவும் செய்யலாகாது; ஸ்நாநம் செய்தவுடனே அதற்கு முந்திய

நாள் தோய்த்து உலர்த்தி, வேறொரு வஸ்திரத்தின்மீதும் படாதபடியா யிருக்கவேண்டும். ஸ்மார்த்தர்களுக்குள்ளே 'பட்டு வஸ்திரமானது தோய்க்காவிட்டாலும் மடி' என்று கருதப்படுகின்றது; ஆனால், ஆசார்யர், "வஸ்திரமானது பட்டாயிருந்தாலும் சரி, அது எதுவாயிருந்தாலும் சரி, ஜலத்திலே நனைத்துத் தோய்த்துலர்த்தப்படாத விஷயத்தில் அது மடியாகாது" என்றார். இன்னும் பிராஹ்மண வகுப்பார்களுக்குள்ளே மாத்வர்தாம் அதிக ஆசாரமுடையவர்களென்பது நாம் சொல்லாமலே அனைவரும் அறிந்திருப்பார்கள். "இந்த உடுப்பி க்ஷேத்திரத்திலே பூஜை செய்யும்படியான பாக்கியம் பெறுகின்ற சந்யாசிகள் முன் ஜன்மத்திலே கோபிகாஸ்திரீகளா யிருந்தவர்கள்" என்றும், "ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிப்பதற்காகவே அவர்கள் அடிக்கடி ஜனனம் எடுக்கிறார்கள்" என்றுங் ஐதிகம் கூறுகிறது. இந்த க்ஷேத்திரத்திலே யிருப்பது ஸ்ரீ பாலகிருஷ்ணனானதினாலே, காலையிலே நைவேத்தியமானது சிறு குழந்தைகளுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது; மத்தியான நைவேத்தியம் அந்த க்ஷேத்திரத்துக்கு நூற்றுக் கணக்காக வருகின்ற யாத்திரிகர்களுக்கும் அதிதிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. மாலை பூஜையானது காலையிற்போலவேதான். வருஷத்தின் பல ருதுக்களிலும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகள் உற்சவமாகக் கொண்டாடப்படுகின்றன. ஜனங்கள் பல பஜனை கோஷ்டிகளாகப் பிரிந்து பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து தாள மேள சகிதம் ஆடிப் பாடி யார்ப்பரிப்பார்கள்; ஆசார்யர் செய்த துவாதச ஸ்தோத்திரக்

னைச் சில வேளைகளிலே பஜித்துக் குதிப்பார்கள்; சங்கீர்த்தன கோஷம் ஆகாயத்தைப் பிளக்கும்; ஆடுகின்ற ஆட்டங்கள் பூமி யதிரச் செய்யும்; ரோமம் சிலிர்க்கும்; கண்களினின்றும் தாரை தாரையாய்க் கண்ணீர் வடியும்; ஹிருதயமானது ஏகமாக விரிந்து தனது லக்ஷணமாகிய அன்பினாலே அங்கிருப்பவர்கள் அனைவரையும் பிணைத்துக் கட்டிவிடும். சில பக்தர்கள் அப்படியே மூர்ச்சைபோய் விழுந்துவிடுவார்கள்.

உடுப்பி க்ஷேத்திரத்திலே இப் பஜனை யமர்க்களங்களெல்லாம் ஏற்படுதற்குக் காரணம் ஸ்ரீ மாத்வரே யாவர். ஸ்ரீ மாத்வர் இவையெல்லாம் செய்தார்; "உலக வாழ்க்கை ஒரு காசுக்கு உதவாது" என்று போதித்தார்.

ஆசார்யரைத் தரிசிப்பதற்கும் உபதேசம் பெறுவதற்கும் தேசத்தின் நாலாபக்கங்களி லிருந்தும் ஜனங்கள் ஓரே திரளாக வந்தார்கள். அந்தப் பிரதேசத்திலே அத்வைதமென்பது ஒழிந்துவிட்டது; ஆயினும், இரண்டொருவர், ஸ்வயநல அகங்காரத்தினாலே பீடிக்கப்பட்டவர்களாய் ஆசார்யரை ஏற்றுக்கொள்ளாதிருந்தால், அதனால் அவருடைய மகிமை குறைந்துவிடாது. "சில ஜீவர்கள் எவ்வித முயற்சியு மின்றியே பக்தியை அடைந்துவிடுகின்றனர்" என்றும், "வேறு சிலர் புண்ணிய பாப மிச்ரர்களாயிருக்கிறார்கள்" என்றும், "இன்னும் சிலர் பாப மொன்றையே பற்றியவர்களா யிருக்கிறார்கள்" என்றும் ஆசார்யர் போதித்தார். ஆகையால், ஆசார்யருடைய சித்தாந்தக்

கொள்கைகள் உண்மையானவையே யென்று தெரிந்திருந்தும் அவற்றைப் பின்பற்ற மனமில்லாதவர்கள் கடைசி வகுப்பைச் சேர்ந்த பேய்க் குணம் வாய்ந்தவர்கள் என்று ஏன் நாம் சொல்லக்கூடாது?

ஸ்ரீ மாத்வர் உடுப்பியிலே இவ்விதமான வைபவத்துடன் க்ஷேத்திரத்திலே ஸ்ரீகிருஷ்ண பூஜையை ஸ்தாபித்துக்கொண்டிருக்கும் நாட்களிலே, அவருடைய இளைய சகோதரரான ஸ்ரீ விஷ்ணு தீர்த்தர் அடிக்கடி உடுப்பிக்கு வந்து ஆசார்யருடைய உபந்யாசங்களைக் கேட்டு, அகம் மகிழ்ந்து செல்வதுண்டு. இன்னும் ஆசார்யருக்குப் பள்ளித் தோழனும் ஆசார்யருடைய அக்ஷராப்யாச உபாத்யாயருடைய புத்திரனும், ஆசார்யர் காதிலே ஊதினதினாலே தலைநோவு நீங்கப்பெற்றவருமானவர் உடுப்பியிலே இப்பொழுது ஸ்திர வாசம் செய்துகொண்டு, அவ் வூரிலே எல்லோராலும் மதிக்கப்பெற்ற ஒரு பெரிய குடித்தனக்காரராய் ஆசார்யருடைய சிஷ்யர்களுள் ஒருவராய் வாழ்ந்துவந்தார். இன்னும் ஆசார்யருடைய அபார மஹிமைகளையும், அவர் தமக்குப் பள்ளித்தோழராயிருக்கும் பாக்கியம் பெற்றிருந்ததையும் நினைத்து நினைத்துக் களித்துவந்தார்.

இவர் ஸகஸ்ர ப்ராஹ்மண போஜனம் செய்வித்து ஒரு பெரிய யாகம் ஒன்று நடத்தக் கருதி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பிரமாதமாகச் செய்ய ஆரம்பித்தார்; இவருடைய பெயர் வாசுதேவர் என்று தெரியவருகிறது. இந்த யாகத்துக்கு ஆசார்யருடைய சகோதரரான ஸ்ரீ

விஷ்ணுதீர்த்தர் யாஜ்யத்தையும் அதைத் தொடர்ந்த மந்திரங்களையும் பிரவர்க்கியம் முதலிய ருக் விசேஷங்களாகிய வேதபாகங்களையும் பாராயணம் செய்து நடத்திவைப்பதற்கு ஹோதாவாக்கப்பட்டார். சகல ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன; பெரிய பெரிய கொட்டகைகள் போடப்பட்டுவிட்டன; செய்யப்படவேண்டிய செலவுகளெல்லாம் செய்யப்பட்டுவிட்டன; இப்பொழுது ஜாரகடிதன் என்னும் பெயரையுடைய ஒருவன் இந்த யாகம் நிறைவேருவாறு பலவிதத்திலும் விக்கினங்கள் செய்ய ஆரம்பித்தான்.

ஸ்ரீ வாசுதேவர் ஆசார்யருக்குப் பால்யத் தோழராதலாலும், இப்பொழுது சிஷ்யராதலாலும், ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் ஆசார்யருடைய உடன்பிறந்த சகோதரர் ஆதலினாலும், இவ்விருவரும் மத்வமத ஸித்தாந்தக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களா யிருந்திருக்கலாம். "யாகத்திலே ஜீவராசிகளைப் பலியிடக் கூடாது" என்றும், அவற்றுக்குப் பதிலாக அவற்றைப்போல மாவினால் உருச்செய்து அம் மாப் பிண்டங்களையே பலி கொடுத்தல்வேண்டும்" என்றும் ஏற்பட்ட மத்வமதக் கொள்கை இந்த ஜாரகடிதனுக்கு ஒவ்வாததாயும், அதுவரையில் இல்லாத வழக்கமாயும், நூதனமான தொன்றாயும் இருந்திருக்கலாம். அந்த ஜாரகடிதன் ஆசார்யரை வெறுத்த அஞ்ஞானிகளுள் கொஞ்சம் செல்வாக்குள்ளவனா யிருந்திருக்கலாம். ஜீவவதை புரிவது எக்காரணத்தை முன்னிட்டும் கூடாதென்று ஸ்ரீ மாத்வர் விதி

த்து, யாகத்திலே செய்யப்படும் ஜீவ ஹிம்சையை நிறுத்திவிட்டார். "கருணையங்கடலான பரமாத்மாவுக்குக் கர்ணகடூரமான கொலை சற்றும் பிரியமுள்ளதன்று" என்று ஸ்ரீமாத்வர் உபதேசம் செய்தார். இன்றும் மாத்வர்கள் யாகத்திலே ஜீவப்பிராணியை வதைக்காமல் மாவினால் பிராணிகள் போன்று உருப்பிடித்து அவற்றையே அர்ப்பணம் செய்வதை நாம் பார்க்கிறோம்.

ஆகையால், இந்த மத்வமத யாகத்துக்கு விக்கினங்கள் புரியத்தொடங்கின ஜராகடிதன் அத்வைதியாயிருந்திருக்கலாம். இவன் விக்கினங்கள் செய்ய ஆரம்பிக்கவே, யாகம் செய்வதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் கிடைப்பது கஷ்டமாய்விட்டது. ஜராகடிதனுடைய செல்வாக்கு அவ்வளவு தூரத்துக்கு இருந்ததினால், வாசுதேவரும் விஷ்ணுதத்தரும் இன்னது செய்வதென்று தெரியாது வெகுநேரம் வரையில் ஆலோசனை செய்து கடைசியாக இருவரும் ஆசார்யரிடம் சென்று முறையிட்டுக்கொண்டார்கள். ஆசார்யர் உடனே ஊரிலுள்ள ஜனங்களையெல்லாம் ஒரு கூட்டம் போட்டார்; அந்த ஊரிலே பிரதானிகளாயுள்ளவர்கள் அங்கு வந்து கூடும்படி செய்தார். அவர்களிடத்திலே அவருக்குள்ள இயற்கையான வாக் சாதுரியத்துடன் விஷயங்களையெடுத்துக் கூறினார்; ஜராகடிதன் செய்கின்ற இடையூறுகளையும் அக்கிரமங்களையும் எடுத்து இயம்பினார்; இதெல்லாம் உங்களுக்குச் சம்மதம்தானா?" என்று கேட்டார். ஊர் ஜனங்கள் ஜராகடிதனைக் கடிந்து, யாகத்தைக்

குறைவற நிறைவேற்றுதற்கு முன்வந்தார்கள். யாகம் வெகு விமரிசையுடனே நடந்தது.

விஷ்ணுதத்தர் தேவர்களுக்குரிய ரிக்வேத பாகங்களை யெல்லாம் நன்றாக ஜபித்து, யாதொரு தடையுமின்றித் தேவர்களே ஹவிர்ப்பாகத்தை ஏற்றுக்கொள்ளும்வண்ணம் நடப்பித்துவைத்தார்.

இதற்குள்ளே, ஸ்ரீ மாத்வருடைய மகிமைகள் உலகெங்கும் பரந்து சிறந்தன. அவர் அத்வைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களை யெல்லாம் அசைத்துப் பிடுங்கி யெறிந்துவிட்டார். 'இனிமேல் துவைதமதத்தை எவராலும் அசைக்க முடியாது' என்று நன்குணர்ந்தவராய் ஆசார்யர் 'பதரிகாச்ரமத்துக்கு இன்னும் ஒருமுறை சென்று ஸ்ரீ வியாசபகவானைத் தரிசிக்கவேண்டும்' என்று ஆசை கொண்டார்.

---

## 11-வது அதிகாரம்

# ஸ்ரீ மாத்வரின் 2-வது பதரிகாச்ரம யாத்திரை

ஸ்ரீ மத்வாசார்யருடைய சரித்திரத்தைப்பற்றிச் சற்று விஸ்தாரமாக எழுதியுள்ளது ஸ்ரீ மாத்வ விஜயம் என்னும் கிரந்தம் ஒன்றேயாம். இதை யெழுதியவர் பண்டிதர் ஸ்ரீ நாராயணுசார்யர் என்பவராம். இவரும் சோழதேசத்து வித்துவான் ஒருவரிடமிருந்து தாம் கேட்டவாறு எழுதி யிருப்பதாகக் கூறுகிறூர்.

இதைத்தான் நாமும் ஆதாரமாகக் கொண்டு, அநேக விஷயங்களை ஊகிக்கவேண்டி யிருக்கிறது. இவருடைய கொள்கைகள் மூளையைக் குழப்புவனவல்ல; ஹிருதயத்தி லேயுள்ள அன்பை வளர்ப்பனவா யிருந்தன. இவர் தமது கொள்கைகளை ஜனங்கள் எளிதில் நம்பி உய்யுமாறு, ஆங் காங்கே அநேக அற்புதங்களும் சித்திகளும் செய்து வந் தார். ஆனால், அவருக்குச் சித்திகள் செய்து கீர்த்தி சம்பா திக்க வேண்டுமென்ற இச்சை கிடையாது. அத்வைத மதத்தினாலே அறிவழிந்து எத்தனைபேர் திண்டாடிக் கொண் டிருந்தார்கள்? "நானும் பிர்ஹ்மமும் ஒன்றே" என்று எத்தனைபேர் ஒப்புவதற்கு மன மில்லாதவர்களாய் நிர்க்கதியாய்த் தவித்துக்கொண்டிருந்தார்கள்? சுருதிகளின்

உண்மைப் பொருளை யாராயாது போலி வேதாந்திகளின் சமர்த்துப் பேச்சுக்களினால் எத்தனைபேர் மோசம் போனார்கள்? இத்தனைப் பேர்களுக்கும் இப்பொழுது ஸ்ரீ மாத்வர் ஆறுத லளித்தார். ஸ்ரீ மாத்வர் அக்காலத்து இந்தியாவில் வித்தையிலும் மகிமையிலும் சிறந்திருந்த ஸ்தலங்களெல்லாவற்றையும் ஒருமுறைக்கு இருமுறையாகப் பார்வையிட்டார். காசிபோன்ற பெரிய நகரங்களிலே ஸ்ரீ மாத்வர் நெடுநாட்கள் தங்கி தமது ஸித்தாந்தத்தை வியாபகப்படுத்தினார். ஸ்ரீ மாத்வமத ஸித்தாந்தக் கொள்கைகள் வட இந்தியாவிலும் வங்காளத்திலும் பெரும்பான்மையும் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன என்பதே ஸ்ரீ மாத்வர் அவ் விடங்களிலே தமது கொள்கைகளை ஸ்தாபிப்பதற்குப் பெரு முயற்சி செய்திருக்க வேண்டும் என்பதை நிரூபிக்கின்றது. இவர் தமது ஸித்தாந்தத்தை எங்கெங்கும் பரப்பி வந்த பொழுது அரசர்கள் எவரையும் தாம் நாடியதில்லை; அவர்களுடைய உதவியையும் எதற்கும் விரும்பினதில்லை.

ஆசார்யர் முதல் தடவை பதரிகாச்ரம யாத்திரை செய்து வந்ததற்கு மேலே, அநேக காரியங்களைச் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்; அவருடைய பாஷ்யம் பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களாலும் சந்தோஷகரமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆசார்யர் செய்ய ஆரம்பித்த பரோபகார கைங்கர்யத்துக்கு எம்பெருமானுடைய கிருபை பரிபூர்ணமாக இருந்தது என்பதை அவர் அடைந்த வெற்றிகளே நிரூபித்தன.

இப்பொழுது ஸ்ரீ மாத்வர் மறுபடியும் பதரிகாச்ரமம் போக விரும்பி, தமது சிஷ்யர்களிடம் அவ் விருப்பத்தைத் தெரிவித்தார். அவருடைய சிஷ்யர்களுள் அநேகர் அவருடன் கூடப் புறப்பட்டார்கள். அவருடன் கூலிக்காக எவரும் செல்லவில்லை. சுமார் 50 பெயர்களுக்குக் குறையாமல் அவருடன் அப்பொழுது கூடப் புறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இம் முறையும் சத்ய தீர்த்தர் சும்மாயிருக்கவில்லை; ஆசார்யருடன் கூடப் புறப்பட்டார். உபேந்திர தீர்த்தரும் கூடவே புறப்பட்டார்.

ஆசார்யர் இம் முறை வடதேச யாத்திரை செய்யப் புறப்பட்டது எப்பொழுது என்பதை நிர்ணயித்துக் கூற நம்மால் முடியவில்லை. ஆனால், சிலர் "இந்த யாத்திரையானது கி. பி. 1260-க்கும் 1271-க்கும் மத்தியில் எப்பொழுதேனும் நடந்திருக்கவேண்டும்" என்று ஊகிக்கிறார்கள். அப்பொழுது தேவகிரி தேசத்திலே அரசாண்டு கொண்டிருந்த ஈச்வரதேவன் என்னும் ஓரரசன் அநேக அக்கிரமங்கள் செய்து குடிகளை வெகுவாக இம்சித்து வந்தானென்று தெரிகிறது. இவன் அந்தத் தேசத்துக்கு இதற்கு முன்னே அரசனாயிருந்தவனைச் சிம்மாதனத்தினின்றும் துரத்திவிட்டு, தேசத்தைப் பிடுங்கிக்கொண்டவன். ஆசார்யர் அந்தத் தேசத்திலே யாத்திரை சென்றபொழுது அரசாண்டுகொண்டிருந்தவன் இந்த ஈச்வரதேவன்.

இவன் ஒரு விநோதக்ரமான மனுஷனென்று நமக்குத் தோன்றுகிறது. 'ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும்'

மென்ற ஆசை இவனுக்குண்டு; ஆனல், இவனுடைய கஜானவிலிருந்து பணம் கேட்காவிட்டால் எவர் வேண்டுமோ எந்த நன்மை வேண்டுமோ எவருக்கு வேண்டுமோ நன்மை செய்துகொள்வதில் இவனுக்கு எவ்வித ஆக்ஷேபனையும் கிடையாது. தர்மம் செய்யவேண்டு மென்ற எண்ணம் இவனுக்கு உண்டு; ஆனல், தன்னுடைய பொக்கிஷத்திலிருந்து மாத்திரம் ஒரு பைசாகூடக் கொடுக்கமாட்டான்.

ஆசார்யர் பெரிய பரிவார ஜனங்களுடனே மஹாராஷ்டிர தேசத்து வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் இவ் வரசன் தன்னுடைய குடிஜனங்களுடைய பொது நன்மையைக் கருதி ஒரு பெரிய தடாகம் வெட்டிக்கொண்டிருந்தான்; வாசகர்களே! இதைக் கேட்டவுடனே இவ் வரசனைப் புகழ ஆரம்பித்துவிடாதீர்கள்! இன்னும் அரசனே இவ் வேலையைத் தினந்தோறும் இராப்பகலாக மேல் பார்த்து வந்தான். வாசகர்களே! இவ் வரசனைப்பற்றி வாழ்த்துக்கவி கட்ட ஆரம்பிக்கிறீர்களோ? அவசரப்படாதீர்கள்! தன்னுடைய தேசத்திலேயுள்ள சோம்பேறிகள் கிழடு கட்டைகள், வழிப்போக்கர்கள், யாத்திரிகர்கள் ஆகிய எல்லோரையும் இவ் வரசன் தேடிப் பிடித்துக்கொண்டு வரச்செய்து, அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒரு மண்வெட்டியைக் கொடுத்து, அவர்களிடம் பலவந்தமாக வேலை வாங்கி வந்தான். இச் சமயத்திலே ஆசார்யரும் அவருடைய ஐம்பது சிஷ்யர்களும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் இவர்

களையும் பிடித்துக்கொண்டு போய் அரசனிடம் விட்டார்கள். ஆசார்யர் அவ் வரசனிடத்திலே தாம் ஒரு சந்யாசி யென்றும், தம்முடன் கூட வருபவர் சாதுக்களென்றும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அரசன் "நீங்கள் சந்யாசியானாலும் சாதுக்களானாலுமே இந்த வேலையைக் கட்டாயம் செய்யவேண்டியது; பிழைக்க வழியில்லாமல் சந்யாசிகளென்றும் சாதுக்களென்றும் பெயர் வைத்துக்கொண்டு இக் காலத்திலே சோம்பேறிகள் மிகுந்துவிட்டனர்; ஆதலால், தேசத்திலே தொழில்கள் கெட்டழிந்தன. க்ஷாமம் உண்டாய்விட்டது. இன்னும் நீங்கள் உண்மையான சாதுக்களேயாயிருந்தாலும் இவ் வேலை நீங்கள் செய்யவேண்டியதே; சந்யாசம் வகிப்பது எதற்கு? மனுஷ்ய வர்க்கத்தை உய்விப்பதற்குத்தானே; மனுஷ்யவர்க்கத்துக்கும் மற்றப் பிராணிகளுக்கும் க்ஷேமம் உண்டாகுமாறு ஒரு பெரிய தடாகம் வெட்டுவதைப் பார்க்கிலும் சிறந்த கைங்கர்யம் வேறொன்று இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை," என்றான். ஆசார்யர் இன்னும் என்ன எல்லாமோ சொல்லிப் பார்த்தார். ஆனால், அவ்வரசன் கடுமையான மனத்தினனாயிருந்தான்.

ஆசார்யர் பார்த்தார்; 'சாதாரண உலக உபாயங்களினாலே இவனை வெல்ல முடியாது' என்று கண்டுகொண்டு தமது சூட்சும சக்தியினாலும் புத்தியினாலும் ஒரு தந்திரம் செய்ய ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள், நல்லவர்கள், கெட்டவர்கள் சகலரும் இவ்வரசனாலே பலவந்தப்

படுத்தப்பட்டு, அரசனுடைய ஆக்ஞைக்குப் பயந்து வேலை செய்வதை ஆசார்யர் பார்த்து அவர்களுக்காக மிகவும் இரங்கினார்.

ஆசார்யர் அரசனுக்குக் கீழ்ப்படிந்ததுபோல "அரச! நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். தாங்கள் கேட்பதாயில்லை. இனி என்செய்வது? தவிர, தாங்கள் கூறிய மாதிரி, தடாகம் வெட்டுவதும் ஒரு புண்ணிய கைங்கர்யம் தானே. ஆதலால், நானும் என்னுடன் வந்தவர்களும் தாங்கள் என்ன வேலையிட்டாலும் அந்த வேலையைச் செய்யத் தயாராயிருக்கிறோம். ஆனால், நாங்கள் இதுகாறும் இவ்வாயுதம் (மண்வெட்டி) எடுத்துப் பழக்கமில்லை. ஆகையால், தாங்கள் அந்த மண்வெட்டியை யெடுத்து, எப்படி வெட்டுவது என்று காண்பித்துக் கொடுத்தால், அப்படியே வேலை செய்ய நாங்களும் தயாரா யிருக்கிறோம்," என்றார்.

ஆசார்யருடைய வார்த்தைகளிலே அவன் எப்படியோ மயங்கிவிட்டான். அரசன் 'சரி' என்று சொல்லி, ஒரு மண்வெட்டியைத் தனது கையி லெடுத்துக்கொண்டு கீழே மண்ணை வெட்ட ஆரம்பித்தான். பின்னர் அரசனுக்குப் பொழுதுபோனதே தெரியவில்லை; தனது ஸ்வயபுத்தியை இழந்து வேறொன்றையும் கவனியாமல், நிமிர்ந்துகூடப் பாராமல், தன்னுடைய அந்தஸ்தைப்பற்றியுமுள்ள நினைப்புமில்லாமல் நெடுநேரம் மண்ணை வெட்டிக் குவித்துக் கொண்டேயிருந்தான். ஆசார்யர் அரசனுடைய மூடத்

தனத்தைக்குறித்துப் புந்நகை புரிந்துவிட்டு, தமது பரிவார ஜனங்களைக் கூட்டிக்கொண்டு அங்கிருந்தும் நீங்கிப் போய் விட்டார். அவரும் அவரது ஜனங்களும் போனதை அந்த அரசன் கவனிக்கவேயில்லை? அவனுடைய மனமானது மண்வெட்டியினிடத்தும் மண்ணினிடத்துமே நின்றதே யொழிய வேறொன்றினிடத்தும் செல்லவில்லை.

இங்கு அரசன் எவ்வளவு அதிகாரமும் சைந்நியங்களும் சக்தியும் வாய்ந்தவனாயிருந்தாலும் தவராஜன் முன்னே இந்தப்புவிராஜன் திரணம்போன்றவனேயாம் என்பது இதனால் புலப்படுகின்றது. தேவகிரி அரசனாகிய கொடுங்கோல் ஈப்பவாதேவன் தன்னுடைய புத்திக்கும் குணத்துக்கும் ஏற்ற தொழிலைச் செய்யும்படியாய் ஆசார்யர் செய்து விட்டுப் போய்விட்டார்.

ஆசார்யர் இங்கிருந்து புறப்பட்டு வழியிலே அநேக தேசங்களைக்கடந்து கடைசியாகக் கங்கைக்கரையை அடைந்தார். இங்கே, ஆசார்யர் நதியைச் கடந்து செல்லக் கருதி வந்திருக்கும் இவ்விடத்திலே அந்தக் கங்கா நதியானது ஒரு துலுக்க அரசனால் ஆளப்பட்ட தேசம் ஒன்றுக்கும் ஹிந்து அரசன் ஒருவனால் ஆளப்பட்ட தேசம் ஒன்றுக்கும் இடையிலே ஓடிக்கொண்டிருந்தது. அந்த அந்த தேசத்து அரசர்கள் எதிரி கரையிலிருந்து தம் கரைக்கு எவரும் வரக்கூடா தென்றும் உத்தரவிட்டிருந்தார்கள், இவ்விரண்டு தேசங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்ததினாலே. ஆகையால், இக்கரைக்கும் அக்கரைக்கும் பட

குப் போக்குவரவுகள் கிடையாதாயின. கங்கா நதியின் ஆழமும் அகலமும் நாம்சொல்லி வாசகர்களுக்குத் தெரியவேண்டியதில்லை. சாதாரண யாத்திரிகர்களைக்கூட விடாத காரணம் என்னவென்றால், ஒற்றர்கள் தேசத்தினுள்ளே புகுந்து தேச உளவுகளை யறிந்துகொண்டு போய்விடுவார்கள்'' என்பதாம்.

கங்கையின் வடதீரத்திலே அப்போது அரசு செலுத்திவந்த முகம்மதிய அரசன் ஜலாலுடீன் கில்ஜியென்பதாகத் தெரியவருகிறது. நதியின் தெற்குக்கரையிலே எவனோ ஒரு ஹிந்து அரசன், நாளுக்குநாள் எதிர் கரையிலே பலத்துக்கொண்டு வருகின்ற முகம்மதிய அரசை நினைந்து நினைந்து பயந்து நடுநடுங்கிக்கொண்டிருப்பவன் அரசு செலுத்திவந்தான். இச் சமயத்திலே ஸ்ரீ மாத்வர் அங்குப் போய்ச் சேர்ந்தார். கோடிப்பணம் குவித்துக் கொடுத்தாலும் கூட அங்கே அப்பொழுது அக்கரை செல்வதற்குப் படகுகள் கிடைக்கா. ''இன்னும் எவனாவது ஹிந்து மதத்தினன் இக்கரையிலிருந்து அக் கரைக்குச் செல்லத் துணிவானானால் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்'' என்று முகம்மதிய அரசன் கண்டிப்பாக உத்தரவு செய்திருந்தான். தவிர, இந்த உத்தரவை மீறி எவனாவது ஹிந்து கொஞ்சம் மனத்துணிச்சலுடனே அக் கரைக்குச் செல்லுவானானால் அவனுக்குச் சரியான சிக்ஷை விதிப்பதற்கு வீரர்களும் முரடர்களுமான துலுக்கப் படைவீரர் ஒருபடை தயாராகக் காத்துக்கொண்டிருந்தனர்.

கரையிலிருந்த ஜனங்கள் ஸ்ரீ மாத்வரை நோக்கி "இப்பொழுது அக்கரைக்கு எவ்விதத்திலும் போக முடியாது" என்றும், மற்றும் கூறினர். யோசனை செய்து பார்த்தார் ஆசார்யர். 'நல்லது; அந்தத் துலுக்க அரசனுடைய உத்தரவை மீறித்தான் பார்க்கலாமே' என்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால், எவ்வளவு பணம் கொடுத்தாலும் படகுகள் கிடைக்கவில்லையே. "நல்லது; பிரகிருதியையும் மீறிப் பார்க்கலாமே" என்று ஆசார்யர் தீர்மானித்துக்கொண்டார். ஸ்ரீ மாத்வர் தாம் முன்னே கங்கையி லிறங்கி நின்றுகொண்டு தமது கையைப் பின்புறமாகக் கொடுத்துத் தமது சிஷ்யர்களுள் ஒருவரைப் பிடித்துக்கொள்ளச் சொன்னார்; இம்மாதிரியே ஒருவர்பின் ஒருவராக எல்லோரையும் கைகளைப் பிடித்துக்கொள்ளச் சொன்னார். தண்ணீரில் நடந்தார். ஆசார்யர் தமது சிஷ்யர்களுள் எவருக்கும் எவ்வித சேதமு மில்லாமல் எல்லோரையும் கூட்டிக்கொண்டு அக்கரை சேர்ந்தார்.

அங்கே காத்துக்கொண்டிருந்த முகம்மதியப் படைவீரர்கள் "தீன், தீன்" என்று ஒரு கூச்சலிட்டுக்கொண்டு, இவர்கள் மேலே பாய்ந்தார்கள். உத்தரவு மீறி நதியைக் கடந்ததற்கு அவர்களைப் பிடித்துக் கொன்று தின்றுவிடுவதாக அந்த முகம்மதியர்கள் பயமுறுத்தினர்கள். ஆனால், ஆசார்யர் இதற்குப் பயந்தவரா? அவர் சற்றும் பய மில்லாதவராய் அந்தத் துலுக்கப் படைவீரர்களை நோக்கி, "நாங்கள் ஒற்றர்களல்லர்" என்றும், "அரசனிடம் கொண்டு

போய் விட்டால் அவரிடத்திலே உத்தரவு பெற்றுக் கொண்டு மேலே யாத்திரை செய்யத் தயாரா யிருக்கிறோம்'' என்றும் கூறியருளினார். அந்தத் துலுக்க வீரர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். படகுகளில்லாமல் இவர் தமது சிஷ்யர்கள் அனைவரையும் கூட்டிக்கொண்டு அந்த ஆழமான கங்கா நதியில் இறங்கி நடந்து வந்ததினால் அவர்கள் பிரமித்து இவர்களுக்கு எவ்விதத் துன்பமும் செய்யாமல் தங்கள் அரசனிடம் இட்டுச்செல்லச் சம்மதித்திருக்கலாம். தவிர ஆசார்யருடைய வார்த்தைகள் அவர்களுக்கு அமிர்தசமானமா யிருந்தன. ஆதையினால், அந்த முகம்மதியப் படைவீரர்கள் ஆசார்யருடைய வார்த்தைகளிலே நம்பிக்கை வைத்து இவரைத் தங்கள் அரசனிடம் இட்டுக்கொண்டு சென்றார்கள்.

அப்பொழுது டில்லியில் அரசுசெலுத்தி வந்தது முகம்மதியன். அவனுக்கு ஹிந்துவென்றால் ஆகாது. அப்பொழுது அரசு வகித்துவந்தவன் ஜலாலுடீன் கில்ஜியென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். இவன் துலுக்கனா யிருந்தபொழுதிலும் மிகவும் நல்லவன்; சமாதானத்தையே விரும்பியவன். இரத்தத்தினிடத்திலே ஆசையுள்ளவனல்லன். இவனுடைய 70-வது வயதிலே இவன் சிம்மாதனம் ஏறினான். இவன் நிரம்பவும் தயை தாக்ஷிண்யத்துடனே, இரக்கத்துடனே ராஜ்யபாரம் செய்தான்; இவனுக்கு வித்துவான்களிடத்திலே பிரியம் அதிகம். அவனுடைய காலத்திலே பல வித்தைகளிலும் தேர்ந்தவர்

கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் இவ் வரசனிடத்திலே தங்கள் வித்துவத்தைக் காண்பித்துப் பரிசில் பெறலாமென்று வந்து கூடுவார்கள். பெயர் பெற்ற பாரசீகக்கவியாகிய அமீர் குஸ்ரூ என்பவனே இவ்வரசன் தன்னுடைய சமஸ்தான கவியாக வைத்துக்கொண்டிருந்தான். இன்னும் பல பாஷைகளிலும் பல விஷயங்களையும் பற்றியுள்ள பெரியனவும் சிறியனவுமான கிரந்தங்கள் பலவற்றையும் சேர்த்து ஒரு பெரிய புத்தகசாலை ஸ்தாபித்திருந்தான். இவ்வரசன் சற்றும் கர்வ மில்லாதவன்; டம்பம் இல்லாதவன்; சாதாரண ஜனங்களுடனே சாதாரணமாகக் கலந்து பழகிவந்தான்; விரோதிகளிடத்துக்கூட அன்பே செலுத்திவந்தான். துலுக்க மந்திரிகள், இரத்தப்பிரியர்கள் இவனைத் துஷ்டச் செய்கைகட்கு உத்திரவு கொடுக்கும்படி தூண்டினால் இவன் "மந்திரிகளே! நான் கிழவனாய்விட்டேன்; இன்றோ நாளையோ எப்பொழுதோ நான் அல்லாகுத்தாலாவிடம் போய்ச் சேரப்போகிறேன்; அங்குப் போகும்பொழுது என்னுடைய கைகளை இரத்தத்தில்நனைத்துக்கொண்டா நான் போகவேண்டும்?" என்பான்.

ஆசார்யர் அவ்வரசனை நேரில் கண்டார்; ஆசார்யர் கங்கையில் இறங்கி நடந்து வந்த சமாச்சாரத்தை அவ்வரசனுடைய பணியாளர்கள் அவனிடம் அறிவிக்க, அவன் ஆச்சர்ய மடைந்தான். ஆசார்யர் அவ்வரசனிடத்திலே சுத்தமான பாரசீக பாஷையில் கம்பீரமாகப் பேசினார். முன்னொருமுறை இவர் வட இந்தியாவுக்கு வந்திருந்தபோது

இவர் பாரசீக பாஷையைக் கற்றுக்கொண்டாரோ அல்லது இப்பொழுதுதான் வருகிறவழியிலே கற்றுக்கொண்டாரோ தெரியவில்லை. ஜலாலுடீன் கில்ஜிக்கு ஏற்கனவே வித்வான்களிடத்து அபிமானம் அதிகம் உண்டாதலால் ஆசார்யருடைய சமர்த்தைக் கண்டு அவன் மெச்சினான். அவ்வரசன் ஆசார்யருடைய சுந்தர ரூபத்திலும் கம்பீரமான பார்வையிலும் சொக்கிவிட்டான். ஆசார்யரைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஆநந்தம் மேன்மேலும் ஊறித் ததும்பிற்று. 'இவர் தெய்வீக புருஷரே' என்று அவன் நினைத்தான்; 'இவரிடத்திலே எவ்விதமான தீய நினைப்புக்களாவது தீச்செய்கைகளாவது இருப்பதற்கு இடமில்லை' என்று தீர்மானித்துக்கொண்டான். அரசன் இவரைக் கண்டவுடனே கொஞ்சம் சந்தேகித்துக்கொண்டுதான் இருந்தான்; ஒரு சில வார்த்தைகள் பேசி முடிந்தவுடனே, அரசனுக்கு அவரிடத்திலே பரிபூர்ண நம்பிக்கை யுண்டாயிற்று; இன்னும் சில வார்த்தைகள் ஆசார்யர் பேசினார்; அவ் வரசனுக்கு அவரிடத்திலே மதிப்பு விழ ஆரம்பித்துவிட்டது.

அங்கு ஆசார்யர் ஜலாலுடீன் கில்ஜியி னிடத்தில் என்ன பேசினா ரென்பது தெரியவில்லை; எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தா ரென்பதும் தெரியவில்லை. அரசன் ஆசார்யருடைய சமர்த்தையும் வித்வத்தையும் கண்டு மெச்சி, அவருடைய அமிர்த வசனங்களிலும் ஆநந்தகரமான வடிவத்திலும் ஈடுபட்டவனாய், தன்னுடைய ராஜ்யத்திலே பாதியை ஆசார்யருக்கு இனமாகக் கொடுத்தா

னென்றும்; அவர் வேண்டாமென்று கூறி மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

பின்பு ஆசார்யர் அவ் வரசனிடத்திலே விடைபெற்று அங்கிருந்து நீங்கி யாத்திரை போனார். இந்த யாத்திரையிலே இன்னும் அநேக ஆச்சர்ய சம்பவங்கள் நிகழ்ந்தனவாம். அவற்றுள் ஒன்று இரண்டை இங்குக் கூறுவோம். இவர்கள் தங்கள் யாத்திரை சமயத்திலே அடர்ந்து இருண்ட பெருங் காடுகளையும் மலைகளையும் கடக்க வேண்டி வந்தது. அக் காலத்திலே ஒரு அங்குலத்துக்கு ஓர் அரசனும் ஒரு நிமிஷத்துக்கு ஒரு அரசனுமாக ஆங்காங்கு அநேக தான்தோன்றித் தம்பிரான்கள் கிளம்பிக்கொண்டிருந்தார்கள். அரசாங்கங்கள் நிலையிலாது குழம்பிக்கொண்டிருந்ததினாலே, எங்கும் கொள்ளைக்காரர்கள் மிகுந்து கொள்ளையடித்துக்கொண்டு வந்தனர். ஈச்வரனிடத்து இவர்கள் வைத்திருந்த திட நம்பிக்கையினாலேயே இவர்கள் இவ்வளவு தைர்யத்துடன் இக் காலத்தில் யாத்திரை செய்தார்கள் என்று சொல்லலாம்.

ஒரு காலத்திலே ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் ஒரு காட்டின் வழியாக யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது, சில திருடர்கள் இவர்களைத் தடுத்து நிறுத்திப் பய முறுத்தினார்கள். ஆசார்யர் அப்பொழுது ஒரு ஆச்சர்யமான உபாயம் செய்தார்; தமது மேல் உத்தரீயத்தை யெடுத்து ஒரு பந்துபோலச் சுற்றி அத் திருடர்களின் மத்தியில் எறிந்தார்; 'அது பணப்பையாக்கும்' என்று

நினைத்து ஒருவன் அதை யெடுப்பதற்குக் குனிந்தான், இன்னொருவனும் குனிந்தான். முதலாமவன் இரண்டாமவனுடைய கையி லிருந்து அதைப் பிடுங்கி, இரண்டாமவன் முதலாமவனுடைய கையிலிருந்து அதைப் பிடுங்க, இதற்குள்ளாக மற்றவர்களெல்லோரும் அதைப் பிடுங்க எத்தனிக்க, ஒருவருக்கொருவர் கோப நீபிதர்களாய்த் தங்கள் தங்கள் கத்திகளை யுருவிக்கொண்டு, ஒருவரோடொருவர் போர் புரிந்து எல்லோரும் மாண்டார்கள்; இந்த வேடிக்கையை ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார்களாம்.

இன்னொரு சமயத்திலே ஒரு நூறு திருடர்கள் ஆசார்யரையும் மற்றவர்களையும் வந்து தடுத்தார்கள். இப்பொழுது என் செய்வது! ஆசார்யருடைய சிஷ்யர்களுள் ஒருவராகிய உபேந்திரர் என்பவர் திருடர்கள்மீது பாய்ந்து அவர்களுள் ஒருவனிட மிருந்து ஒரு வாளை பிடுங்கிக் கொண்டு இடசாரி வலசாரியாக, வலசாரி இடசாரியாகக் குதித்து, வாளை நாலா பக்கங்களிலும் வீசி, திருடர்களைத் துண்டு துண்டாக வெட்டி யெறிந்தார். இவர் பாய்ந்ததையும் இவர் வாள் வீசும் வேகத்தையும் கண்டு திருடர்கள் திடுக்கிட்டுச் சிலர் உயிர் தப்பியது தம்பிரான் புண்யமென்று ஓடிவிட்டார்கள். உபேந்திரருக்குக் கத்தி யெடுத்து வீசவே தெரியாது; இதுவரை அவர் கத்தி வீசி விளையாடினதே யில்லை. மற்றச் சிஷ்யர்கள் ஆச்சர்யப்பட்டார்கள்; அவர்களுக்கு உபேந்திரரைச் சிறு வயதுமுதல் தெரியும்.

உபேந்திரர் "இக்கலியுகத்துக் காக்கையும் கண்டால் காதைப் பிடித்துக் கவ்வித் தூக்கிக்கொண்டு போய்விடுமோ" என்று எல்லோரும் சொல்லும்படி அவ்வளவு பரம சாது. தவிர, மகா சாதுவா யிருந்ததினாலேதான் ஆசார்யருடைய கூட்டத்திலே வந்து சேரும்படி நேரிட்டது. இவ்வளவு சாத்வீக குணமுள்ள உபேந்திரர் இன்று ஒரு பெரிய 'ஒஸ்தாத்' ஆய்விட்டார்; நெடுநாட் சிலம்ப வித்தைக்காரர்களும் கண்டு மூக்கிலே கையை வைத்து ஆச்சர்யப்படும்படி அவ்வளவு பெரிய சிலம்ப வித்தைக்கார ராய்விட்டார். ஆனால், இவ்வாறு ஆச்சர்யமடைந்த சிஷ்யர்கள் தங்கள் ஆசார்யரைப் பார்த்தவுடனே, அவர்களுக்கு உண்மை தெரிந்துவிட்டது. அது உபேந்திரருடைய சாமர்த்திய மன்று. உபேந்திரர் திருடர்களை எதிர்த்துத் தாக்குகையில், ஆசார்யருடைய முகம் நெருப்புக் கக்கிக்கொண்டிருந்தது. ஆசார்யர் தமது சக்திகளை உபேந்திரருக் குள்ளே புகுத்திவிட்டார். உபேந்திரர் பைசாசம் பிடித்தவர் போலப் போராடினாரே யொழிய, நிதானமாய், ஸ்வய புத்தியுடன் போராடுபவர்போலப் போராடவில்லை.

இன்னொரு சமயத்திலே, சில திருடர்கள் இவர்களை எதிர்த்தார்கள். ஆனால், அந்தத் திருடர்களுடைய பார்வைக்கு ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் அத்தனை பாறைகள்போலத் தோன்றினார்கள்; அந்தத் திருடர்கள் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே, இந்தப் பாறைகள் அசைய 'ஆரம்பித்தன. திருடர்கள் திடுக்கிட்டார்கள்.

இதென்ன! பாறைகளா நடந்து வருகின்றன? ஆச்சர்யப்பட்ட திருடர்கள் இப்பொழுது பயம் கொண்டவர்களாய் ஆசார்யர் முன்னே போய் நின்று, உடல்க ளெல்லாம் உதற லெடுக்க, சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, தங்களை மன்னித்து, தாங்கள் உய்யுமாறு போதிக்கும்படி வேண்டினார்கள். ஆசார்யருடைய தர்சன மகிமையினாலும் உபதேசப் பெருமையினாலும் இந்தத் திருடர்க ளனைவரும் தங்கள் திருட்டுத் தொழில்களை விட்டுவிட்டு, சன்மார்க்கத்திலே நடக்கும் சாத்வீக புருஷர்க ளாய்விட்டார்கள்.

இவர்களுடைய யாத்திரையிலே இவர்கள் அந்தகாரம் நிறைந்த ஆரண்யங்களிலும் மலைகளிலும் நடந்து செல்ல வேண்டி வந்தது என்பதை எல்லோரும் ஊகித்துக்கொள்ளலாம். இந்தப் பயங்கரமான மார்க்கங்களிலே திருடர்கள் மாத்திரமல்ல இவர்கள் எதிர்த்து நிற்கவேண்டி வந்தது; அந்தக் காட்டு மிருகங்களாகிய கரடி, புலி, சிங்கம் முதலிய துஷ்டப் பிராணிகளும் இவர்களை அநேக சந்தர்ப்பங்களில் எதிர்த்தன. ஒரு சந்தர்ப்பத்தில் எல்லோருக்கும் முதலில் சத்திய தீர்த்தர் போய்க்கொண்டிருந்தார்; அங்கே ஒரு மரத்தடியில் பதுங்கி யிருந்த ஒரு புலி திடீரென அவர் மீது பாய்ந்தது. நல்ல வேளையாய் ஆசார்யர் உடனே அதைக் கவனித்துவிட்டார்; இல்லையேல் சத்யதீர்த்தர் அன்று அப் புலிக்கு இரையா யிருப்பார். ஆசார்யர் தமது கை முஷ்டியினால் புலியின் முகத்திலே ஒரே குத்தாகக் குத்தி அதைக் கொன்றுவிட்டு, சத்யதீர்த்தரைக் காப்பா

ற்றிவிட்டார். "ஆசார்யர் அம் மிருகத்தைக் குத்தவில்லை" என்றும், "அவருடைய ஸ்பர்ச மாத்திரத்திலேயே அது மரித்துவிட்டது" என்றும் சிலர் சொல்லுகிறார்கள். சத்ய தீர்த்தர் நடுநடுங்கி, சரீரமெல்லாம் ஆடிக்கொண் டிருந்தார்; ஆசார்யர் அவரை ரக்ஷித்தும் அவர் பயத்தினால் இழந்த பிரக்ஞையைத் திரும்பவும் அடைதற்குக் கொஞ்சம் நேரம் வேண்டி வந்தது; சத்யதீர்த்தர் பிரக்ஞை பெற்று, பயம் கொஞ்சம் நீங்கி, மனத்தைத் தேற்றிக்கொண்டு பார்க்கப் புலி கீழே விழுந்து செத்துக் கிடந்தது; செத்துப் போயிருக்க வேண்டிய தாம் சாகாமல் தமது ஆசார்யருடைய கிருபையினால் காப்பாற்றப்பட்டதை யறிந்து கொண்டார். அப்பொழுது சத்ய தீர்த்தர் தமது ஆசார்யருக்கு எவ்வித மர்யாதை செய்திருப்பா ரென்பதை நம்மால் ஊகிக்க முடியுமா? அவர் ஓடினார்; ஆசார்யருடைய கால்களிலே சாஷ்டாங்கமாக விழுந்தார்; எழுந்தார்; இரு கைகளையும் கூப்பிக்கொண்டார்; "என்னப்பனே! நான் உன்னை என்னென்று புகழ்வேன்! நான் உனக்கு என்றென்றும் அடிமை. நான் எந்த நிமிஷத்திலும் உன்னை விட்டு நீங்காது உனக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றிருக்குமாறு அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இவ்விதமாக ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் அநேக ஆபத்துக்களைக் கடந்து யாத்திரை செய்துகொண்டே போக, ஹிமவத்கிரி தென்பட்டது. ஆசார்யர் முந்தி

வந்திருந்தபொழுது செய்தது போலவே இப்பொழுதும் காடுகளுக்குள்ளே நுழைந்துவிட்டார்; பாறைக்குப்பாறை குதித்துக் குதித்து வெகு வேகமாகச் சென்றார்; ஓடினார் ஸ்ரீ பாதராயணரிடம். பதரி விருக்ஷத்தி னடியிலே ஸ்ரீ வியாச மஹரிஷி மகா சாந்த புருஷராய், ஞானமெல்லாம் திரண்டு ஓர் உருவெடுத்து வந்ததோ வென்ன, உட்கார்ந்திருந்தார். ஆசார்யர் அவருடைய அடிக் கமலங்களிலே அடியற்ற பனைமரம்போல விழுந்தார். ஆ! ஆ! அப்பொழுது அவர் அடைந்த ஆநந்தத்தை என்னென்று சொல்வது; வாக்குக் கெட்டாதது; மனத்துக்கும் எட்டாதது. ஆசார்யருடைய ஆத்மா ஆநந்தத்திலே கரைந்து ஆநந்தமே வடிவமாய்விட்டது. சாக்ஷாத் பகவானை இன்னொரு முறை பிரத்தியக்ஷத்தில் காணும்படியான பாக்கியம் கிடைத்துவிட்டதே! முன்னர் வந்திருந்தபொழுதே, சிஷ்டர்களுக்குள்ளே ஸ்ரீ வியாசருடைய சிஷ்யர்களுக்குள் இவர் முதன்மை வகித்துவிட்டார் என்று நாம் கூறியுள்ளது வாசகர்களின் ஞாபகத்திலிருக்கலாம். இப்பொழுது ஸ்ரீ மாத்வர் ஸ்ரீவியாசாச்ரமம் சென்றதுதான், ஸ்ரீ வியாசருடைய பிரதம சிஷ்யர் வந்துவிட்டாரென்று மற்ற சிஷ்யர்கள் ஆர்ப்பரித்து ஆநந்தித்தார்கள். ஆசார்யர் பிரபஞ்ச ஞாபகத்தையே தவிர்த்துவிட்டு, பகவத் சந்நிதானத்திலேயே மனத்தைச் செலுத்தியிருந்தார்.

ஆ! ஆ! ஹிமவத்கிரியின் காட்சியை நம்மால் வர்ணிக்க முடியுமா? பிரகிருதி அங்குதான் செயற்கை யழகு

எதுவுமின்றி, பிறந்த மேனியாய் நிர்த்தனம் செய்கிருள்; அவளைக் கலந்து சுகிக்க விரும்பும் ஆடவர்கள் அங்குத்தான் செல்லவேண்டும். உலகிலேயே நிகரில்லாமல், எங்கே வைகுந்தத்துக்கு ஏணியாகப் போகின்றதோ என்னும்படி வான் அளாவி மேன்மேலும் வளர்ந்து செல்லும் செங்குத் தான சிகரங்கள்; பச்சைப் பசேலென்று எங்குப் பார்த்தா லும் பரந்து விளங்கும் பசுமை, சலசலவென்ற சப்தத் துடனே அங்கும் இங்கும் ஓடுகின்ற அருவிகளின் ஸ்படி கத் தன்மை, இன்பத்தைக் கெடுப்பதற்கு இரண்டாவது வஸ்துவில்லாத ஏகாந்தம், சாந்தி சமாதானமும் நிறைந்து சதா கோஷிக்கின்ற மௌனம், கபடற்றுத் துள்ளிக் குதிக் கும் மான் குட்டிகள், தேவகானம்போல திவ்ய கீதங்கள் பாடுகின்ற பக்ஷி யினங்கள், இன்னும் எத்தனை விதங்கள்! என்ன அழகு! ஆங்குள்ள ஒவ்வொன்றிலிருந்தும் அழகு சொட்டிச் சொட்டி வடிகின்றது! ஆ! ஆ! ஆங்குள்ள செடி கொடிகளிலிருந்து வீசுகின்ற வாசனையானது ஆத்மாவை ரமிக்கச்செய்து, சொக்குப்பொடி தூவியதுபோல மயக்கி விடுகின்றது; கள்ளங் கபடற்ற சாத்வீக சம்பந்நர்களின் ஹிருதயம்போன்ற நீரோட்டங்கள்! ஆ! ஆ! இவற்றிலே தான் பரமாத்மா ஒளிந்துகொண்டிருக்கிருரோ? அதனுலே தான் அது அவ்வளவு சுத்தமாய், ஸ்படிகம்போல நிர் மலமாயிருக்கின்றது; அப் பர்வதக் காட்சியினிடத்தே கண் கள் சென்று அழகைப் பறித்துப்பறித்துக்கொண்டு வந்து கொடுத்துக்கொண்டே யிருக்கின்றன; ஆயினும், ஆத்மா

வின் ஆசை யடங்கவில்லை; ஏது? அங்குப் போனவன் கதி நெருப்பினிடத்து விழுந்த விட்டிற்பூச்சியின் கதிதான்.

இவ்வளவு போதாதென்று மகரிஷிகளுடைய சகவாசம், மகாத்மாக்களுடைய கூட்டம், சாதுக்களுடைய சங்கம். இன்னும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய தர்சனம்; அவரிடமிருந்து உலகுக்கெல்லாம் ஒளியளிக்கப் புறப்படுகின்ற ஒரே கிரணத்தின் உஷ்ணமற்ற பிரகாச சம்பந்தம்; இவ்வளவையும் அநுபவிக்கும்படி கொடுத்துவைத்தவன் ஆடாமலும் பாடாமலும் பித்தன்போல ஓடாமலும் இருக்க முடியுமா?

ஸ்ரீமாத்வர் அந்த இடம் நிரதிசயாநந்தத்துக்கு இருப்பிடமாகிய வைகுந்தமே யென்று நினைத்தார்; பக்தி பரவசராய் ஆநந்தக் கூத்தாடினார். இம்முறை ஸ்ரீமாத்வருக்கு அவ்விடத்தை விட்டு அகல மனம் வரவில்லை; இவ்விடத்திலே ஹிருதயம் குளிர்ந்துவிட்டது, நிறைந்துவிட்டது, திருப்தியடைந்துவிட்டது. இவ்விடத்தை விட்டுப் பிரிய எவருக்குத்தான் மனம் வரும்? ஸ்ரீவியாசபகவானும் கொஞ்ச நாட்களுக்குப் பேசாமலிருந்தார்; ஸ்ரீ மாத்வர் இன்னும் அநேக ச்ருதிகளை யெல்லாம் ஈஸ்வர முகத்திலே ஆராய்ந்து கொண்டிருந்தார்; இவர் போய்ச் சில நாட்களாய்விட்டன; 'இவராகச் செல்வு பெற்றுக்கொண்டு, எக் கார்யம் செய்ய ஜனித்தாரோ, அக் கார்யம் செய்யப் போய்விடுவார்' என்று ஸ்ரீ வியாசர் நினைத்திருந்தார். ஆனால், ஸ்ரீ மாத்வர் அந்த நினைப்பே யில்லாமல் அங்கேயே ஸ்திரமாக வசிப்பதற்கு

நிச்சயித்த விட்டவர்போல, இருந்தார். ஸ்ரீ வியாசபகவான் ஒருநாள் ஸ்ரீ மாத்வரை நோக்கி, "நீ உலகிலே எதற்காக ஜனித்தாயோ அக் கார்யத்தை மறந்துவிட்டு நீ யிப்படி யிருத்தல் அழகா?" என்றார். அப்பொழுதுதான் ஸ்ரீமாத்வருக்குத் தாம் செய்யவேண்டிய தர்ம மொன்று இருக்கிறதென்ற ஞாபகம் வந்தது. இச் சமயத்திலே வியாசபகவான் தமது பிரதம சிஷ்யராகிய ஸ்ரீ மாத்வருக்கு எட்டு சாளக் கிராமங்கள் கொடுத்தனுப்பினா ரென்று சொல்லப்படுகிறது; இன்னும் ஸ்ரீ வியாசமூர்த்திபோன்ற விக்கிரகங்கள் எட்டு கொடுக்கப்பட்டன வென்றும் சொல்லப்படுகிறது.

ஆசார்யருக்கு 'மகா பாரதத்தைச் சுருக்கமாக, அதனுடைய கருத்துக்கள் எதற்கும் பங்கம் வராமல், எல்லோருக்கும் எளிதிலே பொருள் படும்படி, ஒரு நூல் இயற்ற வேண்டும்' என்ற ஆசை நெடுநாட்களாக இருந்துகொண்டிருந்தது. இப்பொழுது அவர் இந்த விஷயமாக ஸ்ரீ வியாசரிடத்திலே யோசனை கேட்க, அவர் அவ்வாறே செய்யும்படி ஆக்ஞாபித்தார். ஸ்ரீ மாத்வர் மகா பாரதத்தின் சாராம்சத்தை யெல்லாம் வடிகட்டி யெடுத்து 32 அத்தியாயங்களிலே ஒரு நூல் எழுதி முடித்தார். இந் நூலுக்கு ஸ்ரீமாந் மகா பாரத தாத்பர்ய நிர்ணயம் என்று பெயர்.

ஸ்ரீ மாத்வர் பின்னர் ஸ்ரீ வியாசபகவானிடத்திலும் அங்கிருந்த மற்ற ரிஷிகளிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு ஹிமவத்கிரியினின்றும் கீழே யிறங்கித் தமது சிஷ்யர்கள் தமக்காகக் காத்துக்கொண்டிருந்த இடம் வந்து சேர்ந்தார்;

அவர் ஒரு கிரந்தத்தையும் எட்டுச் சாளக்கிராமங்களையும் இம்முறை ஸ்ரீ வியாசாச்ரமத்திலிருந்து கொண்டுவந்தது கண்டு அவருடைய சிஷ்யர்கள் அக மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீமாந் மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் என்ற நூல் இல்லாத மாத்வ கிருகங்கள் இரா. இந்த எட்டுச் சாளக்கிராமங்களும் இப்பொழுது நான்கு இடங்களில் இருக்கின்றன; ஒன்று சுப்பிரமணியத்திலும், ஒன்று உடுப்பியிலும், ஒன்று சோஸே மடத்திலும், மற்ற ஐந்தும் உத்தராதி மடத்திலும் இருக்கின்றன.

## 12-வது அதிகாரம்.

# திரும்புகால் யாத்திரை

ஸ்ரீ மாத்வருடைய சிஷ்யர்கள் எதற்கென்று ஆநந்திப்பார்கள்? தங்களுடைய ஆசார்யர் எவ்வித ஆபத்துமின்றித் தங்களிடம் திரும்பிச் சேர்ந்ததுபற்றி ஆநந்திப்பார்களா? அவர், மகா பாரதத்தின் சாராம்சத்தை யெல்லாம் கசக்கிப் பிழிந்து வடிகட்டி ஸ்ரீ மகா பாரத தாத்பர்ய நிர்ணயம் என்ற பெயருடன் உண்ண உண்ணத் தெவிட்டாத தேவாமிருதமாய்க் கொண்டுவந்திருக்கிறாரோ, அந்த நூலைக் கண்டு ஆநந்திப்பார்களா? அல்லது அழகிய, மகா பரிசுத்தமான சாளக்கிராமங்களைக் கண்டு சந்தோஷிப்பார்களா? ஆகவே, ஆசார்யருடைய சிஷ்யர்கள் ஆநந்தத்தினாலே ஒன்றும் தோன்றாதவராய், சிறிது நேரம் பைத்தியம் பிடித்தவர்கள்போன் றிருந்தார்கள்.

உடனே ஆசார்யரும் மற்றவர்களும் ஹிமவத்கிரியினின்றும் கீழே யிறங்கிச் சுதேசம் நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால், இப்பொழுது, முந்திய தடவை செய்ததுபோலவே, பிரஸ்தான ஸ்தலங்களை யெல்லாம் தர்சிக்காமல் போகவில்லை. ஆசார்யருக்கு 'நேரே உடுப்பிக்குச் சென்றுவிடலாம்' என்ற மனம் இருந்தாலும், அவருடைய சிஷ்யர்கள் வழியிலே யிருந்த ஸ்தலங்களை யெல்லாம் தர்

சித்துவிட்டுச் செல்ல விரும்பினார்கள்போலத் தோன்று கிறது. ஆசார்யர் சிஷ்யர்களுடைய விருப்பத்துக்குத் தடை யொன்றும் சொல்லவில்லை. மறுபடியும் இவர்கள் கங்கா தீரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களை அக்கரை சேர்ப் பதற்குப் படகுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. முன்போல வே அந்த நதியின் கரையிலே யிருந்த தேசங்களின் அர சர்கள் ஒருவருக்கொருவர் விரோதிகளா யிருந்தார்கள். இவ் வரசர்களிலே ஒருவன் முகம்மதியன்; இன்னொரு வன் ஹிந்து. இப்பொழுது ஆசார்யரும் அவரைச் சேர்ந்த வர்களும் முகம்மதியனுடைய கரையிலே நிற்கிறார்கள்; ஹிந்து அரசனுடைய கரைக்கு வந்து சேரவேண்டும். முன்னர் முகம்மதியக் கரையிலே முகம்மதியப் படை வீரர்கள் பந்தோபஸ்துக்காகக் காத்து நின்றதுபோல, இங்கும் ஹிந்து படை வீரர்கள் காத்து நின்றார்கள். இதி லே ஒரு விசேடம். ஆசார்யர் நதி வந்து சேர்வதற்கு முன் னே அவருடைய சிஷ்யர்கள் அங்கு வந்து சேர்ந்து படகு கிடைக்காமையால் அங்குக் களைத்து உட்கார்ந்திருந்தார் கள். சூர்யன் அஸ்தமன மாய்விட்டது; இன்னும் ஸ்நாந பாந பூஜை முதலியவற்றுக்குச் சௌகர்யம் ஏற்படவில்லை; ஆகையால், இன்னும் எவரும் தண்ணீரினால்கூட வாயை நனைக்கவில்லை. ஆசார்யருடைய சிஷ்யர்களுக்குப் பசி யொரு பக்கம், சோர்வு ஒரு பக்கம். ஆகையால், அவர்கள் மிகக் களைத்து அங்கு உட்கார்ந்திருந்தார்கள். ஆசார்யர் வந்து சேர்ந்தார்; சங்கதி தெரிந்துகொண்டார்; சற்று நேரம் யோசித்தார்; ஏதோ தமது மனத்துக்குள்ளேயே

தீர்மானித்துக்கொண்டார்; சட்டென்று அங்கிருந்து மறைந்துவிட்டார். சிஷ்யர்களுக்குக் குருவின் கருத்து இன்னதென்று தெரியாது. ஆகார மில்லை; எங்குப் பார்த்தாலும் இருள் சூழ்கின்றது; இருப்பதற்குச் சௌகர்யமான இடமில்லை; களைப்பு ஒரு பக்கம் மேலிடுகிறது; குளிரோ பொறுக்க முடியவில்லை. இவ்வளவு கஷ்டங்களும் ஆசார்யருடைய சிஷ்யர்களுக்குப் போதாதென்று, இப்பொழுது ஆசார்யரும் எங்கோ மறைந்து போய்விட்டார்.

ஸ்ரீ மாத்வர் சிஷ்யர்களின் மத்தியிலிருந்து மறைந்து போந்து, கங்கையிலே இறங்கி, தமது ஜலஸ்தம்ப சாமர்த்தியத்தினலே சாதாரணமாகப் பூமியில் நடப்பதுபோலத் தண்ணீரிலும் நடந்து அக் கரை சேர்ந்தார். ஆனல், தண்ணீரின் மேலே இவர் மிதந்து நடந்து சென்றரென்று நினைக்கவேண்டாம்; தண்ணீரினுள் இறங்கித்தான் நடந்து சென்ருர்; இவருடைய உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் தண்ணீரினுள் இறங்கிற்று. அவர் மறுகரையிலேறினபொழுது, இவருடைய சரீரத்திலாவது வஸ்திரத்திலாவது சொற்பமும் ஈரமே யில்லை; இவர் தண்ணீரில் இறங்கியதேயில்லை யென்று சொல்லும்படி யிருந்தது. அக்கரையிலிருந்த ஹிந்துபடைவீரர்களும் மற்ற ஜனங்களும் இந்த அற்புதத்தைப்பார்த்துக்கொண்டிருந்தார்களாதலால், ''மகா யோகியொருவர் வந்திருக்கிருர்'' என்ற சங்கதி அவ்வூரெங்கும் ஒரு நிமிஷத்துக்குள்ளே பரவிவிட்டது.

ஜனங்கள் நூற்றுக்கணக்காக, கும்பல் கும்பலாக, திரண்டு வந்து ஆசார்யருக்கு அடி பணிந்து பலவித உபசா

ரங்கள் செய்தார்கள். ஸ்ரீ மாத்வரை யொருதரம் பார்த்து விட்டால், அப்புறம் அவரிடத்திநின்றும் பிரிவதற்கு எவருக்குத்தான் மனம் வரும்? மகாத்மா ஸ்ரீ மாத்வரைக் கண்டவுடனேயே, மனமானது குவிந்து ஒடுங்குகின்றது; ஹிருதயம் விகசிக்கின்றது; ஒவ்வொருவரும் சாஷ்டாங்கமாக அவருக்கு அடிபணியும்படி ஏதோ ஒரு சக்தி எல்லோரையும் தூண்டிவிட்டு விடுகிறது. "இவர் யார்?" என்றுவது, "எங்கிருந்து வந்தார்?" என்றுவது, "இவருடைய பூர்வோத்தரங்கள் என்ன?" என்றுவது, எவரும் கேட்கவில்லை. அவ்வூர் ஜனங்கள் அவரை வெகுநாட்களாக அறிந்தவர்கள் போல அவரைச் சூழ்ந்து நின்றுகொண்டு "ஸ்வாமி! தங்களுக்கு அபீஷ்டம் ஏதேனும் இருந்தால், தெரியப்படுத்துக; நாங்கள் நடத்திவைக்கிறோம்" என்றார்கள்.

ஆசார்யர் தமது அழகிய வாயைத் திறந்து அவர்களை நோக்கி "எனது சிஷ்யர்கள் அக் கரையிலே யிருக்கிறார்கள்; சில படகுகளை யக்கரைக்கு அனுப்பி யவர்களை யிக்கரை சேர்ப்பிவிக்கவேண்டும்" என்று கூற, உடனே சில படகுகள் புறப்பட்டன. அங்கே இன்னது செய்வது என்று தெரியாமல் ஏங்கிக்கொண்டிருந்த ஸ்ரீ சத்தியதீர்த்தர், ஸ்ரீ உபேந்திரதீர்த்தர் முதலிய சிஷ்யர்கள் அனைவரும் தங்களை யணுகிவந்த படகுகளைக் கண்டு, சங்கதியை விசாரித்துத் தெரிந்துகொண்டு ஆநந்தமும் ஆச்சர்யமும் மிகுந்தவர்களாகி, படகுகளிலேறிப் பத்திரமாக இக்கரை

வந்து சேர்ந்து பார்க்க, தங்கள் ஆசார்யரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருக்கப் பார்த்தார்கள்.

இவ்விடத்திலே ஆசார்யரும் மற்றவர்களும் சின்னுட்கள் தங்கிச் சிரமசாந்தி செய்துகொண்டு பின்னர் இங்கிருந்து புறப்பட்டு ஹஸ்திஞபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது ஆஷாடமாசம் வந்துவிட்டது; சந்யாசிகள் சாதுர்மாச விரதம் அநுஷ்டிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகையால், ஹஸ்திஞபுரத்திலே ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் அதிக ஜனக்கூட்டம் இல்லாததாகவும் யோகாப்பியாசத்துக்கு ஏற்றதாகவும் உள்ள ஒரு இடத்தைப் பார்த்து அங்கே தங்கிஞர்கள். ஆசார்யர் இந்த நான்கு மாதங்களையும் தவங்கள் புரிவதிலேயே கழித்தார்.

இந்த நான்கு மாதங்களும் கழிந்தவுடனே ஆசார்யர் அங்கிருந்து புறப்பட்டு குருக்ஷேத்திரம் சென்ருர். ஆசார்யர் முன்னே பீமசேனஞகி யவதரித்தவ ரன்ருே? ஆகையால், குருக்ஷேத்திரத்தைப் பார்த்தவுடனே ஆசார்யருக்கு பூர்வஞாபகங்க ளெல்லாம் வந்துவிட்டன. பாரதப்போர் நடந்த காலையில் விசேஷ சம்பவம் நடைபெற்ற இடங்களை யெல்லாம் "இதுதான், இதுதான்" என்று வெகு குறிப்பாகக் காட்டிஞர்; பீமசேனனுடைய பராக்கிரமச் செயல்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். "இவ்விடத்திலே பீமசேனன் மும்மதம் பொழியும் யானைக்கூட்டங்களை யெல்லாம் கால்களைப் பிடித்துத் தூக்கியும், வாலைப் பிடித்துச்

சுழற்றியும், துதிக்கையைப்பற்றி முறுக்கியும் ஆகாசத்திலே விட்டெறிந்தான்; இதோ இந்த இடத்திலே துரோணாசார்யர் பீமசேனனை மடக்கிப் போர்புரிய அழைத்தார்; அவன் குருவாயிற்றே யென்று முதலில் கொஞ்சம் நின்றான்; துரோணர் அவனுடைய கூச்சத்தை மதிக்காமல் எண்ணற்ற பாணங்களைப் போட்டு அவனை வருத்தினார்; அவனுக்குக் கோபம் வந்து அவன் தன் தேரினின்றும் திடீரென்று கீழே குதித்துத் துரோணாசார்யாரைத் தேரோடு தூக்கி ஆகாசத்திலே எறிந்துவிட்டு அப்புறம் போய்விட்டான். ஆகாசத்திலே சென்ற துரோணர் கீழே விழுவதற்குள்ளாக அன்றைய யுத்தம் முடிந்துவிட்டது; அது இந்த இடம்தான். அந்தப் பீமனுடைய கதாயுதமானது புதைந்து கிடக்கும் இதுதான்.'' என்று ஆசார்யர் ஒவ்வோரிடமாகத் தமது சிஷ்யர்களுக்குக் காண்பித்துக்கொண்டே வந்தார். அப்பொழுது அங்கொருவன் தவம் செய்வதைக் கண்டு ''இவன் ஒரு மாரீசன், ஆஷாடபூதி'' என்றார். ஸ்ரீ மாத்வருடைய சிஷ்யர்கள் அவனிடம் சென்று அவனைப் பரீக்ஷித்துப் பார்த்து அவன் ஆஷாடபூதியே யென்பதை யறிந்துகொண்டார்கள்.

ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ காசிமாநகரம் வந்து சேர்ந்தார்கள். இங்கே ஆசார்யர் அநேக வாதுகள் செய்யும்படி நேரிட்டது. இவ்விடத்திலேயுள்ள சைவ சந்யாசிகளும் அத்வைதிகளும் இவரை ஈ மொய்ப்பதுபோலச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்

கள்; ஸரஸ்வதி, பாரதி, பூரி எனப் பல பெயர்கள் கொண்ட சந்யாசிகள் பலர் 'துவைதமதத்தை யழித்துவிடுவது' என்று கங்கணங் கட்டிக்கொண்டு இவருடன் தர்க்கம்செய்ய வந்தார்கள். இவர்களுக்குள்ளே இந்திரபூரி யென்னும் பெயருடைய ஒருவன், மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகம் படித்தவன், ஸ்ரீ மாத்வரை எதிர்த்து வாது செய்தான்.

இந்த இந்திரபூரி யென்பான் ஆசார்யரை நோக்கி, "ஐயா! மாத்வரே! ஞானத்துடன் கூடிய கர்மம் மோக்ஷோபாயமாகு மென்று தங்களால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டான்.

ஆசார்யர் ஞானபூர்வ கர்மமே மோக்ஷ சாதன மென்று சுருதி யுக்தி அனுபவ பூர்வமாய் எடுத்து விளக்க, அந்த அத்வைதி ஆசார்யருடைய சொற்களைக் கண்டிக்கும் சக்தி யற்றவனாய், கோபத்துடனே "ஞானம் என்றால் என்ன?" என்று கேட்டான்; அப்பொழுது ஆசார்யர் அவனைப் பார்த்து "ஐயா! நீர் முன்னே 'ஞானத்துடன் கூடிய கர்மம் மோக்ஷோபாயமாகு மென்று தங்களால் நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டீர். அப்பொழுது ஞானம் என்றால் இன்னதென்றே தெரியாமல் அந்தக் கேள்வி கேட்டீரோ? அப்படிக் கேட்டிருந்தால் அந்தக் கேள்வி அயோக்கியமானதாகும். ஞானத்தின் பொருள் இன்ன தென்று தெரிந்திருந்து கேட்டிருந்தால் இப்பொழுது கேட்ட கேள்வி அயோக்கியமானதாகும். ஆகையால், இவ் விதமாக அயோக்கியமான கேள்விகள் கேட்கும் நீர்

அயோக்கியர் என்பதில் என்ன சந்தேகம்?'' என்றார். ஆசார்யர் காசியிலே மற்ற இடங்களில் பார்க்கிலும் அதிக நாட்கள் தங்கி யிருந்தாரெனத் தெரியவருகிறது. காசியானது பரதக்கண்டத்திலுள்ள வித்துவான்களையும் தத்துவான்களையும் ஆகருஷிக்கும் தன்மை வாய்ந்ததாய் இருக்கிறதினால், அங்கே வருகின்ற வித்வான்களுடனெல்லாம் தர்க்கம செய்து, மாத்வ மதஸித்தாந்தத்தை ஸ்தாபிக்கவேண்டு மென்று கருதி ஆசார்யர் அங்குக் கொஞ்சம் அதிக நாட்கள் தாமதித்திருக்கலாம். காசியிலிருக்கும்பொழுதே ஆசார்யருக்கு ஐம்பதுக்கு மேற்பட்டு அநேக சிஷ்யர்கள் இருந்தார்கள் என்று தோன்றுகிறது.

ஸ்ரீ மாத்வர் ஞானபலம் மாத்திரம் உள்ளவராயிருக்கவில்லை; ஸ்தூல பலமும் வாய்ந்தவர் என்பதற்கு முன்னமேயே சில விஷயங்கள் கூறியிருக்கிறோம். ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் காசியிலே யிருக்கும்பொழுது ஸ்ரீ மாத்வருடைய சிஷ்யர்கள் ஒருநாள் தங்கள் தங்களுடைய ஸ்தூல பலத்தைப்பற்றித் தாங்களே புகழ்ந்துகொண்டார்கள். இதை ஆசார்யர் ஒண்டியிருந்து கேட்டாராதலின், அவர் தமது சிஷ்யர்களை யழைப்பித்து, "நல்லது, உங்கள் எல்லோருக்கும் சரீரபலம் நிரம்ப இருக்கிறதென்பதாக நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்; நீங்கள் எல்லோரும் வாலிபர்கள்; நானோ உங்க ளெல்லோரினும் வயது அதிகமானவன்; எங்கே, உங்கள் முழுபலத்தையும் உபயோகித்துக்கொண்டு பதினைந்து பெயர்களாகச் சேர்ந்துகொ

ண்டு என்னுடன் சண்டைக்கு வாருங்கள், பார்ப்போம்'' என்றார். அப்படியே அவர்களுக்குள்ளே மகா பலிஷ்டர்களான பதினைந்து பெயர்கள் சேர்ந்துவர, ஸ்ரீ மாத்வர் வெகு அலக்ஷியமாக அவர்களெல்லோரையும் கீழே தள்ளிவிட்டு ''எழுந்திருக்க வல்லமையுள்ளவன் எழுந்திருக்கலாம்'' என்றார். அவர்கள் ''ஸ்வாமி! நாங்கள் வீண் கர்வம் கொண்டிருந்தோமென்பது இப்பொழுதுதான் தெரிகிறது. தேவரீரது ஒவ்வொரு விரலும் மகாமேரு பர்வதத்தினளவு பாரமாயிருக்கின்றதே; நாங்கள் அசக்தர்களே; எங்களை விட்டுவிடவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள்.

பின்னர் இவர்கள், காசியிலிருந்து புறப்பட்டு, ரிஷிகேச தேசத்தினுள்ளே நுழைந்தார்கள். ரிஷிகேசத்திலே ஒரு பெரிய சிவக்ஷேத்திரம் உள்ளது. அங்கு வசிப்பவர்களுள் பெரும்பான்மையோரும் சைவர்கள். ஸ்ரீ மாத்வரோ வைஷ்ணவ மதத்தினர். ஆதலால், சைவர்கள் ஒரு வைஷ்ணவ ஆசார்யருக்கு அவர் எவ்வளவு மகிமையுள்ளவரா யிருந்தபோதிலும் மரியாதைகள் செய்து வரவேற்பார்களென்பது நடவாத கார்யம். அந்த சிவக்ஷேத்திரத்து அர்ச்சகனுடைய பெயரும் சிவன் என்பதேயாம். சாக்ஷாத் பரமசிவன் அர்ச்சகனாகிய சிவனுடைய கனவிலே தோன்றி, ''ஆசார்யர் வருகின்றார்; அவருக்கு மரியாதைகள் செய்து பிக்ஷை யளிப்பாயாக!'' என்று ஆக்ஞாபித்து மறைந்தருளினார். அர்ச்சகப் பிராஹ்மணன் திடுக்கிட்டு

விழித்தான்; கண்களைப் பிசைந்து யோசனை செய்தான்; தான் பூஜிக்கும் இஷ்ட தேவதையினுடைய ஆக்ஞையை மீறும்படியான துணிவு அவனுக்கு உண்டாகவில்லை.

இதற்குள்ளாக, சாக்ஷாத் பரமசிவன் அதற்கு முந்திய தினத்திலேயே ஒரு பிராஹ்மண வடிவெடுத்து, ஆசாயர் முன்னே தோன்றி, "அவ்வூரார் செய்யும் உபசாரங்கள் எவ்வளவு ஏழ்மையாயிருந்தாலும் அவற்றை ஆசார்யர் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு போனார்.

மறுநாள் அவ்வூரிலுள்ள சைவர்கள் வைஷ்ணவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஆசார்யரை எதிர்கொண் டழைக்கப் புறப்பட்டார்கள். குடை, கொடி, சாமரம் முதலிய விருதுகளுடனே ஆசார்யரை ஊர் வலமாகச் சிவனுடைய கிருகத்துக்கு எழுந்தருளச் செய்தார்கள். பஞ்சபக்ஷ பாயசாதிகளுடனே வெகு சம்பிரமமாக பிக்ஷை நடந்தது. அந்தப் பிரதேசத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து கூடினார்கள்.

ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் அங்கிருந்து புறப்பட்டு, இஷுபாதக்ஷேத்திரம் சென்று இங்கே பிரதிஷ்டாமூர்த்தியாகிய ஸ்ரீபரசுராமரைத் தரிசித்தார்கள். இவ்விடத்திலே யிருக்கும்போது, ஸ்ரீ மாத்வரிடத்திலே மகா பக்தியுள்ள ஒருவன் அதி ருசியுள்ள வாழைப் பழங்களை ஆயிரம் கொண்டுவந்து "ஸ்வாமி! இதனைத் தாங்கள் அங்கீகரிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொள்

ள், ஆசார்யர் அவ் வாயிரம் பழங்களையும் சிறிது நேரத்துக்குள்ளே தின்று தீர்த்துவிட்டார். அவ்வூர் ஜனங்கள் பார்த்து ஆச்சர்ய மடைந்தார்கள்.

இவர்கள் அங்கிருந்து கோவா நகரம் சென்றார்கள். அங்கே இன்னும் பெரிய விசேஷம் நடந்தது. சங்கரன் என்னும் பிராஹ்மணன் ஒருவன் நாலாயிரம் வாழைப் பழங்களையும் முப்பது குடங்கள் நிரம்பப் பாலையும் ஆசார்யர் முன்னே கொண்டு வந்து வைத்து "அங்கீகரித்தருள வேண்டும்" என்றான். ஆசார்யர் வெகு அலக்ஷியமாக அத்தனைப் பழங்களையும் தின்று, அவ்வளவு பாலையும் குடித்துவிட்டார். ஸ்ரீ மாத்வருடைய மகிமைகளைப்பற்றி கோவா நகரத்து அரசன் கேள்வியுற்று, சில படை வீரர்களை யனுப்பி, ஸ்ரீ மாத்வரை யவ்வூரை விட்டு வெளியே போகாமல் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவு செய்தான். ஆசார்யர்தான் சித்த புருஷராச்சுதே! சங்கதி யின்னதென்று ஆசார்யர் அறிந்துகொண்டு, தமது யோக சக்தியினாலே அங்கிருந்து சட்டென்று மறைந்து போய்விட்டார்; 'எங்கே போனார்?' என்று எவருக்கும் தெரியவில்லை. படை வீரர்கள் வந்து விஷயத்தை அரசனிடம் தெரியப்படுத்தினார்கள். அரசன் அதை மறந்துவிட்டான்.

அரசன் தம்மைப்பற்றி மறந்துவிட்டானென்பதை யறிந்த ஆசார்யர் தமது சிஷ்யர் குழாத்துடனே அங்கிருந்து புறப்பட்டு, கோவிஷயம் என்கிற கிராமத்துக்கு வந்தார். அவ்விடத்து ஜனங்கள் ஆசார்யருடைய மகிமையைப்

பற்றி நெடுநாட்களாகக் கேட்டு வருபவர்களாதலால் அவருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் வேண்டிய உபசாரம் செய்து, ஆசார்யர் குயிலினும் இனிய குரலையுடையவராயிருந்ததினாலே அவரைக் கொஞ்சம் பாடும்படி கேட்டுக் கொண்டார்கள். சங்கீதமானது மிருகங்களையும் மெய் மறக்கச் செய்யுமென்றும், புல் பூண்டு செடி கொடி முதலியவற்றுக்குக்கூட உயிரளிக்கும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். "ஸ்ரீ கிருஷ்ணனுடைய புள்ளாங்குழல் இசையினாலே விருக்ஷங்கள் தளிர்த்துப் புஷ்பித்துப் பலன்கள் அளித்தன" என்று கூறப்பட்டுள்ளது.

ஆசார்யர் அசாதாரண சக்திகள் பல வாய்ந்தவர் என்று கேள்விப்பட்டு, அவர்கள் ஆசார்யரை இவ்விதமாகப் பரிசோதிக்க விரும்பினார்கள்; அவர்கள் ஆசார்யரை நோக்கி, "சங்கீதத்துக்கு இத்தகைய சக்திகள் உண்டா? உண்மைதானா?" என்று கேட்டார்கள். "ஆம்! அதிலென்ன சந்தேகம்? அத்தகைய சக்திகள் இருந்தால்தான் அது சங்கீதமென்னப்படும்; இல்லையேல், வெறுமே தொண்டை கிழித்துக்கொண்டு கத்துதலாம்" என்றார். அவர்கள் உடனே "அதை நிரூபித்துக் காட்டவேண்டும்" என்றார்கள்.

ஆசார்யர் பாட ஆரம்பித்தார்; கையிலே ஒரு சில விதைகளை வைத்துக்கொண்டு பாடினார்; மனுஷ்யனுடைய செவி கேட்டு ஆநந்திக்கும் நிலைமையைக் கடந்தார்; சங்கீதம் தேவகானமாயிற்று; கையிலிருந்த விதைகள் உயிர்

பெற்று முதலில் அசையத் தொடங்கின. பின்னர் முளைகள் கிளம்பின. எல்லோரிடத்தும் காட்டினார். அனைவரும் பார்த்து ஆச்சர்ய மடைந்தார்கள். மேலும், சங்கீதம் நடந்தது. ஒரு இளஞ் செடி பாட்டைக் கேட்டு தலை யாட்டுவது போல ஆடிற்று; புஷ்பங்களையும் பலன்களையும் உடனே அளித்தது. ஜனங்கள் இவ் வற்புதத்தைக் கண்டு திடுக்கிட்டுப் பிரமித்தார்கள். மனுஷ்யனுடைய கையிலேயிருந்த விதைகள் அவனுடைய சங்கீதத்தைக் கேட்டு ஆடி யசைந்து புஷ்ப பலாதிகளை யளித்தன வென்றால், உலகிலே ஆச்சர்ய மடையாதவர்கள் இருக்க முடியுமா?

ஆசார்யரும் அவருடைய சிஷ்யர்களும் கோவிஷயபுரத்திலிருந்து புறப்பட்டு அநேக ஊர்களைப் பார்த்துக்கொண்டு உடுப்பி வந்து சேர்ந்தார்கள்; ஸ்ரீ மாத்வருடைய சிஷ்யர்களுள் வித்துவான்களான சிலர் ஆசார்யருடைய இந்த யாத்திரையைப் புகழ்ந்து காவியம் பாடினார்கள்.

---

## 13-வது அதிகாரம்:

# திரிவிக்ரம பண்டிதர் திரும்பி வருதல்

ஸ்ரீ மாத்வர் அழிக்க முற்பட்ட மதங்களிலே அத்வைதம்தான் அதிகமாக அவருடைய கவனத்துக் குட்பட்டிருந்தது. ஆசார்யர் அத்வைதத்தைத் துண்டு துண்டாகப் பிரித்துச் சித்திரவதை செய்வது வழக்கம். ஆசார்யர் உடுப்பியிலே ஸ்ரீ அநந்தேச்வர ஸ்வாமி க்ஷேத்திரத்திலேயிருந்துகொண்டு அத்வைதத்தைத் தினந்தோறும் கொலை பண்ணிக்கொண்டு வந்தார். "அவித்தை வந்ததற்குக் காரணமென்ன வென்றால், அத்வைதிகள் 'அதுதான் ரஹஸ்யம்' என்பார்கள்" என்று பரிகசிப்பார். நாளுக்கு நாள் அநேகர் அத்வைதத்தை விட்டுவிட்டு ஸ்ரீ மாத்வரைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். தினந்தோறும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஸ்ரீ மாத்வரிடம் வந்து பாடங்கள் கேட்டு, சந்தேகங்களைத் தெளிவித்துக்கொண்டு போவார்கள்.

அத்வைதிகளெல்லோரும் யோசனை செய்யத் தொடங்கினார்கள்:—"என்ன? அநாதி காலம் தொட்டு உலகுக்கு அறிவு அளித்து வருகின்ற இந்த அத்வைத மதம் நேற்று முளைத்த இந்த மத்வராலே அழிந்து போவதா?"

அக் காலத்து அத்வைதிகளுக்குள்ளே பத்மதீர்த்தர் என்று ஒருவர் கியாதி பெற்று இருந்தார்போலத் தோன்று

கிறது. அவரிடத்திலே சில அத்வைதிகள் வந்து "ஸ்வாமி! தாங்கள் பேசாமல் இருப்பதின் காரணமென்ன? 'ஜகம் மித்தை யென்றும், பிரஹ்மம் அத்விதீயம், அவாச்ய மென்றும் வேதங்களும் ஸ்ரீ சங்கர பாஷ்யமும் முறையிடுகின்றனவே; இந்த மத்வன் இதற்கு நேர் விரோதமாகப் பொருள் கூறி ஜனங்களை ஏமாற்றி வருவது தங்களுக்குச் சந்தோஷமா யிருக்கிறதோ? பரமார்த்த அபேத ஞானம் சங்கர பாஷ்யம் பார்த்தவனுக்கன்றி இந்த மத்வனுக்குத் தெரியுமா? ஞானம் உண்டாகாத பொழுது ஜகத் உள்ளது போலேதான் தோன்றும்; ஞானம் உண்டான பொழுது, வெந்து கருகிய வஸ்திரம்போல உருமாத்திரமாய் நிற்கும். அந்த ஞானம் பரிபக்குவ மடைந்து அநுபூதி யுண்டாகும் பொழுது, காய்ச்சின இரும்பின்கண் பெய்த நீர்போலத் தோற்றமும் ஒழிந்துவிடும். இவ் வுண்மை இந்த மத்வனுக்குப் புலப்படுமா? ஸ்வாமி! அநியாயமாக நமது சித்தாந்தம் இப்போது அழிந்துபோய்க்கொண் டிருக்கின்றது. நாம் பட்ட மதஸ்தர்களை யிருந்த இடம் தெரியாமல் அடித்தோட்ட வில்லையா? பிரபாகரர்களைத் தோற்கடிக்க வில்லையா? நம்மைக் கண்டவுடனே பௌத்தர்கள் தங்கள் வால்களைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட வில்லையா? இவ்வளவு சமர்த்தும் யுக்தியும் உள்ள அத்வைத மதத்தை இந்த மத்வன் அழிக்க, நீங்கள் கண்டும் சும்மா யிருக்கிறீர்களா? இந்த மத்வன் கோதாவிரியி லிருக்கும்போதே இங்கு வரவொட்டாமல் தடுத்திருந்தால், நன்றா யிருக்கும். போனது போச்சுது. இனிமேல் செய்வதைக் கவனிப்போம். அந்த

மத்வன் யுக்தி பேசுவதிலே மகா சமர்த்தனும். நீங்கள் சும்மா யிருந்தால் இனிமேல் முடியாது. அநேக அத்வைதிகள் அந்த மத்வனுடைய கால்களிலே போய் விழ ஆரம்பித்திருக்கிறார்கள். இது எங்களுக்கு அவமானமா யிருக்கின்றது. இப்பொழுது சீக்கிரமாக இந்த மத்வனுடைய கொட்டத்தை யடக்குவதற்கு ஏதேனும் ஒரு யோசனை செய்யவேண்டும்'' என்றார்கள்.

இந்த பத்மதீர்த்தர் சோழ நாட்டில் பெயர் பெற்ற ஒரு அத்வைதி யென்று மாத்திரந்தான் ஸ்ரீ மாத்வ விஜயத்தி லிருந்து தெரிய வருகிறது. ஆனால், ஸ்ரீ மத்வ சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஒருவர் இந்த பத்மதீர்த்தரை "அப்பொழுது ஸ்ரீங்கேரியில் ஸ்ரீ சங்கர பீடத்தி லிருந்தவர்'' என்கிறார். இதற்கு முன்னே ஸ்ரீ மாத்வருடனே ஸ்ரீங்கேரி மடாதிபதியாகிய வித்யா சங்கரர் என்பவர் வாதாடினார் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். இவர் சீக்கிரத்திலே சமாதி யடைந்துவிட்டார் போலத் தோன்றுகிறது. இவருக்குப் பின்னே ஸ்ரீங்கேரி பீடத்தில் பட்டத்துக்கு வந்தவர் பத்மதீர்த்தர் என்று மத்வருடைய சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதியுள்ளவர் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் "ஸ்ரீ வித்யா சங்காருக்குப் பின்னே ஸ்ரீவித்யாரண்ய ரென்பவர் பட்டத்துக்குவந்தார்'' என்று ஸ்ரீ சங்கரபரம்பரை கூறுகின்றது. ஸ்ரீ மாத்வருடைய சரித்திரத்துக்குப் பூர்வ ஆதாரமாயுள்ள ஸ்ரீமாத்வ விஜயம் என்னும் கிரந்தத்திலும் பத்ம தீர்த்தரை ஸ்ரீங்

ங்கேரி யதிபதி யென்று கூறவில்லை. ஆகையால், மத்வ சரித்திரத்தை ஆங்கிலத்தை எழுதியவர் ஊகிப்பதற்குக் கூட ஒரு ஆதாரமு மில்லா திருந்தும் பத்ம தீர்த்தரை ஸ்ரீங்கேரி யதிபதி யென்று கூறுகிறார்.

இப்படி யிவர் கூறுதற்கு இவர் செப்பும் நியாயம் என்ன? தெரியுமா? "ஸ்ரீ வித்யா சங்கரர் நூற்றைந்து வய திருந்ததாக எழுதப்பட் டிருக்கிறது; அப்படி யிருக்கமாட்டார்; நடுவிலே ஒரு பெயர் விடப்பட்டிருக்க வேண்டும்" என்பதாம். இன்னும் அந்த ஆங்கில சரித்திர ஆசிரியர் ஸ்ரீ சுரேச்வராசார்யருக்கு, ஸ்ரீ சங்கர பரம்பரையிலே 200 வயது என்று எழுதி யிருக்கிறதைப் பொய்யா யிருக்கலா மென்னும் பொருள் படும்படி ஒருவாறு சூசிப்பிக்கிறார். நமது ஸ்ரீ மத்வாசார்யார் நாலாயிரம் வாழைப் பழங்களும் முப்பது குடம் பாலும் உண்டது உண்மை யென்று நான் திரிகரண சுத்தியாய், சத்தியமாய் நம்புகிறேன். அதே மாதிரி சுரேச்வராசார்யர் 800 வயதுவரை யிருந்ததும், ஸ்ரீ வித்யா சங்கரர் நூற்றைந்து வயதுவரை யிருந்ததும் உண்மை யென்றே நம்புகிறேன். ஆதலால், அநாவசிய மாக பத்ம தீர்த்தரை ஸ்ரீங்கேரி மடாதிபதி யாக்குவது நியாய மன்று.

மேற் கூறியவாறு சில அத்வைதிகள் பத்ம தீர்த்த ரிடம் சென்று சொன்னபொழுது, புண்டரீகபுரி என்ற அத்வைத வித்துவானும் பத்ம தீர்த்தருடன் இருந்தனர்.

இப்படிச் சில அத்வைதிகள் சொல்ல, பத்மதீர்த்தரும் புண்டரீகபுரியும் யோசனை செய்ய ஆரம்பித்தார்கள். இவர்கள் யோசித்துக்கொண் டிருந்தபொழுது, ஒரு அத்வைதி "ஸ்வாமிகாள்! நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்! மானம் பெரிதா? பிராணன் பெரிதா? மானமற்றுப் பயப்படுபவர்களுடைய மனமானது நெருப்பினுடைய பெயர் கேட்ட மாத்திரத்திலே உருகிப் போய்விடுகிறது; ஆனால், வெண்ணெய் நெருப்பில் வைத்தால்தான் உருகுமே யொழிய, நெருப்பு என்ற சப்தம் கேட்ட மாத்திரத்திலே உருகிவிடாது. மானங் கெட்டுப் பயந்து திரிபவர்களைப் பார்க்கினும் வெண்ணெயே வலுவுள்ளது போலும்! அத்வைத கேசரியாக இதோ நமக்குப் பத்ம தீர்த்தர் இருக்கிறார். "ஜகன்மித்யா ப்ரஹ்மைவ சத்யம்" என்னும் சுருதி வாக்கியத்தைச் சுருதி யுக்தி யநுபவப் பிரமாணங்களாலும் நிலைநிறுத்துதற்கு இந்த பத்ம தீர்த்தர் உள்ள வரையில் நமக்குப் பயமே வேண்டியதில்லை. அப்படி யொருவேளை நம்மால் இந்த மாத்வனை வாதுப் போரில் ஜயிக்க முடியாமற் போகுமே யாகில், மணி மந்திராதி ஔஷதங்களினாலும், வசீகரணம், ஸ்தம்பனம், வித்வேஷணம், உச்சாடனம், மாரணம், சாலனம் முதலிய ஆறுவித கிரியைகளினாலும் இந்த மத்வனை எப்படியாவது தொலைத்துவிட வேண்டியது தான்.

இன்னும் நமது அத்வைத மதத்தை இப்பொழுது ஆதரிப்பார் இல்லை; அதை எங்கும் பிரசாரகப் படுத்துவ

தற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மத்வன் போகும் இடம் வரும் இடங்களை யெல்லாம் நாம் ஒற்றர்கள் வைத்து முன்னதாகவே தெரிந்துகொள்ள வேண்டும். மத்வன் ஒரு கிராமத்துக்குப் போகப் போகிறு னென்றால், நாம் நமது ஆட்களை அதற்கு முன்னதாகவே யனுப்பி, நமது அத்வைதத்தைப் பலப்படுத்திக்கொள்வது மல்லாமல், அந்த மத்வனையும் அவர்கள் ஆங்காங்கு அவமதிக்கும்படி செய்யவேண்டும். பழமையான தத்வ சாஸ்திரத்தை மத்வன் குயுக்திகளால் புரட்டப் பார்க்கிறு னென்று எங்கும் பறையடித்து, மத்வனிடமும் அவனுடைய சிஷ்யர்களிடமும் உள்ள குற்றங்களை யெல்லாம் ஒன்றைப் பத்தாக்கி ஜனங்களிடம் உரைக்கவேண்டும். இவ்விதமாக வெல்லாம் நாம் செய்ய ஆரம்பித்துவிட்டால், மத்வனும் அவனுடைய சிஷ்யர்கள் நாம் சென்ற கிராமங்கட்குப் போகத் துணியார்கள்; ஒரு வேளை அவர்கள் துணிந்து செல்வார்க ளாயின் நாம் ஆட்கள் வைத்து அவர்களுடைய புத்தகங்களை யெல் திருடிக்கொண்டு போகும்படி ஏற்பாடு செய்துவிடவேண்டும். இத்தனை நாட்களும்போல இனிமேலும் நாம் சும்மா யிருப்போமானல், நாம் இப்பொழுதே இறந்து போதல் நலம்,'' என்று கூற, எல்லோரும் அவனுடைய பேச்சை ஆமோதித்தார்கள். உடனே பலவித துராலோசனைகளெல்லாம் செய்யப்பட்டன. ஆனல், ''எல்லாவற்றுக்கும் முதலில் அந்த மத்வருடனே வாது செய்து பார்ப்பது'' என்று தீர்மானித்துக்கொண்டு, அத்வைதிகள் அநேகர் சேர்ந்து புண்டரீகபுரி யென்னும் பெயரிய ஒரு அத்வைத

சந்யாசியைத் தங்களுக்குத் தலைவராகக் கொண்டு உடுப்பி நகருக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.

இங்கே அந்தப் புண்டரீகபுரி வந்து ஸ்ரீ மாத்வரை நோக்கி, "ஐயா! நீர் அநேக அத்வைதிகளை வாதிலே ஜயித்து, அவர்களெல்லோரையும் சிஷ்யர்களாக்கி யிருக்கிறீர்கள் என்பது உண்மைதான்; ஆனால், உம்முடைய சமர்த்தை என்னிடமும் கொஞ்சம் காட்டி என்னையும் ஜயித்து விடுவீரானால், அப்போதுதான் அத்வைதம் தோற்றது என்று ஒப்புக்கொள்ளலாகும்" என்று கூற, ஸ்ரீமாத்வர் வெகு சந்தோஷத்துடனே அவனுடனே வாது செய்வதற்குச் சம்மதித்தார். ஸ்ரீ மாத்வர் சுருதி யுக்தி யநுபவ பூர்வமாக அத்வைதத்தைக் கண்டித்து, துவைதத்தை ஸ்திரப்படுத்தினர்; புண்டரீகபுரி இவர் கூறிய நியாயங்களுக்கு எதிர் கூற முடியாது, மூளை குழம்பித் தத்தளித்து ஓடிவிட்டான்.

பின்னர் ஸ்ரீமாத்வர் தமது சிஷயர்களுக்கும் தாம் கூறும் பாடத்திலே சிரத்தை மிகுந்து, கேட்பதற்காக வந்து உட்கார்ந்திருந்த பல வித்வான்களுக்கும் வேதாதி பிரமாணர்த் தங்களை வர்ணச்வராதிகளில் கொஞ்சமும் பிழையில்லாமல் உபதேசித்துக்கொண்டிருந்தார்.

அத்வைதிகள் ஸ்ரீ மாத்வருடைய செல்வாக்கைத் தடுத்து, அவருடைய சித்தாந்தம் வேரூன்றாதவாறு செய்வதற்குச் செய்த பிரயத்தனங்கள் சில:—

1. மத்வ சித்தாந்தத்துக்குச் சாஸ்திரங்களிலே ஆதாரங்கள் கிடையா; பூர்வீக சுருதி, ஸ்மிருதி கொள்கைகளுக்கெல்லாம் மத்வ சித்தாந்தம் விரோதமானது. அத்வைதிகள் இவ்வாறு பொய் புளுகுகளை யெல்லாம் போதித்து ஜனங்களை ஏமாற்ற முயன்றார்கள்.

2. "மத்வ சித்தாந்தத்திலே பற்றுடையவனாக ஒரு பிராஹ்மணன் காணப்பட்டானானால், அவனை ஜாதியிலிருந்து நீக்கிவிடுவது" என்று ஏற்பாடு செய்தார்கள்.

3. நேருக்கு நேர், முடிந்தபொழுதெல்லாம் வாதித்து வெல்வதென்று தீர்மானித்தார்கள். பத்மதீர்த்தர் அத்வைதிகளுக்குள்ளே அக்காலத்தில் பிரதமஸ்தானம் பெற்றிருந்தும், அவர் ஸ்ரீ மாத்வருடனே வாது தொடங்காமல் புண்டரீகபுரி வாது செய்யப் புறப்பட்டதற்குக் காரணம் விளங்கவில்லை. ஆனால், பத்மதீர்த்தரினும் ஒரு வேளை புண்டரீகபுரி வாசாலகமும் தர்க்க சாமர்த்தியமும் வாய்ந்தவனா யிருந்திருக்கலாம்.

"மேற்சொன்ன உபாயங்களினாலே காரியம் ஜயமாகாவிட்டால், பழி பாவத்துக் கஞ்சாத அக்கிரமமான வழிகளிலே பிரவேசிப்பது" என்று அத்வைதிகள் தீர்மானித்துக் கொண்டார்கள். 'மாத்வருடைய புத்தக சாலையிலேயுள்ள கிரந்தங்களை யெல்லாம் திருடிக்கொண்டுபோய்க் கடலி லெறிந்துவிட்டால் பின்னர், அநேகமாகத் துவைத மதம் அழிந்துபோய்விடும்' என்று இவர்கள் நம்பினார்கள்.

நடந்த வாதிலே புண்டரீகர் பட்டபாடு நாம் முன்னமேயே கூறிவிட்டோம். புண்டரீகபுரி மகா வித்துவான் தான்; ஆயினும், அவதார புருஷராகிய ஸ்ரீ மாத்வரிடத்திலே அவன் என் செய்வது? ருக் வேதத்தைப்பற்றித் தர்க்கம் ஆரம்பிக்கப்பட்டது. ருக் வேதம் முதல் சூக்தத்தில் அக்நிநாரயிம் என்றதைப் பதம் பிரித்துப் பொருள் உரைக்க வேண்டிவந்தபொழுது, அக்நிநா—ரயிம் என்று பிரிக்க வேண்டியிருக்க, இந்தப் புண்டரீகபுரி அக்நி—நார என்று பிரித்தான். அங்கிருந்த வித்துவான்கள் அனைவரும் கை கொட்டி நகைத்து "ஏ! மூடா! இதற்குப் பதம் பிரிக்கத் தெரியாத நீயோ பூர்ணபோதருடனே வாது செய்யப் புறப்பட்டாய்" என்று ஏளனம் செய்து நிந்தித்தார்கள். புண்டரீகன் தோல்வியடையவே, பத்மதீர்த்தரும் மற்றவர்களும் அவ்விடம் விட்டுச் சொல்லாமல் ஓடிப்போய் விட்டார்கள்.

அவர்கள் எப்பொழுது அவ்வூரைவிட்டுப் போனார்கள் என்பது எவர்களுக்கும் தெரியவில்லை; இரவிலே ஓடிவிட்டார்கள் போலும்! மறுநாள் விடிந்தது. "ஸ்ரீ மாத்வருடைய புத்தகசாலையிலிருந்த அருமையான கிரந்தங்கள் காணப்படவில்லை" என்று சமாசாரம் பரவிற்று. அத்வைதிகள் என்று வேஷமிட்டுக்கொண்டவர்கள், அதிலும் அவர்களில் சிரேஷ்டர்கள் செய்த அக்கிரமத்தைப் பார்த்தீர்களா? இந்தப் புத்தகங்களையெல்லாம் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொண்டிருக்கும் பொருட்டு, ஸ்ரீசங்கராசார்யர் என்று

பெயருடைய ஒருவர் ஸ்ரீ மாத்வரால் நியமிக்கப்பட்டிருந்தார். "புத்தக சாலையிலே யிருந்த கிரந்தங்கள் காணப்படவில்லை" என்ற சமாசாரத்தை அந்த சங்கராசார்யர் ஸ்ரீ மாத்வரிடம் சென்று சொல்ல, ஸ்ரீ மாத்வர் இன்னது செய்வதென்று தெரியாதவராய் விழிக்கலானார்.

இந்தக் கிரந்தங்களை யெல்லாம் பறிகொடுத்துவிட்டு, ஸ்ரீ மாத்வர் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருக்க முடியுமா? "பத்ம தீர்த்தர் தமது சிஷ்யவர்க்கங்களுடனே எந்த வழியே போனார்?" என்பதை விசாரித்துக்கொண்டு, அவரைப் பின் தொடர்ந்து துரத்திப் புறப்பட்டார். ஆனால், பத்மதீர்த்தர் இதற்குள்ளாக வெகு தூரம் போய்விட்டார். ஆயினும், ஆசார்யர் ஒரே வேகமாக அவரைத் துரத்திச் சென்று, அநேக மைல்தூரம் கடந்து கடைசியாக பிராக்ரியவாடம் என்ற கிராமத்திலே சென்றபொழுது, பத்மதீர்த்தரும் அங்கே தங்கி யிருப்பதாகக் கேள்வியுற்றார்.

பத்மதீர்த்தர் இதற்குள்ளாகத் தாம் செய்தது தப்பு என்று உணர்ந்துவிட்டார்போலும்! தாம் புத்தகங்களைத் திருடியதாக வெளியே உலகினருக்குத் தெரியவந்தால், தமக்கு என்றும் நீங்காத அவமானம் நேரிடுமென்று பத்மதீர்த்தர் நினைத்து, எவருக்கும் தெரியாமல் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிடச் சம்மதித்தார். ஆனால், ஸ்ரீ மாத்வர் பத்மதீர்த்தருடைய இம் முறைகளுக்கு இணங்கவில்லை. இந்தக் கிரந்தங்கள் எப்படியாவது திரும்பத் தமக்

குக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஆசார்யருக்குப் பலமாக இருந்தது; ஆதலால், எதிரிகளுடைய இஷ்டப்படி சம்மதிப்பதற்கு அவர் ஆத்திரப்படவில்லை.

இதற்குள்ளே ஆஷாடமாதம் வந்துவிட்டது. சாதுர்மாச்ய விரதம் அநுஷ்டிக்க வேண்டிய காலம். ஆதலால், அவர் ப்ராக்யவாடத்திலே வாசஞ் செய்துகொண்டிருந்தார். இந்த நான்கு மாதங்களும் பத்மதீர்த்தர் தாம் திருடிக்கொண்டுபோன கிரந்தங்களைத் திருப்பிக் கொடுத்து விடுவதாயும், எவருக்கும் இவ் விஷயம் தெரிவிக்கப்படாதென்றும் சொல்லியனுப்பிப் பார்த்தார். ஆனால், ஆசார்யர் இணங்கவில்லை. பத்மதீர்த்தரும் சந்நியாசியாகையினாலே அங்கேயே சாதுர்மாசகால வாசம் செய்துகொண்டிருந்தார்.

நான்கு மாதங்களும் கழிந்து, ஆசார்யர் அங்கிருந்து புறப்படுவதற்கு யோசனை செய்துகொண்டிருக்கையில் ஒருநாள், அவ்வூரிலேயுள்ள சில பிராஹ்மணர்கள் வந்து ஆசார்யரைக் கண்டு "ஸ்வாமி! பத்மதீர்த்தர் இருந்தாற்போலிருந்து நேற்றிரவு எங்கட்குத் தெரியாமல் எங்கோ ஓடிப் போய்விட்டார்; அவர் தங்கியிருந்த இடத்திலே இந்தக் கிரந்தங்கள் இருந்தன. இவை தேவரீருடையவையென்று நாங்கள் கேள்விப்பட்டோம்," என்று சில கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்க, ஆசார்யர் அவற்றை வாங்கி அந்தக் கிராமத்தின் அதிகாரி கையிலே ஒப்புவித்து, இவற்றைப் பின்னால் வாங்கிக்கொள்வதாகக் கூறினார்.

இப்பொழுது அப் பிரதேசத்தை அரசுசெய்து வந்தவனுடைய பெயர் ஜயஸிம்ஹன். இவன் ஆசார்யருடைய பெருமைகளையும் மகிமைகளையும் கேள்விப்பட்டு, அவரிடத்திலே அத்தியந்த பக்தி பூண்டவனாய், அவரைத் தனது சமஸ்தானத்துக்கு வந்து தன்னை யநுக்கிரகித்துச் செல்லும்படி வேண்டி, ஒரு நமஸ்கார பத்திரிகை யெழுதி, அதை ஒரு தூதன் கையில் கொடுத்தனுப்பினான். ஆசார்யர் அதை வாங்கிப் பார்த்து அங்கீகரித்துக்கொண்டு, அங்கிருந்து ஸஹ்யபர்வதத்துக் கருகிலேயுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றார். ஆசார்யர் ஜயஸிம்ஹ ராஜனுடைய வேண்டுகோளை நிறைவேற்றுதற்கு வரச் சிறிது தாமதித்தபடியால் ஜயஸிம்ஹன் பொறுமையற்றவனாய் மறுபடியும் ஒரு தூதனை யனுப்பினான். அந்தத் தூதன்வந்து ஆசார்யரை நோக்கி "ஸ்வாமி! எங்கள் தேசத்து அரசன், ஜயஸிம்ஹனென்னும் பெயருடையான் இதுகாறும் தேவரீருடைய வரவை எதிர்பார்த்திருந்து தேவரீர் எழுந்தருளாததினாலே ஏக்கமுற்று என்னை ஈங்கு அனுப்பினான்; தயைசெய்து எழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, ஆசார்யர் அதற்கிணங்கி மேற்றிசை நோக்கிப் புறப்பட்டு, அவ்வரசனுடைய நாடாகிய ஸ்தம்போபஸர்ஜனம் அல்லது கும்ப்ளா என்னும் தேசத்தினுள் நுழைந்து, கும்ப்ளா நகரத்துக்கு ஐந்து மைல் தூரத்திலேயுள்ள மாதூர் என்னும் கிராமத்திலே யிருக்கும் மதனதீப க்ஷேத்திரத்திலே யிறங்கி, அவ்விடத்து பகவானைத் தரிசித்து ஆநந்தித்தார்.

இவ்விடத்திலிருந்து ஆசார்யர் கால்நடையாகப் புறப்பட்டு, விஷ்ணுமங்கலம் நோக்கி நடந்தார். இந்தக் கால்நடை யாத்திரை ஒரு பெரிய அரசன் பவனி வருதல்போன்றிருந்தது. ஆசார்யர் புறப்படுவதற்கு அறிகுறியாக, தற்காலத்திலே அரசர்களும் அதிபதிகளும் புறப்படும்பொழுது வேட்டுப்போடுவதுபோல, க்ஷேத்திரத்துப் பெரிய கண்டாமணிகள் அடிக்கப்பட்டன. ஆசார்யரும் சிஷ்யர்களும் பரிஜனங்களும் உச்சாக பூரிதர்களாய் ஊர்வலம் போலவும், ஒரு சமுத்திரம் பொங்கிப் புறப்பட்டதுபோலவும் புறப்பட்டார்கள். ஆசார்யரைச் சகலவிதமான, குடை, கொடி, சாமரம் முதலிய கௌரவ சின்னங்கள் பலவற்றுடனும் இட்டுச் செல்வதற்கு அவ் வரசனுடைய ராஜதானி ஜனங்கள் அநேகர் வந்து சூழ்ந்தார்கள்.

முதலில் மேள தாள நாகஸ்வர வாத்திய கோஷ்டிகள் அமரரும் ஆநந்திக்குமாறு அமிருத கானங்கள் செய்து கொண்டே சென்றன; பின்னர் எண்ணற்ற சங்கீர்த்தன கோஷ்டிகள் சாக்ஷாத் பகவானிடத்திலே பக்திப் பைத்தியம் பிடித்தவைகளாய், மெய்மறந்து ஆடிப்பாடி யார்ப்பரித்தன. கணக்கற்ற சந்யாசிகளும் சிஷ்யர்களும் குற்றமற்ற ஸ்வரத்துடனே வேத பாராயணம் செய்துகொண்டு சென்றார்கள். ஆசார்யர் இத்தனை பெயர்கட்கும் நடுவில், முகத்திலே தேஜசும் ஆநந்தமும் ததும்பித் தெறிக்க, கம்பீர நடை நடந்து சென்றார்.

ஆசார்யருடைய முகத்திலே புந்நகை தவழ்ந்தது; அவருடைய முகத்திலிருந்து ஒருவித இன்பவொளி எல்

லாப் பக்கங்களிலும் வியாபித்தது; அவர் கழுத்திலே துளசிமாலை யணிந்திருந்தார்; அவருடைய சிரசுக்கு மேலே வெள்ளைப் பட்டினுலாய குடையொன்று பிடிக்கப்பட்டது. இவ்விதமான ஆநந்த வைபவத்துடனே ஆசார்யர் கொஞ்ச தூரம் செல்ல, ஸ்தம்பஸிம்ஹ னென்னும் மறு பெயருடைய ஜயசிம்ஹ னென்கிற அவ்வரசன் "ஆசார்யர் மதனதீப க்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்" என்று கேள்விப்பட்டு, அவரை எதிர்கொண்டு அழைப்பதற்கு வந்து சேர்ந்தான்.

ஜயசிம்ஹனென்பவன் ஆசார்யரைக் கண்டவுடனே, தான் ஏறியிருந்த பல்லக்கினின்றும் கீழே யிறங்கி, அவரிடல் கால் நடையாகச் சென்று, அவருடைய பாதபத்மங்களிலே அடியற்ற பனைபோல் சாஷ்டாங்கமாகப் பணிந்து விழுந்து நமஸ்கரித்தான். எண்ணற்ற சிற்றரசர்களிடம் கப்பம் வாங்கி இந்திரபோகமும் ஐச்வர்யமும் அநுபவிக்கும் ஏக சக்ராதிபதியே யாயினும் அவன், எல்லாவற்றையும் துறந்து இறைவனடியே கதியெனக் கொண்டு இருமாந்து திரியும் ஈச்வர பக்தர்களுக்குத் திரணம்மாத்திரமேயன்றோ? முடி தரித்த ஜயசிம்ஹன் ஸ்ரீ மாத்வ முனியின் அடியிலே விழுந்தான்; செங்கோல், யதீச்வரருடைய தண்டத்தைப் பணிந்தது; புவிராஜன் தவராஜனை வணங்கினன்.

பின்னர், அரசனும் ஆசார்யரும் அந்யோந்யம் அவரவர்களுடைய அந்தஸ்துகட்குத் தகுந்த பிரகாரம் க்ஷேமலாபங்கள் விசாரித்துக்கொண்ட பின்னர், எல்லோருமாக

விஷ்ணுமங்கலம் நோக்கிப் புறப்பட்டார்கள். இப்பொழுது அவனி யாண்டருள்வதற்காக அவதரித்திருக்கும் ஆசார்யரே கால்நடையாக நடந்து செல்லும்போது, ஜயசிம்ஹனும் கால்நடையாக நடந்துசென்றா னென்று நாம் சொல்வது மிகையாம்.

ஆசார்யரும் அரசனும் மற்றவர்களும் விஷ்ணுமங்கலம் போய்ச்சேரவே, இங்கு ஆசார்யரைத் தர்சிப்பதற்காக அவ்வூரைச் சுற்றிலு மிருந்த சுமார் 25 கிராமத்து ஜனங்களும் வந்து திரண்டு கூடியிருந்தார்கள். முன்னும் கூட்டம்; பின்னும் கூட்டம்; இருபக்கங்களிலும் கூட்டம்; எள் போட்டால் கீழே விழாதபடி எண்ணற்ற ஜனங்கள் ஏகமாகக் கூடினார்கள். "ஆசார்யரை யொருதரமேனும் தர்சித்தால்போதும்" என்று, எட்டியெட்டிப்பார்ப்பாரும், ஊன்றி யூன்றிப் பார்ப்பாரும், கூட்டத்தினுள்ளே விழுந்து நுழைந்து இடியுண்டு ஆசார்யரை யணுகி நிமிர்ந்து பார்ப்பாருமாக, அனைவருடைய மனங்களும் ஆசார்யரையே பின்பற்றிச் சென்றுகொண்டிருந்தன.

ஆசார்யர் வருகின்றார்; அத்வைத சம்ஹாரி வருகின்றார்; புவிக்கெலாம் ஞானமளிக்கும் பூர்ண போதர் வருகின்றார்; ஆத்ம கோஷ்டிகளின் அஞ்ஞான இருளை யகற்றப் பிறந்த ஆநந்ததீர்த்தர் வருகின்றார்; மாயாவாதிகளை மல்லுக்கிழுத்து மானமழித்த ஸ்ரீ மாத்வர் வருகின்றார்" என்று கட்டியக்காரர்கள் முன்னே எச்சரிக்கை பராக்கு கூறிக்கொண்டு செல்ல, ஊர்த்துவ புண்ட்ரம், சங்கு-சக்ராதி

முத்திரை, துளசிமணிமாலை முதலிய வைஷ்ணவ சின்னங்கள் தரித்த பாகவத கோஷ்டிகள் ஸ்ரீபகவந்நாம சங்கீர்த்தனங்கள் செய்துகொண்டு பாடியாடிப் பரமனைத் துதித்து வர, பாராளும் வேந்தனாகிய ஜயசிம்ஹன் அக்கூட்டத்திலே தானும் ஒருவனாகக் கைகட்டி வாய்பொத்தி நெருக்கத்திலே தள்ளுண்டு, ஆசார்யருடைய திவ்ய வடிவத்தையே மனத்தில் தியானித்தவனாய் நெருக்கத்திலே அங்கும் இங்கும் தள்ளுண்டு ஆசார்யரைப் பின் தொடர்ந்துவர, ஆசார்யர் இணையில்லாத இளஞ்சிங்கம் போல இரு பக்கங்களிலும் கடைக்கண் காணித்துக்கொண்டே, புந்நகை தவழ்ந்த பூ முகத்துடனே அலங்காரமாக நடந்து வந்ததைக் காணும்படியான பாக்கியம் பெற்றவர்களே பரிசுத்த புருஷர்கள்; ஆசார்யரும் அரசரும் விஷ்ணுமங்கலம் க்ஷேத்திரத்துக்குச் சென்றார்கள்.

அந்த க்ஷேத்திரத்தில் பிரமாண்டமான மண்டபமொன்றுள்ளது; அன்று ஆசார்யரைத் தரிசிப்பதற்குக் கூடிய ஆயிரக் கணக்கான ஜனங்களும் அம் மண்டபத்திலே சென்று ஆசார்யருடைய அமிருதப் பிரவாக மொழிகளை ஆநந்தத்துடனே கேட்பதற்காக முட்டிக்கொண்டும், மோதிக்கொண்டும், ஒருவரோடொருவர் இடித்துக்கொண்டும், தள்ளிக்கொண்டும் போய் உட்கார்ந்தார்கள். எண்ணற்ற சாஸ்திரக்ஞர்களும் வித்துவான்களும் அச் சபா மண்டபத்தை யலங்கரித் திருந்தார்கள். சிறிது உயரமாகப் போடப்பட்ட ஆசனத்தின்மீது ஸ்ரீ மாத்வ

முனி சிறப்புடனே கொலுவிலமர்ந்தார். அப்பொழுது ஆசார்யருடைய அத்தியந்த சிஷ்யர்களுக்குள் ஒருவரான ஸ்ரீ ஹிருஷிகேசர் என்பவர் ஸ்ரீமத்பாகவதத்திலிருந்து சில சுலோகங்களைப் படிக்க, ஆசார்யர் தமக்கு இயற்கையான வாக் சாதுர்யத்துடனும் கேட்போர் செவிகட்கு இன்பம் பயக்கும்படிக்கும் பண்டித பாமர சாதாரண சர்வஜனங்களுக்கும் எளிதில் விளங்கும்படிக்கும் அந்தச் சுலோகங்களுக்குப் பொருள் உரைக்க, அனைவரும் கேட்டு ஆநந்த சாகரத்திலமுழ்ந்தியவர்களானார்கள்.

இவ்விதமாக ஆசார்யர் ஜயஸிம்ஹனுகிய அரசனும் அவனுடைய பரிஜனங்களும் தமது சிஷ்ய வர்க்கமும் உய்யுமாறு காவியங்களிலே சிறந்ததும், மண்மேல் பிறக்கும் பொழுதே மாயையை ஜயித்துப் பிறந்த மஹான் ஸ்ரீ சுகப்பிரஹ்மரிஷி உபதேசரூபமாகப் பரீக்ஷித்து மகாராஜனுக்கு உரைத்ததுமாகிய ஸ்ரீமத் பாகவதத்தை யெடுத்து வியாக்கியானம் செய்து சத் காலக்ஷேபம் செய்து வரும் நாட்களிலொருநாள், அப் பிரதேசத்திலே மகா பண்டிதராகப் பிரசித்தி பெற்ற திரிவிக்ரம பண்டிதர் என்பார் ஒருவர் ஆசார்யரைப் பார்க்க வந்து சேர்ந்தார்.

இந்தத் திரிவிக்ரம பண்டிதருடைய பூர்வோத்தரத்தைப்பற்றி நாம் இங்கு இரண்டொரு வார்த்தை கூறவேண்டியது அவசியமா யிருக்கிறது. இவருடைய பிதாவின் பெயர் சுப்பிரமணிய ரென்பதாம். இவர் விஷ்ணுமங்கலத்தி

னருகாமையிலே காவுமடம் என்னும் பெயரிய ஒரு இல்லத்தில் கவிதைகளிலும் வித்வத்திலும் சிறந்தவராய் வசித்துவந்தார். இவர் லிகுச குலத்திலே வந்தவர்; ஆங்கீரஸ கோத்திரத்தினர்; பக்தி வைராக்கியம் முதலிய உத்தம குணங்கள் வாய்ந்தவர். இவருடைய பத்தினியும் இவருடைய குணங்களுக்கேற்ப, மகா உத்தமியாகவே, இவருடன் இல்லறம் நடாத்திவர. இவர்களுக்கு அடிக்கடி புத்திர பாக்கியம் உண்டாகியும் ஈச்வர சங்கற்பத்தால் அப் புத்திரர்கள் குழந்தைப் பருவத்திலேயே மரிக்கும்படி நேரிட்டுவிட்டது. ஆகையால், தம்பதிகள் இருவரும்: "தீர்க்க புத்தியும் தீர்க்காயுசுமுள்ள புத்திரன் ஒருவன் தங்களுக்கு வேண்டும்" என்று ஹரியையும் ஹரனையும் சேவித்து வந்தார்கள். இவர்களுடைய பிரார்த்தனை சீக்கிரத்திலே பலனடைந்தது. சொர்ண விக்கிரகம் போன்ற அருங்குழந்தை, ஆண்மகவொன்று பிறந்தது. இந்தக் குழந்தையினுடைய சரீர லக்ஷணங்களையெல்லாம் பார்க்கப் பெற்ற சாமுத்திரிகா சாஸ்திரக்ஞர்கள் "இக் குழந்தை மகா பண்டிதனாகவளர்ந்து கீர்த்தி பெறுவான்" என்று கூறினார்கள்.

மகா வித்துவானாகிய சுப்பிரமணிய கவியானவர் இவ்வற்புதக் குழந்தையை ஆவலோடு எடுத்து அணைத்துக்கொண்டு, அதன் அழகிய முகத்தை ஆசையுடனே பார்த்து, அதற்குத் தேவர்களும் புகழும் திரிவிக்ரமன் என்னும் பெயரிட்டார். இந்தக் குழந்தை, மழலைச் சொல் வழங்க ஆரம்பித்த பொழுதே, எவ்வித தோஷங்களும் எவரும் கூற

முடியாத கவிகள் கட்ட வல்ல சக்தி யுடையவரானார். பின்னர், இக் குழந்தையினுடைய புத்தி நாளுக்கு நாள் விகசித்துக்கொண்டே வந்தது. சுப்பிரமணியர் தமது குழந்தையைத் தகுந்த உபாத்தியாயர்க ளிடத்தில் ஒப்புவிக்கவே, அக் குழந்தையினுள் அந்தர்க்கதமாய் அடங்கி யிருந்த சக்திக ளெல்லாம் பிரகாசிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே திரிவிக்ரமர் அனைவரும் பார்த்து ஆச்சர்யப் படும்படியான மகா வித்துவான் ஆய்விட்டார்; வேதாந்தம் படிக்க ஆரம்பித்தார்; உஷா ஹரணம் என்னும் அத்தியற்புதமான கிரந்தம் ஒன்று இயற்றினார்; "இலக்கண இலக்கியங்களிலே அவருக்கு நிகரில்லை" என்னும்படி பெயர் பெற்றுவிட்டார்; தர்க்க சாஸ்திரத்திலோ உண்மையிலேயே அவருக்கு நிக ரில்லை; ஒன்றேகால் லக்ஷம் கிரந்தங்கள் அடங்கிய ஸ்ரீ சங்கராருடைய அத்வைதம் முழுவதையும் கரை கண்டார். இவை யெல்லாம் அவருக்குத் தலைகீழ்ப் பாடமா யிருந்தன. அத்வைதத்திலே அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆயினும், அக் காலத்து அதுவே எங்கும் வியாபகமா யிருந்ததினால், அவர் அத்வைதி யென்றே விளங்கி வந்தார். தாம் அத்வைதம் கற்ற குருவினிடத்திலே அத்வைதத்திலே தமக்குத் தோன்றும் ஆக்ஷேபணைகளை யெல்லாம் சொல்லிப் பார்த்தார்; அந்தக் குருவினாலே தக்க சமாதானங்கள் அளிக்க முடியவில்லை. இவ்விதமாகத் திரிவிக்ரமர் அத்வைதத்தி னிடத்திலே சந்தேகங்கள் பல வுள்ளவரா யிருந்தும், நெடுநாட்கள் அத்வைதத்தையே தமது மதமாகக் கொண்டிருந்தார்.

இவருடைய பிதாவாகிய சுப்பிரமணிய பண்டிதரும் இப்படியே அத்வைத சித்தாந்தத்தினிடத்தில் நம்பிக்கை யற்றவராய், சம்சய மனத்தினரா யிருந்தார். இந்தச் சம்சயம்தான் இரத்தத்திலே கலந்து திரிவிக்ரமரையும் பிடித்துக்கொண்டது போலும்! ஆனால், வெளிப் பார்வையிலே "திரிவிக்ரமர் போன்று அத்வைதி எவருமே கிடையாது" என்றுதான் எவரும் நம்பும்படி யிருந்தது? அவருடைய உள்ளத்திலே ஒளிந்து மறைந்து அவருடைய ஹிருதயத்தைப் பிளந்துகொண்டிருந்த இந்த விஷயம் எவருக்குத் தெரியும்? அக் காலத்திலே ப்ரபாகர சாஸ்திரத்திலே மகா வித்துவானுன பாநு என்பவனும் அவரைக் கண்டு நடுங்கினுனென்றால் திரிவிக்ரமருடைய வித்துவத் சமர்த்தைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை.

சுப்பிரமணிய சாஸ்திரி தமது அந்திய காலத்திலேயொரு நாள் தமது புத்திரனுகிய திரிவிக்ரமரை நோக்கி, "அப்பா! குழந்தாய்! நீயோ தற்கால சம்ப்ரதாயமான அத்வைதத்திலே கரை கண்டிருக்கிறுய். இதனுல் துக்க நிவிருத்தி யுண்டாகுமென்று நினைக்காதே. பிரத்தியக்ஷத்தில் பார்க்கின்ற இவ் வுலகத்தைப் பொய்யென்று கூறி, எல்லாவற்றுக்கும் ஆதிகாரணமாயுள்ள பிரம்ம சொரூபத்துக்குக் குணங்க ளில்லையென்று வாதித்து, உன்னையும் நீ ஏமாற்றிக்கொள்ளாதே, பிறரையும் ஏமாற்றுதே. உன்னுடைய சொந்த புத்தியையும் யுக்திகளையும் உபயோகித்து உண்மைப்பொருளை ஆய்ந்து அறிந்துகொள். அகண்ட கல்யாண

குண சம்பந்நரான ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய அநந்த லக்ஷணங்களை ஸ்மரிப்பாய்'' என்று உபதேசித்தார். ஏற்கனவே திரிவிக்ரமரிடம் குடிகொண்டிருந்த சம்சயமானது இப்பொழுது பதின்மடங்காக அதிகரித்துக்கொண்டது.

ஆசார்யர் விஷ்ணுமங்கல க்ஷேத்திரத்துக்கு வந்திருப்பது கேள்விப்பட்ட திரிவிக்ரமபண்டிதர் ஆசார்யரிடம் சென்று தமது சம்சயங்களை நிவிர்த்தித்துக்கொள்ளலாம் என்று யோசனை பண்ணினர். அச் சமயத்திலே அத்வைதிகள் பலர் அவரிடம் வந்து, ''ஐயா! அத்வைத சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றவர்கள் தங்களைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. நெடுங்காலமாக, அநாதிகாலம் தொட்டு உலகில் பிரகாசித்து வருகிற நமது அத்வைத மதத்தை மாத்வன் என்ற பெயரையுடைய ஒருவன் அழித்து வருகிறன். ஈச்வரன் என்று எவனே ஒருவன் எங்கோ யிருக்கிறனும்; அவனே சிருஷ்டி கர்த்தாவாம்; இப் பிரபஞ்சம் உண்மையாம்; இவ்வாறெல்லாம் பலபல பிதற்றி ஜனங்களை ஏமாற்ற ஆரம்பித்திருக்கிறன். தாங்கள் இந்தச் சமயத்தில் அவனுடனே வாது செய்து அவனைத் தோற்கடித்தால்தான் நம்முடைய மதம் நிலைபெறும். இன்னும், ஜயசிம்ஹ ராஜனும் அவன் கைவசமாய்விட்டான். இனிமேல் நாம் சும்மாயிருப்போமானல், சீக்கிரத்திலே அத்வைதம் என்ற பெயர்கூட மறந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை'' என்று கூறினர்கள்.

ஏற்கனவே ஸ்ரீ மாத்வரிடம் சென்று தமது சம்சயங்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணியிருந்த

திரிவிக்ரமர் இவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஆசார்யருடனே வாதுசெய்யப் புறப்பட்டார். அதாவது, தமது கக்ஷியை எடுத்துப்பேசி வாதிக்கும்பொழுது, ஆசார்யர் தருந்த விடை சொல்லவேண்டியவ ராதலால், அந்த விடைகளிலேயே தமது சம்சயங்களுக்குச் சமாதானங்கள் உண்டாகுமென்று கருதி, வாதுக்குப் புறப்பட்டார்.

இப்படியிவர் புறப்படுவதற்கு முன்னதாகவே, இவர் ஆசார்யருடைய சித்தாந்தங்களை நன்கு யறிந்துகொள்ள விரும்பினவராய், தமது இளைய சகோதரராகிய சங்கர பண்டிதரை ஆசார்யருடைய பாஷ்ய ரஹஸ்யார்த்தங்களை யறிந்துவரும்படி யனுப்பிவைத்தா ரென்றும், அந்த சங்கர பண்டிதர் ஆசார்யரிடம் வந்து சங்குசக்ராதி முத்திரைகள் பெற்றுச் சிஷ்யராகி, பாஷ்யத்தைத் திருடிக்கொண்டு போய்த் தமயனிடத்திலே கொடுத்தா ரென்றும், அவர் அதை வாங்கி எவரும் அறியாமல் இராக்காலங்களிலே படித்து உண்மையான கருத்துக்களை யுணர்ந்து தெளிந்து கொண்டா ரென்றும், ஒரு ஐதிகம் வழங்குகிறது. இவ் விஷயம் உண்மையாயினும் இல்லாவிட்டாலும்; இவருடைய இளைய சகோதரராகிய சங்கரர் இவருக்கு முன்னதாக ஆசார்யரிடம் சிஷ்யராகி, ஆசார்யருடைய புஸ்தகங்களை ஜாக்ரதையாகப் பாதுகாக்கும் வேலையிலே நியமிக்கப்பட்டா ரென்றும் நிச்சயமாகத் தெரியவருகிறது. திரிவிக்ரமர் ஆசார்யருடைய பாஷ்யத்தைப் படித்து, அதன் உண்மைக் கருத்துக்களை யறிந்து ஆச்சர்யமடைந்தார்.

இவ்விதமாகத் திரிவிக்ரமபண்டிதர் சகல சித்தாந்தங்களிலும் வல்லவராய், 'ஆசார்யருடனே வாது செய்து உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும்' என்ற எண்ணத்துடனே, அநேக அத்வைத வித்வான்கள் சூழ, விஷ்ணுமங்கலத்துக்கு வந்து சேர்ந்தார். ஆசார்யர் அப்பொழுது காவியங்களுள் எல்லாம் சிறந்ததாகிய பாகவதத்தை யெடுத்து எல்லோருக்கும் தெரியுமாறு எளிய நடையிலே இன்பகரமாக வியாக்கியானம் செய்து பொருள் உரைத்துக்கொண்டிருந்தார். திரிவிக்ரமர் ஆசார்யருடைய அமிருத மொழிகளைக் கேட்டார்; ஆநந்த பரவசராய்விட்டார்; இதற்கு முன் எவரும் இம்மாதிரி யெடுத்துரைக்க அவர் கேட்டதில்லை. ஆசார்யர் கூறியதிலே ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியாது; திரிவிக்ரமரும் மகா வித்வான்; சம்ஸ்கிருத பாஷையானது அவருக்குச் சொன்னபடி கேட்டுவந்தது. ஆதலால், அவர் தம்மா லானமட்டும் ஆசார்யருடைய உரையிலே குற்றங் கண்டுபிடிக்கப் பார்த்தார்; முடியவில்லை; திரிவிக்ரமர் பிரமித்துவிட்டார். 'ஆசார்யர் ஒரு அசாதாரணமான புருஷரே' என்று திரிவிக்ரமபண்டிதர் அறிந்துகொண்டார். ஆனால், இம்முறை திரிவிக்ரமர் ஆசார்யரை வாதுக்கழைக்கவில்லை. 'இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்' என்று திரும்பிப் போனார்.

அரசனாகிய ஜயசிம்ஹன் ஆசார்யரை விட்டுப் பிரியவில்லை; மடத்திலேயே, ஆசார்யருடைய அநேக சிஷ்யர்களுள் தானும் ஒருவனாக வசித்துவந்தான். ஆதலால்,

ஆசார்யருடைய அந்தரங்க வாழ்க்கையின் பரிசுத்தத் தன்மையையும், அவருடைய செல்வாக்கின் ரகஸ்யத்தையும், அவருடைய சித்தாந்த மகிமையையும் அவன் உள்ளபடியறிதற்கு அவனுக்கு இடம் கிடைத்தது. இதனால் அவனுக்கு ஸ்ரீ மாத்வரிடத்திலே பயமும் பக்தியும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

காலைமுதல் மாலைவரையில், அநேகமாக அஸ்தமித்து வெகு நேரம்வரையிற் கூட, ஆசார்யருக்கு வேலை சரியாக இருந்தது. ஒரு நிமிஷம் கூட ஓய்வு கிடையாது. ஸ்நாநபானம், ஜபதபங்கள், பூஜை, போதனை இப்படியே தினந்தோறும் நடந்துவந்தன. ஈச்வரார்ப்பணமாகச் செய்யப்பட்ட ஜீவிதத்தின் நடவடிக்கைகள் வேறு எப்படித்தான் இருக்கமுடியும்?

ஆசார்யர் அருணோதயத்திலே எழுந்திருந்து ஸ்நாநபானம் முதலியன செய்து, வெகு நேரம் ஏகாந்தமாக இனிய நிஷ்டையிலே எழுந்தருளியிருப்பார். இதற்குள்ளாகச் சிஷ்யர் குழாங்கள் வந்து அவரைச் சுற்றிச் சூழ்ந்துவிடும்; ஆசார்யர் நிஷ்டை கலைந்தவுடனே உச்சிக்காலம் வரையில் சிஷ்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேதாந்த உபதேசம் செய்துகொண்டிருப்பார். மத்தியானத்திலே ஆசார்யர் மறுபடியும் ஸ்நாநம் செய்வார்; உடனே தீட்டுப்படாது தோய்த்து உலர்த்திய மடிவஸ்திரத்தை யெடுத்து உடுத்திக்கொண்டு, மிகுந்த பக்தி விநயத்துடனே தமது பூஜைப் பெட்டியிலிருந்து சாளக்கிராமங்களையும் விக்கிர

கங்கைகளையும் எடுத்து எதிரே வைத்துக்கொண்டு பூஜை செய்யத் தொடங்குவார்; அப்பொழுது அந்தப் பூஜையைக் கண்ணுறும்படியான பாக்கியம்பெற்றவர்கள் தாங்கள் தேவதைகளுக்கு முன்னே நேருக்கு நேர் நிற்பதாகவே நினைத்துக்கொள்வார்களே யொழிய, பிரதிமைகளுக்கு முன்னே நிற்பதாக எண்ணமாட்டார்கள். சில பரிசுத்த பக்தர்கள் வேத பாராயணம் செய்வார்கள். சில சிஷ்யர்கள் பகவந் நாம ஸ்தோத்திரங்களைப் பாடுவார்கள். தூபதீப நைவேத்தியங்கட்கு வேண்டியவற்றைக் கொண்டுவந்து வைப்பதற்காகச் சில சிஷ்யர்கள் அங்கு மிங்கும் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள். அற்புதமான பூஜை நடக்கும்; எல்லோருடைய மனமும் புஷ்பங்களினால் நிறைந்துள்ள விக்கிரகங்களிடத்தும் ஆசார்யரிடத்துமாக ஊசலாடிக்கொண்டிருக்கும். அவ்விடத்து ஆகாயமே சைதந்ய வொளி வீசும். அந்த சந்நிதானத்திலே நிற்பவர்களுக்குப் பசி தாகம் ஒன்றும் தோன்றாது.

சாதாரணமாகப் பூஜை முடிவு பெற இரண்டு அல்லது மூன்று மணி யாகும். பூஜை முடிந்தவுடனே ஆசார்யர் பிக்ஷைக்கு எழுந்தருளுவார்; பூஜை சமயத்திலே எம்பெருமானுக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட இந்தப் பிக்ஷையானது ஆசார்யருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் மாத்திரம் அன்று, உண்ண விரும்புவர்க ளனைவருக்குமே, அவர்கள் எத்தனை யாயிரம் வந்தாலும், தயார் செய்யப்பட்டிருக்கும். பின்னர், தீர்த்தமும் பிரசாதமும் பெற்றுக்

கொள்வதற்கு நூற்றுக்கணக்கான—ஏன்? ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆசார்யரிடம் சமீபித்துச் செல்வார்கள். மடத்துக்கு வந்து பூஜையைத் தரிசித்தவர்கள் ஆசார்யரிடம் தீர்த்தமும் பிரசாதமும் பெற்றுக்கொள்ளாமல் வீட்டுக்குப் போகமாட்டார்கள். இவ் வழக்கமானது இன்னும் எல்லா மடங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இன்னும் ஆசார்யர்களிட மிருந்து தீர்த்தமும் பிரசாதமும் பெறுவதற்காக அவ் வாசார்யர் இடும் நிபந்தனைகட் கெல்லாம் இணங்கி ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஒருவரோ டொருவர் தள்ளிக்கொண்டு மேல் விழுவதைப் பார்த்தால், மாத்வர்களுக்குள்ள திட விசுவாசம் இத்தகைய தென்பது புலப்படும். ஏ! இருபதாவது நூற்றாண்டு நாகரிகனே! இதைக் கேட்டுவிட்டுச் சிரியாதே! மகா பாபம் புரியாதே! மேனாட்டு ஜட சாஸ்திரங்களை நீ கற்றாயே யொழிய, அவற்றுக்கும் மேலே ஆத்மீக சாஸ்திரங்கள் என்று சில இருக்கின்றன வென்பது உனக்குத் தெரியாது. க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், புஷ்பங்கள், பிரசாதங்கள் முதலியவை ஒருவித சைதந்ய சக்தியை அளிக்கின்றன வென்பது உனக்குத் தெரியாது. வங்காளத்திலே அபூர்வமாய் அவதரித்த ஸ்ரீகிருஷ்ண சைதந்யர் தமது ஸ்பர்ச மாத்திரத்திலேலே ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு ஹரி பக்தியை மூட்டிவிட்டார். இந்த ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர் பதினாயிரம் வருஷங்கட்கு முன்னே வசித்த ஒரு புராண புருஷர் அல்லர். உங்களுடைய கி. பி. 16-வது நூற்றாண்டில்

மகம்மதியர்கள் நமது இந்தியாவை யாண்டுகொண் டிருந்த பொழுது இருந்தவர். ஆதலால், உங்களுடைய சரித்திர நாட்களுக் குட்பட்டவரே; ஆகையால், நீங்கள் இவனை நம்பாமல் இருக்க முடியாது. இவருடைய சரித்திரத்தை எத்தனையோ ஆசிரியர்கள் வங்காளி பாஷையிலும் ஆங்கில பாஷையிலும் எழுதி வைத்திருக்கிறார்கள்; தமிழ்ப் பாஷையிலேகூட ஒரு புத்தகம் எழுதப்பட் டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர் பக்தியை ஒருமாதிரி மின்சாரப் போக்குப் போலக் கருதினார். ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர் நடந்துகொண் டே யிருப்பார்; போகும்பொழுதே எவனையாவது ஸ்பர் சித்துவிடுவார். அவன் வண்ணானு யிருக்கலாம், அம்பட் டனு யிருக்கலாம், பறையனு யிருக்கலாம், மகம்மதியனு யிருக்கலாம், நாஸ்திகனு யிருக்கலாம், எவனு யிருந்தாலும் சரி; அவருடைய ஸ்பர்சம் பட்ட மாத்திரத்திலே அவன் பக்தி பரவசமாகி, ஆநந்தத் தாண்டவம் ஆடத் தொடங்கி விடுவான்; இதுமாத்திர மன்று; இவன் எவரை ஸ்பர்சித்தா லும், அவர்களும் அம்மாதிரியே ஆய்விடுவார்கள். ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர் வாய் திறந்து ஒருவருக்கும் ஒன்று போதித்ததில்லை; அவர் ஞான விஷயமாக அல்லது பக்தி விஷயமாகக் கிரந்தங்கள் ஒன்றும் இயற்றியதாகவும் காணப் படவில்லை. இப்படி யெல்லாம் இருந்தும் இப்பொழுது வங்காளத்திலே அரசு செலுத்தும் ஆசார்யர் அவரே யாகும்; அவர் சக்தியையும் பக்தியையும், நாம் ஒரு பொ ருளை யொருவருக்குக் கொடுப்பதுபோல, நேருக்கு நேரே

கொடுக்கும் தன்மையரா யிருந்தாரே யொழிய, வாசா மாத்திரத்தில் போதிப்பவரா யிருக்கவில்லை.

கிறிஸ்தவர்களுக்கு ஆதி யாசார்யராகிய இயேசு கிறிஸ்து என்பார் இம்மாதிரியான சக்தி வாய்ந்தவரா யிருந்தா ரென்று அவர்களுடைய வேத புத்தகத்திலே கூறப் பட்டுள்ளது. தற்காலத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் இத்தகைய சக்திகளை ஏராளமாக உடைத்தா யிருந்தா ரென்று கேள்விப்படுகிறோம். ஆகையால், மகாத் மாக்களிட மிருந்தும் க்ஷேத்திரங்களிலிருந்தும் தீர்த்தம், பிரசாதம் முதலியவற்றைப் பெற்றுக்கொள்வதிலே யடங்கியுள்ள சூக்ஷமார்த்தம் இந்தியர்களாகிய நமக்குத் தான் தெரியுமே யொழிய, இகலோக சுகங்களை என்று முள்ளன வென்று ஏமாந்து இறுமாந்திருக்கும் ஏனையர் அறிவரோ?

ஆசார்யர் திருட்டுப்போன தமது புத்தகங்களை யெல் லாம், இப்பொழுது விஷ்ணுமங்கலத்தி லிருக்கையில், ஜயசிம்ஹ ராஜனுக்குச் சங்கதியைத் தெரியப்படுத்திவிட்டு, தாம் அவற்றை ஒப்புவித்திருந்த கிராமாதிகாரியை வர வழைத்து, ஏற்றுக்கொண்டு, மறுபடியும் ஸ்ரீ சங்கராசார்யர் வசத்தில் ஒப்புவித்தார். ஜயசிம்ஹ ராஜன் இங்ஙனம் நெடு நாட்கள் மடத்திலேயே யிருந்து மகா பக்தனாகி, மனத் தூய்மை பெற்று, ஆசார்யரிடம் விடை பெற்றுக்கொண்டு, தனது ராஜதானி போய்ச் சேர்ந்தான்.

ஆசார்யர் அதிககாலம் விஷ்ணுமங்கலத்திலே வாசம் செய்துவிட்டு, பின்னர் அமராலயம் என்ற கிராமத்துக்குச் சென்றார். இங்கே பெரியதோர் க்ஷேத்திரத்திலே தங்கித் தமது சூத்ர பாஷ்யத்தைத் தம்மிடம் கேட்க வந்தோர் அனைவருக்கும் எடுத்து உரைத்துக்கொண்டிருந்தார். அத்வைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களிலே வல்லுநர்கள் அநேகர் வந்து ஆசார்யருடைய அரிய, இனிய உபதேச அமிருதத்தை யள்ளி யள்ளிக் குடித்து ஆநந்தித்தது மன்றியில், "இப்படியும் உண்டோ" என்று ஆச்சர்யமு மடைந்தார்கள்.

குறுகிய புத்தியும், சுருங்கிய ஹிருதயமும், பிடிவாத குணமுமுடைய சில அத்வைதிகள் மறுபடியும் திரிவிக் கிரமரிடம் சென்று, "ஸ்வாமி! நாங்கள் முன்னமொரு முறை கூறியபொழுது, தாங்கள் அந்த மத்வனிடம் சென்றீர்கள்; அப்பொழுதே அந்த மத்வன் ஒழிந்தா னென்று நாங்கள் சந்தோஷித்தோம். ஆனால், அந்த மத் வன் கூறியதை யெல்லாம் மௌனமாகக் கேட்டுகொண் டிருந்துவிட்டு, பேசாமல் எழுந்திருந்து வந்துவிட்டீர்கள். இதனால், அவனுக்குக் கர்வம் தலைகால் தெரியவில்லை; அவனை வெல்ல தங்களால் முடியாதென்று நினைத்துவிட் டீர்களோ? அப்படியாயின், அதையாவது எங்களிடம் சொல் லுக!'' என்று கேட்க, திரிவிக்கிரமபண்டிதர் 'அத்வைதத் தின் உண்மைச் சொரூபத்தை அவர்கள் அறிந்துகொள்வ தற்குக் காலம் வந்துவிட்டது' என்று நினைத்து, மத்வ

ருடனே தாம் வாது செய்யப் போவதாகக் கூறிக்கொண்டு, மத்வ மடத்துக்கு வந்து சேர்ந்தார்.

தர்க்கம் ஆரம்பிக்கப்பட்டது; இடைவிடாமல் பதினைந்து நாட்கள் தொடர்ச்சியாக வாதம் நடந்தது. இவ்வாதத்தைப்பற்றி ஸ்ரீ மாத்வ விஜயத்திலே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீ மாத்வ விஜயத்தின் ஆசிரியர் இந்த திரிவிக்ரமபண்டிதருடைய புத்திரராகிய நாராயணாசார்யரென்பவராவர். இவர் அநேகமாகப் பிதாவுடன் சென்று இத் தர்க்கப்போரை நேரில் கண்ணால் கண்டிருக்கலாம். பலவிதமான தத்துவக் கோட்பாடுகளும் வாதிக்கப்பட்டன. முதலிலே ஆசார்யர் நாஸ்திகமதத்தைத் தகர்த்துத் துகள் துகளாக்கி ஊதி யெறிந்துவிட்டார்; பின்னர், பெயருக்கு மாத்திரம் "ஈச்வரன் ஒருவன் உளன்" என்று கூறிக்கொண்டு, ஈச்வரனுக்கு எவ்வித அதிகாரமும் விசேஷ லக்ஷணங்களும் அளியாத பாஷண்ட மதங்களை யெல்லாம் பறக்க அடித்துவிட்டார்; அத்வைதத்தைச் சின்னபின்னப் படுத்தி, "அப்படி யொன்று இல்லை" என்றே எல்லோரும் கூறும்படி செய்துவிட்டார். திரிவிக்ரமர் தம்மா லானமட்டும் எதிர்த்து வாது புரிந்தார்; ஆயினும், கடைசியாக, ஆசார்யர் முன்பாகத் தலை சாய்க்கத்தான் வேண்டிவந்தது.

திரிவிக்ரமர் அத்வைதத்தை விட்டுவிட்டு, துவைத வேதாந்தத்தை உண்மையென ஒப்புக்கொண்டு, ஆசார்யரிடம் சிஷ்யரானார். இந்தத் திரிவிக்ரமருடைய பெருந்தன்மைதான் என்னே! அத்வைதத்தை நிலைநாட்டுவதற்குப்

போர் புரிய அசகாய சூரர்போல வந்தார்; தோல்வியடைந்தார். தம்மால் ஆசார்யரை ஜயிக்க முடியவில்லை யென்பதை நன்றாய் உணர்ந்தார். இதனால் அவருக்கு ஆசார்யரிடத்தே துவேஷமுண்டாகவில்லை. தாம் ஒரு பெரிய வித்துவான் என்கிற வீண் கர்வத்தை யெல்லாம் ஒரு பக்கமாகக் கட்டி வைத்துவிட்டு, ஸ்ரீ மாத்வரிடத்திலே சிஷ்யராய்விட்டார்.

ஸ்ரீ திரிவிக்கிரமாசார்யர் துவைத சித்தாந்தத்தைக் கைக்கொண்டது ஒரு பெரிய விசேஷ சம்பவமாம். பிறந்து வளர்ந்து பயின்று பிரசித்திபெற்ற ஒரு மதத்தைத் திரிவிக்ரமர் போன்ற ஒரு மகா வித்துவான் விட்டுவிடுவதென்றால் அதென்ன? சாதாரண கார்யமா? எங்குப்பார்த்தாலும் கொஞ்சக்காலத்துக்கு இதுவே பேச்சாயிருந்தது. அத்வைதிகள் அவமானம் மிகுந்து, தலை குனிந்து நடக்கலானார்கள். துவைத சித்தாந்தத்தை இதுவரை பரிகசித்துவந்த பலரும் இப்பொழுது, "ஆசார்யருடைய மொழிகளில் ஒருவேளை உண்மையிருந்தாலும் இருக்கலாம்" என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள். சம்சயப்பட்டுக்கொண்டிருந்தவர்களுடைய சம்சயங்களெல்லாம் இப்பொழுது நிவிர்த்தியாய்விட்டன. "மகா வித்துவான் திரிவிக்கிரமபண்டிதர் ஸ்ரீ மாத்வருக்கு சிஷ்யராய்விட்டார்" என்ற சங்கதி தேசம் எங்கும் பரவவே, "இனிமேல் ஆசார்யருடனே வாது புரிந்து வெல்வதற்கு எவராலும் முடியாது" என்று ஜனங்கள் நூற்றுக் கணக்காக மத்வமதத்தை யவலம்பிப்பதற்கு ஆரம்பித்தார்கள்.

திரள்திரளாக ஜனங்கள் தினந்தோறும் ஆசார்ய ருடைய மடத்துக்கு வந்து, ஆசார்யருடைய சிஷ்யர்களாக விரும்பி, விண்ணப்பம் செய்வார்கள். ஆசார்யருக்கு 'அவர் கள் உண்மையான ஹிருதயத்துடனே வந்திருக்கிறார்கள்' என்று தெரிந்துவிட்டால், அவர்களை சிஷ்யர்களாக ஏற்றுக் கொண்டு அவர்கள் மத்வமதத்தை யநுசரித்ததற்கு அடை யாளமாக அவர்களுடைய சரீரங்களின் பல பாகங்களிலும் சங்குசக்கர முத்ராதாரணம் செய்துவிடுவார். இந்த முத் திராதாரணம் ஆனவுடனே, இவர்களுக்கு ஆசார்யரிடத் திலே ஒருவித விசேஷப் பற்றுதல் உண்டாகும். அவர்களு க்கு ஒரு புதிய ஊக்கமும் ஒரு புதிய சக்தியும் உண்டா கும். இவர்கள் நெற்றியிலே கோபிச்சந்தன நாமமும், சரீ ரத்தின் இடுப்புக்கு மேலே சில இடங்களிலே கோபிச் சந்தனத்தால் சங்க சக்கர கதா பத்ம முத்திரைகளும் தரி த்தவர்களாய் விளங்கினார்கள். இவர்களுக்கு ஸத்வைஷ்ண வர்கள் என்றும், தத்துவ வாதிகள் என்றும் பெயர் உண்டா யிற்று. திரிவிக்ரமருடைய வித்வத்தும், சமர்த்தும், புதிய மதத்தினிடத்தே அவருக் கேற்பட்ட ஆர்வமும் மத்வ மதம் சீக்கிரமாக எங்கும் பரவுவதற்கு ஒருவாறு காரண மாயின.

ஆசார்யர் பிரஹ்ம சூத்திரங்கட்கு தாம் இயற்றி யுள்ள பாஷ்யம் பண்டிதர்களுக்கே மிகக் கடினமாயிருக் கிறது கண்டு, திரிவிக்ரமரை நோக்கி "பிரஹ்ம சூத்திரங் கட்கு நான் இயற்றியுள்ள பாஷ்யம் அதிக கடினமாயிருக்

கிறதுபோலத் தோன்றுகிறது. ஆகையால், நீ அந்த பாஷ்யத்துக்கு ஒரு உரை யெழுதினால் நன்றாயிருக்கும்'' என்று ஆக்ஞாபித்தார்; குருவினுடைய ஆக்ஞையை சிரசா வகித்து, ஸ்ரீ திரிவிக்ரமர், தத்துவப் பிரதீபிகை என்ற பெயருடனே ஒரு நூல் இயற்றினார். இது மத்வ சித்தாந்தத்துக்கு ஒரு பிரதான கிரந்தமாம்.

இந்தக் கிரந்தம் எழுதும்பொழுது, திரிவிக்ரமபண்டிதர் சில சமயங்களிலே மூளை குழம்பித் தத்தளித்ததுண்டு. ஒவ்வொரு சூத்திரமும் எழுவாய் பயனிலை யொன்று மின்றி இரண்டொரு வார்த்தைகளிலே அடங்கியிருந்தது. ஆசாரியர் எழுதிய பாஷ்யமோ அதிகம் சிறியதாயிருந்ததினால், மிகமிகக் கடினமா யிருந்தது. ஆகையால், திரிவிக்ரமர் அந்தச் சூத்திரங்களை விரித்துப் பொருள் கூறும்பொழுது, முதல் சூத்ரம் முதல் கடைசிவரையில் பட்ட கஷ்டங்கள் பல.

ஆதலால், திரிவிக்ரமபண்டிதர் ஆசார்யரை நோக்கி, ''ஸ்வாமி! தேவரீருடைய பாஷ்யம் மிகச் சுருக்கமாயிருக்கிறதினாலே, மிகமிகக் கடினமாயிருக்கிறது. நான் என்னுடைய சிற்றறிவுக்கெட்டியவரையில் விரித்துப் பொருள் கூறியிருக்கிறேன். ஆயினும், தேவரீரே இன்னும் கொஞ்சம் தெளிவாக, எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி இன்றுமொரு பாஷ்யம் செய்தல் அவசியமாம். எளியேனுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு எண்ணற்ற ஜீவராசிகளுடைய துக்கநிவிர்த்தியின் பொருட்டு, அங்

னம் ஒரு பாஷ்யம் இயற்றுமாறு நான் பிரார்த்தித்து வேண்டுகிறேன்'' என்று வற்புறுத்தி வேண்டினார்.

இதற்கு முன்னமே ஆசார்யர் இயற்றியிருந்த பிரதான கிரந்தங்கள் சில பின் வருமாறு:—

(1) கீதா பாஷ்யம், (2) சூத்திர பாஷ்யம், (3) அநு பாஷ்யம், (4) தசோபநிஷத்து வியாக்கியானம், (5) மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம், (6) பாகவத தாத்பர்ய நிர்ணயம், (7) தத்துவநிர்ணயம், (8) எமக பாரதம், (9) சதாசார ஸ்மிருதி, (10) ஐயந்திகல்பம் முதலியவை அடங்கிய தசப்பிரகரணங்கள்.

இப்பொழுது திரிவிக்கிரமபண்டிதரும் மற்ற சிஷ்யர்களும் இங்ஙனம் வற்புறுத்திக் கேட்கவே, ஆசார்யர் இவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி, அநு வியாக்யானம் என்று ஒரு கிரந்தம் இயற்றினார். ஆசார்யர் இந்நூல் இயற்றும்பொழுது, நான்கு சிஷ்யர்களைக் கூப்பிட்டு, இந்தக் கிரந்தத்திலுள்ள நான்கு அத்தியாயங்களையும் ஒரே காலத்தில் கூறி அந் நால்வரையும் கொண்டு எழுதும்படி செய்தார். இந் நூல் இவ்வளவு சீக்கிரத்திலே எழுதப் பட்டதானாலும், ஆசார்யருடைய கிரந்தங்களிலே விசேஷச் சிறப்பு வாய்ந்தது இதுதான். இந்தக் கிரந்தத்தின் பெருமையைக் கண்டறியவேண்டுமானால் ஸ்ரீ ஜயதீர்த்தாசார்யர் என்பவர் செய்துள்ள நியாயசுத்தம் என்ற நூலைப் படித்தால் இனிது விளங்கும். ஸம்ஸ்கிருத பாஷையிலேயே இம்மாதிரி சிறந்த கிரந்தம் இல்லையென்று மாத்வர் சொல்லிக்கொள்கிறார்கள்.

நியாய சுத்தம் என்ற கிரந்தத்தைப் படியாதவர் மத்வ மத சித்தாந்த மறிந்தவரென்று கூறுதல் முடியாது. இந்தக் கிரந்தம் ஒன்று படித்தாலே போதும்; மனிதன் ஞானசம்பத்தை யடைந்துவிடலாம்.

இந்தக் கிரந்தத்தின் ஆசிரியர் ஆகிய ஸ்ரீ ஜயதீர்த்தர் என்பவர் ஸ்ரீ மத்வருக்குப் பின் சுமார் ஐம்பது வருஷங்கள் கழித்து, ஆசார்யர் ஸ்தானம் வகித்தவர். "இவர் ஸ்ரீமாத்வருடைய காலத்திலே ஒரு எருதாக இருந்தார்" என்றும், "மாத்வருடைய சித்தாந்த நூல்களை யெல்லாம் யாத்திரா காலங்களில் சுமந்து செல்வதற்கு உபயோகிக்கப்பட்டு வந்தார்" என்றும், "ஸ்ரீ மாத்வர் தமது சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது, அசை போட்டுக்கொண்டே அருகில் படுத்திருந்து, மிகுந்த கவனத்துடனே பாடங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்" என்றும், "மனுஷ்ய ரூபத்திலேயுள்ள இந்த சிஷ்யனே தாம் கூறுவதை நன்றாகக் கிரகித்து வருகிறானென்பதை ஸ்ரீமாத்வர் அப்பொழுதே அறிந்துகொண்டதுண்டு" என்றும் ஒரு ஐதிகம் வழங்குகிறது. "சில சமயங்களிலே ஸ்ரீ மாத்வர் மற்ற சிஷ்யர்களெல்லோரும் தம்மைச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தும், அந்த எருதையே நோக்கியவராய்ப் பாடஞ் சொன்னதுண்டு" என்றும் சொல்லப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்திலே ஒருவர் ஆசார்யரை நோக்கி, "ஸ்வாமி! தங்களுடைய நூல்களுக்கு வியாக்கியானம் எவர் எழுதுவார்?" என்று கேட்க, ஆசார்யர் உடனே

"இந்த எருது எழுதும்" என்று கூறினராம். ஆசார்யர் இங்ஙனம் கூறியது சிஷ்யர்களுக்குத் தெரியவந்தவுடனே, சில சிஷ்யர்கள் அவ்வெருதின்மீது பொறாமை மிகுந்தவர்களாய் அவ்வெருதை "சர்ப்பம் தீண்டி யிறக்கக்கடவது" என்று சபித்தார்கள். இது ஆசார்யருக்குத் தெரியவந்தது. அவர் அதே சாபத்தை "சர்ப்பம் தீண்டி, இறக்கக்கடவது" என்று வேறொருவிதமாக மாற்றிவிட்டார். அந்த எருதை ஒரு சர்ப்பம் தீண்டிற்று; ஆனால், எருது மரிக்கவில்லை; சர்ப்பம் மரித்துவிட்டது. ஸ்ரீ மாத்வர் தாம் இயற்றிய துவாதச ஸ்தோத்திரத்தை அந்த எருது பாராயணம் பண்ணும்படி செய்ய, அதனால் சர்ப்பத்தினுடைய விஷமானது அந்த எருதைச் சற்றும் பாதிக்கவில்லை.

ஸ்ரீ மாத்வருடைய சரித்திரத்தை ஆங்கிலத்திலேயுள்ள ஸ்ரீ பத்மநாபாசார்யர் இந்த விஷயத்தைப்பற்றிப் பரம்பரையாக வழங்குவதை எழுதிவிட்டு, கடைசியில் "இதில் அடங்கியிருக்கும் கருத்து யாதெனில், வியாக்கியான கர்த்தா நேருக்கு நேர் ஆசார்யருடன் கலந்து, ஆசார்யரிடமிருந்தே அருள் பெற்றார்; இல்லையேல், ஸ்ரீ ஜயதீர்த்தருடைய வியாக்கியானங்கள் ஆசார்யருடைய மிகமிக மறைபொருளுள்ள வாக்கியங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்ற அந்த பரிபூரணத் தன்மையை அறிதல் அசாத்தியம்" என்கிறார். அன்று, அன்று, உண்மையிலேயே எல்லாம் சாத்தியமாம்; அதிலும், அவதாரபுருஷரான ஆசார்யர் போன்றவர்களுக்கு அசாத்தியமென்று என்னால் நம்ப முடியவில்லை. இறைவனருள் இருந்தால், எருது பேச மாத்திரமா செய்யும்?

## 14-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வரின் இதர சிஷ்யர்கள்

ஆசார்யருடைய பிதாவை நமது வாசகர்கள் இவ்வளவு சீக்கிரம் மறந்திருக்கமாட்டார்கள். இத்தகைய ஒரு புத்திரனைப் பெறும்படியான பாக்கியம் அவருக்குக் கிடைத்தது என்பதே அவர் மகா பாக்கியவந்தர் என்பதை நிரூபிக்கின்றது. அவர் பாஜக க்ஷேத்திரம் என்ற அவருடைய கிராமத்திலேயே சுகஜீவியாய் மிகுந்த விருத்தாப்பிய பர்வம் அடைந்தும் சுகமே வாழ்ந்துவந்தார். ஸ்ரீ மாத்வர் தமக்குத் தம்பி பிறக்கும்வரையில் சந்யாசம் வாங்கிக்கொள்ளாது, காத்துக்கொண்டிருந்தா ரென்பதை நமது வாசகர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். ஸ்ரீ மாத்வருடைய விருப்பம் போலவே, அவருடைய தம்பியாகிய ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரும் பெற்றோரைப் பேணுவதிலே சற்றும் பின்வாங்காது, அவர்களுடைய விருத்தாப்பிய காலத்திலே அவர்களுக்கும் மிகுந்த ஆதரவா யிருந்தார். ஆகையால், ஸ்ரீ மத்யகேகபட்டரும் அவருடைய மனைவியரும் சற்றும் கஷ்டமென்பதில்லாமல், மனத்திருப்தியுடனே, சமாதானத்துடனே, சந்துஷ்டியுடனே காலங் கழித்துவந்தார்கள். அடிக்கடி ஆசார்யருடைய பெருமைகளையும் அற்புதங்களையும் அவர்கள் கேட்டு மகிழ்ந்தும் வந்ததினால் அவர்கள் ஆநந்தகரமாகக் காலம் கழித்தார்கள் என்பதில் சந்தேகமு மிருக்குமோ? மத்யகேக

ராகிய கிழவருக்குப் பழய சங்கதிகளெல்லாம் ஞாபகம் வந்து விடும்; கடன்காரரால் தாம் பட்ட பல கஷ்டங்கள், தமக்கு நேர்ந்த துன்பங்கள், தமது புத்திரர்களின் அகால மரணம், ஸ்ரீ மாத்வர் பிறப்பதற்கு அறிகுறியாகக் கிடைத்த ஈச்வர கிருபை, ஸ்ரீ மாத்வரைப் பெறுதற்குத் தாம் செய்த கடுமையான தவம், ஸ்ரீ மாத்வருடைய லீலா விநோதங்களிலே தாம் அடைந்த ஆநந்தம், ஸ்ரீ மாத்வர் சந்யாசியாகப் புறப்பட்டபொழுது தாம் அடைந்த துக்கம் இவை யெல்லாம் அவருடைய கிழட்டு மூளையில் ஞாபகத்துக்கு வந்தன. இவைமாத்திரமோ? இன்னும் அவருடைய ஜீவித காலத்திலே அவர் அநுபவித்த ஒவ்வொரு இன்ப துன்பங்களும் அவருடைய ஞாபகத்துக்கு வந்தன. "ஈச்வரன் எல்லாம் நன்மைக்கே செய்கிறார்" என்று தீர்மானித்துக்கொண்டு, கடைசியாக அவர் எம்பெருமானை மனமாரத் தியானிப்பார். நாளுக்குநாள் அவருக்குப் பலஹீனம் மேற்பட்டுக்கொண்டு வந்தது; அந்தியகாலம் சமீபித்துவிட்டதென்பதை அவரே யுணர்ந்துகொண்டார். ஆனால், இவ் வுலகிலே இன்னும் இருக்கவேண்டுமென்ற ஆசை யவருக்கு இல்லவேயில்லை. அவர் போதுமான அளவு உலக இன்ப துன்பங்களை யநுபவித்துவிட்டார். இவர் பாகவதம், பாரதம் இரண்டிலும் கரைகண்டவர் ஆதலின், மனத்தைத் தைர்யப்படுத்திக் கொண்டு, மரணத்தை எதிர்ப்பதற்குத் தயாரானார். இவ் வுலகிலே அவருடைய வேலை முடிந்துவிட்டது; இனிமேல் அவருக் கென்ன பயம் மரிப்பதற்கு? தர்மசாஸ்திர விதிகளின்படி தவறாது நடந்து காலக்ஷேபம் செய்த ஹிந்து, மர

ணத்தைக் கண்டு பயப்படுவானே? இவ்விதமாக, பரமபதம் செல்வதற்கு மூட்டை கட்டிக்கொண்டிருந்த ஸ்ரீ மத்யகேக பட்டர் மனச் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் பரந்தாமன் திருவடி சேர்ந்தார்.

ஸ்ரீ மத்யகேகபட்டர் மரித்து சின்னுட்களுக்குள்ளே, அவருடைய மனைவியாரும் பரமபத மடைந்தார். புத்திரர்கள் பெற்றோர்கட்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகள் அநேகமாக வுள்ளன; பெற்றோரின் மரணத்துக்குப் பின்னே, புத்திரர்கள் செய்யவேண்டிய கர்மங்கள் அவர்கள் உயிருட னிருக்கும்பொழுது அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பார்க்கிலும் அதிகமாம். ஸ்ரீ மாத்வர் சந்யாசியாய்விட்டதினாலே, அவருடைய பெற்றோர்கட்கு அவர் செய்யவேண்டிய கர்மம் ஒன்று மில்லை. உலக வாழ்க்கையிலே சந்நியாசி மரித்தவன்போன் ருய்விடுகிருன். ஆகையால், சந்நியாசியாய்விட்டவன் உலகத்திலே செய்யவேண்டிய கர்மங்கள் ஒன்று மில்லை. ஆதலால், ஸ்ரீ மாத்வருடைய தம்பி அவருடைய பெற்றோர்கட்குச் செய்யவேண்டிய கடைக் கடன்கள் அனைத்தையும் செய்து முடித்தார்.

மத்யகேகபட்டர் பெருத்த தனவந்தரல்ல ரென்பதை நமது வாசகர் அறிவார்கள். அவருக்குச் சொற்ப சொத்துக்கள் இருந்தன வாயினும் அவருடைய பூததயை, பச்சாத்தாபம், பகவத் பக்தி முதலிய நற்குணங்கள் அவருக்கு ஏராளமான கடன்களை யுண்டுபண்ணி, அதனால் அவர் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தா ரென்பது வாசகர்

கள் அறிவார்கள். ஆயினும், அவர் எப்படியோ கிருகத்திலே கஷ்டம் தோன்றாதபடி, சுகமாகக் காலக்ஷேபம் செய்துவந்தார். பிராஹ்மணனுடைய ஜீவிதமே மிகமிகச் சாதாரணமானது; ஆடம்பரம் நீங்கியது; இன்றியமையாதனவற்றையே இன்பகாரணமாகக் கொள்வது. பிராஹ்மணனுடைய வாழ்க்கையிலே டாம்பீகத்துக்கு இடமில்லை; வீண்கர்வத்துக்கு இடமில்லை. ஸ்ரீ மத்யகேகபட்டர், ஸ்மிருதி விதிகள் தவறாது பிராஹ்மண தர்மத்தை யநுஷ்டித்து வந்தார்; ஆதலால், அவர் தமது சொந்தச் சுகங்களைக் கருதவில்லை. இவருடைய இளைய புத்திரனும் அப்படியே பிதாவைப் பின்பற்றி யொழுகினர்.

ஸ்ரீ மத்யகேகருடைய இளைய புத்திரன் பெயர் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் என்று முன்னமேயே கூறியிருக்கிறோம். இவர் தமது இளம் வயதிலே கற்கவேண்டியதை யெல்லாம் கற்றுத் தெளிந்து, கலைகள் சகலவற்றிலும் கரைகண்டவரானார்; இவர் தமது பிதாவிடத்திலும் வேறு பெரியோர்களிடத்திலும் லௌகீக விஷயத்திலும் வைதீக விஷயத்திலும் கேட்டு அடையப்படவேண்டிய அறிவையெல்லாம் அடைந்தார். ஆனால், இவர் அடைந்த கல்வியினாலே பெருத்த தனம் சம்பாதித்து உலக போகங்களைப் பெருக்கிக் கொள்ளுதற்கு முடியாது. இந்தக் கல்வியினாலே மண், பெண் பொன் என்ற மூவாசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளுதல் முடியாது; இந்தக் கல்வியினாலே பல்லக்கு முதலிய வாகனங்கள் அடைந்து ஆயிரக் கணக்கானவர்களை அடக்கி

நடத்தல் முடியாது. ஆனால், இந்தக் கல்வியோ அவரை இகலோகப் பார்வையை விட்டுவிட்டு, பரலோகத்தைச் சிந்திக்கும்படி செய்தது. ஸ்ரீ மாத்வர் தமது குழந்தைப் பருவத்திலே பல பால்ய சேஷ்டைகள் செய்து, தோழர்களுடனே விளையாடிக் குதித்துத் திரிந்துகொண்டிருந்தாரென்று கூறியிருக்கிறோம். அவருடைய பின்னவராகிய இந்த ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரோ, பெற்றோர்களுக்கு வேண்டிய சிசுருஷை செய்வது, சாவகாச சமயங்களில் சாஸ்திர ஆராய்ச்சி செய்வது இவற்றைத்தவிர, வேறொன்றும் அறியார். இவர், விளையாட்டுக்களில் மனம் செலுத்தினதில்லை; ஜனங்கள் ஒரு சிலர் ஒரு இடத்திலே கூடியிருந்தால், அங்குப் போகமாட்டார். அவர், கிருகத்திலே பெற்றோர்களுடனே அவர்களுக்கு அடங்கி யொடுங்கி வசித்துவந்தும், அவர் ஒரு துறவிபோன்றிருந்தாரே யொழிய வேறில்லை.

ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் இவ்வித மனத் தன்மையராயிருந்ததினாலே, அவர் தமது பிதா தமக்கு வைத்துவிட்டுப் போன சிறிது சொத்துக்களையும் சரிவரக் கவனிக்க முடியாமற் போய்விட்டது; இதனால் கிருக கிருத்தியங்களுக்குச் செலவுக்குக் கஷ்டம் நேரிடும்பொழுது, சில சமயங்களில் அவர் கடன் வாங்கும்படிக்கும் நேர்ந்தது. உலகத்திலே கலந்து உழைக்கப் பிரியமில்லாததினாலே நேரிடும் பல அசௌகர்யங்கள், துரதிர்ஷ்டங்கள், காலத்திலே மழையில்லாததினாலே விளைவின்மை, கடன்காரர்களுடைய கஷ்

டம் இவை யெல்லாம் விஷ்ணுதீர்த்தருக்கு ஏற்கனவேயிரு ந்த உலக விரக்தியை மேன்மேலும் அதிகரித்துவிட்டன; அவர் உலக வாழ்க்கையை வெறுத்து, என்றென்றும் ஈச்வர பக்தி செய்துகொண்டிருக்கும்படியான வாழ்க்கையை விரும்பினர். வெகு நாட்களாகவே அவருக்கு இவ் விருப்பம் உண்டு; ஆனல், அதற்கு இப்பொழுதுதான் காலம் வந்தது.

ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் பெற்றோர்கட்குச் செய்யவேண்டிய கடன்களை யெல்லாம் செய்துமுடித்த பிற்பாடு, ஜயஸிம்ஹ ராஜனுடைய தேசத்திலே தங்கியிருந்த ஸ்ரீ மாத்வரிடம் சென்று, பெற்றோருடைய மரணத்தைத் தெரியப்படுத்தினர். ஸ்ரீ மாத்வருக்கு உலக ஆசைகள் ஒன்றுமில்லாதிருந்தும், எதனிடத்தும் பற்றற்றிருந்தும், இச் சமாச்சாரம் கேட்டவுடனே மாத்திரம் கொஞ்சம் மனம் கலங்கியவர் போலத் தோற்றப்பட்டார்; ஸ்ரீ மாத்வருக்கு அவருடைய பெற்றோரிடத்திலே அன்பு அதிகம். அவர் எங்குச் சென்றுலும் அவர்களை நினையாம லிருந்ததில்லை. அந்தோ! கிழவர், தம்மைப் படிப்பிப்பதற்கும் மற்றும் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறர் என்பதை ஸ்ரீ மாத்வர் ஞாபகப்படுத்திக்கொண்டார்; அப்படியே தாயாரும் தம்மிடத்திலே எத்தகைய அன்பு செலுத்திவந்தா ரென்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டார். "சர்வ சங்க பரித்தியாகம் செய்த சந்யாசிக்கு இத்தகைய மனச்சஞ்சலம் நேரிடலாமா?" என்று சிலர் கேட்கலாம். இப்படிக் கேட்பவர்களுக்கு ஹிருதயத்தின் பெருமை தெரியாது. முற்றத் துறந்த பட்டினத்தடிகளும்

தமது மாதாவுக்காகப் புலம்பியிருக்கின்றார்; அத்வைத ஆசார்யராகிய ஸ்ரீ சங்கரரும் தமது மாதாவினிடத்துப் பிரத்தியேக அன்பு செலுத்தி வந்தார். சந்யாசியாய்விட்டால், ஹிருதயம் நாசமாய்விட்டதென்று பொருள்படுமோ? அன்பற்றவர்கட்கு உலகிலே வேலை யென்ன? ஜீவராசிகளுக்கு அன்புதானே உயிரா யிருப்பது. அன்பில்லாவிட்டால், எல்லோரும் ஜீவப்பிரேதம் போன்றவர்களே யாய்விடுவார்கள். ஆதலால், ஆசார்யர் தமது பெற்றோர் மரணத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பொழுது, அவருடைய ஹிருதயம் நெகிழ்ந்து அன்பு கரைந்தது ஒன்று அவர் ஆசார்யரென ரூபித்தது.

ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர், பெற்றோர்கள் அவர்களுடைய அந்திய காலத்திலே இன்ன வியாதியினால் மரித்தார்களென்றும், குடும்ப விஷயங்களைப்பற்றியும் மற்றும் கூறி, கடைசியாகத் தமது உள்ளத்திலே நெடுநாட்களாகத் தாம் கொண்டிருக்கும் விருப்பத்தையும் ஸ்ரீ மாத்வரிடத்திலே தெரியப்படுத்தினார். அவர் ஸ்ரீ மாத்வரை நோக்கி, "ஸ்வாமி! எனக்கு இவ்வுலகு ரம்யமாகத் தோன்றவில்லை; உலகிலே துன்பங்களும், துக்கங்களும், மோசங்களும், ஏமாற்றங்களுமே நிறைந்திருக்கின்றன; ஆதலால், நான் உலக வாழ்க்கையை விட்டுவிட்டுச் சந்யாசியாதல் வேண்டும்; இல்லையேல் நான் மனமுடைந்து மரிக்கநேரிடும். ஆகையால், ஸ்வாமி! என்னையொரு சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு எனக்கு சந்யாசாச்ரமம் கொடுக்குமாறு நான் தங்களைப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்" என்று சொன்னார்.

ஸ்ரீ மாத்வர், "அப்பா! இந்தச் சாதுர்மாச்ய காலமும் போகட்டும்; அதுவரை பொறுத்திரு! அவசரப்படாதே!" என்று சொல்லி, ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். நான்கு மாதங்களும் கழிந்தன. ஆசார்யர் தாம் அந்தத் தேசத்தினின்றும் செல்வதற்கு அந்தத் தேசத்து அரசனாகிய ஜயஸிம்ஹனிடம் விடை கேட்டார். ஆனால், ஜயஸிம்ஹனுக்கு ஆசார்யரை விட்டுப் பிரிவதற்கு மனம் வராததினாலே, அவன் அவரை இன்னும் கொஞ்சக்காலம் இருந்து போகும்படி பன்முறையும் கெஞ்சிப் பணிந்து கேட்டுக்கொண்டான். இதனால் ஆசார்யர் இன்னும் சில நாட்கள் அங்கேயே தங்கும்படி நேரிட்டது. ஆயினும், கடைசியாக ஆசார்யர் ஜயஸிம்ஹராஜனிடம் விடை பெற்று, பாஜகக்ஷேத்திரம் வந்து சேர்ந்து, தமது பெற்றோர்கட்குச் செய்யவேண்டிய பாக்கிக் கடன்களை யெல்லாம் சாஸ்திர விதி வழுவாது ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரைக் கொண்டு செய்வித்தார். வருஷாப்தீகமும் ஆய்விட்டது; இனிமேல் ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் சந்யாசம் வாங்கிக்கொள்வதைத் தடுக்கும்படியான கர்மங்கள் ஒன்றுமில்லை. ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் உண்மையிலே சந்யாசாச்ரமத்தினிடத்தில் பிரியம் கொண்டவராயிருக்கின்றார்; சகல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து தெளிந்தவர்; அவாக்களை யெல்லாம் கட்டோடு அறுத்தெறிந்தவர்; எம்பெருமான் பற்றுதலொழிய வேறெப் பற்றும் அற்றவர்; சந்யாசாச்ரமத்துக்குத் தகுதியானவரே.

ஆதலால், ஸ்ரீமாத்வர் விஷ்ணுதீர்த்தருக்குச் சந்யாசம் அளிப்பதற்கு ஒரு சுப தினம் நியமித்தார்; ஸ்ரீ விஷ்ணு

தீர்த்தருக்கு விதிப்படி செய்யவேண்டியன வெல்லாம் செய்து சந்யாசம் அளிக்கப்பட்டது. ஆசார்யர் அவருக்கு உபதேசம் செய்து, அவருக்குச் சந்யாசாச்ரமத்திலே விஷ்ணுதீர்த்தர் என்ற பெயர் அளித்தார். இந்த விஷ்ணு தீர்த்தருக்குச் சந்யாசாச்ரமத்துக்கு முன்னே என்ன பெயர் இருந்ததென்பது தெரியவில்லை. ஸ்ரீ விஷ்ணுதீர்த்த ருடைய வித்தை, அவருடைய ஒழுக்கம், வாசனை முதலிய வற்றையெல்லாம் ஸ்ரீ மாத்வர் ஆராய்ந்து பார்த்து, 'சந்யாசாச்ரமத்துக்குத் தகுதியானவர் அவரே' என்று கருதி அகம் களித்தார்.

ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் சந்யாசம் வாங்கிக்கொண்ட இடம் கண்வதீர்த்தத்துக் கருகாமையிலாகும்; இந்தக் கண்வதீர்த் தம் என்னும் தடாகமானது மஞ்ஜேச்வரத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலும், மங்களூருக்குத் தெற்கே சுமார் பதி னெரு மைல் தூரத்திலும் உள்ளது. இச் சமயத்திலே சந்யாசம் வாங்கிக்கொண்டவர் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் ஒருவர் மாத்திரம் அல்ல; இன்னும் எழுபெயர்கள் சந்யாசம் எடுத் துக்கொண்டார்கள். இவ் வெண்மரும் அந்தக் கண்வதீர்த் தத்திலேயே ஸ்நாநம் செய்தார்கள். இவ் வெண்மரும் குருவினிடமிருந்து சந்யாசாச்ரமம் வாங்கிக் கொள்வதற்கு அங்கேயுள்ள அச்வத்த விருக்ஷத்தின் அடியிலேயே உட் கார்ந்தார்கள். அந்தப் பிரதேசத்து ஜனங்கள் இவ்விடங்களை யெல்லாம் இன்றும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, யாத் திரிகர்களுக்குக் காண்பிக்கிறார்கள்.

இவ் வெண்மரும்தான் உடுப்பியிலுள்ள எட்டு மடங்களுக்கும் முதல்முதல் அதிதிகளாக்கப்பட்டவர்கள்; இவர்களுடைய பரம்பரை இன்றும் உள்ளது. ஆசார்யரிடமிருந்து உடுப்பியிலுள்ள ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரத்தை ஜாக்கிரதையாகப் பேணுவதாக ஒப்புக்கொண்டவர்கள் இவ் வெண்மரும்தான். இவர்களின் பெயர்களும் இவர்களுடைய மடங்களின் பெயர்களும் பின் வருவனவாம்:—

(1) சோதேய மடத்து அதிபதி-ஸ்ரீ விஷ்ணு தீர்த்தர்.

(2) கிருஷ்ணபுரம்மடத்து ஆசார்யர்- ஸ்ரீ ஜநார்த்தநதீர்த்தர்.

(3) காணூர் மடத்து ஆசார்யர்-ஸ்ரீ வாமன தீர்த்தர்.

(4) அதமார் மடத்து ஆசார்யர்-ஸ்ரீ நரஸிம்ஹ தீர்த்தர்.

(5) புத்துகே மடத்து ஆசார்யர்-ஸ்ரீ உபேந்திர தீர்த்தர்.

(6) சிரூர் மடத்து ஆசார்யர்-ஸ்ரீராம தீர்த்தர்.

(7) பலூமார் மடத்து ஆசார்யர்-ஸ்ரீ ஹ்ருஷிகேச தீர்த்தர்.

(8) பெஜவார் மடத்து ஆசார்யர்-ஸ்ரீ அக்ஷோப்ய தீர்த்தர்.

பரிசுத்தமான இவ்விடத்திலே இப்பொழுதும் பெஜவர் ஸ்வாமிகளைச் சேர்ந்த ஒரு மடம் உள்ளது; இன்னும் இங்கு ஸ்ரீமத் பாகவதத்துக்குப் பிரசித்தி பெற்ற ஒரு வியாக்கியானம் எழுதிய பெஜவார் சந்யாசி ஸ்ரீ விஜயதுவஜாசார்யரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிருந்தாவனமும் அங்கு உண்டு.

ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் சந்யாசம் வாங்கிக்கொண்டதும் பரதக்கண்டத்திலுள்ள க்ஷேத்திரங்களை யெல்லாம் தர்சித்துத் தீர்த்த யாத்திரை செய்வதற்காகத் தமது ஆசார்யரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்; தேசம் முழுதும் சுற்றினார்; பரிசுத்த தீர்த்தம் ஒவ்வொன்றிலும் ஸ்நானம் பண்ணினார்; க்ஷேத்திரம் ஒவ்வொன்றையும் தரிசித்தார்; யாத்திரை முடிந்தவுடனே ஹரிச்சந்திரபர்வதத்துக்கு வந்து சேர்ந்தார். இப் பர்வதமானது அடர்ந்து நெருங்கிய பெருங் காடுகளால் நிறைந்துள்ளது; அநேக இருண்ட குகைகள் வாய்க்கப்பெற்றது. ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் இங்கே கடும் தவம் புரிந்து யோகாப்பியாசம் செய்ய ஆரம்பித்தார்; அன்ன ஆகாராதிகளை யெல்லாம் பார்த்தவர்கள் ஆச்சரியப்படும் படியாகச் சுருக்கிக்கொண்டார்; நித்திரையை அறவே விட்டு விட்டார். அவர் ஐந்து நாட்களுக்கு ஒருதரம் க்ஷுத்பாதை நிவிருத்தியின்பொருட்டுப் பஞ்சகவ்வியம் எடுத்துக்கொள் வார்; வேறொரு ஆகாரமும் எடுத்துக்கொள்வதில்லை. இந்தப் பஞ்ச கவ்வியம் கூட இவராகத் தேடிச் சென்றதில்லை; எவரேனும் பக்த சிரேஷ்டர் மலையடிவாரத்திலே கொண்டு வந்து வைப்பார்களானால் எடுத்துக்கொள்வார். இவர் வசித்துவந்த இடமோ அம் மலையின் செங்குத்தான சிகரம்; இங்குக் குளிர்ச்சியோ மனிதனால் பொறுக்க முடியாதது; இவரைத் தவிர வேறு எவரும் அவ் வுயர்ந்த, அபாயகர மான இடத்திலே யிருக்கத் துணியமாட்டார்கள்.

மஹான்கள் மலையின்மீது குகையிலே போய் ஒளிந்து கொண்டாலும், மனிதர்கள் எப்படியோ கண்டுபிடித்துவிடு கிறார்கள். சுற்றுப் பிரதேசத்திலேயிருந்த ஜனங்களுக்கு இம் மாதிரி யொரு மஹான் குகையிலே நிஷ்டை புரிகிறா ரென்று தெரிய வந்துவிட்டது. ஒருவர் பின் ஒருவராக நூற்றுக்கணக்கான ஜனங்கள் வழியின் சிரமத்தைக் கவனி யாமல் கற்களிலும் முட்களிலும் கஷ்டப்பட்டுச் சென்று, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யத் தொடங்கி னார்கள். சிலர், தங்களைச் சிஷ்யர்களாக ஏற்றுக்கொள்ளும் படி ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரை வேண்டிக்கொண்டார்கள். இவ ரிடத்திலே சிஷ்யர்களாகிச் சந்யாசம் பெற்றவர்களுள் முக்ய மானவர்கள் ஸ்ரீ அநிருத்ததீர்த்தர், ஸ்ரீபாதராயண தீர்த்தர் இவ்விருவருமாம். இவர்களிலே ஸ்ரீ அநிருத்ததீர்த்தருக்கு ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரிடத்திலே அத்தியந்த பக்தி யதிகம். ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர், மலையிலே அந்தக் குளிரில் அபாயகரமான பிராணிகளுக்கு நடுவிலே வசிப்பது ஸ்ரீ அநிருத்ததீர்த்த ருக்குக் கொஞ்சம் கூட மனம் இல்லை. ஆதலால், அவர் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரைக் கீழே யிறங்கி உடுப்பிக்குச் செல் லும்படி பன்முறையும் வேண்டிக்கொள்ள, ஸ்ரீ விஷ்ணு தீர்த்தருக்கு மனமில்லாமலிருந்தும், அரை மனத்துடனே ஒப்புக்கொண்டு உடுப்பிக்குப் புறப்பட்டார். ஸ்ரீ விஷ்ணு தீர்த்தருடைய பெயர் எங்கும் பிரகாசித்தது; எங்குப் பார்த் தாலும் இதே பேச்சாயிற்று. அக்காலத்திலே ஸ்ரீ மாத் வர் இருந்திராவிட்டால், ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர்தான் முதன் மை வகித்து, கீர்த்தி பெற்றிருப்பார்.

ஸ்ரீ மாத்வரும், ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரும் ஒரே தாய் வயிற்றுச் சகோதரர்கள்; ஒரே லக்ஷியத்தை நாடியவர்கள். ஆயினும், இருவரும் சென்ற மார்க்கங்கள் வேறு. ஸ்ரீ மாத்வர் உலகை உய்விப்பதற்காக அவதரித்த மஹா புருஷர்; ஆதலால், பொது ஜனங்களை நாடி அவர்களுக்கு உண்மையை உபதேசிப்பதிலேயே ஊக்கம் காட்டினர். ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரோ ஜனங்களை விட்டுவிட்டுத் தமது கார்யம் நிறைவேறுதற்கு ஏகாந்தத்தை நாடினர். மூத்தவராகிய ஸ்ரீ மாத்வரோ சிஷ்யர்களுடைய நன்மையின் பொருட்டும் உலகை உத்தாரணம் செய்யும்பொருட்டும் எண்ணற்ற கிரந்தங்கள் எழுதினர். இளையவராகிய ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரோ அந்தர்முக நிஷ்டையிலேயே பெரும்பான்மை நேரத்தையும் கழித்துவந்தார். இவ்விருவர்களுடைய வாசனைகளும் மனப்போக்குக்களும் வெவ்வேறு யிருந்தன; ஆதலால், இவ்விருவரும் வெவ்வேறு மார்க்கங்களையநுசரிக்கவேண்டி வந்தது; ஆனல், இருவருடையவும் சித்தாந்தம் ஒன்றே; இருவரும் சத்வைஷ்ணவர்களே. ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருக்கு உலக தடபுடலும் கூச்சலும் குழப்பமும் சற்றும் பிடிக்கவில்லை. அவர் பிரமாண்டமான மலைகளை நாடினர்; இயற்கையை விரும்பினர்; ஏகாந்தத்தை இச்சித்தார். கன்னட தேசத்துப் பக்கத்திலே செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் அவருடைய அவா நிறைவேறுதற்கு சௌகர்யமான இடம் அளித்தது. அவர் இப் பர்வதத்தின் உச்சியிலே ஏறி, சுப்பிரமண்யம் என்ற சிகரத்தின்மீது வசிக்க ஆரம்பித்தார். இந்தச் சிகரத்திலே இதுகாறும் மனிதர்கள்

சென்றதில்லை; எவரும் அங்கே பசுவாய்ப் போகவும் முடியாது. ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் தமக்கேற்ற இடம் இதுவே யென்று தீர்மானித்துக்கொண்டார்; அவருடைய ஹிருதய ஆசைகளெல்லாம் பூர்த்தி பெறுதற்கு அதுவே ஏற்ற இடமென்று அவர் கருதினார். அங்கேயுள்ள ஒவ்வொரு செடி கொடியிலும் ஒவ்வொரு விருக்ஷத்திலும் அவர் ஆநந்தத்தை யுணர்ந்தார்; அங்கேயுள்ள ஒவ்வொரு கல்லும் கூட அவருக்கு அடக்க வொண்ணாத மகிழ்ச்சியை அளித்தது. அங்குள்ள ஒவ்வொரு மணற் பருக்கையும் அவருக்கு மனோரம்யமா யிருந்தது.

ஆகையால், அவர் அந்தச் சிகரத்திலே வாசம் செய்யத் துணிந்துகொண்டார். மேலைச் சமுத்திரக் கரையிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிக்கச் செல்லும் மாத்வர்கள், இந்த சுப்பிரமணிய ஸ்தலத்தைத் தரிசிக்காமல் போகமாட்டார்கள். இவ்விடத்திலே ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் ஒரு மடம் ஸ்தாபித்தார். அவர் தவம் செய்துகொண்டதினாலே அங்கு வியாபித்த நிர்மல ஆகாசமானது இன்றும் அங்குப் பிரகாசிக்கின்றது. இவருடைய யோசனைகட் கெல்லாம் ஸ்ரீ மாத்வரும் இடம் கொடுத்து, வேண்டியன புரிந்துவந்தார். ஸ்ரீ மாத்வரும் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருடைய இக் கொள்கைகளை யெல்லாம் ஆதரித்திராவிட்டால், ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் இவ்வளவு சீக்கிரத்திலே பிரகாசிப்பதற்கு இடம் ஏற்பட்டிராது. இதுவரையில் உலக வழக்குக்களில் உழன்றுகொண்டிருந்த ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் இப்பொழுது அதிதீவிரதர

வைராக்கியசாலியாகிய, சர்வ சங்க பரித்தியாகம் செய்து, சாக்ஷாத் பகவானுடைய பாதங்களையே தியானிக்கத் துணிந்தது ஸ்ரீ மாத்வருக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆகையால், ஸ்ரீ மாத்வர் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருடைய மடத்துக்கு வேண்டிய உதவிகளெல்லாம் செய்ய ஆரம்பித்தார். பகவான் வியாசருடைய பதரிகாச்ரமத்திலிருந்து தாம் கொண்டுவந்துள்ள சாளக்கிராமங்களுள் ஒன்றை அவர் சுப்பிரமணியத்திலே தமது சகோதரர் பூஜிக்குமாறு கொடுத்தார். இதனால் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தருடைய ஆச்ரமத்துக்கு இன்னும் அதிகப் பெருமை ஏற்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட எட்டு சந்யாசிகளைத் தவிர, ஆசார்யர் வேறு சிலரையும் சந்யாசிகளாக்கினர். இச் சந்யாசிகளிலே முக்கியமானவர் ஸ்ரீ பத்மநாபதீர்த்தர் என்பவர். இவர்தான் தெலுங்கு தேசத்திலே முதன்முதல் மத்வமதம் சேர்ந்த மகா வித்வான் ஸ்ரீசோபனபட்டர்: பிற்காலத்திலே உத்தராதி மடம், வியாசராய மடம், சுமதீந்திர மடம், முளபாகல் மடம் முதலிய நான்கு மடங்களாகப் பிரிந்த குருபரம்பரையின் முதல்வர். ஆசார்யருக்கு இவரிடத்திலே அத்தியந்த வாத்சல்யம் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது; ஏனெனில், ஆசார்யர் தமக்குப் பின் அந்த ஆசார்ய ஸ்தானம் வகிப்பதற்கு இவரைத்தான் நியமித்தார்.

ஸ்ரீ மாத்வ முனியினுடைய த்வைத வேதாந்த மதத்தை அவலம்பித்த மூன்று வித்துவான்களிலே யொருவர்,

திரிவிக்கிரமர் கடைசிவரையில் கிருகஸ்தராகவே யிருந்தார். ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் ஸோதேமடத்து ஸ்தாபகர்; ஸ்ரீ பத்மநாபதீர்த்தர் ஆசார்யருக்குப் பின்னே அந்த ஸ்தானம் வகித்தவர். திரிவிக்ரம பண்டிதர் ஆசார்யருடைய பாஷ்யத்துக்குத் தத்துவப் பிரதீபிகை யென்ற பெயருடனே முதன் முதல் ஒரு வியாக்யானம் எழுதினர். ஸ்ரீ பத்மநாபதீர்த்தர் ஆசார்யருடைய "அநு வியாக்கியானம்" என்னும் கிரந்தத்துக்கு முதன்முதல் ஒரு டீகை எழுதினர்.

ஆசார்யரிடத்திலே எண்ணற்ற சிஷ்யர்கள் வந்து சந்யாசம் பெற்றுக்கொண்டார்கள். அவர்களுள் பிரசித்தி பெற்ற சிலருடைய பெயர்கள் பின் வருமாறு:— ஸ்ரீ நரஹரிதீர்த்தர், ஸ்ரீ மாதவதீர்த்தர், ஸ்ரீ அக்ஷோப்ய தீர்த்தர். இவர்கள் ஸ்ரீ பத்மநாபதீர்த்தருக்குப் பின்னே மடத்துக்குத் தலைமை வகித்தவர்கள்.

ஆசார்யருடைய கிருகஸ்த சிஷயர்களுக்குள்ளே, திரிவிக்கிரம பண்டிதரைத் தவிர, இப் பண்டிதருடைய இளைய சகோதரராகிய ஸ்ரீ சங்க்ராசார்யர் என்பவரும், அதே குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ சங்கராசார்யர் என்னும் இன்னொருவரும் பிரசித்திபெற்றவர்கள். இப்பொழுது திரிவிக்ரமபண்டிதருடைய புத்திரரான பண்டிதர் ஸ்ரீ நாராயணசார்யர் என்பவரும் ஆசார்யரிடத்திலே சிஷ்யராயிருந்தார். ஸ்ரீ மாத்வாசார்யருடைய சரித்திரத்தை "ஸ்ரீ மாத்வ விஜயம்" என்ற பெயருடன் ஸம்ஸ்கிருத பாஷையிலே முதன்முதலில் எழுதியவர் இவர்தான். இந்தக் கிர

ந்தமானது 16 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு வெகு அழகாக எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ மாத்வ விஜயத்தின் ஆசாரியராகிய இவருக்கு ஸ்ரீ மாத்வரிடத்திலே பரமபக்தி யிருந்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆசார்யருடைய சிஷ்யர்களிலே பிரதானமான சிலரைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டோம். இங்ஙனம் சிஷ்யர்களைத் தயார் செய்து, உலகில் தமது சித்தாந்தத்தைப் பரப்பி விட்டுவிட்டு, ஆசார்யர் பரமபத மடைவதற்கு ஆயத்தமானர்.

## 15-வது அதிகாரம்:

# ஸ்ரீ மாத்வருடைய பரமபத ப்ராப்தி

ஸ்ரீ மாத்வர் தென்னிந்தியாவினூடே ஒரு தரமும் வட இந்தியாவினூடே இரண்டு தரமும் யாத்திரை செய்தார். இந்த நீண்ட யாத்திரைகளைத் தவிர, ஆசார்யர் கன்னட தேசத்திலும் மைசூர் தேசத்திலுமாக அநேகம் தரம் பிரயாணம் செய்திருக்கின்றார். அவர் மஞ்ஜேச்வரத்திலிருந்து சுப்பிரமணியம் வரையில் அநேக தடவைகள் யாத்திரை செய்திருக்கின்றார். மைசூருக் கருகாமையிலுள்ள பத்ராநதிக்கரையிலே யுள்ள பிரதேசம்தான் தவம் செய்வதற்கு ஆசார்யர் அடிக்கடி ஆநந்தத்துடனே செல்லும் ஸ்தலம்.

ஆசார்யர் கொஞ்சக் காலம் மைசூரிலே வாசம் செய்தார். சாரிதந்தரம், நேரங்கி, வைத்யநாதம், உஜாம், கடத்தலம் இவ் விடங்களின் மூலமாகக் கண்வத்துக்குச் சென்றார். முக்கியமான ஸ்தலங்களிலெல்லாம் தங்கி, ஆங்காங்கு அநேக அற்புதங்கள் செய்தார்.

ஆசார்யர் சில வருஷங்களுக்குமுன்னே கோவா நகரம் சென்றிருந்தபொழுது, தமது சங்கீத ஞானத்தினால் விதைகளை முளைக்கும்படி செய்தார் என்று நாம் கூறியிருப்பது வாசகர்களுடைய ஞாபகத்திலே யிருக்கும். இப்பொழுது

அதுபோலவே ஒரு அற்புதம் ஆசார்யர் செய்யும்படி நேரிட்டது.

ஆசார்யர் கோமதி நதி தீரத்திலே பிரயாணம் செய்து கொண் டிருந்தபொழுது, அந்தப் பிரதேசத்தை ஆளும் பாக்கியம் பெற்ற ஒரு சூத்திர அரசன், "வேத சூக்தம் சொல்லப்படவேண்டியவாறு சொன்னால் விதைகள் முளை கிளம்பி வளருமென்பது பொய்" என்று கூறிப் பரிகாசம் பண்ணினன். இவன் பிராஹ்மணத் துவேஷி; ஆதலால், "வேத வாக்கியங்களெல்லாம் பொய்" என்று கூறி நிந்தித் தான். 'பிராஹ்மணர்களினிடத்தும் வேதங்களினிடத்தும் இவனுக்குப் பயத்தையும் பக்தியும் உண்டாக்கவேண்டும்' என்று ஆசார்யர் நினைத்து, 'இச் சந்தர்ப்பத்தைத் தவிர விடலாகாது' என்று தீர்மானித்துக்கொண்டார். வேத சூக் தம் சொன்னமாத்திரத்திலே விதைகள் முளை கிளம்பும் என்பதை நிரூபித்தால் ஆசார்யர்தான் நிரூபிக்கவேண்டும்; வேறெவராலும் முடியாது. ஆகையால், ஆசார்யர் அவ் வரசனிடம் சென்று, வேதவாக்கியம் சத்தியம் என்பதை நிருபிப்பதற்குத் தாம் வந்திருப்பதாகத் தெரியப்படுத்தி னார். அரசனும் அவருக்கு மரியாதையான ஒரு ஆசன மிட்டு "எங்கே? உமது சாமர்த்தியத்தைக் காட்டும், பார்ப் போம்" என்றான். ஆசார்யர் ஒரு சூக்தத்தை யெடுத்து உச்சரிக்கத் தொடங்கினர்; இந்த மாதிரி வேதம் உச்சரிக் கப்பட்டதை இதற்கு முன்னே எவரும் கேட்டதில்லை. இவர் உச்சரிக்க, உச்சரிக்க, இவர் கையிலேயிருந்த விதை

கள் அசைவுற்று முளைவிட்டன; துளிர்த்தன; செடிகளாயின; புஷ்ப பலாதிகள் அளித்தன. சுருதி வாக்கியம் பொய்த்துப் போகுமோ? அவ் வரசன் இதைப் பார்த்து ஆச்சர்யமடைந்து சித்திரப் பிரதிமைபோல் அசைவற்று நின்றான்.

ஆசார்யர் தமது சரீர சக்தியிலே பீமசேனனாயிருந்தா ரென்பது நமது வாசகர்களுக்குத் தெரியும். ஆசார்யர் பரம பதம் அடைகிற நிமிஷ பரியந்தம், அவருடைய சரீர சக்தியாவது மனத்தின் சக்தியாவது எள்ளளவும் குறைவுபட வில்லை. இவர் தமது சரீரத்தையும், ராக்ஷஸ பலத்தையும் வெளிப்படையாக, எல்லோரும் கண்டு பிரமிக்கும்படி, எத்தனையோ தடவை காண்பித்திருக்கிறார். ஒரு சமயத்தி லே கொடஞ்ஜடி என்னும் பெயருடைய ஒருவனும் இன்னொருவனும் ஆசார்யரைத் தரிசிப்பதற்காக மடத்துக்கு வந்தார்கள். "இவர்கள் இருவரும் சகோதரர்கள்; அசாதாரணமான சரீர பலம் வாய்ந்தவர்கள்" என்று எங்கும் பிரசித்தி பெற்றவர்கள். இப்படி மஹா பலம் பெற்றவர்கள் வந்திருக்கிறார்களென்று ஆசார்யருடைய காதுகட்கு எட்டிற்று; ஆசார்யர் அவ் விருவரையும் தம்மிடம் கூட்டிக் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். கண்டவதன் என்ற மறு பெயருடைய கொடஞ்ஜடியும் அவனுடைய சகோதரனும் ஆசார்யர் முன்னே வர, ஆசார்யர் அவர்களை க்ஷேம லாபம் விசாரித்து வருகையில், கண்டவதன் "ஸ்வாமி! எனக்குள்ள பலத்தைப்பற்றி நானே புகழ்ந்து கூறிக்

கொள்வது நன்றாயிராது. ஸ்ரீகண்ட க்ஷேத்திரத்திலே யுள்ள துவஜஸ்தம்பத்தைத் தாங்கள் பார்த்திருக்கலாமே. முப்பது பேர்கள் ஒன்று சேர்ந்து தூக்கினாலும் அதைத் தூக்க முடியாது. ஒரு சமயத்திலே நான் ஒருவனே அதைத் தூக்கிக்கொண்டு சென்றேன். இன்னொன்று; ஒரு தரம் ஆகாயமளாவ உயர்ந்து வளர்ந்து மடலும் குலையு மாகச் செழித்திருந்த ஒரு தென்னமரத்தை ஒரு உதை உதைத்தேன். அது படபடவென்று முறிந்து, வேரோடு கீழே சாய்ந்துவிட்டது,'' என்றான். ஆசார்யர் புந்நகை புரிந்துகொண்டே, இவ்விருவருடையவும் வீர பராக்கிரமங் களைக் கேட்டார். ''நல்லது! உங்களுடைய பலத்தை இங்குக் கொஞ்சம் காட்டுங்கள்! பார்ப்போம்'' என்று ஆசார் யர் கூறிவிட்டு, தமது கால் விரல்களுள் ஒன்றைத் தரை யிலே அழுத்திக்கொண்டு, அவ் விரலை அங்கிருந்து அசை த்துவிடும்படி அவர்களிடம் சொன்னார். கொடஞ்ஜடி தன் னுடைய பலமெல்லாம் ஒருமுகப்படுத்தி, எவ்வளவோ பிரயாசைப்பட்டுப் பார்த்தான்; சரீராத்தியந்தமும் வெயர் த்து ஒழுகுகிறது; களைப்பு மிகுந்துவிட்டது. ஆயினும், அவன் விடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்று பார்த் தான். அவனால் முடியவேயில்லை.

இன்னொரு சமயத்திலே வேறொரு இடத்திலே, இன் னொரு பலசாலி தோன்றினான். ஐம்பது பெயர்கள் சேர் ந்து தூக்க முடியாத பாரமான சுமைகளை யெல்லாம் அவன் ஒருவனே தூக்கிச் செல்வான். ''ஐம்பது பெயர்கள்

சேர்ந்து தூக்க முடியாத ஒரு பெரிய ஏணியை இவன் அலக்ஷியமாகத் தூக்கிச் சென்றான்'' என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். ஆசார்யர் அவனைக் கூப்பிட்டு, தமது கழுத்தை அவனிடம் காண்பித்து, ''உன்னால் முடியுமானால் இந்தக் கழுத்தைப் பிடித்துத் திருகிவிடு! பார்க்கலாம்'' என்றார். பூர்வவதன் என்னும் பெயருடைய அந்தப் பலசாலி தன்னுடைய பலம் முழுதையும் உபயோகித்து, அவருடைய கழுத்தைத் திருக முயன்றான். அவனால் கொஞ்சம்கூட முடியவில்லை. இதுமாத்திரமன்று, இப்படியிந்தப் பூர்வவதன் தன்னுடைய பலத்தை யெல்லாம் உபயோகித்து ஆசார்யருடைய கழுத்தைத் திருக முயன்று கொண்டிருக்கையில், ஆசார்யர் ஒரு வேத வாக்கியத்தை அதற்குத் தகுந்த ஸ்வரத்திலே உச்சத் தொனியிலே உச்சரிக்க ஆரம்பித்தார். பூர்வவதன் அவருடைய கழுத்தை யமுக்கித் திருகியதினாலே அவருடைய தொண்டைக்கு ஒருவித கேடு முண்டாகவில்லை; அவருடைய தொனியிலே தவறுதல் ஏற்படவில்லை; அவருடைய குரலிலே பேதம் தோன்றவில்லை; ஸ்வரம் குறையவில்லை. பூர்வவதன் ஆசார்யருடைய இந்த அசாதாரண அமானுஷ்ய பலத்தைக் கண்டு நடுநடுங்கிவிட்டான்.

ஆசார்யர் இவ்வளவு பலமுள்ளவரா யிருந்ததினாலே அவர் எவ்வளவு பாரமுள்ளவரா யிருந்திருக்கவேண்டும்? உண்மை யப்படியன்று. மெலிந்த ஒரு சிறு பையன், நரசிம்ஹ க்ஷேத்திரத்தைச் சுற்றியிருந்த நான்கு மாட

வீதிகளிலும் இவரைத் தனது தோள்களிலே தூக்கிக் கொண்டு செல்லும்படி அவர் அவ்வளவு லேசா யிருந்தார். அப் பையன் அவரை ஒரு மெல்லிய சிறகைத் தூக்கிச் செல்வதுபோல, அவ்வளவு அலக்ஷியமாக எடுத்துச் சென்றான்.

ஆசார்யருடைய இந்த அமானுஷ்ய பலத்தைப்பற்றி இன்னொரு விஷயமும் சொல்லப்படுகிறது:—

மைசூருக்குத் தென்மேற்கே இருபத்துநான்கு மைல் தூரத்திலே பத்ராநதியின் வலதுதீரத்திலே கலசம் என்று ஒரு கிராமம் உள்ளது. இது நான்கு பக்கங்களிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயர்ந்த குன்றுகளால் சூழப் பட்டுள்ளது; கல்சம் என்ற பெயரையுடைய பர்வதத்தின் தென்புறத்திலே அடிவாரத்தில் உள்ளது. இதிலே கல சேச்வரருக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு பெரிய க்ஷேத்திரம் இருக்கின்றது. இந்த க்ஷேத்திரத்திலே அநேக கல் வெட்டுச் சாசனங்கள் காணப்படுகின்றன. "சாந்தபிந்து என்னும் பெரிய ஒரு அரசன் வடக்கேயிருந்து வேட்டை யாடி வந்தான்" என்றும், "மிருகங்களை வேட்டையாடிக் கொன்ற அந்தப் பாவம் தீர, அவன் இந்த க்ஷேத்திரத்தைக் கட்டிவைத்தான்" என்றும் சொல்லப்படுகிறது. நாலாபக் கங்களிலும் இடிந்து விழுந்து குவிந்து கிடக்கும் மண் மேடு களைப் பார்த்தால், 'பூர்வ காலங்களிலே இங்கே ஒரு பெரிய நகரம் இருந்திருக்கலாம்" என்று நாம் ஊகிப்பதற்கு இடம் உண்டாகிறது. இப்பொழுது மேலங்காடி, கீழங்காடி, ருத்

திரபர்தம் என்று அழைக்கப்படுகின்ற கிராமங்களெல்லாம் அப்பொழுது அப் பட்டணத்தின் பாகங்களா யிருந்திருக்க லாம். மேலங்காடு வழியாக நதியின் ஓரமாகவே சென்றால் அம்பு தீர்த்தம் என்று ஒரு பரிசுத்த தீர்த்தகட்டம் காணப் படுகின்றது. இவ்விடத்திலே நதியானது சில பாறைகளு க்கு இடையே வெகு ஆழமாக ஓடுகின்றது. ஒரு இடத்தி லே சதுர வடிவத்தையுடைய ஒரு பெரிய பாறையானது இன்னொரு பாறையின் மேலே குறுக்கே வைக்கப்பட்டிருக் கிறது. "ஸ்ரீ மத்வாசார்யர் அந்தப் பாறையை ஒரு கையி னாலே தூக்கிக் கொண்டுவந்து அங்கே வைத்தார்" என்று, சதுர வடிவமுடைய மேல்பாறையிலே ஸம்ஸ்கிருத பாஷை யில் ஒரு வாக்கியம் வெட்டப்பட்டிருக்கிறது.

இவ் விஷயமாக ஸ்ரீ மாத்வ விஜயத்திலே என்ன சொல்லப்பட் டிருக்கிறதென்றால், ஆசார்யர் ஒரு நாள் அந்த நதி தீரத்துக்கு வந்தார்; அங்கே ஒரு பெரும் பாறை கீழே விழுந்து கிடக்கக் கண்டார். "இந்தப் பாறை இங்குத் தனித்துக் கிடக்கவேண்டிய காரணம் என்ன?" என்று ஆசார்யர் அங்கிருந்தவர்களை வினவ, அவர்கள் "ஸ்வாமி! இந்தப் பாறையை ஓராயிரம் பேர்கள் வெகு கஷ்டப்பட்டு இந்த நதிக்கு மேலே ஒரு பாலம் போலப் போடுவதற்காகத் தூக்கிக் கொண்டுவந்து இங்கே வைத்தார்கள். அவ்வளவு உயரத்திலே அந்தப் பாறையின் மேலே இதைத் தூக்கி வைக்க அவர்கள் எவ்வளவு முயன்றும், அவ் வாயிரம் பேராலும் முடியவில்லை. அதனால் அவர்கள் இதைக் கீழே போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்" என்றார்கள்.

உடனே ஸ்ரீ மாத்வர் அப் பாறையைத் தமது ஒரே கையினாலே தூக்கி, அதை எங்கு எப்படி வைக்கவேண்டுமென்று அந்த ஜனங்கள் விரும்பினார்களோ, அங்கு அப்படியே வைத்தார்.

முப்பது குடம் பாலையும் குடித்துவிட்டு உடனே நாலாயிரம் வாழைப்பழங்களையும் ஆசார்யர் தின்றாரென்பதுபோன்ற அவருடைய "குண்டோதர"ச் செய்கைகள் சிலவற்றை முன்னமேயே கூறியிருக்கின்றோம். "ஏராளமான ஆகாரத்தை எப்படித் தின்று ஜீரணிக்க வல்லவராயிருந்தாரோ, அதுபோலவே எல்லா நாட்களையும் ஏகாதசியாகப் பாவித்து உபவாசம் இருந்த நாட்களும் உண்டு. சில சமயங்களிலே ஆசார்யரைப் பிக்ஷைக்கழைப்பவர்கள் எளியவர்களாயு மிருக்கும்படி நேரிட்டு, அவர்கள் சொற்பமாகச் சமையல் செய்து வைக்க, அது ஒரு பெருங் கூட்டத்துக்குப் போதாமற் போக, ஆசார்யர் அவ் வாகாரம் அங்கு அன்று வந்து கூடிய அனைவரும் வயிறு நிறைந்து திருப்தியடைந்து செல்லும்படி போதுமானதாக்கினார்" என்றும் கூறப்படுகிறது.

ஆசார்யர் அம்புதீர்த்தத்திலிருந்து புறப்பட்டு, சுப்பிரமண்யம், மத்தியதலம் இவற்றின் மூலமாக நேரே மேற்குத் தேசத்திலே யாத்திரை செய்தார். வழியிலே அவர் அநேக முக்கிய ஸ்தலங்களிலே தங்கினார். அவர் குமாரதாராவுக்கும் நேத்ராவதிக்கும் இடையிலுள்ள சாரிதந்தராப் பிரதேசத்தின் வழியே சென்றபொழுது, அங்கே

மழை யில்லாமல் பூமி காய்ந்து வரண்டுகொண்டிருந்தது; ஜனங்கள் கடுமையான பஞ்சத்தினால் பீடிக்கப்படுவார்கள் போலத் தோன்றிற்று. ஆனால், ஆசார்யருடைய பாதகமலங்கள் அப் பூமியைப் பர்சித்தவுடனே, ஆகாயமானது இருண்டு, எங்கிருந்தோ மேகங்கள் வந்து கவிந்து கொண்டு, பெருமழை பெய்து, அந்தப் பூமியின் நிலைமையை மாற்றிவிட்டது.

பரந்தீ யென்று சொல்லப்படும் நேரங்கி யென்னும் ஊரில் புராதன க்ஷேத்திர மொன்று, பூஜாரிகளுக்கும் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் நடந்த ஒரு சச்சரவினாலே கதவு பூட்டப்பட்டு, நெடுநாட்களாகப் பூஜையின்றிக் கிடந்தது. ஆசார்யர் அங்குச் சென்றபொழுது, இந்தச் சங்கதி தெரிந்து, அவ்வூரிலே யிருந்த பெரிய மனிதர்களையும் கோவில் அதிகாரிகளையும் ஓரிடத்திலே கூடும்படிச் செய்து அவர்களை நோக்கி, "நீங்கள் ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக்கொண்டு, இந்தப் புராதன க்ஷேத்திரத்தை யிப்படி யடைத்துப் போட்டுவைத்தல் நலமா? நியாயமா? தர்மமா?" என்று கேட்டு, எல்லோரும் உடனே சமாதானமாகி, க்ஷேத்திரத்தைத் திறந்துவிட்டு, பூஜை முதலியன நடத்தும்படி அவர்களை வேண்டிக்கொண்டார். ஒரே நாளில் நெடுநாளாக வைரம் முற்றி வளர்ந்துவந்த இந்த சச்சரவு முடிவடைந்து, கோவில் கதவுகள் திறக்கப்பட்டன; பூஜை முதலியன ஆரம்பிக்கப்பட்டன.

ஆசார்யர் அங்கிருந்து புறப்பட்டு, வைத்தியநாத க்ஷேத்திரம் சென்று, அங்குள்ள மூர்த்தியைப் பூஜித்து

ஆநந்தித்தார். இவ்விடத்திலே ஆசார்யருடைய பரம சிஷ்யர்களுள் ஒருவர் ஆசார்யரை நோக்கி, "ஸ்வாமி! ஏகாதசி விரதாநுஷ்டான விதிகளைக் கிரந்தரூபத்திலே தேவரீர் இயற்றியருளினால் என்போன்றவர்கட்கு அதிக பிரயோசனகரமாயிருக்கும்" என்று வேண்டிக்கொள்ள, ஆசார்யர் அப்படியே அந்த சிஷ்யருடைய வேண்டுகோட் கிணங்கி "கிருஷ்ணாம்ருத மகார்ணவம்" என்ற பெயருடனே ஒரு கிரந்தம் இயற்றினார்.

ஆசார்யர் வைத்தியநாத க்ஷேத்திரம் சென்றபொழுது மாலை நேரமாய்விட்டது; அன்று அமாவாசை தினம். இவர் இதற்கு முன்னே யிறங்கியிருந்த இடத்திலிருந்து, மஹா துஷ்டனான அரசன் இவரையும் இவருடைய சிஷ்யர்களையும் சில துன்பங்களுக் குட்படுத்தி, திடீரென்று அவர் புறப்படும்படி செய்துவிட்டான். ஆகையால், ஆசார்யரும் அவருடைய சிஷ்யவர்க்கங்களும் வெகு வேகமாக நடந்து புறப்பட்டுவர, வைத்யநாதம் வருகிறவரையில் அவர்களுக்குத் தங்குவதற்கு வேறு இடம் கிடைக்கவில்லை. ஆதலால், வைத்தியநாதம் வரும்பொழுது பகலில் வெகு நேரமாய் விட்டது. ஆசார்யர் வைத்தியநாதம் வந்து சேர்ந்தபொழுது, அவ்வூர் ஜனங்கள் ஆசார்யரைத் தகுந்தபடி வரவேற்று உபசரிக்க, ஆசார்யர் தமது பூஜைப் பெட்டியிலிருந்து சாளக்கிராமங்களையும் விக்கிரகங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு, அமரரும் கண்டு ஆச்சர்யப்படும்படியாக பூஜை செய்து முடித்தார்; பிக்ஷை நடந்தது. பிக்ஷை

செய்து வைத்தவரும் அவருடைய ஜனங்களும் பிக்ஷாப் பிரசாதத்தை யெடுத்துக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், அப்பொழுது சாயுங்கால நேரமாய்விட்டபடியால், அவர்கள் பகலில் வழக்கம்போலப் போஜனம் பண்ணிவிட்டார்கள்; அன்று அமாவாச்யை யாதலால், அவர்கள் மாலை நேரத்திலே சாப்பிடக் கூடாது. ஆனால், ஸ்ரீ மாத்வாசார்யர் "அவர்கள் அன்று சாப்பிட்டால் அதனால் எவ்வித தோஷமும் சம்பவிக்காது" என்று கூறி, அவர்களைத் தம்முடனே கூட உட்கார்ந்து சாப்பிடும்படி செய்தார். இதன் ஞாபகார்த்தமாக, இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்றும் அமாவாச்யை யன்று மாலையிலே சாப்பிட்டு வருகிறார்கள்.

உச்சபூதி யென்னும் இடத்திலே சில வித்துவான்கள் முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி ஸ்ரீ மாத்வருடனே வாதுசெய்யப் புறப்பட்டார்கள். 'ஆசார்யர் நிரம்பப் படித்தவராயிருக்கலாம்; மகா வித்துவானுயிருக்கலாம்; உபநிஷத்துக்களில் கரைகண்டவரா யிருக்கலாம்; ஆயினும், அவருக்குக் கர்மகாண்டத்தைப்பற்றிய ஞானம் கொஞ்சமே' என்று இப்படி யெல்லாம் நினைத்தவர்களாய் அவர்கள் ஆசார்யருடனே வாது செய்ய ஆரம்பிக்க, ஆசார்யர் அவர்களை வெகு சீக்கிரத்திலே தோற்கடித்தார். இந்தச் சந்தர்ப்பத்திலே ஆசார்யர் ஒரு வேத வாக்கியத்தை யெடுத்து வியாக்கியானம் செய்து, இந்த வியாக்கியானத்தை "கர்ம நிர்ணயம்" என்ற ஒரு கிரந்தரூபத்திலே இயற்றியருளினார்.

*

ஆசார்யர் இவ்வுலகிலே எழுபத்தொன்பது வருஷங்களும் சில மாதங்களும் இருந்தார். இவர் பூவுலகிலிருந்து மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன்னே முதல், கண்வ தீர்த்தக்கரையிலே வசித்துவந்தார்போலும்! ஆசார்யர் இங்குத் தங்கியிருக்கும்பொழுதுதான் ஸ்ரீ நரஹரிதீர்த்தர்: மூலராமர், ஸீதையாகிய விக்கிரகங்களை ஆசார்யரிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கவேண்டும். ஸ்ரீ மாத்வர் வியாசாச்ரமம் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கும் பதினைறு நாட்களுக்கும் முந்தி அவருக்கு இந்த விக்கிரகங்கள் கிடைத்தன. இந்த விக்கிரகங்களின் பூர்வோத்தரத்தைப்பற்றி முன்னமேயே கூறியிருக்கிறோம்.

ஆசார்யர் உலகிலே அவதரித்த வேலை முடிந்துவிட்டது; அதர்மத்தை யழித்துத் தர்மத்தை யுத்தாரணம் பண்ணிவிட்டார்; வந்த காரியம் கைகூடிவிட்டது; உண்மையைப் பிரகாசிக்கச் செய்தார்; புரட்டு மதங்களை யெல்லாம் கண்டித்து அடக்கினர். அவர், ஆத்மகோடிகள் உய்யும்பொருட்டு அநேக கிரந்தங்கள் இயற்றி யருளினர். அநேக இடங்களில் ஆயிரக்கான ஜனங்கள் அடங்கிய கூட்டங்கட்குப் போதித்தார்.

இப்பொழுது ஆசார்யர் ஸ்ரீ நரஹரிதீர்த்தருக்காகவும் அவர் கொண்டுவந்த விக்கிரகங்கட்காகவுமே காத்துக் கொண்டிருந்தார்போலும்! ஆசார்யர் ஸ்ரீ பத்மநாபதீர்த்தருக்குத் தமது ஸ்தானத்தைப் பட்டங் கட்டி வைத்து

விட்டு, ஸந்யாஸாச்ரமம் செல்வதற்குக் காலாநுகூலத்தை எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்.

ஒருநாள் ஆசார்யர் தமது சிஷ்யர்களுக்குத் தமக்கு மிகப் பிரியமான ஐதரேய உபநிஷத்தை யெடுத்துப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். அன்று பிங்கள வருஷம் மார்க மாசம் சுக்கிலபக்ஷம் நவமி திதி. ஆசார்யர் திடீரென்று மறைந்துவிட்டார்; எவருக்கும் தெரியாமல் பதரிகாச்ரமம் சென்றுவிட்டார்.

## ஸ்ரீ மாத்வ விஜயம்

முற்றிற்று.

FIRST EDITION] 1000 COPIES

**ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:** *ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும்:* விலை ரூபா 1-12-0

---

**ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்:** *ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குரு மூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திவ்விய சரித்திரமும், கதாமிர்தமும், உபதேச வாக்கியங்களும்:* ரூபா 1-4-0

---

**ஸ்ரீ சங்கர விஜயம்:** *ஆதி சங்கராசாரியர் திவ்விய சரித்திரம்: (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீசாரதாம்பாள் படங்களுடன்)* விலை ரூபா 1-4-0

---

**ஸ்ரீ ராமாநுஜ விஜயம்:** *விசிஷ்டாத்வைத மத ஸ்தாபகராகிய ஸ்ரீ ராமாநுஜாசார்யரின் விரிவான சரித்திரம்:* விலை ரூபா 2

---

**ஸ்ரீ ராமகிருஷ்ணர் விரிவான சரித்திரம்:** *ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனனமுதல் மஹா சமாதி வரையில் உள்ள விரிவான சரித்திரம்:* விலை ரூபா 2

---

**ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்:** *ஸ்வாமிகளைப்பற்றி இதுவரையில் தமிழில் வெளிவராத அநேக அற்புத சம்பவங்கள் காட்டப்பட்டுள்ளது:* விலை ரூபா 2

---

**திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்:** *ஆரிய தேசமாகிய நமது இந்தியாவிலுள்ள திவ்விய ஸ்தல, திவ்விய தீர்த்த, திவ்விய பர்வதாதிகளின் மஹிமையும் விசேஷங்களும்: முதல் பாகம் (வட தேசங்கள்)* விலை ரூபா 2

---

**தக்ஷிண இந்தியா சரித்திரம்:** ஷை 2-ம் பாகம் (தென் தேசங்கள்) விலை ரூபா 5

---

**அரிச்சந்திர புராண வசனம்:** *அரிச்சந்திர புராண மூலத்தை அநுசரித்துத் தமிழில் நூதனமாக வசனப்படுத்தப்பட்ட அரிய நூல்; இனிய நடையில் கதை விரிவாக அமைந்தது:* ரூபா 1-8-0

---

**சிவக்ஷேத்திர விளக்கமும்,** *சிவக்ஷேத்திராலய மஹோத்ஸவ உண்மை விளக்கமும்: ஒவ்வொரு க்ஷேத்திரமும் இருக்கும் இடத்தையும், அதன் சமீப ரயில்வே ஸ்டேஷனையும் காட்டும் விவரமான அட்டவணையுடன்:* விலை ரூபா 1-8-0